வரு.74 இல. 06 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2022 பெப்ரவரி 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

February 06 Sunday, 2022

06
கைகொடுக்கும் நெருங்கிய தோழன் இந்தியா!

11
ஐந்து பேரின் உயிரைக் குடித்த கரடியல்ல நீர்வீழ்ச்சி

18
ஆபாச புகைப்படத்தால் அதிர்ந்த மாளவிகா

இலங்கையை வீழ்த்திய பாக். அணி 24

எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல சரியானதை செய்வதே எமது நோக்கம்

தமது இலக்கு குறித்து ஜனாதிபதி கோட்டாபய சுதந்திர தின உரை

நாட்டுக்கு சரியானதை செய்வதே தமது இலக்கேயன்றி, அனைவரையும் திருப்திப்படுத்துவதல்லவென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுதந்திர தின உரையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.இன, மதம் என்ற எவ்விதப் பேதங்களுமின்றி ஒவ்வொரு இலங்கைப் பிரஜைக்கும் 04

நாட்டை முடக்க, சுற்றுலாத்துறையை கட்டுப்படுத்த எந்த அவசியமும் இல்லை

பேராசிரியர் சன்ன ஜயசுமன கருத்து

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மூடுவதற்கோ அல்லது சுற்றுலாத் துறைக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்கோ தயாரில்லை என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் 04

அத்தியாவசியப் பொருட்களுடன் 1800 கொள்கலன்கள் துறைமுகத்தில்

மத்திய வங்கியை தலையிடுமாறு இறக்குமதியாளர்கள் சங்கம் கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

அரிசி, பருப்பு, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளடங்கிய 1,800 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் விடுவிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் 04

ஏப்ரல் 30 முதல் புதிய நடைமுறை அமுல்;

பொது இடங்களில் இனி தடுப்பூசி அட்டை அவசியம்

விசேட வர்த்தமானி நேற்று அரசினால் வெளியீடு

லோரன்ஸ் செல்வநாயகம்

நடைமுறையிலுள்ள சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதோர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உத்தரவு

கொவிட் தொற்றை தடுப்பதற்குரிய மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட தடுப்பூசி அட்டை இல்லாதவர்கள் இனிமேல் பொது இடங்களிலோ அல்லது பொது வாகனங்களிலோ செல்ல முடியாதென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதுடன் அதற்கான விசேட வர்த்தமானியும் நேற்று சுகாதார அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமென சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அதேவேளை நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்களை முறையாக கடைப்பிடிக்காமல் அதனை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் மற்றும் ஒரு நடவடிக்கையாக இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். 04

இந்திய மீனவரது அத்துமீறல் தடுப்பதற்கு கடற்படை தயார்

இயன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதி

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்காக, தங்களால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக கடற்படை தெரிவித்துள்ளது.

எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவத்துக்கு நீதி கோரியும், நேற்று முன் தினம் ஐந்தாவது நாளாகவும் வடமராட்சி மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க கடற்படை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தினர். 04

வாக்காளர் பட்டியல் தொடர்பில் வெளியான முக்கிய அறிவித்தல்

2021 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாவிடின் அல்லது முகவரி மாற்றம் தேவையென்றால் மாத்திரம் பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தருக்கு 04

வெல்லவாய நீர்வீழ்ச்சியில் நீராடிய மூவர் உயிரிழப்பு

சடலங்கள் நேற்று பிரதேசவாசிகளால் மீட்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வெல்லவாய பகுதியில் நீராடச் சென்ற மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லவாய எல்லேவல பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்றுள்ள மூவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் 04

மூத்த பத்திரிகையாளர் அமரர் S.D.சிவநாயகம் ஞாபகார்த்தமாக முத்திரை

இலங்கை பத்திரிகை துறையில் பொன்விழா கண்டவரும் சத்திய சாய்பாபா மத்திய நிலைய ஸ்தாபகரும், தொடர்ந்து இருபத்து ஐந்து வருடங்கள் அதன் தலைவராக செயற்பட்டு சாய் நிலையத்தை வழிநடத்தியவருமான அமரர் எஸ்.டி. சிவநாயகத்தின் நூறாவதாண்டு பிறந்த நாள் 04

A/L பரீட்சை நாளை ஆரம்பம்; சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

04

எங்கள் கருத்து...

நாட்டில் மீண்டும் களைகட்டும் தமிழ் இலக்கிய விழாக்கள்

கொரோனா வைரஸ் பரம்பல் காரணமாக கடந்த இரண்டு வருட காலமாக முடங்கிக் கிடந்த உலகம் இன்று மீண்டும் மெது மெதுவாக இயங்க தொடங்கியுள்ளது. அந்த வகையில் நமது நாட்டில் முடங்கி கிடந்த சகல துறைகளும் இன்று மீண்டும் உத்வேகம் கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளன. அதற்கு தமிழ் இலக்கிய விழாக்கள் விதிவிலக்கல்ல.

நாடு பல தடவைகள் முடக்கத்திற்குள்ளான போதும் காணொளிகளில் கலை விழாக்களையும் நூல் வெளியீடுகளையும் இலக்கிய உரையாடல்களையும் இடைவிடாது நடத்தி தமிழ் மொழிக்கும் தமிழ் கலைக்கும் எமது எழுத்தாளர்களும் கலைஞர்களும் உயிர் கொடுத்து வந்துள்ளனர்.

ஆனால் இன்று மீண்டும் நாட்டில் தமிழ் இலக்கிய கலாசார விழாக்கள் நடைபெற ஆரம்பித்துள்ளமை மிக்க மகிழ்ச்சி தருகிறது. கொழும்பில் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் வாழும் சகல பிரதேசங்களிலும் இன்று கலை, இலக்கிய விழாக்கள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

அதேபோல கொழும்பு தமிழ்ச்சங்கம் மீண்டும் தனது பணிகளை முன்னரை விடவும் உத்வேகத்துடன் புதிய இளம் தலைமைத்துவத்துடன் தொடங்கி செயற்படுத்தி வருகிறது.

கருத்தரங்குகளை சொல்லாடல்களை, நூல் வெளியீடுகளை ஆரம்பித்து தலைநகரில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் பணியாற்ற ஆரம்பித்துள்ளது.

இதேபோன்று யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், வவுனியா தமிழ்ச் சங்கம், நுவரேலியா தமிழ்ச்சங்கம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் சங்கம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். கடந்த இரண்டு வருடங்களாக தடைப்பட்டிருந்த இரா உதயணன் தலைமையிலான லண்டன் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகங்கள் நடத்துகின்ற 04

தொப்புள்கொடி உறவுகளுக்கிடையே சச்சரவுகள் தேவையில்லை;

தமிழக - இலங்கை மீனவர்களது பிரச்சினையை அரசியலாக்க எவருக்கும் இடமளிக்காதீர்கள்

எமது பிரச்சினையை நாமே பேசித் தீர்ப்போம் –ராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜ்

மணவை அசோகன்

தமிழக இலங்கை மீனவர்களுக்கு இடையே இடம்பெற்றுவரும் எல்லை தாண்டி மீன் பிடிக்கும் சச்சரவுகளுக்கு சுமுகமான முறையில் அவசரமாக தீர்வு காணப்பட வேண்டுமே தவிர அவற்றை தமது அரசியல் தேவைகளுக்காக இரு நாட்டு அரசியல் தலைமைகளும் ஒரு போதும் பயன்படுத்தக் கடாது என்று ராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் எஸ். ஜேசுராஜ் தெரிவித்துள்ளார்.

இது இருநாட்டு மீனவர்கள் சமூகம் சார்ந்த பிரச்சினை. 04

அம்பிகா வெளியிட்ட கருத்துக்கள் புலிகளின் செயல்களை பிரதிபலிக்கிறது

இலங்கை வெளிவிவகார அமைச்சு பகிரங்க குற்றச்சாட்டு

இலங்கையில் மனித உரிமைகள் செயற்பாடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்த கருத்து தொடர்பாக இலங்கை அரசு கவனம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் தனது ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பயன்படுத்த வேண்டுமென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். 04

லண்டன் -இலங்கை தமிழ் இலக்கிய நிறுவனங்கள் நடத்தும்

இரா உதயணன் இலக்கிய விருது விழா நிகழ்வு இன்று

சிறப்பு நிகழ்வாக பொன்னுத்துரையின் நூல் வெளியீடு

லண்டன் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவனங்கள் நடத்தும் இரா. உதயணன் இலக்கிய விருது விழா நிகழ்வு இன்று மாலை 04 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறுகிறது. இந்த விழாவில் தமிழ் இலக்கியத்துக்கு பங்களிப்புச் செய்த பல இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், 04

எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் சிங்களவருடன் இணைந்து வாழ்வது குறித்த ஆவணம்

மனோ M.P தலைமையில் 12 பேர் தயாரிப்பில் 04

வாருங்கள் ஆரோக்கியம் நிறைந்த நாட்டை உருவாக்க

வாருங்கள் தடுப்பூசிகள் ஏற்ற

வாருங்கள் அச்சமின்றி, தயக்கமின்றி

இது நமது தேசிய பொறுப்பு

டாஸ் அழகப்பெரும

விக்கல் வீராச்சாமி

இலங்கை மீனவர விடுவியுங்கோ எண்டு சீமான் சொல்ல இந்திய மீனவர் எல்லைமீறலுக்கு எதிராக சுமந்திரன் ஐயா வழக்கு தொடுக்க போறாராமே....

ஐயோ, இந்த இருநாட்டு மீனவர் பிரச்சினைய வைச்சு இரண்டு நாட்டிலயும் சிலர் நடத்துற அரசியல் விளையாட்டு இருக்கே சொல்லில அடங்காது...!!!

வண்ண வானவில்

பெப்ரவரி மாத இதழ் இப்போது கடைகளில்...

ஆனந்த விகடன், குமுதம் இல்லை எனக் கவலை வேண்டாம் இருக்கவே இருக்கிறது வண்ண வானவில்!

வாசியுங்கள், வாசிக்க வாங்கிக் கொடுங்கள்

74 ஆவது சுதந்திர தின நிகழ்வு

படங்கள்:
ரஞ்சித் அசங்க, ஹிரந்த குணதிலக, சுதத் மலவீர

மத்துகம கலைமகள் தேசிய பாடசாலையின் ஊடக கழக ஆரம்பம் மற்றும் ஊடக செயலமர்வு

நவீன கண்டுபிடிப்புகளுடன் முன்னோக்கி நகரும் உலகில் அனைத்து செயற்பாடுகளும் இன்று எம் கைக்குள் அடக்கப்பட்டுள்ளது.இந்த சூழலில் ஊடகத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும்.அதன் தாற்பரியத்தை உணர்ந்த மத்துகம கலைமகள் தேசிய பாடசாலை சமூகத்தினர் ஊடக கழகம் மற்றும் ஊடக செயலமர்வு ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியது. அதன் அங்குராப்பண விழாவுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகள் ஊடக அரனுசணையை வழங்கியுள்ளது. நிகழ்வுகளின் ஆரம்பம் அதிபர் தலைமையில் வளவாளர்கள் வரவேற்பு, தேசிய கொடி ஏற்றி மாணவர்களின் தேசிய கீதத்துடன் ஆரம்பமானது.வரவேற்புரையை பாடசாலை அதிபர் வீ.சசிகுமாரின் வழங்கியதுடன் தினகரன்,தினகரன், வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் தலைமையுரையாற்றினார் அவரின் உரையில்,..

இவ்வாறான நிகழ்வை ஏற்பாடு செய்த அதிபர் மற்றும் திருமதி ரெஜினா ஆகியோரை பாராட்டியதுடன்,1989 ஆம் ஆண்டு தான் ஊடகத்துறைக்கு வரும் போது இருந்த தாற்பரியங்களை விளக்கியதுடன் அன்றை காலத்தில் நவீன வசதிகள் இல்லாத சூழலில் பத்திரிகைகளில் நிறைய செய்திகளும் தகவல்களும் பிரசுரமானதோடு இன்றைய நிலையில் இருந்த இடத்தில் செய்திகளை வழங்கும் காலத்தில் தகவல்களின் தட்டுப்பாடுகள் இருப்பதாகவும் நேர்த்தியான செய்திகள் குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். வாழ்நாள் ஊடவியலாளர் அன்னலக்ஷிமி ராஜதுரை போன்றோர் அவருக்கு வழிகாட்டிய திகழ்ந்தாகவும் இன்று மாணவர்கள் ஊடகத்துறையில் கல்வி கற்பதற்கு அதிக வாய்ப்புகளும் அதற்காக அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் விளக்கியதோடு புதிதாக அமைக்கப்படவுள்ள பட்டய ஊடக கற்கை நிறுவகம் தொடர்பிலும் குறிப்பிட்டதோடு அதில் ஒரே ஒரு தமிழ் உறுப்பினராக தன்னை நியமித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு கலைமகள் தேசிய பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை தனது பத்திரிகைகளில் பிரசுரமாக வழிவகுப்பதாகவும் மாதம் ஒரு பக்கத்தை ஒதுக்கி தருவதாகவும் மூன்று பத்திரிகைகளை இலவசமாக மூன்று மாதங்கள் வழங்க உறுதிமொழி வழங்கியதோடு உரையை நிறைவு செய்தார்.அதனை தொடர்ந்து வாழ்நாள் ஊடவியலாளர் அன்னலக்ஷிமி ராஜதுரை தனது ஊடக வாழ்க்கையின் அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

பின்னர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கிரிஸ்னி கந்தசாமி களத்தில் செய்தி சேகரிப்பு மற்றும் ஊடவியலாளர்களின் களப்பணியிலுள்ள கஷ்டங்களையும் மாணவர்களுக்கு தெரியபடுத்தி மாணவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார். அடுத்த நிகழ்வுகளாக வளவாளர்களின் உரைகளும் மாணவர்களுக்கு சான்றிகழ்களும் வழங்கிவைக்கப்பட்டதோடு அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

ஊடக கழக பொறுப்பாசிரியரின் நன்றி உரையோடு விழா நிறைவுக்கு வந்தது. விழாவுக்கு லயன்ஸ் கழகம் 306B2 (கொழும்பு பெரு நகரம்) தலைவர் லயன் அமிர்தம் ஜெயக்குமாரின் பூரண அனுசரணை வழங்கியுள்ளார். தினகரன் பத்திரிகையின் பிரதம உதவி ஆசிரியர் ஸ்ரீகாந்த், உதவி ஆசிரியர் சுரேஷ்ராஜ், விளம்பர முகாமையாளர் திருமதி ரெஜினா மற்றும் சமூக செயற்பாட்டாளர் இளஞ்செழியன் ஆகியோர் கலந்து கொண்ட விழாவில் ஆசிரியர்கள்,மாணவர்களும் பங்கு கொண்டனர்.

தனிப்பட்ட அரசியலுக்கான நிகழ்ச்சி நிரலைக் கொண்டவர்களே அரசுக்குள் இருந்து கொண்டு விமர்சனங்களை முன்வைப்பதாக சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆட்சியில் இணைந்திருப்போர் அரசை விமர்சிக்க முடியாது!

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் சந்திப்பு

கே: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த கொள்கைப் பிரகடன உரையில் விவசாயப் புரட்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனக் கூறினார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் திட்டத்தை ஏப்ரல் மாதம் ஆரம்பிக்க உள்ளோம். முதற் கட்டமாக 2 மில்லியன் குடும்பங்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்தவுள்ளோம். இதில் இணைய விரும்புவோரின் ஒப்புதலைப் பெறுவதுடன், இதன் ஒரு பகுதியாக அவர்களுக்கு கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும். இது பண உதவித்தொகையாக இருக்கலாம் அல்லது வீட்டுத் தோட்டத்திற்கு அவர்கள் தேவைப்படும் பொருட்களாக இருக்கலாம்.

கே: தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிடவில்லையென எம்.ஏ.சுமந்திரன் போன்ற சில தமிழ் அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதனை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

பதில்: அது ஒரு கொள்கை அறிக்கை. அரசியல்வாதிகள் எழுப்பும் ஒவ்வொரு பிரச்சினையையும் அவர்கள் விரும்பியபடி பார்க்க முடியாது. பாராளுமன்றத்தில் தனது கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்த ஜனாதிபதி, அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்படுமாறு பகிரங்க அழைப்பை விடுத்ததுடன், நாட்டை வழிநடத்துவதற்கு அனைத்து சமூகங்களுடனும் இணைந்து செயற்படுவதற்குத் தயார் என்பதையும் குறிப்பிட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கே: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி கிடைக்க வேண்டி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்திருப்பதால் ஐ.நா உள்ளிட்ட சர்வதேசத்தின் அணுகல் குறித்து ஆராய்வதாக பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்திருந்தார். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட சில முடிவுகள் இதற்கு வழிகோலியிருந்தன என்பது வெளிப்படையானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளை நாம் புரிந்து கொள்ள முடியும். அந்த பயங்கரவாத தாக்குதல்கள் பொருளாதாரத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு எங்களது முழு ஆதரவையும் வழங்குவோம். எனினும், நீதிமன்ற செயற்பாடுகளில் எம்மால் தலையிட முடியாது. நாம் ஆரம்பித்த மற்ற விசாரணைகளையும் துரிதப்படுத்துவோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் விரைவில் தண்டிக்கப்பட வேண்டும். விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்த பேராயர் எவ்வளவு பொறுப்புடன் செயல்பட்டார் என்பதை அந்த பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பிறகு நாம் அனைவரும் அறிந்திருப்பதால், பேராயரின் எண்ணங்களை நாம் புரிந்து கொள்ள முடியும். எவரையும் பாதுகாக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

> “தனிப்பட்ட நிகழ்ச்சிநிரல் உள்ளவர்கள் அரசாங்கத்துக்குள் இருந்தால் அவர்கள் வெளியேறி விட வேண்டும்!”

கே: பொதுமக்கள் எழுப்பும் அனைத்துப் பிரச்சினைகளையும் துடைத்தெறிய அரசாங்கம் கொவிட்–19 தொற்றுநோயைப் பயன்படுத்துகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். உங்கள் கருத்துகள் எவை?

பதில்: கொவிட் 19 பிரச்சினையை உடனடியாகத் துடைத்து எறிந்து விட முடியாது. அதன் விளைவாக வெளிப்பட்ட அனைத்தையும் நிவர்த்தி செய்ய வேண்டும். ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் முதல் இரண்டு ஆண்டுகள் கொவிட் 19 நோயைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்துவதாக அமைந்தது. அதை நாம் பெரிய அளவில் சாதித்துள்ளோம். கொவிட் 19 அனைத்துத் துறைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், மற்றுமொரு அலை உருவாகாமல் பார்த்துக் கொள்வது அனைவரினதும் பொறுப்பாகும். இதன் தீவிரத்தை எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் உணரவில்லை. கொவிட் நிலைமைகள் பற்றிப் பேசும் போது அவர்கள் தொற்றுநோயைப் பற்றி எந்த புரிதலும் இல்லாமல் பேசுவதை நாம் காணலாம்.

கே: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தில் திருப்தியடையவில்லை என்றால் அவர் வெளியேறி எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற முடியும் என நீங்கள் கூறியுள்ளீர்கள். விளக்க முடியுமா?

பதில்: இது அவருக்கு மட்டுமல்ல அரசை விமர்சிக்கும் அனைவருக்கும் பொருந்தும். அரசாங்கத்திற்குள் யாரும் பிரச்சினைகளை உருவாக்குவதை நாங்கள் விரும்பவில்லை. மாற்றம் வேண்டும் என்பதற்காக மக்கள் எம்மிடம் பொறுப்பை வழங்கவில்லை. நாட்டுக்கு பேரழிவை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தை வெளியேற்றி நாட்டின் தலைமைத்துவத்தை எடுக்கக் கூடிய ஒரு திறமையான தலைவரைத் தேர்ந்தெடுக்கவே மக்கள் விரும்பினர். மக்கள் தமது சார்பில் இத்தகைய தியாகத்தைச் செய்த பின்னர் அரசாங்கத்தில் உள்ள சில உறுப்பினர்கள் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்குத் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்ற முயற்சிக்கின்றனர். அவ்வாறானவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும். எவரேனும் அரசாங்கத்தின் தவறுகளை விமர்சித்துச் சுட்டிக் காட்டினால், அது ஒரு பிரச்சினையல்ல. அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராகவிருக்கின்றோம். எவ்வாறாயினும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் போது அரசை சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில் யாராவது செயற்படுவதாயின் அவர்கள் குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

கே: இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றாமல் முன்னேற முடியாது என்ற எண்ணத்தில் சில அரசியல்வாதிகள் உட்பட சில பிரிவினர் உள்ளனர். நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

பதில்: துரதிர்ஷ்டவசமாக சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களின் அற்ப அரசியல் ஆதாயங்களை உணர்ந்து கொள்வதற்காக தங்களின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை மட்டுமே பின்பற்றுகிறார்கள். அடுத்த தேர்தலில் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் மக்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

> **கொவிட் தொற்றின் தீவிரத் தன்மையை எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் உணரவில்லை!**

கே: அரசாங்கத்திற்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களில் பெரும்பான்மையானவர்கள் அரசாங்கம் தனது கடமையை நிறைவேற்றத் தவறி விட்டது என்ற எண்ணத்தில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறிய கூற்றுக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிப்பீர்கள்?

பதில்: இந்தக் கேள்வியை நாம் முதலில் அவரிடமே கேட்க வேண்டும். கடந்த தேர்தலில் அவருக்கு வாக்களித்த 5.4 மில்லியன் மக்களும் அவரின் செயற்பாடுகள் தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றனரா என்று கேட்க வேண்டும். அப்போதுதான் அவர் எழுப்பிய மற்ற கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியும்.

கே: நாடு உணவு நெருக்கடியை நோக்கி செல்கிறது என அரசியல்வாதிகள் முன்வைக்கும் கருத்துக்களில் உண்மை உள்ளதா?

பதில்: இப்படிப்பட்ட ஊகங்கள்தான் பல பிரச்சினைகளை உருவாக்க வழிவகுத்துள்ளன. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதை நாம் உறுதி செய்வோம். உணவு, பாதுகாப்பு விஷயத்தில் சமரசம் செய்து கொள்ள மாட்டோம். அதற்காக மக்கள் கவலைப்பட வேண்டாம். வெளிநாட்டு நாணயப் பிரச்சினையால் பொருட்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எங்கள் திட்டங்களுடன் இந்த ஆண்டு அது தீர்க்கப்படும் என்று நம்புகிறோம். மாற்றாக, உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கே: அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து 19 ஆவது திருத்தத்தை மீண்டும் அறிமுகப்படுத்துமாறு அரசாங்கத்தின் கூட்டுப் பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில பிரிவினர் விடுத்த கோரிக்கையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

பதில்: அரசாங்கத்திற்குள் அப்படி எதுவும் பேசப்படவில்லை. அரசியல் கட்சிகளில் உள்ள சிலர், அரசாங்கம் மற்றும் மக்களால் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை வழங்காத போது, அவர்கள் வேறு பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்கிறார்கள் மற்றும் அது குறித்து கருத்துத் தெரிவிக்க முயற்சிக்கின்றனர்.

அவர்கள் அரசாங்கத்தில் இருந்தால், முதலில் அவர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பார்த்து, அரசாங்கத்தின் கொள்கைகளுடன் தொடர்பில்லாத யோசனைகள் மற்றும் பிற சிக்கல்களை உருவாக்குவதை விட அரசாங்கத்தின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும். பாராளுமன்றத்தில் அவர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். அவர்கள் அதை நடைமுறைப்படுத்த விரும்பவில்லை என்றால், அந்த நேரத்தில் அவர்கள் அதற்கு எதிராக வாக்களித்திருக்க வேண்டும்.



ஏகாதிபத்தியவாதிகள் அன்று விதைத்ததை இன்று நாம் மாற்றியமைக்க வேண்டும்!

சுதந்திரம் குறித்து பெருமையுடன் பேசும் வாரம் இதுவாகும். சுதந்திரத்தை பெறுவதற்காக மேற்கொண்ட போராட்டங்கள் அதன் சரித்திரத்தை ஞாபகப்படுத்துகின்றன. சுதந்திரத்துக்காக தொடர்ச்சியாக மேற்கொண்ட போராட்டம் இங்கு மிக முக்கியமானது. நாட்டுப் பற்றுள்ள தேசிய வீரர்கள் ஏகாதிபத்திய ஆட்சிக்கு முன்னால் நடத்திய தைரியமான போராட்டங்கள், உயிர்த் தியாகங்கள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளன. சுதந்திர நாட்டுக்காக அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து மேற்கொண்ட இறுதிப் போராட்டம் என்றும் நினைவில் நிலைத்திருக்கும் என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

சுதந்திரம் பற்றிய பெருமை மாத்திரமன்றி அதன் இருப்பு பற்றிய பொறுப்பும் எமக்குண்டு. சுதந்திர தின விழா பாரம்பரியமானது. அதில் கலாசார மற்றும் சம்பிரதாய அடையாளங்கள் உள்ளன. நாம் உலகமயமாக்கலின் புதிய கட்டமைப்பை நோக்கி பயணிக்கின்றோம். தொழில் நுட்ப யுகத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய சிக்கலான போராட்டம் உண்டு. புதிய தலைமுறையினர் அந்த எதிர்காலத்துக்குள் உள்நுழைந்து வருகின்றார்கள். அது பாரிய மாற்றம் ஆகும். அதன் பிரவேசத்துக்கு எதிராக பாரம்பரிய கட்டமைப்பில் பாரிய எதிர்ப்புகள் உள்ளன. தனித்துவத்தை பாதுகாப்பதுடன், இருப்பு தொடர்பான தைரியம் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஏகாதிபத்தியவாதிகள் சமூகங்கள் இணைவதைத் தடுத்தார்கள். அது நிர்வாக தந்திரம். உள்நாட்டு மக்கள் இணைவது தடுக்கப்பட்டு அதன் மூலம் மிக சொற்பமான அந்நிய தேசத்தவர்களால் இலங்கையை ஆள முடிந்தது. மொழி ,சமூக வர்க்கம், மதம் மற்றும் இனம் உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மக்கள் சமூகத்தை பிரித்து அவர்கள் உயர்வு தாழ்வை ஏற்படுத்தினார்கள். நிர்வாகத்துக்கு பிரபுக்களையே இணைத்துக் கொண்டார்கள். அனுமதிப்பத்திர முறை ஏற்படுத்தப்பட்டதோடு சமூகத்தில் விசேட வரப்பிரசாதங்கள் குறைந்தளவு பிரபுக்கள் கைகளை சென்றடைந்தன.

சுதந்திரத்துடன் மாற்றமடைய வேண்டிய இந்த அடையாளம் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. சுதந்திரத்துடன் அதிகாரம் கிடைத்த வர்க்கம் சமூக பேதங்களை மேலும் அதிகரிக்கும் முறைகளை பின்பற்றியது என்பதைக் குறிப்பிட வேண்டும். எழுபத்து நான்கு வருட முடிவிலும் மேலும் மேலும் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசியல், மத மற்றும் இனவாத பிரச்சினைகள் நாட்டில் ஏற்படுத்தியுள்ள அழிவு இச்சந்தர்ப்பத்தில் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

கடந்த ஏழு தசாப்தங்களாக நாம் கடந்து வந்த பாதை எமக்கு எதனை மிகுதியாக வைத்துள்ளது? எமது ஆத்மபலத்தை பலவீனப்படுத்தி உள்ளது. உலகில் ஏனைய நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது பயம் உள்ளது. தாழ்வு மனப்பான்மை பொதுவான காரணியாகும். சர்வதேசத்துக்குள் நல்ல அறிவுள்ள, சிறந்த கல்வி பெற்ற சிறிய பிரிவினரே நுழைகிறார்கள். இந்தக் குறுகிய அணுகுமுறைகளை ஒழிக்க வேண்டும். பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை விரிவுபடுத்தும் கொள்கைகள் எமக்கு அவசியம். இனவாதம், மதவாதத்தால் எமக்கு கிடைக்கும் நன்மைகள் எதுவும் இல்லை.

சுதந்திர சிந்தனைக்கு, சுதந்திர தொழில் நிலைமைக்கு விரிவான இடத்தை நாட்டினுள் உருவாக்குவது எவ்வாறு என்பது குறித்த ஆழமான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உறுதியான இடத்தில் இல்லாத மக்கள் சமூகத்தை ஒன்றுதிரட்டி வலுவாக்கும் முயற்சி எமக்கு அவசியமாகும், அரசியல் வேறு விடயமாகும். அது பிரிவதற்கான காரணம் அல்ல. இனம் அல்லது மதத்தை ஒருங்கிணைந்த நாட்டை உருவாக்குவதற்கு தடையாக கொள்ளக் கூடாது. பிரிவு மற்றும் அதனால் மோதல்களை ஏற்படுத்தல் குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் திட்டங்களின் அடையாளமாகும்.

இலங்கையின் முன்னால் புதிய வாய்ப்புகள் உள்ளன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக தொடர்பாடல் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ள காலமிது. இளைஞர் சமூகம் அந்த இடத்தில் இணைகின்றது. புதிய யுகம் ஒன்றை ஏற்படுத்துவது அரசியல் கோஷங்களுக்கு மாத்திரம் எல்லைப்படக் கூடாது. சமூக பொருளாதார சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்கு புதிய கொள்கைகளை முன்வைக்க வேண்டியதோடு திறந்த மனதுடன் முடிவுகளை எடுக்க வேண்டும். தற்போது எம் முன்னாலுள்ள கஷ்டமான பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கு ஆத்மபலத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மத, சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் இணைந்து ஏகாதிபத்தியவாதிகள் மாற்றியதை புதிய மாதிரிக்கு எவ்வாறு மாற்றுவது என கலந்துரையாட வேண்டும். அடிப்படைவாதத்திற்கு பதிலாக உண்மையான சுதந்திரத்தை நாட்டில் ஏற்படுத்துவது அவசியமாகும்.

தமிழில்: வீ.ஆர். வயலட்

எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள்

சிங்களவருடன் இணைந்து வாழ்வது குறித்த ஆவணம்

மனோ M.P தலைமையில் 12 பேர் தயாரிப்பில்

எமது நாட்டில் தமிழ்பேசும் மக்கள் கண்ணியத்துடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய சூழலை உருவாக்கி, தேசிய பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

அதன்படி வடக்கு, கிழக்கு, தெற்கிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளடங்கிய 12 பேர் இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடி, சிங்களவர்களுடன் இணைந்து வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு வழிவகுக்கக்கூடிய ஆவணமொன்றைத் தயாரிக்க முற்படுவதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரின் பின்னரும் சிறுபான்மையினர் மொழிப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். பொலிஸ் நிலையம், நீதிமன்றம், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் செல்லும்போது அங்கு பெரும்பாலும் தமிழ்மொழி மூலமான சேவைகளை எம்மால் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

சிறுபான்மை தமிழ்மக்களின் பிரதிநிதி என்ற வகையில் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, ஓர் அறிக்கையைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், அதற்காகப் பல மணிநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

அத்தோடு வேலைவாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகச் செல்லும்போது, அங்கு சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படுவதும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதும் முக்கிய பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது இலங்கை ஸ்திரதன்மையற்ற நாடாக மாறிவருகின்றது. இதனைக் கூறுவது வெட்கத்திற்குரிய விடயம் என்றாலும் கூட, இதுவே இன்றைய யதார்த்தமாக இருக்கின்றது.எது எவ்வாறிருப்பினும் நாட்டில் நிலவும் தேசிய பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமையே இத்தகைய ஸ்திரமற்ற நிலை உருவாவதற்கான அடிப்படைக் காரணமாகும்.

வடக்கு, கிழக்கு, தெற்கிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளடங்கிய 12 பேர் இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடவுள்ளனர்.

அதனூடாக சிங்கள சகோதர, சகோதரிகளுடன் இணைந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு வழிவகுக்கக்கூடிய ஆவணமொன்றைத் தயாரிக்க முற்படுகின்றோம் என்று அவர் தெரிவித்தார்.

A/L பரீட்சை நாளை ஆரம்பம் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

கல்விப் பொதத் தராதர உயர் தரப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாவுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.

நாளை 07ஆம் திகதி முதல், எதிர்வரும் மார்ச் மாதம் 05ஆம் திகதிவரை 2,437 பரீட்சை நிலையங்களில் உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளது.

03 இலட்சத்து 45,242 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர்களில், 2,79,141 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 66,101 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மற்றும் தனிமைப்படுத்தலிலுள்ள பரீட்சார்த்திகளுக்காக, விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூத்த ஒலிபரப்பாளர் சனூஸ் முஹம்மத் பெரோஸின் இழப்பு இத்துறையில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த அனுதாபம்

நீண்ட காலமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பிரிவில் அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் ஒலிபரப்பாளராகவும் பணி புரிந்த சகோதரர் சனூஸ் முஹம்மத் பெரோஸின் இழப்பு இத்துறையில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறந்த குரல் வளம், தமிழ் மொழி உச்சரிப்பு, அவரது ஆற்றல் என்பவற்றின் காரணமாக ஒலிபரப்புத் துறையில் முன்னணி ஊடகவியலாளராகத் திகழ்ந்தார். ஊடகத் துறையில் விரிவுரைகள், வகுப்புக்களையும் நடத்தி தனது அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

தமிழ் சேவையில் பகுதி நேர தொடர்பாளராக பணியாற்றியதோடு கட்டுப்பாட்டாளர் பதவியையும் வகித்தார். சிறிது காலம் முஸ்லிம் சேவையின் தலைவராகவும் பணியாற்றினார்.

எல்லோருடனும் இனிமையாக பழகக்கூடிய ஒருவர். ஆராவாரமின்றி, பெருமையின்றி நிதானமாக இத்துறையில் பணி புரிந்த சகோதரர் சனூஸ் முஹம்மத் பெரோஸின் மறைவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிக்கிறது. அவரது மறுமை வாழ்வு வெற்றி பெற பிரார்த்திக்கிறது.

வாக்காளர் பட்டியல் தொடர்பில்...

அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர்களை உள்ளடக்குவது அல்லது அதற்குரிய திருத்தங்களை கிராம உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு மேற்கொள்ள முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொவிட்19 தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு, பி.சி படிவங்கள் இம்முறை வீடுகளுக்கு விநியோகம் செய்யப்படாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் கடந்த 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஜூன் 15ஆம் திகதி வரை நடைபெறுமென தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருட்களுடன் 1800...

டொலர் நெருக்கடி காரணமாகவே மேற்படி கொள்கலன்கள் விடுவிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாக தெரிவித்துள்ள அந்த சங்கமானது, மத்திய வங்கி இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

மேற்படி கொள்கலன்களில் 500 கொள்கலன் அரிசியும் உள்ளடங்கும் நிலையில் பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு வெங்காயம் உட்பட பல்வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அதில் உள்ளடங்குவதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (ஸ)

இரா உதயணன் இலக்கிய...

கலைஞர்கள், கவிஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில், பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விழாவில் சிறப்பு அம்சமாக சிரேஷ்ட ஊடகவியலாளரும், எழுத்தாளருமான கே. பொன்னுத்துரையின் எழுபதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது 'எண்ணப் பகிர்வுகள்' அடங்கிய தொகுப்பு நூலும் வெளியிடப்படவுள்ளது. விழாவில் தேசிய தமிழ் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கொரோனா தொற்று நிலைமை காரணமாக லண்டனில் தங்கியுள்ள லண்டன் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவனங்களின் ஸ்தாபகரும், தலைவருமான இரா உதயணன் கலந்து கொள்ள முடியாத காரணத்தினால் அவர் காணொளி மூலமாக அங்கிருந்தவாறே விழாவில் உரையாற்றுவார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஸனூஸ் முஹம்மத் பெரோஸ் காலமானார்

மூத்த ஒலிபரப்பாளரும் இலங்கை வானொலி மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்னாள் செய்தி வாசிப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஸனூஸ் முஹம்மத் பெரோஸ் 03ஆம் திகதி இரவு தனது 60 ஆவது வயதில் காலமானார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் திடீர் சுகயீனமுற்று கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பினார். பின்னர் நேற்று 03ஆம் திகதி மீண்டும் சுகயீனமுற்றதையடுத்து களுத்துறை நாகொட அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் அவர் அங்கு மரணமானார்.

பேருவளை மருதானையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த பின் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து தமிழ் சேவையின் பகுதிநேர அறிவிப்பாளராக கடமையாற்றினார். அங்கு சிறப்பாக பணியாற்றிய அவர் கட்டுப்பாட்டாளர் பதவி வரை பதவி உயர்வு பெற்றார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் சந்தர்ப்பத்தில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலும் செய்தி வாசிப்பாளராக கடமை புரிந்தார். பின்னர் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பொறுப்பாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

பொது இடங்களில் இனி...

அந்த வகையில் பொது இடங்கள் மற்றும் முழுமையான தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளமை என்பது தொடர்பிலான விளக்கத்தையும் சுகாதார அமைச்சு வெளிப்படுத்தியுள்ளது.

அதற்கிணங்க வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின்படி பொது இடங்கள் என்பது கட்டணம் செலுத்தி மற்றும் கட்டணம் செலுத்தாத இடங்கள், அழைப்பிதழ் மூலம் மற்றும் அழைப்பிதழ் இல்லாத இடங்கள் ஆகியவற்றுக்கு பிரவேசித்தல் அத்துடன் பொது போக்குவரத்துக்களில் பயணித்தல் என்பவற்றை குறிப்பிடுகின்றன.

போதிய அதிகாரம் உள்ள அதிகாரிகளினால் விடுவிக்கப்பட்டுள்ள நபர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து நபர்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான முழுமையான தடுப்பூசியை பெற்றுக் கொள்தல் அவசியம் என்றும்

அதேவேளை விதிவிலக்குகள் காரணமாக கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் மற்றும் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளக்கூடியவயதினர்அல்லாதவர்களுக்கு இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலமான உத்தரவு பொருந்தாது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ)

இந்திய மீனவரது அத்துமீறல்...

இந்நிலையில், இவ் விடயம் தொடர்பில், கடற்படை பேச்சாளர் குறூப் கெப்டன் இந்திக்க டி சில்வாவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,..

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறும் பகுதிகள் தொடர்பான கண்காணிப்புகளின் அடிப்படையில், அந்தப் பகுதிகளில் கடற்படை படகுகள் கண்காணிப்பில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டார். எவ்வாறிருப்பினும், சில சில இடங்களில் அவர்கள் ஊடுருவ முடியும். இது கடற்படைக்கு அப்பால், இராஜதந்திர ரீதியிலான பிரச்சினையாகுமென்று கடற்படை பேச்சாளர் குறூப் கெப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்துள்ளார்.

எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல...

இன்று நாட்டின் எப்பிரதேசத்திலும் சுதந்திரமாக, பாதுகாப்புடன் வாழும் உரிமையுண்டு.

தாம் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான சுதந்திரமுள்ளது. சுயாதீனமாக அபிப்பிராயங்களை கொள்வதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. நாட்டினுள் முழுமையாக ஊடகச் சுதந்திரம் இருக்கின்றது.

சுதந்திரம் மிக்க ஜனநாயக ரீதியிலான நாடொன்றின் மக்கள் என்ற வகையில் நாம் எல்லோருக்கும் சிறப்புரிமைகள் இருப்பது போன்று பொறுப்புக்களும் இருக்கின்றன.

எல்லோரும் நாட்டிற்காகத் தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் போதுதான் கிடைத்த சுதந்திரத்தின் உச்சக்கட்டப் பயன் கிடைக்கும். பொறுப்புக்களை மறந்துவிட்டு உரிமைகளைப் பற்றி மட்டும் பேசுவது பொருத்தமாக இருக்காது.

ஒரு நாட்டின் சுதந்திரமானது மிக அர்த்தமாக அமைவது, அந்த நாடானது சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய சகல அம்சங்களினாலும் வலுவடைந்தபோதே ஆகும். அதற்காக முனைப்பாகப் பங்களிக்கும் சந்தர்ப்பம் அரசைப் போன்று மக்களுக்கும் உள்ளது.

எங்கள் கருத்து...

நாட்டில் மீண்டும் களைகட்டும் தமிழ் இலக்கிய விழாக்கள்

மாபெரும் விருது வழங்கும் விழா இன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் விமர்சையாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. வழமைபோன்று இலக்கிய விழாக்களில் இதுவரை 1200 க்கும் அதிகமான நூல்களின் முதல் பிரதிகளை பெரும் பணம் கொடுத்து வாங்கிவரும் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் பேராசிரியர் சபா ஜெயராசாவின் வழிநடத்தலில் இந்த விழா சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

இந்த விழாவில் மூத்த பத்திரிகையாளர் கே. பொன்னுத்துரையின் எழுபதாவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது நண்பர்கள் வட்டத்தினால் அவரது 'எண்ணப் பகிர்வுகள்' எனும் தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்படும். இவ்வாறு தலைநகரம் மீண்டும் தமிழ் விழாக்களால் களைகட்டத் தொடங்கியுள்ளது. இது வைரஸ் தாக்கத்தினால் வெளியே வர பயந்து வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த மக்களுக்கு குறிப்பாக எழுத்தாளர்களுக்கும் இலக்கியவாதிகளுக்கும் கலைஞர்களுக்கும் ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியாக அமைந்துள்ளது.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இத்தகைய விழாக்களை மீண்டும் நடத்தி தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்கூற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அம்பிகா வெளியிட்ட கருத்துக்கள்...

எனவே, அவரது குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாகவும், ஏற்கனவே கொரோனா தொற்றினால் அனைவரதும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் இவ் வரிச் சலுகையை இலங்கை இழந்தால், அதனால் பல இழப்புக்கள் ஏற்படுமென இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் உள்நாட்டு செயன்முறைகள் மற்றும் நிறுவனங்களின் மூலம் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை இலங்கை வழங்கி வருகின்றதென அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இன ரீதியாக சமூகங்களுக்கு பாகுபாடு காட்டப்படுவது தொடர்பான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் ஒரு காலத்தில் சமூகங்களுக்கிடையில் வெறுப்பைத் தூண்டிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசாரத்தை நினைவூட்டுவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது.

அத்தோடு சிங்கள பௌத்த தேசியவாதம் மற்றும் இராணுவமயமாக்கல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சத்குணநாதன் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சு, நாட்டில் அனைத்து தரப்பினருக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத்தினர் வசமிருந்த தனியார் காணிகளில் 92 வீதத்துக்கும் அதிகமான காணிகள் உரிமையாளர்களிடமே கையளிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவற்றை கையளிக்கும் நடவடிக்கை நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

காணி விடுவிப்பில் தாமதம், பயங்கரவாத தடைச் சட்டத்தை தவறாக பயன்படுத்துகின்றமை, மனித உரிமைகள் மீறப்படுகின்றமை, குடிசார் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்துகின்றமை உள்ளிட்ட அம்பிகா சற்குணநாதனின் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், அம்பிகா சற்குணநாதனின் கருத்துகளுக்கு பதிலளிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு, அம்பிகா வெளியிட்ட தவறான விடயங்கள் தொடர்பில் கவலை தெரிவித்துள்ளது.

நாட்டை முடக்க...

தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில் அவரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவ்வாறு நம் தற்போதைய சூழலில் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வது சுகாதாரவழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுவது அவசியம் என தெரிவித்துள்ளார்.(ஸ)

வெல்லவாய...

தெரிவித்தனர். மாத்தறையிலிருந்து மேற்படி பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளவர்களே அந்த நீர் வீழ்ச்சியில் நீராடிக் கொண்டிருக்கையில் அவர்களில் மூவர் இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் உயிரிழந்தவர்களின் சடலங்களை பொலிசார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மீட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.(ஸ)

மூத்த பத்திரிகையாளர்...

நிகழ்வுகளை இவ் வருடம் சிறப்பாக கொண்டாட அவரது ஞாபகார்த்த குழு ஏற்பாடுகளை செய்து வருகின்றது. (விபரமான செய்தி 11 பக்கத்தில்)

தமிழக இலங்கை மீனவர்களது...

இலங்கை தமிழ் மக்களுடன் எமக்கு தொப்புள் கொடி உறவு உள்ளது என்பதை இது பகுதியினருமே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அவ்வாறு இருக்கையில் இந்த சிறு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமும் அவசரமும் ஆன தேவையாக உள்ளது. இந்த இருநாட்டு மீனவர்களும் சச்சரவுக்கு உள்ளாகும் விடயத்தில் நாங்கள் அதாவது இந்திய மீனவர் சமூகம் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றோம். அதேபோன்று இலங்கை மீனவர்களும் இந்த விடயத்தில் பொறுமையாகவும் அவதானமாகவும் செயற்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

உண்மையை சொன்னால் எமது இந்த பிரச்சினையை தமது அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ள சில அரசியல்வாதிகள் முனைப்பாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. அதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

நாங்கள் விரைவில் இலங்கை வந்தேனும் எமது மீனவ சமூகத்துடன் பேச்சு நடத்தி ஒற்றுமையாக நமக்குள் நிலவும் சகல பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்வோம். அதுவரை பொறுமையாக இருக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது இந்த நிலைமையை பயன்படுத்தி எவராவது அரசியல் இலாபம் பெற முயன்றால் அதற்கு இடமளிக்க வேண்டாம் என்று நான் இருதரப்பு மீனவ சமூகத்தையும் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக தேவையற்ற போராட்டங்களை நடத்தக்கூடாது என்ற அறிவிப்பை விடுத்த இலங்கை அரசாங்கத்திற்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். போராட்டங்கள் மூலம் இந்தப் பிரச்சினையை மேலும் தீவிரமடையுமே தவிர இதனை குறைக்க முடியாது.

நம்பிக்கையை ஏற்படுத்திய... (09 ஆம் பக்கத் தொடர்)

அரசியல் கைதிகள் என்று சட்டத்தின் அடிப்படையில் எவரும் இல்லையெனவும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களே உள்ளதாகவும் நீதி அமைச்சர் இதன்போது குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிணை வழங்குவது மற்றும் விடுதலை செய்வது தொடர்பாக ஜனாதிபதிக்கு பரிந்துரை வழங்குவது குறித்து ஆலோசனைக் குழுவொன்றை முன்னாள் பிரதமர நீதியரசர் அசோக்க டி சில்வா தலைமையில் குழு அமைத்துள்ளதை இன்போது சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், குறித்த குழுவிற்கு 44 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதையும் இங்கு தெளிவுபடுத்தியிருந்தார்.

அனைத்து சிறுபான்மை... (09 ஆம் பக்கத் தொடர்)

இன்று அந்த தோட்டங்கள் மீது அன்பும் தொழிலில் பற்றும் இல்லாத தொழிலாளர்களே ஏனோ தானோவென தொழில் செய்கின்றனர்.

இப்படி ஒரு நிலை தொடர்வதால் சீனாவிலிருந்து பெருந்தோட்டங்களுக்கு தொழிலாளர்களை இறக்குமதி செய்யவும் உள்ளதாக அறிய முடிகிறது. தொழிலாளர்கள் தினமும் போராடுகின்றனர், சம்பள உயர்வு கேட்கிறார்கள், தொழிலுக்கு வருவதில்லை என்றெல்லாம் இதன் பொருட்டு காரணங்கள் காட்டப்படுகின்றன.

கே: இதற்கு தீர்வு என்ன.

பதில் பெருந்தோட்ட துறையும் பெருந்தோட்ட துறையில் தொழிலாளர்கள் இருக்கின்ற வரையிலும் தான் மலையக மக்கள் என்ற சக்தி இருக்கும்.பெருந்தோட்ட துறை இல்லையென்றால் அங்குள்ள மக்களின் சக்தியும் இல்லாமல் போய்விடும். நமது தோட்ட சமூகம் கல்வியில் சிறந்தால் மாத்திரமே மலையகம் சிறக்கும். தொழிலாளர்களின் வாழ்வும் சிறக்கும். அதே சமயம் தொழில் என்ற வகையில் பெருந்தோட்ட தொழில் ஒரு சக்தியாக அமைய வேண்டும். ஏனைய சிலர் வெளி இடங்களுக்கு சென்று சாதாரண தொழில் செய்கின்றனர். ஹோட்டல்கள், துணிக்கடையில், பணிபெண்களாக தொழில் செய்வதெல்லாம் முடிவுக்கு வர வேண்டும்.

நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நாடு எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளில் இருந்து மீளும் போது சிறுபான்மையினரின் பிரச்சினைகள் மற்றும் இனப் பிரச்சினை முற்று முழுதாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் மீண்டும் நாடு பாதாளத்தில் வீழ்வதைத் தடுக்க முடியாது.

ஐந்து வருடங்களின் பின்னர்... (19 ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் கிளிநொச்சி நீதிமன்றில் திருட்டு குற்றம் தொடர்பிலான வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட குற்றவாளி, தனக்கு கர்ப்பிணி பெண் கொலை தொடர்பில் சில தகவல்கள் தெரியும் எனவும் கிளிநொச்சி நீதிமன்றில் தெரிவித்தார்.

அதனையடுத்து கிளிநொச்சி நீதவான் அந்த நபரை ஊர்காவற்துறை நீதிமன்றில் சாட்சியம் அளிக்க ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இருவரிடமும் தாம் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளதாக 2017ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது ஊர்காவற்துறை பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். ஐந்து வருடங்களின் பின்னர் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை நடந்த தினமான 2017 ஜனவரி 24ஆம் திகதி கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனான ஊர் காவற்துறை நீதிமன்றில் பணியாற்றும் ஞானசேகரனுக்கு, தற்போது கைது செய்யப்பட்ட நபரும், நெடுந்தீவில் சிறுமி ஒருவரை வன்புணர்ந்து படுகொலை செய்த குற்றசாட்டில் தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளியும் (கொலை சம்பவம் இடம்பெற்ற கால பகுதியில் பிணையில் விடுவிக்கப்படிருந்தார்) தொலைபேசியில் தொடர்பு கொண்டு "எங்கே நிற்கிறாய்?" என வினாவியுள்ளார். அதன் போது தான் வேலையில் நிற்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

குறித்த தொலைபேசி அழைப்பினை மேற்கொண்ட இருவரும் நெடுந்தீவு பகுதியை சேர்த்தவர்கள். படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனும் நெடுந்தீவை சேர்ந்தவர் என்பதனால், ஆரம்பத்தில் குறித்த தொலைபேசி அழைப்பு தொடர்பில் பொலிஸார் கவனத்தில் கொள்ளாத நிலையில், வழக்கு விசாரணைகள் குற்றப்புலனாய்வு பிரிவினரின் கைகளுக்கு மாறியது. குற்றப் புலனாய்வு பிரிவினர் தமது விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதன் அடிப்படையில் கொலை நடந்ததாக சந்தேகிக்கப்படும், நேரம், கொலையான பெண்ணின் கணவனுக்கு வந்த திடீர் தொலைபேசி அழைப்பு என்பன தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதேவேளை, தொலைபேசி அழைப்புக்களை எடுத்த நபர்களில் ஒருவர் மரண தண்டனை கைதியாக சிறையில் உள்ள நிலையில், தனக்கு படுகொலை தொடர்பில் தகவல்கள் தெரியும் என சிறையில் பேரம் பேசிய சம்பவமும் அவர்கள் மீதான சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது.

அதன் அடிப்படையில் தொலைபேசி பகுப்பாய்வுகள் மூலம் விசாரணைகளை முன்னெடுத்து , ஐந்தாண்டுகளில் பின்னர், நெடுந்தீவை சேர்ந்த தற்போது கிளிநொச்சியில் வசித்து வரும் நபரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் குற்றபுலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில், தானும், நெடுந்தீவு சிறுமி கொலை வழக்கில் தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் உள்ள நபரும் இணைந்தே கர்ப்பிணி பெண்ணை கொலை செய்ததாக தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவை அரசியலிலிருந்து நீக்குவதற்கு தொடுக்கப்பட்ட வழக்கு

பஞ்சாங்க வழக்கில் குற்றமற்றவராக பசில்

சட்ட மா அதிபர் திணைக்களம் பொலிஸ் திணைக்களம் எடுக்க வேண்டிய முடிவுகளை அரசியல்வாதிகள் எடுக்க முனைந்தால் அங்கு சட்டம் காடுமண்டிப் போகும். ஆனால் 'நல்லாட்சி' காலத்தில் சட்டமா அதிபரின் கருத்தைக் கூட பின்தள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அனைவரும் அறிவார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் முன்னாள் பிரதமர் அமைத்தார் என கூறப்படும் 'அரசியலமைப்பு சபை' மற்றும் அதனோடு இணைந்த ஊழலுக்கு எதிரான குழு தொடர்பாக சமூகத்தில் விமர்சனங்கள் காணப்பட்டன. அந்த குழு ராஜபக்ஷக்களை சிறையில் அடைக்க உருவாக்கப்பட்டது என சிலர் கூறினார்கள்.

அண்மையில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் கித்சிறி ரணவக்க ஆகியோர் விடுதலையான 'பஞ்சாங்க வழக்கு' அவ்வாறான ஒன்றென வழக்கு தீர்ப்பிலிருந்து தெளிவாகியுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்தவால் தற்போதைய நிதி அமைச்சர் அன்றைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும திட்டத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ரணவக்க ஆராய்ச்சிகே அமித் கித்சிறி ஆகியோருக்கு எதிரான பஞ்சாங்க வழக்கிலிருந்து அவர்கள் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு குற்றமற்றவர்கள் என பூரணமான வழக்கு விசாரணையின் பின்னரே விடுதலை செய்யப்பட்டது விசேட அம்சமாகும். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாட்சியம் அளிக்க அழைக்கப்படாமலே வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து வழக்கில் எதுவித சாரமும் இல்லை என்பது தெளிவாகிறது. உயர்நீதிமன்ற நீதிபதியும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த குறிப்பிட்ட கடந்தகால சம்பவம் தொடர்பாக அப்போதைய 'நல்லாட்சி' அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து பேசியாகவேண்டும். வழக்கை பார்க்கும்போது இந்த வழக்கானது பசில் ராஜபக்ஷவுக்கு எதிரான அரசியல் விரோதத்தால் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு என்பதை அன்றைய சட்ட வல்லுநர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இந்த வழக்கு தொடர்பாக சாட்சியங்களை பதிவு செய்வதற்காக 2016ஆம் ஆண்டளவில் விசாரணை நிறுவனத்துக்கு வருமாறு பசில் ராஜபக்ஷவுக்கு அறிவித்த பின்னர் அவர் அதனை மதித்து வெளிநாட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்தார். விசாரணை அதிகாரிகள் பாரிய ஊடக பிரசாரம் ஒன்றை மேற்கொண்டு அவரை குறிப்பிட்ட விசாரணை காரியாலயத்துக்கு அழைத்து வந்தார்கள். பின்னர் மாலை ஆறு, ஏழு மணியளவில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி அமைச்சர் பசில் மற்றும் கித்சிறி ரணவக்க ஆகியோரை நடுராத்திரியில் விளக்கமறியலில் வைத்தார்கள். அதிலிருந்தே இந்த வழக்கு தொடர்பாக நல்லாட்சி அரசாங்கத்தின் அக்கறை தெளிவாகியுள்ளது. அதை மேலும் எடுத்துக்காட்டுவதாக இவர்கள் இருவரையும் நீதிமன்றத்துக்கு அழைத்து வருவதற்கு முன்னரே அந்த நீதிமன்றத்துக்கு அருகில் சிறைச்சாலை வாகனம் ஒன்றும் காணப்பட்டுள்ளது.

பொலிஸாரால் சட்டமா அதிபருக்கு முன்வைக்கப்பட்ட விசாரணை ஆவணங்களின்படி சட்டமா அதிபரால் முதலில் பசில் ராஜபக்ஷ மற்றும் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராக பஞ்சாங்கம் அச்சிட்டமை தொடர்பான குற்றச்சாட்டு வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில் திவிநெகும பஞ்சாங்கம் 5 லட்சம் அச்சடித்ததாகவும் அதற்கு 250 லட்சம் ரூபா செலவிட்டதாகவுமே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த வழக்கு 2016 டிசம்பர் 6ஆம் திகதி முறைப்பாட்டு தரப்பால் விலக்கிக் கொள்ளப்பட்டதோடு அன்றைய தினம் வேறொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் முதலில் 5 லட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டது என்ற குற்றச்சாட்டு 50 லட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது. பசில் ராஜபக்ஷவும் மற்றும் கித்சிறி ரணவக்கவும் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டது இரண்டாவதாக தாக்கல் செய்யப்பட்ட பஞ்சாங்க வழக்கிலிருந்தாகும்.

2016 டிசம்பர் மாதம் 6ஆம் திகதி சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின்படி பசில் ராஜபக்ஷவுக்கு மற்றும் கித்சிறி ரணவக்கவுக்கும் எதிராக ஐந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

2014 நவம்பரிலிருந்து டிசம்பர் 31ஆம் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் உருவப்படத்தை காட்சிப்படுத்தி 50 லட்சம் பஞ்சாங்கங்களை அச்சிட்டு 1981 இலக்கம் 15 என்னும் ஜனாதிபதி தேர்தல் சட்டம் 79 என்னும் பிரிவினை மீறி ஊழல் தொடர்பாக குற்றமிழைத்தமை, அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருந்தமை, தண்டனை சட்டத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றத்தை மேற்கொண்டமை, மற்றும் ஜனாதிபதியை தெரிவு செய்யும் சட்டத்துக்கு அமைய தண்டனை பெறக்கூடிய குற்றங்களை புரிந்தமை போன்ற குற்றச்சாட்டுகள் மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான 294 லட்ச ரூபா நிதியை தவறான முறையில் துஷ்பிரயோகம் செய்தமை போன்றவையே அந்த ஐந்து குற்றச்சாட்டுகளும் என குறிப்பிடலாம். இந்த வழக்கு உள்ளிட்ட மேலும் இரண்டு வழக்குகள் காரணமாக பசில் ராஜபக்ஷ 70 நாட்களும், கித்சிறி ரணவக்க 152 நாட்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்த குற்றப்பத்திரம் 2017 பெப்ரவரி 15ஆம் திகதி கித்சிறி ரணவக்கவிற்கு திறந்த நீதிமன்றில் கையளிக்கப்பட்டதோடு ராஜபக்ஷவுக்கு மார்ச் 15ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டது. 2020 நம்பர் 5ஆம் திகதி ஆரம்ப நிலை நீதிபதி கிஹான் குலத்துங்க முன்னிலையில் இந்த குற்றப் பத்திரம் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

அங்கு குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக ஆஜராகிய சட்டத்தரணிகள் அடிப்படை மறுப்பை நீதிமன்றத்தில் முன்வைத்து வழக்கின் குற்றங்கள் எந்த ஒரு அடிப்படையும் இல்லாதது என பழைய வழக்கின் முடிவை முன்வைத்து கூறினார்கள். அத்துடன் இந்த வழக்கை இந் நிலைமையின் கீழ் முன்னெடுத்து செல்வதற்கு முடியாது எனவும் சுட்டிக் காட்டினார்கள்.

இவ் வழக்கு சட்ட அடிப்படையற்றது எனவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து பசில் ராஜபக்ஷவின் அரசியல் பயணத்தை நிறுத்துவதற்கும் பசில் ராஜபக்ஷவை அரசியல் பூமியிலிருந்து நீக்குவதற்கும் தொடுக்கப்பட்ட வழக்கு என சட்டத்தரணி சனத் விஜயவர்தனவின் ஆலோசனையின் பேரில் பசில் ராஜபக்ஷவுக்கு ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன 2017 நவம்பர் 15 ஆம் திகதி நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்து கூறினார்.

ஜனாதிபதியை தெரிவுசெய்யும் சட்டம் 113 அ பிரிவின் கீழ் முன் வைக்கப்பட வேண்டிய குற்றச்சாட்டு 113 ஆ பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டு பசில் ராஜபக்ஷவின் குடியுரிமையையும் நீக்குவதற்கு சூழ்ச்சி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அந்த சூழ்ச்சி பண்டாரநாயக்க அம்மையாருக்கு குடியுரிமையை நீக்கிய சூழ்ச்சிக்கு சமனானது என விடயங்களை முன்வைத்தார். சட்டத்தில் 'அ' குறிப்பிடப்படவேண்டியது 'ஆ'என குறிப்பிடப்பட்டிருந்தது அச்சுப் பிழை அல்லது தட்டச்சு பிழையாலோ அல்லவென்றும் சூழ்ச்சி காரணமாகவே என அவர் தெளிவுபடுத்தியது வழக்கை தொடுத்த பின்னணி மற்றும் வழக்கின் விசாரணை நடவடிக்கைகளை சுட்டிக்காட்டியாகும். பல வழக்கு தவணைகளுக்கு பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. கடந்த நவம்பர் 5 ஆம் திகதி வழக்கு விசாரணையை ஆரம்பித்த பின்னர் இந்த முறைப்பாட்டின் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த சட்டமா அதிபரால் நீதிமன்றத்தின் முன்னால் சாட்சிகள் அழைக்கப்பட்டார்கள்.

திவிநெகும பஞ்சாங்க வழக்கு குற்றச்சாட்டுக்கு சமனான குற்றச்சாட்டுடன் கூடிய பல வழக்குகளிலிருந்து (வழக்கு விசாரணையின் பின்னர் ஜி ஐ குழாய் வழக்கிலிருந்து விடுவிக்க உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதாக) குற்றம்சாட்டப்பட்டவர்களை குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்க கொழும்பு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கு சமனான குற்றச்சாட்டை கொண்ட இந்த பஞ்சாங்க வழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபரிடமும் மற்றும் உயர் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்தார்கள்.

சட்டமா அதிபரின் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட பதில் சொலிசிஸ்டர் நாயகம் திலீப பீரிஸ் அந்த வேண்டுகோளுக்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டமா அதிபர் வழக்கின் சாட்சிகளை விசாரிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

அதன்படி சட்டமா அதிபர் சமுர்த்தி இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் சம்பிக்க தினேஷ் கலு ஆராய்ச்சியின் சாட்சியத்தை நீதிமன்றத்தில் முன்வைத்தார்.

(அந்த சாட்சி முன்னர் எப் சிஐடி க்கு சாட்சி வழங்கியவர்)

அந்த சாட்சிகளின் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பாக குற்றவியல் தவறு கண்டறியப்படாததால் மற்றும் பஞ்சாங்கம் அச்சிடப்பட்டது அரச கொள்கைகளுக்கு அமைய குறிப்பிட்ட நிதி வழங்கல் நடவடிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான நடவடிக்கை என கண்டறிந்ததால் வழக்கை வாபஸ் பெற வேண்டுமென ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன நீதிமன்றில் தெரிவித்தார்.

வழக்கின் சாட்சிகளுக்கு அமைய தொடர்ந்தும் வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதால் வழக்கு தொடர்பாக முடிவொன்றை எடுக்குமாறு குற்றம் சாட்டப்பட்டவர்களின் சட்டத்தரணி சட்டமா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், இந்த வழக்குக்கு இணைந்ததாக தொடுக்கப்பட்ட வழக்குகளிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதால் அந்த வேண்டுகோளை விடுத்ததாக காமினி மாரப்பன நீதிமன்றில் தெரிவித்தார்..

குற்றம் சாட்டப்பட்டவர்களின் குறிப்பிட்ட வேண்டுகோள் தொடர்பாக பதில் சொலிசிட்டர் நாயகம் திலீப் பிரீஸ் நீதிமன்றில் பின்வருமாறு விடயங்களை முன்வைத்தார்.

'இந்த வழக்கு தொடர்பான விசாரணை ஆரம்பமானது 2015 பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஊழல் ஒழிப்பு குழுவின் செயலாளர் பணிப்பாளர் என கூறப்படும் நபர் பொலிஸ் நிதி குற்ற விசாரணை பிரிவுக்கு (FCID) செய்த முறைப்பாட்டுக்கு அமையவாகும். பல விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த விசாரணை கோவை மற்றும் ஆவணங்களின் படி சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்கிறார். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக அவ்வாறு தொடுக்கப்பட்ட வழக்குகளில் எஞ்சியிருப்பது இது மாத்திரமே.

வழக்கின் சம்பவம் மற்றும் தன்மையின் படி குற்றவியல் தவறு நடந்துள்ளதா இல்லையா என முடிவு செய்வதற்கு மேலும் சாட்சியங்களை அழைக்க வேண்டும். ஏனென்றால் சட்டமா அதிபரால் சாட்சிகளுடன் நேரடி கலந்துரையாடலை நடத்த முடியாது. விசாரணைகளின் படி வழக்கொன்றை தாக்கல் செய்வது போன்று வாபஸ் பெறுவதும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாமல் வழக்கை வாபஸ் பெறுவதால் வேறுவிதமான விளக்கங்கள் சமூகத்திற்கு சென்றடையும்.

சட்டமா அதிபருக்கு ஒரு முடிவை எடுப்பதற்கான ஒரே வழி ஆவணங்களும் மற்றும் சாட்சிகளும் மாத்திரமே. சட்டமா அதிபரால் சாட்சியங்களை அழைத்து கலந்துரையாட முடியாது. இன்று முன்வைக்கப்பட்ட சாட்சியங்கங்களின்படி தெரிய வருவதாவது இது 2013 இலக்கம் 1 என்னும் திவிநெகும சட்டத்தின்படி அமைச்சின் நடவடிக்கைகளுக்கு அமையவே பஞ்சாங்கம் அச்சிடப்பட்டுள்ளது. இந் நடவடிக்கையானது 2014க்கு முன்னர் நடைபெற்றுள்ளதாக இந்த சாட்சியங்களின் படி உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் சாட்சியங்கள் அளிக்கப்பட வேண்டுமா அவ்வாறு இல்லாவிட்டால் சட்டமா அதிபர் எடுக்கும் முடிவு என்ன என்பது தொடர்பாக நீதிமன்றத்திற்கு எதிர்காலத்தில் அறியத்தரப்படும்' அடுத்த வழக்கு தவணையின் போது சட்டமா அதிபர் சார்பில் ஒரு சாட்சி அல்ல மேலும் இரண்டு சாட்சியங்களை அழைக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் அந்த முடிவை நிராகரித்த உயர் நீதிமன்றம் ஒன்றிரண்டு சாட்சிகளை மாத்திரமல்ல அனைத்து சாட்சிகளையும் நீதிமன்றத்திற்கு அழைக்கும்படி சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

அந்த சாட்சிகளை அழைப்பதற்கு குற்றம் சாட்டப்பட்டவர்களின் சட்டத்தரணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் குறிப்பிட்டார்.

அதன்படி பசில் ராஜபக்ஷ மற்றும் கித்சிறி ரணவக்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காக முறைப்பாட்டாளர் சார்பில் அரச சாட்சியாளர்கள் 5 பேர் கொழும்பு உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் சாட்சியங்களை வழங்கினார்கள்.

2015க்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் விவசாய பஞ்சாங்கங்களை அச்சிடுவதற்கு முன்னால் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர்களினது மாத்திரமல்ல முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் படங்களையும் உள்ளடக்கி விவசாய பஞ்சாங்கங்களை அச்சிட்டுள்ளதாக சாட்சியாளர்கள் அந்த பஞ்சாங்கங்களை நீதிமன்றில் முன்வைத்து சாட்சியங்களை வழங்கினார்கள். சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு அமைய அரச அதிகாரிகளான தாங்கள் பஞ்சாங்கங்களை அச்சிட்டதாகவும், அவ்வாறு பணத்தை செலவு செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்க அச்சடிக்கப்பட்ட பஞ்சாங்கங்கள் 2015 ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னர் விநியோகிப்பதை தடுத்ததன் காரணமாக நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக சாட்சிகள் தெரிவித்தார்கள்.

அதுமாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப்படம் அதில் இணைத்து கொள்ளப்பட்டதற்கான காரணம் 2015ம் ஆண்டு தெங்கு அபிவிருத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமை ஆகும். திவிநெகும தேசிய விழாவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென்னங்கன்றை நடும் படத்தை அதில் போடுவதற்கு உத்தியோகபூர்வமாக முடிவு எடுக்கப்பட்டது என தெரிவித்தார்.

திவிநெகும பஞ்சாங்கம் அச்சிடுவதற்கு தேவையான நிதியை திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான நிறுவனத்துக்காக 2013 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியிலிருந்து பெற்றுக் கொண்டதாகவும், பஞ்சாங்கம் அச்சிடுதல் அச்சிடும் நடவடிக்கை என்பதால் தொடர் செலவை அதற்காக பயன்படுத்தியதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்(திட்ட) மகேஷ் பெரேரா சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். '' நான் ஆரம்பத்தில் தெற்கு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றினேன். 2014 ஜனவரி 8ஆம் திகதி தெற்கு அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட 5 நிறுவனங்கள் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைக்கப்பட்டன. தெங்கு அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் அமைக்கும்போது இணைக்கப்பட்ட நிறுவனங்களுக்காக திறைச்சேரியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 2013ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதி திவிநெகும அபிவிருத்தி திணைக்கள நிறுவனங்களுக்காக செலவு செய்ய அனுமதி கிடைத்திருந்தது. அதன்படி திவிநெகும பஞ்சாங்கத்தை தொடர் செலவிற்கு பெறப்படும் நிதியால் அச்சிடலாம் என்பதை நான் அறிவேன். பஞ்சாங்கம் அச்சிடும் பணி குறிப்பிட்ட பிரிவுகளின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட்டது'' என தெரிவித்தார் . சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை செய்யப்போவதில்லை என பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தார்கள்.

பிரதிவாதிகள் சார்பாக சட்டத்தரணி சனத் விஜயவர்த்தனவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி அனில் த சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த் வீரசிங்க, ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி சவீந்திர பெர்னாந்து, உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் ஆஜராகி இருந்தார்கள்.

கடந்த ஜனவரி 19ஆம் திகதி இந்த சாட்சி விசாரணைகளை பூர்த்தி செய்யப்பட்டதோடு முறைப்பாட்டின் மூலம் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் உறுதிசெய்ய தவறியுள்ளதாக உயர் நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டார். முறைப்பாட்டின் சாட்சிகள் குற்றச்சாட்டுகளை உறுதி செய்யாமல் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாகவே அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டிய நீதிபதி முறைப்பாட்டில் உள்ள குற்றச்சாட்டுகள் எவ்வித அர்த்தமுமற்றவை என தனது தீர்ப்பின் மூலம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக குறிப்பிட்ட வழக்கு விசாரணையின் முடிவு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)

ரோஷன் துஷார...
தமிழில் : வீ.ஆர்.வயலட்

காணியமைச்சின் செயலாளர் கித்சிறி ரணவக்க.

குற்றமற்றவர்கள் என பூரணமான வழக்கு விசாரணையின் பின்னரே விடுதலை செய்யப்பட்டது விசேட அம்சமாகும்

5 லட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிப்பட்டது என்ற குற்றச்சாட்டு 50 லட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது

பசில் ராஜபக்ச 70 நாட்களும், கித்சிறி ரணவக்க 152 நாட்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்

நான்காவது குற்றச்சாட்டும் உறுதி செய்யப்படாததோடு ஐந்தாவது குற்றச்சாட்டும் தோல்வி அடைந்துள்ளது

நெருக்கடிகளில் கைகொடுக்கும் நெருங்கிய தோழன் இந்தியா!

எமது நாடு இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும் தோள் கொடுப்பதற்கு உடனடியாக ஓடிவரும் அயல்நாடாக இந்தியா விளங்குகிறது. இலங்கையில் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் கட்டுமீறிப் போய் அரசு நெருக்கடியைச் சந்தித்த வேளைகள் பலவற்றில் இந்தியா உதவிக்கரம் நீட்டியிருக்கிறது.

ஜே.வி.பி கிளர்ச்சி மற்றும் புலிகளின் ஆயுதப் போராட்டம் போன்றவற்றை ஒடுக்குவதில் இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கிய ஆதரவுகள் மாத்திரமன்றி, எமது நாட்டின் பொருளாதார நெருக்கடி வேளைகளிலும் இந்தியா

எமக்கு கைகொடுத்துள்ளது.

'இலங்கையின் நலன் மீது நாம் எப்பொழுதும் அக்கறையுடன் இருக்கின்றோம்' என்பதை இந்திய நாடு இப்போது மீண்டுமொரு முறை நிரூபித்துள்ளது.

டொலர் பற்றாக்குறை காரணமாக இலங்கையின் பல்வேறு துறைகள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக எரிபொருள் துறையில் பல்வேறு பின்னடைவுகளுக்கு நாடு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. நாட்டில் தற்பொழுது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக மின்சார உற்பத்திக்கு நீர்மின் மூலங்களை விட அனல்மின் மூலங்களிலேயே நாடு அதிகம் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேசமயம் டொலர் பற்றாக்குறையால் போதிய எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத சூழல் நாட்டுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. இதுவிடயத்தில் இலங்கைக்கு உடனடியாகக் கைகொடுப்பதற்கு இந்தியா இன்று முன்வந்துள்ளது.

இந்தியாவிடமிருந்து பெற்றோலிய உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் கடந்த புதன்கிழமை கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் ஊடாக இந்தக் கடன் வழங்கப்படுகிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரசன்னத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை அரசாங்கம் சார்பில் திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவும், இந்தியா சார்பில் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் பிரதான பொது முகாமையாளர் கௌரவ் பண்டாரியும் கைச்சாத்திட்டனர். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.

டொலர் பற்றாக்குறை வேளையில் உதவிக்கரம் நீட்டிய அயல்தேசம்

இறக்குமதி செய்வதில் அரசாங்கம் சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

இதன் ஒரு அங்கமாக கடந்த டிசம்பர் மாதம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது இந்தியாவிடமிருந்து பல்வேறு உதவிகளுக்கான கோரிக்கைகளை அவர் முன்வைத்திருந்தார்.

எரிபொருள் நெருக்கடி தொடர்பில் இலங்கை அரசாங்கம் விடுத்த அவசர வேண்டுகோளுக்கு இணங்க இந்தியாவிடமிருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்திருந்தது.

கடந்த 15ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இதற்கான இணக்கம் எட்டப்பட்டது. கொவிட்19 தொற்று காரணமாக நாடு எதிர்கொண்டுள்ள பல்வேறு பொருளாதார சவால்களுக்கு மத்தியில் எரிபொருளை இறக்குமதி செய்வதற்குப் போதிய டொலர் இல்லாமையால் எரிபொருளை

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைப் பெற வேண்டும் அல்லது இந்தியா, சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற வேண்டும் என அரசியல் தலைவர்கள் பலரும் அரசை வலியுறுத்தியிருந்தனர்.

இவ்வாறான பின்னணியிலேயே இலங்கையும் இந்தியாவின் உதவியை நாடியிருந்தது. இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் நீண்ட கால நட்புறவைக் கருத்தில் கொண்டு

இலங்கை வரலாற்றில் கடந்த கால உள்நாட்டுக் கிளர்ச்சிகளாகட்டும், இல்லையேல் பொருளாதார நெருக்கடிகளாகட்டும்... ஓடோடி வந்து தோள்–கொடுக்க பாரதம் என்றுமே தயங்கியதில்லை

900 மில்லியன் டொலர் பெறுமதியிலான அந்நிய செலாவணி பரிமாற்றத்துக்கு இந்தியா உதவியுள்ளது. இந்த அண்மைய உதவியுடன் இந்தியா ஏறத்தாழ 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அபிவிருத்தி உதவியாக வழங்கியுள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் 'பிக் பிரதர்' அல்லது 'பெரியண்ணன்' என அழைக்கப்படும் இந்தியா எப்பொழுதும் இலங்கைக்கு அவசர உதவிக்கரம் நீட்டும் நட்புநாடாகவே விளங்கியுள்ளது. ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் புரையோடிப் போயிருந்த உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு அளப்பரியது.

அது மாத்திரமன்றி 2020ஆம் ஆண்டு கொவிட்19 தொற்றுநோய் பரவலுக்கு இலங்கை முகங்கொடுத்த போது, அதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் முதலாவது தொகுதி தடுப்பூசியை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியதும் இந்தியாவாகும்.

இலங்கைக்கு சீனா வழங்கி வருகின்ற ஒத்துழைப்புகள் குறித்து இந்தியா அதிருப்தியைக் கொண்டிருந்தாலும், இக்கட்டான சூழ்நிலைகளில் எப்பொழுதும் இலங்கையைக் கைவிடாத நட்புக் கொண்ட அயல்நாடாக காணப்படுகிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

இலங்கை கடற்பரப்பில் ஏற்பட்ட கப்பல் தீவிபத்து சம்பவங்களில் கூட உடனடியான ஓடிவந்து உதவியது இந்தியா என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வரிசையில் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா மீண்டும் ஒருமுறை உதவிக்கரம் நீட்டியுள்ளது.

இது இவ்விதமிருக்க, தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டும் என எதிர்க்கட்சிகளும், அரசாங்கத்தில் உள்ள சிலரும் வலியுறுத்தி வருகின்றனர். இருந்தபோதும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டிய தேவை இல்லையென அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் கூறியிருந்தனர். இவ்வாறு பரஸ்பர கருத்துப் பரிமாற்றங்களுக்கு மத்தியில் நாடு எதிர்கொண்டுள்ள சூழல் குறித்து நிபுணர்களின் ஆலோசனையை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ஆராய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபுணர்கள் குழு இலங்கைக்கு வரும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது தொடர்பில் அமைச்சரவையில் இதற்கு முன்னர் கலந்துரையாடப்பட்டிருந்த போதும் இது விடயத்தில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியைப் பெறுவதாயின் அந்நிதியத்தினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இலங்கை கட்டுப்பட வேண்டிய தேவை ஏற்படும் என்று ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சிலர் கூறி வருகின்றனர். இருந்தபோதும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு காணப்படும் சிறந்த வழி இது என்று எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து சிறந்ததொரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளதென்பதே உண்மை.

பி.ஹர்ஷன்...✍

சீனா, பாகிஸ்தான் நாடுகளுடன் தலிபான்கள் பேணுகின்ற நட்புறவு இந்தியாவுக்கு என்றுமே ஆபத்து!

தலிபன்களை உலக நாடுகள் அங்கீகரிக்க மறுத்து வரும் நிலையில். தலிபன்களுடன் சீனாவும் பாகிஸ்தானும் திரைமறைவில் நட்புக் கொண்டிருப்பது இந்தியாவுக்குப் பாதகமாக அமைந்து விடுமென்பதே சர்வதேச அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

சீனா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் இணங்கிப் போக முடியாத எதிரி நாடாகவே இந்தியா இருந்து வருகிறது. இந்த இரண்டு நாடுகளுமே இந்தியாவின் வளர்ச்சியைத் தடுக்க, பல்வேறு வேலைகளை பல காலமாகச் செய்து வருகின்றன. இந்தியாவைச் சுற்றியுள்ள இலங்கை, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் ஏதாவது ஒரு வகையில் சீனா தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. பாகிஸ்தானில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வரும் நாடாக சீனா உள்ளது.

தற்போது ஆப்கானிஸ்தானிலும் தலிபான்களிடம் சீனா நட்புறவு பாராட்டுவது இந்தியாவுக்குத் தலைவலியாக மாறுவதற்கு வாய்ப்புண்டு. ஆப்கானில் 1996 ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தலிபான்களின் ஆட்சி நடைபெற்ற போது இந்தியாவின் காஷ்மீரில் பயங்கரவாத ஊடுருவல், பயங்கரவாதிகளின் நடவடிக்கை பெருமளவில் காணப்பட்டன. மீண்டும் அங்கு தற்போது தலிபன்கள் ஆதிக்கமடைந்திருப்பதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற கருத்தே நிலவுகிறது.

ஆப்கான் ஜனாதிபதி மாளிகையில் தலிபான்கள்

ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு 23,000 கோடி ரூபாவில் பல்வேறு நலத்திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறது இந்தியா. அந்த நாட்டுக்கு 1,000 கோடி ரூபாவில் நாடாளுமன்றம் கட்டிக் கொடுத்ததோடு, அந்தக் கட்டடத்தை இந்தியப் பிரதமர் மோடி திறந்தும் வைத்திருந்தார். ஆப்கானில் வீதிகள் அமைத்தல், பாடசாலைகள் அமைத்தல், மருத்துவமனை கட்டுதல் என்று பல்வேறு நலத் திட்டங்களை இந்தியா செய்திருக்கிறது. இந்த நலத்திட்டங்களைச் செய்து கொடுக்கும் போதும், தலிபான்கள் இதை வரவேற்கவில்லை. எதிர்ப்பே தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தலிபான்களின் ஆட்சியின் மீது உலகளவில் பெரும் அதிருப்தி நிலவி வருகின்றது. தற்போதும் அவர்கள் முன்னர் ஆட்சியிலிருந்த அதிகாரிகள், தன்னார்வலர்கள், பத்திரிகையாளர்களைத் தேடி வருவதாகச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

'ஆட்சியில் கட்டுப்பாடுகள் இருக்காது. பெண்கள் வேலைகளுக்குச் செல்லலாம்' என்று தலிபான்கள் தரப்பில் சொல்லப்பட்டாலும் உண்மை அதுவல்ல. தலிபான்கள் மத்தியில் என்றுமே அடிப்படைவாதம் நீங்கப் போவதில்லை. ஆனால் உலக நாடுகளிடம் நல்ல பெயரை வாங்க தலிபான்கள் முயற்சிக்கிறார்கள்.

மற்ற நாடுகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தும் யாரையும் ஆப்கானில் அனுமதிக்க மாட்டோம். நாங்கள் தோஹா உடன்படிக்கையை முறையாகப் பின்பற்றுவோம்' என்று தலிபான்கள் கூறியுள்ளனர். என்னதான் அவர்கள் தரப்பில் ஆயிரம் காரணங்கள் சொன்னாலும், அங்கு நடப்பது வேறு ஒன்றாக இருப்பதாகவே சர்வதேச ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன.

- **தற்போது ஆப்கானிஸ்தானிலும் தலிபான்களிடம் சீனா நட்புறவு பாராட்டுவது இந்தியாவுக்குத் தலைவலியாக மாறுவதற்கு வாய்ப்புண்டு.**
- **ஆப்கானில் தற்போது தலிபன்கள் ஆதிக்கமடைந்–திருப்பதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்–தலாக அமையும் என்ற கருத்தே நிலவுகிறது.**

மனித உரிமைகள் பேரவை நெருக்குதலை முறியடிக்க தயாராகின்றது இலங்கை!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதக் கூட்டத் தொடர் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாக விருக்கும் நிலையில், இராஜதந்திர ரீதியிலான செயற்பாடுகளை இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகப்படுத்தியுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதக் கூட்டத் தொடர் இலங்கைக்கு முக்கியமானதாக அமைய விருப்பதால், அங்கு எதிர்நோக்கக் கூடிய சவால்களை முறியடிப்பதில் இலங்கை அரசாங்கம் அதிக ஈடுபாட்டைக் காண்பிக்கத் தொடங்கியுள்ளது. 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து 'நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனிதாபிமானத்தை ஊக்குவித்தல்' என்ற பெயரில் கடுமையான நடவடிக்கை மற்றும் சர்வதேச தலையீட்டை முன்மொழிந்து தொடர்ச்சியாக எட்டுப் பிரேரணைகள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இந்த வரிசையில் 46/1 பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஒரு வருடத்தை எட்டவுள்ள தற்போதைய நிலையில், அடுத்த அமர்வுக்கான ஏற்பாடுகள் தொடங்கியுள்ளன. மார்ச் மாதக் கூட்டத் தொடர் எதிர் வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 01 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எல்.ரி.ரி.ஈ ஆதரவு கொண்ட புலம் பெயர்ந்த அமைப்புக்களுக்கு எதிர் வினையாற்றும் வகையில் இலங்கைக்கு எதிராக சில மேலைத்தேய நாடுகள் அழுத்தம் கொடுப்பதும், மனித உரிமை விடயங்கள் மற்றும் சுட்டிக்காட்டப்படும் ஏனைய சில பிரச்சினைகள் குறித்த விசாரணைகள் மற்றும் உள்ளகப் பொறிமுறைகளை வேகப்படுத்த இலங்கையில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதும் மார்ச் மாதத்தில் சர்வதேசம் அடிக்கடி காணும் பிணை வழங்குவது தொடர்பான சட்டமா அதிபரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டமை போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

மேற்குறிப்பிட்ட இந்த விடயங்கள் குறித்து சர்வதேச சமூகம் கடந்த வருடங்களில் இலங்கை அரசாங்கத்தின் மீது கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. கடந்த வாரம் இராஜதந்திரிகளை கொழும்பில் சந்தித்திருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இந்த விடயங்கள் குறித்து ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை விபரித்திருந்ததுடன், உள்ளக விரைவாகத் தீர்த்தல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் விடயத்தை நீக்குதல் உள்ளிட்ட பல்வேறு திருத்தங்கள் இதில் உள்ளடங்குவதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

கடந்த காலத்தில் அரசாங்கம் முன்னெடுத்த பல்வேறு செற்பாடுகளில் இது முன்னேற்றகரமானதாக இருக்கின்ற போதும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்யாமல், ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வரும் அரசாங்கத்தின் முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விமர்சித்துள்ளார்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையே மாற்றப்பட வேண்டும்.

சர்வதேசத்தின் கவனத்தை பெரிதும் ஈர்க்கும் மார்ச் மாத கூட்டத் தொடர் 28 இல் ஆரம்பம்!

மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிறுவனங்களில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் கடந்த வருடங்களில் பெரிதாக வெளிப்படுத்தப்பட்டவையாக இருக்கவில்லை. இவ்வாறான நிலையில் அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு குறித்

நிகழ்வுகளாக மாறியுள்ளன.

மார்ச் மாதத்தில் மாத்திரம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆண்டு முழுவதிலும் படிப்படியாக நடவடிக்கைகளை ஏன் முன்னெடுக்க முடியாமல் உள்ளது என்ற கேள்வி இங்கே எழுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில் கவனம் செலுத்தும் வகையில் நாட்டின் மனித உரிமை விவகாரம் குறித்த நடவடிக்கைகள் கடந்த வாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருந்தன. 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை முன்வைத்தல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல், சட்டத்தரணி ஹிஸ்புல்லா வழக்கில் விடயங்களுக்கு வெளிப்புற பொறிமுறையை அனுமதிப்பதை விட உள்ளகப் பொறிமுறை ஏன் நம்பப்பட வேண்டும் என்பதற்கான விளக்கத்தையும் விரிவாக வழங்கியிருந்தார்.

மனித உரிமைகள் மற்றும் இதனுடன் தொடர்புடைய துறைகளில் பணிபுரியும் உள்நாட்டு நிறுவனங்களின் தலைவர்களை அழைத்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அந்த நிறுவனங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இராஜதந்திர சமூகத்தினருக்கு விளக்கமளிப்பதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

இதன்படி, இழப்பீடுகளுக்கான அலுவலகம், நிலைபேறான அபிவிருத்திக்கான கவுன்சில், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், காணாமற் போன ஆட்களுக்கான அலுவலகம் துப் பேச விரும்பும் போது இவ்வாறான நிறுவனங்களைக் கொண்டு வருவது பாதிக்கப்பட்டவர்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு சிறந்த வழியாக அமையாது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அதேநேரம், சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வெல்வதற்கு இது போதுமானதாக அமையாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கான திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தயாராக உள்ளது என இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் அரசாங்கம் அறிவித்தது. மனித உரிமைகள் மற்றும் மக்களின் சுதந்திரங்களைத் தடுக்கக் கூடிய விதிகள் கொண்ட சட்டத்தின் ஒரு பகுதியாகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் விமர்சிக்கப்பட்டது.

இது ஒரு தற்காலிகச் சட்டமாகவே கருதப்பட்டது. ஆனால் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இதனைப் பயன்படுத்தியிருந்ததுடன், இதற்குப் பொருத்தமான புதிய சட்டத்தை மாற்றுவதற்குத் தவறிவிட்டன என்றே கூற வேண்டும்.

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்ட ஒரேயொரு நிபந்தனையாக, பங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையே அமைந்திருந்தது. கடந்த வருடம் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

'43 ஆண்டுகளுக்குப் பின்னர், சர்வதேச நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப அதைக் கொண்டு வரும் நோக்கத்துடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் திருத்தப்படுகிறது. முன்மொழியப்பட்ட திருத்தங்கள் அடங்கிய சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதன் பின்னர் இறுதி ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை முன்வைப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது' என அமைச்சர் பீரிஸ் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கும் போது கூறியிருந்தார்.

தடுப்புக்காவலுக்கான கட்டளை, கட்டுப்பாடுகளுக்கான ஆணை, நீதித்துறை மறுஆய்வுகளை அங்கீகரித்தல், நீண்ட காலத் தடுப்புக்களைத் தவிர்ப்பதற்கான வழக்குகளை அதனை விடுத்து சில விடயங்களை மாத்திரம் திருத்துவதில் எந்தவித நன்மையும் இல்லையென அவர் கூறியிருந்தார்.

இதேவேளை, 'நீதிக்கான அணுகல்' என்ற தொனிப்பொருளில் வடக்கில் நடமாடும் நீதிச் சேவையொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் அந்த அமர்வில் கலந்து கொண்டனர்.

கலாசார பன்முகத்தன்மை மற்றும் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையின் ஊடாக நாட்டில் நீண்ட கால அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான உறுதியான அடித்தளத்தை அமைக்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

அதற்கு இணையாக, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடாக 100 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டது. ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்வு ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியினால் பாராட்டப்பட்டது.

ஆயினும் கூட, அரசாங்கம் முன்னெடுக்கும் இந்த நடவடிக்கைகள் மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் தமது தரப்பு செயற்பாடுகளை அழகுபடுத்திக் காட்டும் அரசாங்கத்தின் கடைசி நேர முயற்சிகளா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

இருந்த போதும் சர்வதேசத்தின் கண்காணிப்புக்கள் அல்லது அவதானிப்புக்கள் இருக்கும் போது மாத்திரம் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளாது நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டு தொடர்ச்சியான செயற்பாடுகளை இதயசுத்தியுடன் முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

'நீதிக்கான அணுகல்' என்ற தொனிப்பொருளில் வடக்கில் நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் பங்கேற்ற நடமாடும் நீதிச் சேவை ஒரு நல்லெண்ண செயற்பாடே!

மனித உரிமைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களது செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விளக்கம். வெளிப்புற பொறிமுறையை அனுமதிப்பதை விட உள்ளகப் பொறிமுறையிலேயே இலங்கை நம்பிக்கை

கிணறு வெட்ட பூதம் கிளம்பிய விவகாரமாகிப் போன ஆயிரம் ரூபா சம்பள விவகாரம்

கையறு நிலையில் சங்கங்கள் கைதூக்கி விட மறுக்கும் கம்பனிகள்

கடந்த வாரங்களில் அக்கரபத்தனை பெருந்தோட்ட யாக்கங்களைச் சேர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டங்களில் குதித்திருந்தனர். 1000 ரூபா சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்டதிலிருந்து அதனை முழுமையாக தொழிலாளர்கள் அடைந்து விடக்கூடாது என்னும் போக்கில் கம்பனி தரப்புக் காட்டி வரும் கெடுபிடிகளுக்கு எதிராகவே இந்தப் போராட்டம்.

கம்பனி தரப்பின் எதிர்பார்ப்பினை கச்சிதமாகவே கையாண்டு வருகின்றன தோட்ட நிர்வாகங்கள். வேலை நாட்கள் குறைப்பு, அரைநாள் சம்பளம்,மேலதிக கொழுந்து பறித்தலுக்கான கொடுப்பனவில் ஏய்ப்பு என ஏராளமான நெருக்குதல்கள். இதனால் அக்கரபத்தனை பெருந்தோட்ட யாக்கத்தின் பொறுப்பில் உள்ள தோட்டங்களில் உற்பத்தி வீழ்ச்சியடைந்து போயின. தேயிலை தொழிற்சாலைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் ஸ்தம்பித நிலையை அடைந்தன. இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு மலையகத்தில் உள்ள சகல தொழிற் சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்கியமை சிறப்பு அம்சம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இப் போராட்டத்தைஏற்பாடு செய்தது இ.தொ.கா தான். 1000 ரூபா நாட் சம்பளம் வேண்டும் என்று அடம்பிடித்து ஏதோவொரு வகையில் அதனை வாங்கிக் கொடுத்த அதே இ.தொ.கா தான். 1000 ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற காரணியானது தொழிலாளர்களைப் பகடைக்காய்களாக்கி அரங்கேற்றப்பட்ட அருமையான நாடகம் என்று அப்போதே விமர்ச்சித்தார்கள் ஆய்வாளர்கள்.

எட்டாக் கனியான ஆயிரம் ரூபா!

ஆனால் அந்த வேளையில் அதன் சூட்சுமம் யாருக்கும் புரியவில்லை. இப்பொழுதுதான் ஆய்வாளர்களின் பதிவிலுள்ள யாதார்த்தம் மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பைக் காட்டி வருகின்றமை வெளிச்சமாகிறது. ஆனால் இதனை உரியமுறையில் உள்வாங்கிக் கொள்ளும் வண்ணம் இன்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பக்குவப்படாமை தான் வேதனை. 1000 ரூபா வேதனத்துக்காக அமரர் ஆறுமுகன் தொண்டமான் அச்சாரம் போட்ட நாளது முதல் கம்பனி தரப்பு மறுப்பு தெரிவித்தே வந்தது.

ஒருவகையில் அது புலிவாலைப் பிடித்த கதையாகிப் போனது. கனவு நனவாகாத நிலையிலேயே அமரரானார் ஆறுமுகன் தொண்டமான். அவரின் வாரிசாக அரசியல் களம் இறங்கிய ஜீவன் தொண்டமான் கையிலும் புலிவாலைப் பிடிக்க வேண்டிய பொறுப்பு வந்தது. பாரிய இழப்பிலிருந்து இ.தொ.கா வின் சரிவை சரிசெய்ய இது அவசியமானது. இளம் பருவம் என்றாலும் ஜீவனின் ஆளுமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. அவரின் அணுகுமுறை அபாரமாகவே விளங்கியது. பேச்சுவார்த்தை மூலம் கம்பனி தரப்பைப் பணியவைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட அவர், கன கச்சிதமாக அரசாங்கத்தின் பக்கம் காய் நகர்த்தினார். ஆனால் இதை கம்பனி தரப்பு எதிர்பார்த்திருக்காது. கலக்கத்துடனேயே பேச்சுவார்த்தை மேஜைக்கு வந்தது. அதிரடியாக நாளொன்றுக்கு 1000 ரூபா சம்பளம் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று அரசதரப்பில் ஆணை வெளியாக சூடு கண்ட பூனையாகிப் போனது கம்பனி தரப்பு.

எனினும் முரண்டுப் பிடியைத் தளர்த்த தயங்கி நீதிமன்றம் வரையில் போனது. அங்கும் ஏமாற்றமே எஞ்சியது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது முடிக்கப்பட்ட ஒரு சமாச்சாரம். இ.தொ.காவைப் பொறுத்தவரை இது ஒரு சாதனை. ஆனால் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் முடிவு தெரியாத தொடர் கதை. 1000 ரூபா சம்பள அதிகரிப்பின் சாதகத் தன்மையை முழுமையாகப் பெற முடியாதவாறு தோட்ட நிர்வாகங்கள் போடும் கிடுக்குப் பிடியினால் திக்கித் திணறும் பரிதாப நிலை. இதன் பிரதிபலனாகவே இன்றும் பரவலாக இடம் பெற்றுவரும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் உள்ளதும் போச்சுதாம் நொள்ளைக் கண்ணா நிலை.

அரசாங்கம் அதில் தலையிட வாய்ப்புகள் இருப்பதாக தெரியவில்லை. ஏனெனில் அரசு விடுத்த உத்தரவு நடைமுறையில் இருக்கிறது. அதனை ஏற்றுக் கொண்டுள்ளன கம்பனி நிர்வாகங்கள். வேலை நாள் குறைப்பு, அரைப்பேர் சங்கதி, மேலதிக கொழுந்து பறிப்புக்கான விலை நிர்ணயம் போன்ற விடயங்கள் இப்பொழுது தொழில் ரீதியிலான பிரச்சினைகள். அதனைப் பேசித்தீர்க்க வேண்டிய பொறுப்பு மலையக தொழிற்சங்கங்களைச் சார்ந்தது. ஆனால் அந்த தொழிற்சங்கங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

தொழிலாளர்களை வேலை நிறுத்தத்துக்குத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கின்றன. வேலை நிறுத்தப் போராட்டங்களை களப்பணி ஆய்வு செய்து கொண்டிருக்கின்றார்கள் தொழிற்சங்க உத்தியோகத்தர்கள். அவ்வளவுதான். கம்பனி தரப்பு இறங்கி வருவதாகத் தெரியவில்லை. தமது தற்போதைய போக்கை மாற்றுவதற்கான சமிக்ஞை எதனையும் காட்டுவதாகவும் இல்லை. தொழிற் சங்கங்களின் பலவீனம்தான் கம்பனி தரப்புக்கு அத்துப்படியாச்சே! இதனைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலாளர்களை வஞ்சிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயல்கின்றது கம்பனி தரப்பு.

தொழிலாளர்கள் இன்று வருவாய் இழப்பினால் வாட்டம் கண்டுள்ளார்கள். அதிகரித்து வரும் விலைவாசி உயர்வால் நிலை குலைந்து போயுள்ளார்கள். இந்தப் பின்புலத்தை தாம் எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதிலேயே கம்பனி தரப்பின் கவனம் முழுவதும் செல்கின்றது. கொரோனா காலத்தில் நாடே நசிந்து போய் முடங்கிக் கிடந்தது. இந்த நிலையிலும் கூட உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதுமின்றி தோட்ட மக்கள் மட்டும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இதனால் தேயிலை உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி எதுவும் ஏற்படவில்லை. தமது தேவையினை உத்தேசித்து கட்டாயம் தினந்தோறும் தொழிலுக்குச் செல்ல வேண்டும் என்பதே தோட்ட மக்களின் உண்மை நிலைமை. இதுவே கம்பனி தரப்புக்கு சாதமாகி இருக்கும் தன்மை.

ஆனால் தம்மை நம்பியிருக்கும் அப்பாவித் தொழிலாளர்களுக்காக 1000 ரூபா சம்பளத்தை முழுமையாப் பெற்றுத்தர திராணியில்லாத காரணத்தாலேயே வேலை நிறுத்தப் போர்வையில் மற்றுமொரு நாடகத்தை மலையக தொழிற்சங்கங்கள் அரங்கேற்றி வருகின்றதா என்ற கேள்வி எழாமல் இல்லை.

முன்பு ஒரு காலக்கட்டத்தில் தோட்ட நிர்வாகங்களை ஆட்டிப் படைக்கக்கூடிய வலிமை பெற்றிருந்தன இந்தத் தொழிற் சங்கங்கள். 1992களுக்குப் பின் கூட்டு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் சகல பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்தை வழியாகவே தீர்வு காண்பது என்னும் உடன்பாடு ஏற்பட்டது. இதனால் வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு வேலை குறைவானது. எனினும் கூட சில பல விடயங்களில் இழுபறி நிலைமை நீடித்தே வந்தது. காலகதியில் தொழிற்சங்கங்களின் பலவீனத்தை நன்கு எடைபோட்டுக் கொண்ட கம்பனி தரப்பு முரண்டு பிடிக்க ஆரம்பித்தது.

சம்பள அதிகரிப்பு, 1000 ரூபா வேதனம் கோரல் விடயங்களுக்காக சகல தொழிற்சங்கங்களும் தனித்தனியாகவும் கூட்டாகவும் போராட்டங்களை நடாத்தி வந்தன. ஏனைய தொழிற்சங்கங்களின் முகங்களில் கரியைப் பூசி விட கங்கணம் கட்டி கோதாவில் குதித்தது இ.தொ.கா.

இந்த பின்பலத்தில் தான் அரசாங்கத்தின் தலையீடு நிகழ்ந்தது. 1000 ரூபா சம்பள நிர்ணயமானது. ஆரம்பத்தில் இருந்தே 1000 ரூபா சம்பளத்தைக் கோரிவந்த இ.தொ.காவால் அடிப்படைச் சம்பளமாக 1000 ரூபாவைப் பெற்றுத்தர இயலாமற் போனது. இதன் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளமலே தொழிலாளர்கள் மகிழ்ச்சியில் திளைத்தது என்னவோ உண்மை.

எனினும் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலைமையை இன்று அனுபவிக்கின்றனர். அவர்களை உசுப்பேற்றி வேலை நிறுத்தப் போராட்டங்களை நடாத்தி தமது இருப்பைக் காப்பாற்றிக்கொள்ள முனைகின்றன இந்தத் தொழிற்சங்கங்கள்.

இன்று கூட்டு ஒப்பந்தம் நடைமுறையில் இல்லை. கம்பனி நிர்வாகமும் தொழிற் சங்கங்களும் சிநேகபூர்வமாக பேசித் தீர்வுகாண வாய்ப்பு ஏதுமே இல்லை. அரசாங்கத்தின் மத்தியஸ்தம் இடம்பெற சந்தர்ப்பம் கிடையாது. அப்படி என்றால் 100 0ரூபா உயர்வை முழுமையாகப் பெறவே முடியாதா? குழப்பங்களுக்குக் காலம் தான் கடிவாளம் இடவேண்டும். அதே நேரம் 1000 ரூபா சம்பள நிர்ணயம் பற்றிய அரசாணை அலட்சியப்படுத்தப்படக் கூடாது. ஏனெனில் இது ஒரு சமூகத்தின் வாழ்வாதார விவகாரம். வயிற்றுப்பாட்டுப் பிரச்சினை!

பன்பாலா...✍

பெருந்தோட்ட காரியாலயங்களுக்கு

படித்த தமிழ் இளைஞர் யுவதிகளை நியமிப்பதில் என்ன தடை?

சங்கங்கள் வாளாவிருப்பது ஏன்?

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தற்போதைய நிலைமைகளைப் புரிந்துகொண்டு எதிர்காலத்திற்காக தங்களை மாற்றிக்கொள்ளத் தயாராக வேண்டியது அவசியம். நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்டு இயங்கிவரும் பெருந்தோட்டத் தொழில்துறை அண்மைக்காலமாக வீழ்ச்சியை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது.

ஏனைய தொழில்துறைகளைச் சார்ந்தவர்களை விட பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமே தமது உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெறமுடியாதவர்களாகவும், காணி உரிமை, வீட்டுரிமை அற்றவர்களாகவும், தாம் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளைக்கூட பெற்றுக்கொள்ள முடியாமலும் வாழ்ந்து வருகின்றனர். தோட்ட நிர்வாகம், தோட்ட உத்தியோகத்தர்கள், மலையக அரசியல்வாதிகள் என பல தரப்பினரால் வஞ்சிக்கப்படுபவர்களாக இருக்கும் அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமானால் சுய பொருளாதாரத்தில் ஈடுபடுத்திக்கொள்ள தங்களை தயார்படுத்துவது அவசியம்.

உழைப்பாளர்களாகிய அவர்களுக்கு கைத்தொழில்துறைகளில் ஈடுபடுவதற்கேற்ற வழிவகைகளை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டும். தொழிலாளர்களின் கடும் உழைப்பின் மூலம் ஏறத்தாழ அறுபது சதவீதம் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைக்கிறது. கொவிட் 19 வைரஸ் தொற்றினால் நாடு முழுமையாக முடங்கியிருந்த காலத்திலும் அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுத்தவர்கள் இந்த தோட்டத் தொழிலாளர்கள். இந்த மக்களின் நலன் குறித்த எவ்வித அக்கறையும் இல்லாத நிலையே தற்போது காணப்படுகிறது. குட்டக் குட்ட குனிகிறவனும் குனிய குனிய குட்டுகிறவனும் மடையன் என்கிற கதையைத் தான் இங்கே காண்கிறோம். தோட்டத் தொழிலாளர்கள் எந்தவொரு தரப்பினராலும் ஏமாற்றப்பட முடியாத வஞ்சிக்கப்பட முடியாத சமூகமாக மாற வேண்டும்.

தொழிலாளர்களின் கல்வி கற்ற பிள்ளைகளுக்கு தோட்ட உத்தியோகங்களை பெறுவதற்கான கல்வித் தகமைகள் இருந்தபோதிலும் அவர்களுக்கு தோட்ட அலுவலகங்களிலோ தொழிற்சங்க காரியாலயங்களிலோ தொழில் வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை.

அநேகமான தோட்ட காரியாலயங்களுக்கு தொலைபேசி அழைப்புகளை எடுத்து தோட்டக் காரியாலய உத்தியோகத்தர்களுடன் ஆங்கில மொழியில் தொடர்பு கொண்டால் அவர்கள் ஆங்கில மொழியில் உரையாட முடியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் தமிழர்கள். ஆனால் தோட்ட அலுவலகங்களில் சிங்கள உத்தியோகத்தர்மாரே அதிகளவில் பணிபுரிகிறார்கள். இந்நிலையில் தொழிலாளர்கள் தோட்டக் காரியாலயங்களுக்கு சென்று தமது பிரச்சினைகளை எடுத்துச்சொன்னால் அவர்கள் புரிந்துகொள்வதில்லை.

இதனை தவிர்க்க வேண்டுமானால் பெருந்தோட்ட காரியாலயங்களில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு படித்த தமிழ் இளைஞர்களை நியமிக்கலாம். பெருந்தோட்டப் பகுதிகளில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். இவ்வாறு தொழில்வாய்ப்பு பெறும் இளைஞர் யுவதிகளுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கினால் பெருந்தோட்ட அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள்.

சி.ப. சீலன் ...✍

தோட்ட நிர்வாகங்கள்தான் தொழிலாளர்கள் மீது அக்கறை செலுத்துவதில்லை என்றால் அவர்களிடமிருந்து சந்தாப்பணத்தை அறவிடும் தொழிற்சங்கங்களும் அதுபோலவே மலையக அரசியல்வாதிகளும் அவர்களைக் கண்டுகொள்வதில்லை. இந்த நிலை மாறவேண்டுமானால் படித்த இளைஞர் யுவதிகளுக்கு தமது எதிர்காலம் பற்றிய சிந்தனையில் மாற்றம் அவசியமாகும். அவர்கள் தங்களை இப்போதே சொந்தக்காலில் நிற்க தயாராக வேண்டும். தமது கல்வித் தகைமைகளுக்கேற்றதான சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பெருந்தோட்டப்பகுதிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் தாம் எத்தனை பிள்ளைகளுக்கு கற்பித்தோம், கற்பிக்கிறோம் என்பதை விடுத்து தாம் கற்பித்த பிள்ளைகளில் எத்தனை பிள்ளைகளின் வாழ்வை கல்வியின் மூலம் பிரகாசிக்கச் செய்திருக்கிறோம் என்பதை மனதில் இருத்தி தமது ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும்.

சமூக நிறுவனங்கள், மத நிறுவனங்கள், செல்வந்தர்கள் என்போர் தொழிலாளர்களின் வறுமையால் கல்வியைத் தொடரமுடியாதிருக்கும் பிள்ளைகளுக்கு நிதியுதவியை வழங்கி அவர்களை கல்வியில் மேன்மையடையச் செய்ய வேண்டும்.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தோட்ட தொழிற்சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களை தோட்ட உரிமையாளர்களாகவும் பல்வேறு துறைகளில் பிரகாசிப்பவர்களாகவும் உருவாக்கியுள்ளன. அதுபோல பெருந்தோட்டங்களில் இருக்கும் படித்த இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க தொழிற்சங்கங்கள் முன்வர வேண்டும். முன் வருவீர்களா?

படைப்பாளர் மல்லிகை சி. குமாரின் இரண்டாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு

படைப்பாளர் மல்லிகை சி. குமாரின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அக்கரபத்தனை லோவர் கிரன்லி தமிழ் வித்தியாலய இலக்கிய மன்ற ஏற்பாட்டில் அதிபர் கு. பாலகிருஷ்ணன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஜனவரி 27ம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. மாணவியரின் தீப நினைவேந்தல், மல்லிகை சி. குமார் நினைவு உரைகளுடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

நம்பிக்கையை ஏற்படுத்திய 'நீதிக்கான அணுகல்'

வடக்கில் நடைபெற்ற நீதி அமைச்சின் நடமாடும் சேவையும் நல்லிணக்க செயற்பாடும்

அவசரகால சட்டத்தில் மாற்றம் செய்யப்படும் என அமைச்சர்கள் அறிவிப்பு

எம்.எஸ்.பாஹிம்

போர் நிறைவடைந்து 12 வருடங்களை தாண்டி விட்டாலும் கூட வடபகுதி மக்களின் மனங்களில் இன்னும் தீராத ரணங்களும் தீர்க்கப்படாத பிரச்சினைகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. காணிப் பிரச்சினை, காணமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை, மீனவர் விவகாரம், தமிழ் கைதிகள் விடயம், மீள்குடியேற்றம் என அவர்கள் முன்பாக உள்ள பிரச்சினைகள் நீண்ட பட்டியல் விரிகிறது.

காலத்துக்குக் காலம் அந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வார்த்தைகளும் வாக்குறுதிகளும் அடுக்கப்பட்டாலும் அவை நிறைவேறாமலே கடந்து விட்ட வரலாறே அதிகம்.

இந்த நிலையில் தான் அண்மையில் நீதிக்கான அணுகல் என்ற தொனிப் பொருளில் வடக்கில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இதற்கு முன்னரும் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டாலும் இது மாறுபட்டதும் முன்னேற்றகரமானதுமான நடமாடும் சேவையாக அமைந்தது என்பதற்கு கலந்து கொண்ட பெருந்தொகையான மக்களும் நடமாடும் சேவை ஏற்படுத்திச் சென்ற மாற்றங்களும் சாட்சி பகரும்.

அவற்றுக்கு மேலாக நல்லிணக்கம், காணி விவகாரம், காணமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதி விவகாரம், சட்டச் சிக்கல்கள் என பல விடயங்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும் வகையில் இந்த நீதிக்கான அணுகல் அமைந்திருந்தது. பேச்சளவில் நின்று விடாது செயலில் பல விடயங்கள் நடந்திருப்பதே அதற்குக் காரணம் எனலாம்.

தமிழ் கைதிகள் விடுதலை, காணிப் பிரச்சினை, காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் சாதகமான பதில்

சம்பிரதாய நடமாடும் சேவைகளுக்கு அப்பால் சென்று அந்த மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து நியாயமான தீர்வு வழங்கும் வகையில் 5 நாட்கள் 5 மாவட்டங்களிலும் நீதிக்கான அணுகல் நடமாடும் சேவை நடத்தப்பட்டிருந்தது.

நீதி அமைச்சர் அலி சப்ரியின் திட்டத்திற்கு அமைய வட மாகாணத்தில் நீதிக்கான அணுகல் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் கடந்த ஜனவரி 26 முதல் 30 வரை சிறப்பாக நடந்து முடிந்தது. அமைச்சரவை முடிவுக்கு அமைய வடக்கில் முதலாவது நல்லிணக்க நோக்கிலான இந்த சேவை ஆரம்பமானதோடு கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, தென்மாகாணத்தில் மாத்தறை மற்றும் மத்திய மாகாணத்தில் நுவரெலியா போன்ற மாவட்டங்களை மையமாகக் கொண்டு அடுத்த நடமாடும் சேவைகள் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு நீதி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கில் முதலாவது சேவை நடத்த தெரிவு செய்யப்பட்டதோடு நீதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் தொடர்புள்ள நிறுவனங்கள் இதில் பங்கேற்று மக்களின் அநேக பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளையும் நம்பிக்கை ஏற்படுத்தும் பதில்களையும் வழங்கியிருந்தன. குறிப்பாக நீதி அமைச்சர் அலி சப்ரியும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிசும் பொதுமக்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை நேரடியாக கலந்துரையாடியது முக்கிய அம்சமாகும்.

இந்த நடமாடும் சேவையின் போது அரச அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கற்றுக் கொடுப்பதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வடபகுதி மக்களின் பிரச்சினைகளுடன் நேரடி தொடர்புள்ள காணமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான அலுவலகம், தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், இலங்கை சட்டஉதவிகள் ஆணைக்குழு, இணக்க சபை, மாவட்ட பிரதேச செயலகங்கள் உட்பட பிரதானமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த நடமாடும் சேவைகளில் பங்கேற்றனர்.

26ஆம் திகதி முதல் நாள் நிகழ்வு வவுனியாவில் உத்தியோகபூர்வமான ஆரம்பித்து வைக்கப்பட்டது. 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடமாடும் சேவை நடைபெற்றது. 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில் யாழ் மாவட்ட நடமாடும் சேவையும் நல்லிணக்க செயற்பாடுகளும் நடைபெற்றன. அத்தோடு வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைதீவு மற்றும் யாழ் மாவட்ட செயலகங்களை மையமாக வைத்தும் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இவற்றுடன் இணைந்ததாக கிளிநொச்சி நீதிமன்ற கட்டடத் தொகுதி, மாங்குளம் நீதிமன்ற கட்டடம், கிளிநொச்சி இந்து கல்லூரி ஸ்மார்ட் கிளாஸ் அறை திறப்பு என்பனவும் இடம்பெற்றமை முக்கிய அம்சமாகும்.

இது தவிர புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் இளம் போராளிகளுடனான நல்லிணக்க அலுவலக அதிகாரிகளின் சந்திப்பு, வடமாகாண சட்டத்தரணிகள் சங்கத்துடனான சந்திப்பு, பல்கலைக்கழக மாணவர்களுடனான கலந்துரையாடல் என்பனவும் இதில் அடங்கியிருந்தன. காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வும் இவற்றில் அடங்கும். முக்கியமாக காணிப் பிரச்சினைகள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்வுகள் மாணவர்களுக்கான அறிவூட்டல் நிகழ்வுகளும் இவற்றுடன் இணைந்ததாக நடைபெற்றிருந்தன.

வடபகுதி அரச அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு வழங்கும் நிகழ்ச்சிகளும் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பொது மக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் ஊடக மாநாட்டின் போது, வடபகுதியில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரியிடமும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடமும் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டம், தமிழ் கைதிகளின் விடுதலை, தமிழ் தேசிய கூட்டமைப்புடனான கலந்துரையாடல், காணிப்பிரச்சினை என்பன அவற்றில் பிரதான இடம்பிடித்தன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான பல தமிழ் இளைஞர்கள் நீண்டகாலமாக விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பது பற்றி முக்கியமாக அலசப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டம் மாற்றப்படும் என அமைச்சர் பீரிஸ் இங்கு குறிப்பிட்டிருந்தார். அதற்கான முன்னெடுப்புகள் பற்றியும் அவர் விளக்கியிருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 27 பேர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி இங்கு தெரிவித்திருந்தார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

அனைத்து சிறுபான்மை கட்சிகளும் இணைந்தால் மட்டுமே எமது பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும்

முன்னாள் பிரதியமைச்சரும் சிரேஷ்ட மலையக அரசியல்வாதியுமான வீ. புத்திரசிகாமணி

தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் தனித் தனியே செயற்பட்டால் எதிர்காலத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கு பங்கம் ஏற்படும் என்பதை கடந்த காலமும், நிகழ்காலமும் எடுத்துக்காட்டியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது – முன்னாள் பிரதியமைச்சரும் சிரேஷ்ட மலையக அரசியல்வாதியுமான வீ. புத்திரசிகாமணி தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணலில்....

நேர்கண்டவர்
றாகலை ஆறுமுகம் ரமேஷ்

கே: எதற்காக தமிழ் கட்சிகள் கூட்டணியாக செயற்பட வேண்டும்?

ப: மலையகம், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பல துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்நிலையில் நெருக்கடிகளை மறைமுகமாகவும், நேரடியாகவும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் வெறுமனே பத்திரிகை அறிக்கைகளை விடுக்காது பாராளுமன்றத்தில் உருக்கமாக குரல் எழுப்ப வேண்டும்.

தமிழர் விடுதலை கூட்டணியில் சட்டத்தரணிகள் பலர் உள்ளனர், அதேபோல ஏனைய கட்சிகளிலும் அரசியல் சாணக்கியர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் எல்லாம் ஒன்றிணைந்து கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே: அண்மையில் தமிழ் பேசும் கட்சிகள் கூட்டணியாக செயல்பட நடவடிக்கை எடுத்தார்களே அதன் தற்போதைய நிலையென்ன?

ப: உற்சாகமாகவும், வேகமாகவும் உருவான அந்த கூட்டணி உடைத்த சோடா போத்தல் போலாகி விட்டது என்றே கருதுகிறேன்.

எந்தளவுக்கு வேகமாக உருவானதோ அந்தளவுக்கு வேகமும் இல்லாமல் போய்விட்டதோ என்றும் கருதுகிறேன். காரணம் இந்த கூட்டணியில் எல்லா தமிழ் அமைப்புகளும், கட்சிகளும் சேர்க்கப்படவில்லை. இந்த கூட்டணியில் முஸ்லிம் மற்றும் மலையக சமூகங்களின் பிரச்சினைகள் எவ்வாறு தீர்ப்பது அவற்றை சர்வதேசத்திற்கு எவ்வாறு கொண்டு செல்வது போன்ற விடயங்களில் ஒருமித்த கருத்துக்கு வரவில்லை என்பதுடன் இந்தக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அவசர அவசரமாக நடைபெற்றதால் எதிர்காலத்தில் இதன் செயற்பாடுகள் எவ்வாறிருக்கும் என்பதை அனுமானிக்க முடியாதுள்ளது.

கே: இக் கூட்டமைப்புக்குள் ஏற்கனவே பிளவு ஏற்பட்டு விட்டதா?

ப: பிளவு ஏற்பட்டு விட்டதா என நான் வெளியிலிருந்து உறுதியாக கூறமுடியாது. ஆனால் தமிழ் பேசும் மக்களுடைய பொதுவான பிரச்சினகளின் பேரிலேயே அவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். இருப்பினும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணுவது என்பது தொடர்பில் அவர்களுக்குள் சிக்கல் ஏற்பட்டுள்ளது போலத் தெரிகிறது. பிளவுப் படக்கூடாது. மேலும் இவர்கள் ஒதுக்கி வைத்திருக்கின்ற அல்லது சேர்க்கப்படாத தமிழ் கட்சிகள் மற்றும் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து செயற்பட வேண்டும். முதலில் வடக்கில் உள்ள பிரச்சினைகள், கிழக்கில் உள்ள பிரச்சினைகள், மலையகத்தில் உள்ள பிரச்சினைகள் என வகைப்படுத்தி எந்தெந்த அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

வெறுமனே ஒரு அரசியல் நோக்கத்திற்காக அமைப்பொன்றை உருவாக்கி விடக்கூடாது. இதை மக்கள் மயப்படுத்த வேண்டும். அனைத்து தமிழ் தரப்புக்களையும் உள்வாங்கி பொதுவான நிலைப்பாட்டுக்கு வந்து கருத்துக்களை கேட்டறிந்து சிறப்பான முடிவுக்கு வந்து இந்த அமைப்பை செயல்படுத்தினால் பிளவுக்கு அங்கு இடமில்லை என நான் கருதுகிறேன்.

கே: இந்த அமைப்பில் ஏன் இ.தொ.காவை இணைக்கவில்லை?

ப: இ.தொ.காவை கட்டாயமாக இணைக்க வேண்டும். ஆனால் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா, இல்லையா அல்லது இவர்கள் இணையவில்லையா என்பதை சரியாக கூற முடியவில்லை. அமைப்பை உருவாக்கியவர்கள் அனைவருமே எதிரணியைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் ஆளும் கட்சிக்கு ஆதரவான இ.தொ.காவை இணைத்துக் கொள்வது சரியாக இருக்காது எனக் கருதியிருக்கலாம்.

அப்போதுதான் மலையக மக்களுடைய பிரதான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டணி என்ற பொதுவான கருத்துக்கு அமைய அனைத்து தமிழ் கட்சிகளும் வேறுபாடின்றி இணைந்து செயற்படுவது அவசியமாகும்.

கே: நாட்டில் இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் கட்சிகள் பிரிந்து செயற்படுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

ப: தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் தனித் தனியே செயற்பட்டால் எதிர்காலத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கு பங்கம் ஏற்படும் என்பதை கடந்த காலமும், நிகழ்காலமும் எடுத்துக்காட்டியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறான பிளவு காரணமாக மலையகம், உட்பட வடக்கு, கிழக்கு மக்களுடைய தீரா பிரச்சினைகளுக்கு ஒருமித்த தீர்வை காணமுடியாது. மேலும் பிரச்சினைகள் வலுப்பெறவும் செய்யும்.

அரசாங்கம் இம்மக்களின் பிரச்சினைக்காக போராடினால் அல்லது தீர்ப்பதற்கு முன்வந்தால் செயற்படும் ஒரு பண்பை பார்க்க முடிகிறது.

அதற்கு எதிராக எதிர்க் கட்சியினர் மலையகம், வடக்கு, கிழக்கு ஆகிய தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளில் இவ்வாறு சிந்தித்தால் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் கேள்விகுறியாகவே முடியும். ஆகையால் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளுக்கு பொதுவான வேலைத்திட்டமே அவசியம்.

உதாரணமாக மலையக மக்களுடைய பிரஜா உரிமை விடயத்தைச் சொல்லலாம். திம்பு பேச்சுவார்த்தையில் இது முதலிடம் வகித்தது. அதன் காரணமாகவே எமக்கு பிரஜா உரிமை கிடைத்தது. இதற்கு பின் யாரும் இதற்கு உரிமை கொண்டாடியிருக்கலாம் அது வேற விடயம். ஆனால் திம்பு பேச்சுவார்த்தையில் பிரஜா உரிமை பிரச்சினையை அவர்கள் முதன்மைப் படுத்தினார்கள்.

கே: இலங்கையில் மூத்த தலைவர்களின் கடந்த கால அரசியலுக்கும் சமகால அரசியலுக்கும் இடையே நீங்கள் காணும் வித்தியாசம். பற்றி சொல்வீர்களா?

ப: இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன் எவ்வாறு தலைமைகள் செயற்பட்டார்கள்,அதற்கு பின் நாட்டை வளப்படுத்த எவ்வாறு செயற்பட்டார்கள் என்பது நாம் அறிந்தவை.

புதிய தலைமுறையினர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் நாடு படிப்படியாக எவ்வாறு வீழ்ச்சி அடைந்தது என்பதையும் நாம் அறிவோம்.

டி.எஸ்.சேனாநாயக்க, எஸ்.டப்ளியு. ஆர்.டி.பண்டாரநாயக்கா காலங்களில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாடு எவ்வாறு படிப்படியாக தளர்வடைந்து வருகிறது என்பதை அவதானிக்க முடிகிறது.

இப்போது பெரும்பான்மை மக்கள் இந்த நாட்டின் உரிமைகள் அனைத்தையும் அனுபவிக்க வேண்டும். சிறுபான்மை தமிழ் பேசும் மக்கள் நசுக்கப்பட வேண்டுமென்ற சிந்தனை பலம் பெற்று வருவதை இப்போது பார்க்கிறோம். இப் போக்குப் பிரச்சினைகளை மேலும் வளர்க்கும்.

கே: மலையக மக்கள் பெருந்தோட்டங்களில் நசுக்கப்படுகின்றனரா?

ப: ஆம் நசுக்கப்படுகின்றனர். மலையகத்தில் நானும் ஒரு சிரேஸ்ட அரசியல்வாதி.

1983ஆம் ஆண்டு முதல் அரசியலிலும் சரி தொழிற்சங்க செயற்பாட்டிலும் சரி மலையக மக்களுடைய அனேகமான உரிமை பிரச்சினைகளுக்காக போராடி தீர்வுகளை பெற்றுக்கொடுத்தவன். அன்று தொழிலாளர்கள் சலுகைகள், உரிமைகளை அனுபவித்தார்கள். இன்று அவர்கள் அனுபவித்து வரும் வேதனைகளை அவதானித்து வருகிறேன். தொழிற்சங்கங்களின் சக்தியால் தான் பெருந்தோட்ட சமூக அரசியல் இயங்கியது. ஆனால் இன்று அவ்வாறில்லை. மலையக மக்களுடைய தேவைகள் அதிகரித்துள்ளன. அன்று மலையக அரசியலில் லயத்து கூரைகளுக்கு தகரம் மாற்றுவது, மலசல கூடம் அமைப்பதுபோன்ற தேவைகளே பிரதானமானவையாக இருந்தன.

இன்று மக்களுடைய அபிவிருத்தி பிரதான பிரச்சினையாகி உள்ளது. இன்று சம்பள உயர்வு தொடர்பாக பேசினால் தோட்ட தொழிலாளர்கள் எமது பிள்ளைகளை படிக்க வைப்பது எப்படி என்பது பற்றி யோசிக்கிறார்கள். அந்த அளவிற்கு மலையகம் மாறியுள்ளது. ஆனால் மலையக அரசியல்வாதிகள் பெரிதாகமாறவில்லை. அரசாங்கம் அவ்வப்போது மலையக பெருந்தோட்ட மக்கள் அபிவிருத்திக்கு வழங்கும் பணத்தை தாங்கள் கொடுத்ததாக சொல்லித் திரியும் நிலையை பார்க்கிறோம்.

உதாரணமாக கடந்த அரசாங்கத்தில் பெருந்தோட்டங்களில் வீடு கட்டவும், பாதைகள் போடவும் ஏனைய அபிவிருத்திகளுக்கும் பல கோடிக் கணக்கில் பணம் வழங்கப்பட்டது. எனினும் தலைவர்கள் இதற்கான பணத்தை தாங்கள் வழங்கியதாக மக்களிடத்தில் கூறி அரசாங்கம் இதை வழங்கியது எனக் கூற மறுத்ததால் சமூக மாற்றத்திற்கான அபிவிருத்திக்கு வித்திட்ட ஐ.தே.கவை மறந்து விட்டனர்.

தாங்கள் தான் அபிவிருத்தி செய்தோம் என்று தம்பட்டம் அடித்து வாக்கு பெற்று கொண்டவர்கள் இப்போது முன்வந்து தடைபட்ட பணிகளை தொடர்ந்திருக்கலாம் அல்லவா? இப்போது இது ஒரு கேள்வியாக மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அரசியல் ரீதியாக மலையக தலைமைகளை பார்க்கும் போது பெரும்பாலானோர் அரைவேட்காடாகவே திகழ்கின்றனர்.

கே: தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய நிலை பற்றி பேசுவோமா?

ப: தோட்டத் தொழிலாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஆயிரமும் முறையாக தொழிலாளர் கரம் கிட்டவில்லை. ஆங்காங்கே போராட்டம், நலிந்த வாழ்வு தொழிற்சங்க நடவடிக்கை முடக்கம் என பல்வகைப் பிரச்சினைகள் முளைத்துள்ளன. பெருந்தோட்ட துறையை முடக்கி மக்களை தோட்ட தொழிலில் இருந்து அகற்றி வளங்களை சூறையாடுவதற்கு திட்டம் வகுக்கப்படுவதாகவே கருதுகிறேன். அந்தக்காலத்தில் தோட்டங்களில் ஒரு ஏக்கருக்கு 15 தொழிலாளர்கள் அடிப்படையில் வேலை செய்வார்கள்.

இப்போது இந்த வழமை மாறி தோட்டங்களில் பணிகளுக்கு தொழிலாளர்கள் போதாத நிலை ஏற்பட்டுள்ளது.

தோட்டத்தை விட்டு தொழிலாளர்கள் வெளியில் வந்து உழைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. என்னுடைய விவசாய காணியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இரண்டு வேளை உணவு வழங்கி ஒருவருக்கு தினம் 2000/= ரூபா என்ற அடிப்படையில் வேதனம் வழங்குகிறேன்.

ஆனால் தேயிலை தோட்டங்களில் ஆயிரம் ரூபாய் வழங்க முடியாது என்கிறார்கள். இதனால் தோட்டங்கள் தொழிலாளர்களை இழக்கின்றன. அநேகமான தோட்டங்கள் காடுகளாகவே ஆகிவிட்டன. அந்தக் காலத்தில் தேயிலை தோட்டங்கள் முறையாக சிறப்பாக பராமரிக்கப்பட்டு. "எங்கள் தோட்டம்" என பெருமையாக தொழிலாளர்கள் பெருமைப்பட்டார்கள்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

என்று தீரும் எங்கள் மீனவர் பிரச்சினை?

மயூரப்பிரியன்

தமிழக மீனவர்களுக்கும், வடக்கு மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் பல ஆண்டுகளாக நீடித்தே வருகின்றன. ஆண்டுகள் கடந்தும் அவை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளது.

இரு தரப்பு மீனவர்களுக்கும் தொப்புள் கொடி உறவுகள் என கூறி வருகின்ற போதிலும் மீனவர்கள் மத்தியிலும் முறுகல் நிலை ஏற்படாமல் இல்லை.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் வடக்கில் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு வரையில் தொடர்கிறது. பெரிதும் பாதிக்கப்படுவது மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களே.

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இரு தரப்பு மீனவர்களும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே வருகின்றனர்.

தமிழகத்தின் இராமநாதபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை காரைக்கால் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மீன் பிடிக்க வரும் மீனவர்களே அதிகளவில் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

தமது படகுகள் பழுதடைந்தமை காரணமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து விட்டோம் என்பார்கள் சிலர், பலர் தமக்கு கடலில் எல்லை தெரியாமல் நுழைந்து விட்டோம் என்பார்கள்.

அதேவேளை, தாம் தமது எல்லைக்குள் நின்றே மீன் பிடித்ததாகவும், இலங்கை கடற்படையினரே இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தம்மை கைது செய்து வந்ததாகவும் கூறுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

அத்துடன் இலங்கை கடற்படையினர் தம்மை தாக்கியதாகவும், தம் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாகவும் குற்றம் சாட்டப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.

அதுமாத்திரமின்றி, இலங்கை கடற்படையின் படகுகள் தம்முடைய படகுகளை மோதி விபத்தினை ஏற்படுத்தி, தமது படகுகளை கடலில் மூழ்கடிப்பதாகவும் குற்றம் சாட்டியும் உள்ளனர்.

அதேவேளை கடந்த சுமார் 40 வருட கால பகுதியில் இலங்கை கடற்படையினர் சுமார் 600க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை படுகொலை செய்துள்ளதாகவும், இலங்கையில் உள்நாட்டு போர் நடைபெற்றுக்கொண்டு இருந்த காலப் பகுதியான 1989ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான கால பகுதியில் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு கடல் வழியாக தாம் உதவிகளை வழங்கி வருவதாக கூறி பல மீனவர்களை கடலில் வைத்து இலங்கை கடற்படையினர் சுட்டுப் படுகொலை செய்துள்ளதாகவும் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வடக்கு மீனவர்களின் குற்றச்சாட்டு

தமிழக மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவது மாத்திமின்றி எமது கடல் வளங்களையும், எமது வலைகள் உள்ளிட்ட மீன் பிடி உபகரணங்களையும் அழித்து விட்டு செல்கின்றனர் என வடக்கு மீனவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களால் பல கோடி ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக தமக்கு எவரும் நஷ்டஈட்டைத் தந்து உதவவில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

தீர்வுகள் எட்டப்படாத பேச்சுக்கள்

தமிழக மற்றும் வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க பல்வேறு கட்டங்களாக பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும் இதுவரையில் தீர்வுகள் எட்டப்படவில்லை.

கடந்த காலங்களில் கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு இரண்டு நாட்டு மீனவர்களும் ஆலயத்தில் ஒன்று கூடுவார்கள். அதன் போது இரு நாட்டு மீனவர்களுக்கு இடையில் பேச்சுக்கள் நடைபெற்றிருந்தன. அது மாத்திரமின்றி டெல்லி வரை சென்றும் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. அவையும் எவ்வித சாதகமான முடிவும் இன்றியே முடிவடைந்தன.

பொறுமையிழந்த வடக்கு மீனவர்கள்

பல்வேறு கட்ட பேச்சுக்கள், பல சுற்று பேச்சுக்கள் என எந்த பேச்சுவார்த்தைகளும் தமக்கு பயன் தரவில்லை என்பதனால் மீனவர்கள் வீதியில் இறங்கி போராட்டங்களை முன்னெடுத்தனர்.

யாழில் உள்ள இந்திய துணைத்தூதரகம் முன்பாக கூட போராட்டங்களை முன்னெடுத்து துணைத்தூதுவரிடம் மகஜர்களையும் கையளித்து தமிழக மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறும், உங்கள் மீனவர்களால் தமக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுத்தர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர். அந்த கோரிக்கைகளும் பயனற்றுப் போயின.

கடலில் பஸ்களை இறக்கிய கடற்தொழில் அமைச்சு

வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த கோரி வந்தனர். பேச்சுக்களும் வெற்றியளிக்காத நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த இலங்கை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எண்ணக்கருவில், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பழுதடைந்த பேருந்துகளை இலங்கை இந்திய கடல் எல்லையில் கடலில் இறக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் மூலம் கடலினுள் இறக்கப்படும் பேருந்துக்களால், அடிமடி தொழில் செய்யும் இந்திய மீனவர்களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படும். கடலின் அடியில் போடப்படும் வலைகள் அறுக்கப்படும். அதனால் பாரிய நஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படும்.

கடலினுள் பழுதடைந்த பேருந்துகளை இறக்கியமை தனியே இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த மாத்திரமின்றி மீன் வளத்தையும் அதிகரிக்கும்.

கடலினுள் இறக்கப்பட்ட பேருந்துகள் மூலம் செயற்கை பவளப்பாறைகள் உருவாக்கப்பட்டு மீன் வளம் பெருகும் என கூறப்பட்டது.

இவ்வாறு இலங்கை கடற்பரப்புக்குள் போடப்படும் பேருந்துகளினால் தமது மீனவர்கள் விரிக்கும் வலைகள், வேகமாக இலங்கை கடற்பரப்புக்குள் செல்லும் நிலை ஏற்படும் எனவும், அதனால் வலைகள் பேருந்துக்களில் சிக்கி கிழியும் நிலை ஏற்படும் எனவும் தமிழக மீனவர்கள் எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் கடலில் பேருந்துகளை போடும் வேலைத் திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் அத்துமீறல்.

கடந்த ஆண்டு இறுதியில் மீண்டும் தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் சென்றது. அதனால் மீண்டும் வடக்கு மீனவர்கள் போராட்டங்களில் குதித்தனர்.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக, சங்கானை பிரதேச செயலகம் முன்பாக, காரைநகர் பிரதேச செயலகம் முன்பாக என சுழற்சி முறையில் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டங்களின் முடிவுகளில் அரச அதிகாரிகள் ஊடாக ஜனாதிபதி, கடற்தொழில் அமைச்சர் உள்ளிட்டோருக்கு மகஜர்களையும் கையளித்துள்ளனர். அதேவேளை யாழில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தில் துணைத் தூதுவரை சந்தித்தும் பேச்சுக்களை நடாத்தியதுடன், மகஜரும் கையளித்து உள்ளனர்.

வகை தொகை இன்றி கைதான தமிழக மீனவர்கள்

வடக்கு மீனவர்களில் போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு இருந்த வேளைகளில், கடந்த டிசம்பர் மாதம் கடற்படையினரும் கடலில் சுற்றுக் காவல் (ரோந்து) பணிகளை தீவிரமாக்கினார்.

அதனையடுத்து மன்னார் கடற்பரப்பில் 30க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அதேவேளை யாழ். மாவட்ட கடற்பரப்பில் 55 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த ஓரிரு தினங்களில் சுமார் 85க்கும் அதிகமான தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டனர்.

அதுமாத்திரமன்றி அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் மீன் பிடியில் ஈடுபட்ட பல மீனவர்களை கடற்படையினர் துரத்தியும் உள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை.

யாழ்.மாவட்ட கடற்பரப்பில் டிசம்பர் மாதம் கைதான 55 தமிழக மீனவர்களும் சுமார் 45 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த ஜனவரி 25ஆம் திகதி ஊர்காவற்துறை நீதிமன்று அவர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 06 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை என்பதனால், அவர்களுடைய கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் இலங்கை குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம் ஊடாக தமிழகம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த 55 மீனவர்களும் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கு இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் மீண்டும் கைது செய்யப்படுவார்களாயின் 06 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும். அத்துடன் கைது செய்யப்படும் காலப் பகுதியில் நடைபெறும் வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்புக்கு அமைய வழங்கப்படும் தண்டனையையும் சேர்த்து அனுபவிக்க நேரிடும்.

கைப்பற்றப்படும் தமிழக மீனவர்களின் படகுகள் ஏலத்தில்

அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை ஏலத்தில் விற்க இலங்கை அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசின் இந்த முடிவினை வடக்கு மீனவர்கள் "படகுகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு எடுத்த முடிவு காலம் கடந்ததாக இருந்தாலும் அதனை நாங்கள் வரவேற்கின்றோம்" என்கின்றனர். அதேவேளை இலங்கை அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு தமிழக மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

வீதிக்கு இறங்கிய மீனவர்கள்

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து போராட்டங்களை முன்னெடுத்து வந்த மீனவர்கள் தமக்கான தீர்வுகள் கிடைக்கவில்லை என்ற வேதனையில் இருந்தனர்.

அந்நிலையில் கடந்த 27ஆம் திகதி வடமராட்சி வத்திராயன் பகுதியில் இருந்து கடலுக்கு தொழிலுக்கு சென்ற மீனவர்கள் காணாமல் போயிருந்தனர்.

குறித்த மீனவர்களை சக மீனவர்கள் தேடி வந்த நிலையில், நான்கு நாட்களின் பின்னர் 31ஆம் திகதி வடமராட்சி கிழக்கு ஆழியவளை மற்றும் கேவில் ஆகிய பகுதிகளில் மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கின.

இந்திய மீனவர்களின் படகு குறித்த மீனவர்களின் படகுடன் மோதியதால் இரு மீனவர்களும் உயிரிழந்ததாக சக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதேநேரம், அன்றைய தினம் (31 ஆம் திகதி) அதிகாலை வடமராட்சி சுப்பர் மடம் பகுதியில் இருந்து தொழிலுக்கு சென்ற மீனவர்களின் வலைகள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அறுக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் இரு மீனவர்கள் உயிரிழந்த சம்பவத்தாலும், மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்ட சம்பவத்தாலும் மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பினை ஏற்படுத்தியிருந்தது.

அதனையடுத்து சுப்பர் மட மீனவர்கள் வீதியில் இறங்கி போராட்டத்தை முன்னெடுத்தனர். பருத்தித்துறை பொன்னாலை வீதியினை சுப்பர் மடம் பகுதியில் மறித்து மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுப்பர் மட மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக அயல் பிரதேச மீனவர்களும் போராட்டத்தில் குதித்தனர்.

இந்திய மீனவர்களை மடக்கி பிடிக்க முயற்சி

அன்றைய தினம் இரவு வடமராட்சி மீனவர்கள் அத்துமீறி நுழையும் மீனவர்களை கடலில் மடக்கி பிடிக்கும் நடவடிக்கைகளில் இறங்கினார்கள்.

இரண்டு படகுகளையும் அதில் இருந்த 21 மீனவர்களையும் வடமராட்சி மீனவர்கள் சுற்றி வளைத்து வடமராட்சி கரைக்கு கொண்டுவர முயற்சித்துள்ளனர்.

அவ்வேளை அப்பகுதியில் சுற்றுக் காவல் (ரோந்து) நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த கடற்படையினர் அதனை கண்ணுற்று, இந்திய மீனவர்களை கைது செய்ததுடன், படகுகளையும் மயிலிட்டி துறை முகத்திற்கு கொண்டு சென்றனர்.

ஏனைய இடங்களிலும் போராட்டங்கள் முன்னெடுப்பு

மறுநாள் 1ஆம் திகதி மீனவர்களின் போராட்டம் உத்வேகம் அடைய தொடங்கியது. மருதங்கேணி பிரதேச செயலகத்தை முடக்கி வடமராட்சி கிழக்கு மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதேவேளை பலாலி அந்தோணிபுர மீனவர்களும் வீதியை மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர். மீனவர்களின் போராட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட செயலகம் முற்றுகை

அந்நிலையில் மீனவர்களின் போராட்டம் நான்காவது நாளான 3ஆம் திகதி உச்சம் தொட்டது. யாழ்.மாவட்ட செயலகத்தை மீனவர்கள் முற்றுகையிட்டனர். அதனால் யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலை ஊடான போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்தது.

குறித்த வீதி ஊடான போக்குவரத்திற்கு பொலிஸார் மாற்றுப்பாதைகளை வாகன ஓட்டிகளுக்கு அடையாளம் காட்டினார்கள்.

கடற்தொழில் அமைச்சரின் உறுதிமொழியை ஏற்க மறுப்பு

மாவட்ட செயலகம் மீனவர்களின் முற்றுகைக்குள் இருந்தமையால் , மீனவர்களுடன் சமரச பேச்சுக்கு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்றிருந்தார்.

இந்திய மீனவர்களின் அத்து மீறல்களை கட்டுப்படுத்த தான் நடவடிக்கை எடுப்பதாக மீனவர்கள் மத்தியில் அமைச்சர் உறுதி அளித்த போது, வாய் மொழி மூல உறுதியினை தாம் நம்ப தாயார் இல்லை எனவும், எழுத்து மூலம் உறுதி வழங்க வேண்டும் என மீனவர்கள் கோரினார்கள்.

அதனால், அங்கு ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து அவ்விடத்தில் இருந்து டக்ளஸ் தேவானந்தா வெளியேறினார். மீனவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுப்பர் மடம் பகுதியில், பருத்தித்துறை பொன்னாலை வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் டக்ளஸ் தேவானந்தா பேச்சுக்களை நாடாத்த முற்பட்ட போதும் அங்கும் அமைதியின்மை ஏற்பட்டதனை அடுத்து, அங்கிருந்தும் அமைச்சர் கோபத்துடன் வெளியேறிச் சென்றிருந்தார்.

போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை

அதேவேளை, சுப்பர் மட மீனவர்கள் நான்கு நாட்களாக பொன்னாலை – பருத்தித்துறை வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதனால், போராட்டத்திற்கு தடை விதிக்க கோரி பருத்தித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் விண்ணப்பம் செய்தனர்.

அதனை யடுத்து நீதிமன்று வீதியை மறித்து முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு தடை விதித்து கட்டளை பிறப்பித்தது.

போராட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டதை பொலிஸார் மீனவர்களுக்கு அறிவித்தனர். அதேவேளை குழப்பங்கள் ஏற்படலாம் என முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தனர்.

நீதிமன்ற கட்டளைக்கு அமைய வீதியை மறித்து போடப்பட்டிருந்த கொட்டகைகளை அகற்றிய மீனவர்கள், வீதி ஊடான போக்குவரத்திற்கு தடை இல்லாமல் தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இரு நாடுகள் தலையிட்டு தீர்க்க வேண்டிய பிரச்சினையாக இரு தரப்பு மீனவர்களின் பிரச்சினை உள்ளது. அதனால் அது நீடித்த பிரச்சினையாக உள்ளது. இரு நாடுகளினதும் மத்திய அரசு இரு தரப்பு மீனவர்களையும் கண்டு கொள்வதில்லை எனும் குற்றச்சாட்டும் எழாமல் இல்லை.

மீனவர்களின் பிரச்சினை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு திறந்த பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்பதே இரு தரப்பு மீனவர்களினதும் கோரிக்கையாகும்.

அரசியல் நீக்கம் செய்யப்பட்ட பேச்சுவார்த்தைகள் மூலம் சாத்தியமாகுமா?

ஐந்து பேரின் உயிரைக் குடித்த கரடியல்ல நீர்வீழ்ச்சி

ஹாலிஎல எட்டம்பிட்டிவத்தை முதலாவது பிரிவில் இம்புல்வத்தை பிரதேசத்தில் வசிக்கும் ரஜீவ் குமாரின் வீட்டுக்கு அயலவர்களுடன், உறவினர்களும் நெருக்கமானவர்களும் என அதிக எண்ணிக்கையானோர் கடந்த ஜனவரி 29ம் திகதி ஒன்று கூடினர். அன்றைய தினம் ரஜீவ் குமாரின் தந்தையான ஜெயராம் மரணித்து ஒரு வருடம் நிறைவடைந்ததையொட்டி இந்து சமய முறைப்பிரகாரம் அன்னதான நிகழ்வில் கலந்து கொள்வதற்கே அவ்வாறு அவர்கள் அங்கு ஒன்று கூடியிருந்தனர். பகல் அன்னதான நிகழ்வுகள் நிறைவடைந்த தன் பின்னர் அங்கு கூடியிருந்தவர்களுள் சிலர் குளிப்பதற்காக ஆயத்தமானது ரஜீவின் வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள கரடியல்ல கீழ் பகுதியில் அமைந்துள்ள தியனாவெல நீர்வீழ்ச்சியிலாகும். அவ்வாறு புறப்பட்டவர்களுள் ஏழு ஆண்களும், நான்கு பெண்களும் அடங்கியிருந்தனர்.

கரடியல்ல என்பது, எட்டம்பிட்டி பொலிஸ் பிரிவு எல்லையில் செல்லும் உமா ஓயாவில் நிர்மாணிக்கப்பட்ட 12 மீட்டர் உயரத்தைக் கொண்ட நீர்வீழ்ச்சியாகும். இந்நாட்டினுள் கெரடி எல்ல என்ற பெயரில் அறியப்படும் ஐந்து நீர் வீழ்ச்சிகள் உள்ளன. எட்டம்பிட்டி, கரடியல்ல, களுகல்ல கரடியல்ல, பஸ்ஸர கரடியல்ல, கரடி கினிஎல்ல மற்றும் கரடி ரிக்கிலிஎல்ல போன்றவையே அவையாகும்.

வெலிமடை பதுளை வீதியில் எட்டம்பிடி பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் செல்லும் காவெல வீதியில் சுமார் ஐந்து மைல் தூரம் பயணிக்கும் போது வரும் எட்டம்பிட்டிய ஒரு அழகிய இடமாக அமைந்துள்ளதோடு, நீர் வீழ்ச்சியின் அடிவாரத்தில் உள்ள பெரிய பாறைகளும், அண்மித்த சூழலின் அழகும் அங்கு வருபவர்களது மனதைக் கொள்ளை கொள்ளும் ரம்மியமான காட்சிகளாகும்.

திட்டமிட்டபடி 11 நண்பர்களும் அன்றைய தினம் மாலை மூன்று மணியாகும் போது கரடியல்ல, தியனாவெல நீர் வீழ்ச்சியில் இறங்கினார்கள். நீர் வீழ்ச்சியில் நீர் வெள்ளம் போல் பாய்ந்தாலும் நீண்ட நாட்களுக்குப் பின்னர் சந்தித்துக் கொண்ட நண்பர்கள் புன்னகையுடன் நீரில் விளையாடி மகிழ்ந்தனர். என்றாலும் அவர்களது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அப்போது நேரம் மாலை 3.30 மணியிருக்கும்.

திடீரென ஒரு கல்லிலிருந்து மற்றொரு கல்லுக்கு பாய்ந்து குளித்துக் கொண்டிருந்த 23 வயது வனராஜா டேவிட் குமார் மூழ்கி காணாமல் போனார். எனினும் அருகிலிருந்த கல்லின் மீதிருந்த ஏனைய சிலரும் டேவிட் குமாரைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொருவரின் கைகளையும் பற்றிப்பிடித்துக் கொண்டு முயற்சி செய்துள்ளனர். எனினும் எதிர்பாராத நிகழ்வே இடம்பெற்றது. டேவிட் குமாருடன் இன்னும் நான்கு பேரும் அந்த நீர் நிறைந்த பள்ளத்தில் வீழ்ந்து காணாமல் போனார்கள்.

நீரில் மறைந்து போனவர்கள் 19 வயதுக்கும் 23 வயதுக்கு இடைப்பட்ட எதிர்காலக் கனவுகளைச் சுமந்து கொண்டிருந்த ஐந்து இளைஞர் யுவதிகளாகும். எட்டம்பிட்டி தோட்டத்தின் முதலாவது பிரிவில் வசிக்கும் 23 வயதுடைய வனராஜா டேவிட் குமார், 21 வயதுடைய ஜெயராம் காஞ்சன பிரியா, ஹட்டனைச் சேர்ந்த 23 வயதுடைய கடையப்பன் பவானி சந்திரலேகா, பண்டாரவளை, நெலுவவத்தை, கின்ரோஸ் பிரிவில் வசிக்கும் 22 வயதுடைய செல்வகுமார் சஷி பிரியா மற்றும் அவளது சகோதரியான 19 வயதுடைய செல்வகுமார் பர்மிளாதேவி ஆகியோரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போனவர்களாகும்.

நீரில் மூழ்கி உயிரிழந்த ஒரேயொரு இளைஞரான வனராஜா டேவிட் குமார் நிரந்தரமான தொழில் எதுவும் செய்யாத நிலையில் மேசன் வேலைக்கான பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருந்த, எல்லோரிடத்திலும் நற்பெயரைப் பெற்றிருந்த ஒரு இளைஞராகும். ஜெயராம் காஞ்சன பிரியா என்பவர் அன்னதானம் இடம்பெற்ற வீட்டு உரிமையாளரின் ஒரு மகளாகும். அவர் எட்டம்பிட்டி விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற யுவதியாகும். நீரில் மூழ்கி உயிரிழந்த டேவிட் குமார் மற்றும் காஞ்சன பிரியா இருவரும் காதலர்களாகும்.

பவானி சந்திரலேகா ஹட்டன் லிந்துலை மெராயா தோட்டத்தில் தங்கமலை பிரிவில் வசித்து வந்த யுவதியாகும். இந்த யுவதி அன்னதானம் இடம்பெற்ற ஜெயராமின் வீட்டு உரிமையாளரின் மகனான 25 வயதுடைய ஜெயராட் காவிந்த பிரகாஷ் என்ற இளைஞரைத் திருமணம் செய்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் இருந்தவராகும். அவர்கள் இருவரும் அவிசாவளை பிரதேசத்தில் தொழில் செய்து கொண்டிருந்துள்ளனர். ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் தொழில் செய்து கொண்டிருந்த பவானி தனது பெற்றோருடன் பல மைல்களைக் கடந்து தான் கடைசிப் பயணத்தை மேற்கொள்ளப் போவதை அறியாமல், எட்டம்பிட்டியவுக்கு வருகை தந்தது தான் விரைவில் திருமணம் முடிக்க இருந்த காவிந்த பிரகாஷின் இல்லத்தில் இடம் பெற்ற அன்னதான நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவாகும்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த செல்வகுமார் சஷிபிரியா மற்றும் செல்வகுமார் பர்மிளாதேவி ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளாகும். இவர்களுக்கு இன்னும் மூன்று சகோதரிகள் உள்ளனர். பண்டாரவளை, நெலும்வத்தை, கின்ரோஸ் பிரிவில் வசிக்கும் இவ்விரு சகோதரிகளும் அன்னதான நிகழ்வில் கலந்து கொண்டிருப்பது காஞ்சன பிரியாவுடனான நட்பின் காரணத்தினாலாகும்.

இவ்வாறு உயிரிழந்தவர்களுடன் நீர் வீழ்ச்சியில் குளிக்கச் சென்றவர்களுள் அன்னதான நிகழ்வு இடம்பெற்ற வீட்டைச் சேர்ந்த இளைஞனான ஜெயராம் ரஜீவ் குமாரும் அடங்கியிருந்தார். ரஜீவ் இச்சம்பவத்தில் உயிரிழந்த காஞ்சன பிரியாவின் சகோதரனாகும். நீரில் மூழ்கிய ரஜீவ் அதிர்ஷ்டவசமாக உயிரைக் காப்பாற்றிக் கொண்டார். தனது சகோதரி உள்ளிட்ட நண்பர்கள் முகங்கொடுத்த துர்ப்பாக்கிய சம்பவம் தொடர்பில் ரஜீவ் குமார் கண்ணீர் மல்க இவ்வாறு விபரித்தார்.

"அன்று எமது வீட்டில் இடம்பெற்ற அன்னதான நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் அனைவரும் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து எமது வீட்டுக்கு வருகை தந்திருந்தனர். எனது சகோதரன் காவிந்த பிரகாஷைத் திருமணம் செய்து கொள்ளவிருந்து பவானி அக்காவும் ஹட்டனிலிருந்து வந்திருந்தார். அதே ஊரைச் சேர்ந்த நண்பர்கள் பலரும் வந்திருந்தார்கள். எமது வீட்டில் அன்னதானம் முடிவடைந்ததன் பின்னர் நானும், பவானி அக்காவும், தங்கை காஞ்சன பிரியாவும், அவள் திருமணம் செய்து கொள்ள இருந்த டேவிட் குமார் மற்றும் இன்னும் சிலருமாக நாம் 11 பேர் கரடியல்ல, தியனாவெல நீர் வீழ்ச்சியில் குளிப்பதற்காகச் சென்றோம். நாம் மிகவும் குதூகலமாகவும், மகிழ்ச்சியுடனும் குளித்துக் கொண்டிருந்த போது திடீரென டேவிட் குமார் நீர் பள்ளத்தில் வீழ்ந்தார். அவருடன் இன்னும் சிலரும் வீழ்ந்தார்கள். சிலர் அவர்களைப் பிடிப்பதற்காக பாய்ந்தார்கள். எப்படியோ நாம் எட்டுப் பேர் நீரில் மூழ்கினோம். இவ்வாறு வீழ்ந்தவர்களுள் மூவர் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் நீந்திக் கொண்டு கரைக்கு வந்தோம். மற்றைய ஐவர் நீரில் மூழ்கி காணாமல் போனார்கள். நாம் சத்தமிட்டு கூக்குரலிட்டோம். சிலர் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார்கள். எமது கூக்குரலைக் கேட்டு ஊரைச் சேர்ந்த பலரும் அவ்விடத்திற்கு ஓடி வந்தார்கள்"

கரடியல்லவில் குளிக்கச் சென்ற ஐவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக எட்டம்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு அன்றைய தினம் 4.20 மணியளவில் தகவல் கிடைத்திருந்தது 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவாகும். அந்த தகவலையடுத்து உடன் செயற்பட்ட எட்டம்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் வசந்த ரணசிங்க தனது குழுவினருடன் அனர்த்தம் இடம்பெற்ற இடத்திற்கு மாலை 5.15 மணியளவில் சென்றுள்ளனர். பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் அவ்விடத்திற்குச் சென்ற நேரம் அங்கு அக்கம் பக்கத்தினர் பெருமளவானோர் ஒன்று கூடியிருந்தனர். இந்த துயரச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் பரிசோதகர் வசந்த எம்மிடம் இவ்வாறு கூறினார்.

"எமக்குத் தகவல் கிடைத்து ஒரு மணி நேரத்திற்குள் நாம் சம்பவ இடத்தினை அடைந்தோம். நாம் அவ்விடத்திற்குச் சென்ற போது அங்கு சுமார் 500 பேரளவில் ஒன்று கூடியிருந்த போதிலும் இவ்வாறு நீரில் மூழ்கிய இளைஞர் யுவதிகளை காப்பாற்றுவதற்காக எவரும் போதிய முயற்சிகளை மேற்கொள்ளாமை துரதிஷ்டவசமானதாகும். ஒரு யுவதியின் சடலம் மாத்திரம் நீரில் மத்தியில் இருந்த கல்லில் சிக்கியிருந்தது. நாம் அவ்விடத்திற்குச் சென்ற உடன் நானும் இன்னும் இரண்டு அதிகாரிகளும் நீரில் இறங்கி நீந்தினோம். நாம் மூவரும் பிரதேசவாசிகளுடன் இணைந்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இன்னும் மூவரின் சடலங்களை மீட்டெடுத்து கரைக்குக் கொண்டு வந்தோம். எனினும் சஷிபிரியாவின் சடலத்தை அன்றைய தினம் எம்மால் தேடிக் கொள்ள முடியாமல் போனது. மறு நாள் மாலையாகும் போதே கற்பாறைக்குள் சிக்கி இருந்த அந்த யுவதியில் சடலத்தை எம்மால் மீட்க முடிந்தது. இதற்காக இராணுவ முகாமின் அதிகாரிகளின் ஒத்துழைப்பை மிகவும் மதிக்கிறோம்" என்றார்.

அதேபோன்று வயது வந்தோர் இளம் வயதுடைய தமது பிள்ளைகள் தொடர்பில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்ததார். அவ்வாறு பெற்றோர்கள் அவதானத்துடன் நடந்து கொண்டால் இவ்வாறான துயரச் சம்பவங்களைத் தடுத்துக் கொள்ள முடியும். மேலும் பள்ளத்தில் வீழ்ந்த இளைஞர் யுவதிகளைக் காப்பாற்றுவதற்காக அவ்விடத்தைப் பற்றி நன்றாக அறிந்து வைத்திருக்கும், நீந்தத் தெரிந்த, மீன் பிடித்தல் மற்றும் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் இவ்விடத்தைச் சுற்றி இருந்தாலும் அவர்கள் ஓரளவு முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் சில நேரம் ஒரு உயிரையேனும் காப்பாற்றிக் கொண்டிருக்கலாம் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குற்றம் சுமத்தும் வகையில் கருத்து தெரிவித்தார். எவ்வாறாயினும் அவ்விடத்தில் குளிப்பதற்கு எந்த வகையிலும் தகுந்த இடமல்ல என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கரடியல்ல நீர் வீழ்ச்சியில் அகப்பட்டு இறுதிப் பயணத்தை மேற்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவரான சஷிபிரியா மற்றும் பர்மிளாதேவி ஆகியோரில் பர்மிளாதேவி பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற்றிருந்த யுவதியாகும். அவர்கள் இருவரின் தாயான அண்ணாமலை புஷ்பராணி தன் வயிற்றில் பிறந்த இரு பிள்ளைகளுக்கு ஏற்பட்ட துயரம் பற்றி நீர் நிறைந்த கண்களுடன் எம்மிடம் இவ்வாறு கூறினார்.

"இந்த துரதிஷ்டமான சம்பவத்தில் எனது இரண்டு மகள்களும் பலியாகியுள்ளார்கள். ஐயோ.... நான் எப்படி இந்த துயரத்தைத் தாங்கிக் கொள்ளப் போகிறேன்....? இளைய மகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியிருந்தாள். மற்றைய மகள் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தாள். அன்று 29ம் திகதி காலை இரு பிள்ளைகளும் அவர்களது நண்பியின் வீட்டில் இடம்பெற்ற அன்னதான நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். மாலை அவர்கள் இருவரும் வீட்டுக்குத் திரும்பி வரும் வரைக்கும் நாம் பார்த்துக் கொண்டிருந்த போது இரவு 7.30 மணியளவில் இந்த துயரச் சம்பவம் பற்றிய தகவல் எமக்குக் கிடைத்தது. என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியாமல் போனது. எனது இரு பிள்ளைகளையும் திருடர்கள் கொண்டு சென்றுவிட்டார்கள் என்பது போல எனக்கு இல்லாமல் போய்விட்டார்கள்"

தனது சகோதரிகள் இருவருக்கும் ஏற்பட்ட இந்த துயரச் சம்பவத்தினால் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியிருக்கும் அவர்களது சகோதரியான செல்வகுமாரி ஜெயபிரியா கூறும் போது,

"சம்பவத்தில் உயிரிழந்த எமது மூத்த சகோதரி ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்தே அம்மா, அப்பா உள்ளிட்ட எம்மை வாழ வைத்துக் கொண்டிருந்தார். மற்றைய சகோதரி பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியிருந்தாள். இந்த அனைத்து கனவுகளும் ஒரு நிமிடத்தில் அழிந்து போய்விட்டது. இப்போது எமது குடும்பமே நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது"

கரடியல்ல என்பது அந்தளவுக்கு உயரத்தைக் கொண்ட ஒரு நீர் வீழ்ச்சியல்ல. எனினும் அந்த நீர் விழும் இடத்தைப் போன்று நீர் தேங்கும் இடமும் மிகவும் ஆபத்தானதாகும். கரடியல்ல நீர் வீழ்ச்சியின் நீர் விழும் இடத்தைச் சுற்றி பல நீர் நிறைந்த பள்ளங்கள் அமைந்துள்ளதாக பிரதேசவாசி ஒருவரான டப்ளிவ். எஸ். சரத் அபேவர்தன எம்மிடம் கூறினார். கரடியல்ல நீர் வீழ்ச்சியின் பயங்கரத்தைப் பற்றி அவர் இவ்வாறு கூறினார்.

"கரடியல்ல நீர் விழும் இடத்தில் மிகவும் ஆபத்தான ஆழமான பள்ளம் உள்ளது. அத்துடன் கீழ் நோக்கிச் செல்ல செல்ல இன்னும் பள்ளங்கள் இருக்கின்றன. அவற்றில் சுழிகள் உண்டாகும். நீர் சுழியில் அகப்பட்டால் காப்பாற்ற முடியாது. கீழே போய்விடும். அதேபோன்று கற்பாறைகள் உள்ளன. கீழே சென்ற ஒருவர் இந்த கற்பாறைகளுக்குள் சிக்கிக் கொண்டால் இனி காப்பாற்றுவது என்பது முடியாத காரியம். இந்தக் குழிகளைப் பற்றித் தெரிந்தவர்கள் எவரும் இங்கு குளிக்கச் செல்வதில்லை. இதற்கு முன்னரும் இவ்விடத்தில் மூவர் உயிரிழந்திருக்கின்றார்கள். ஊர் மக்களுக்குத் தெரிந்திருப்பின் இவர்களை இவ்விடத்தில் குளிப்பதற்கு அனுமதித்திருக்க மாட்டார்கள். இவ்வாறான இளைஞர் யுவதிகளின் பயணங்கள் தொடர்பில் வயது வந்தவர்கள் இதனை விடவும் கவனம் செலுத்தினால் இந்த துயரங்கள் இடம்பெறாது"

எவ்வாறாயினும் தற்போது இடம்பெறக் கூடாத அனைத்துமே இடம்பெற்று முடிந்திருக்கின்றது. வாழ்க்கையின் ஆரம்பத்தைத் தொடங்கிய நிலையில் இருக்கும் இளைஞர்களில் வாழ்க்கை இவ்வாறு நீரில் சிக்கி பலியாகிப் போயுள்ளது.

இனிவரும் காலங்களில் இவ்வாறான அகால மரணங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அதிகாரிகள், முதியவர்களுக்கு மாத்திரமின்றி தத்தமக்கும் உண்டு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அமில மலவிசூரிய...✍
தமிழில்: எம்.எஸ்.முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

அமரர் தெய்வநாயகம் ஈஸ்வரனின் நான்காம் சிரார்த்த தினமும், பௌத்த குருமார்களுக்கு தானம் வழங்கும் நிகழ்வும், பௌத்த அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் குருநாகல் ரம்பொடகல பௌத்த விகாரையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள திசாநாயக்க, தெ. வீரபாகு, தெ. முருகேஷ், ஈஸ்வரன் கணேசன், ஈஸ்வரன் சுப்பிரமணியம், குமார் தெய்வநாயகம், எச்.எச். விக்கிரமசிங்க, ரவி தம்பி நாயகம், திருமதி லிண்டா உட்பட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராலயம், இலங்கையின் 74வது சுதந்திர தினத்தை 2022 பெப்ரவரி 04ஆம் திகதியன்று துணை உயர்ஸ்தானிகராலய வளாகத்தில் கொண்டாடியது. தென்னிந்தியாவில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டி.வெங்கடேஷ்வரன் தேசியக் கொடியை ஏற்றினார்.

அமரர் எஸ்.டி. சிவநாயகத்துக்கு முத்திரை வெளியிடும் இலங்கை அரசு

இலங்கை பத்திரிகை துறையில் பொன்விழா கண்டவரும் சத்திய சாய் பாபா மத்திய நிலைய ஸ்தாபகரும், தொடர்ந்து இருபத்து ஐந்து வருடங்கள் அதன் தலைவராக செயற்பட்டு சாய் நிலையத்தை வழிநடத்தியவருமான அமரர் எஸ்.டி. சிவநாயகத்தின் நூறாவதாண்டு பிறந்த நாள் நிகழ்வுகளை இவ் வருடம் சிறப்பாக கொண்டாட அவரது ஞாபகார்த்த குழு ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

அதன் முன்னோடி நிகழ்வாக எஸ்.டி.சிவநாயகம் ஞாபகார்த்த முத்திரையை இம்மாதம் 16ஆம் திகதி புதுசெட்டிதெரு சாய் மத்திய நிலையத்தில் வெளியிட இலங்கை முத்திரை பணியகம் ஏற்பாடு செய்து வருகின்றது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வெ.ராதாகிருஷ்ணனின் வழிக்காட்டலில் மூத்த பத்திரிகையாளர் எச்.எச்.விக்கிரமசிங்க அண்மையில் ஊடக துறை அமைச்சர் டலஸ் அலகப்பெருமவை அமைச்சில் சந்தித்து எஸ்.டி.சிவநாயகத்தின் ஊடகப்பணி மற்றும் ஆன்மீக பணி என்பன குறித்து விளக்கிக் கூறினார். அதை தொடர்ந்து அமைச்சர், முத்திரை வெளியிடுவதற்கான பணிப்புரையை தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்னவுக்கு எழுத்து மூலம் வழங்கினார்.

சிவநாயகம் தலைவர் தொண்டமானின் வாழ்க்கை வரலாற்று நூலை விரிவாக எழுதியவர். 1966இல் தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளை ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராக பணியாற்றியவர்.

தினகரன் பத்திரிகையின் மூலம் தன் பத்திரிகை பணியை ஆரம்பித்த இவர் சுதந்திரன், வீரகேசரி, சூடாமணி பத்திரிகைகளின் ஆசிரியராகவும் சுமார் ஐம்பது வருடம் பணியாற்றியவர். அவர் பிறந்து நூறு ஆண்டுகள் கடந்தும் காத்திரமான அவரது படைப்புக்கள் நூல் உருப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக எழுத்தாளர் மன்றம் 1963 ஆம் ஆண்டு உருவாக பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதோடு இலங்கையின் முன்னனி பல எழுத்தாளர்கள் உருவாக காரணமாக இருந்த மூத்த பத்திரிக்கையாளர் ஆவார்.

ஞாபகார்த்த முத்திரை விற்பனை மூலம் கிடைக்கும் நிதி தற்போது புது செட்டித்தெரு சாய் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ராஜகோபுர பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அ. கனகசூரியர்

74 வருடங்களாக

அபிவிருத்தியடையும் நாடாகவே இந்த நாடு திகழ்வது ஏன்?

உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்வதே அபிவிருத்திக்கு அச்சாரமாக அமையும்

இலங்கை தனது 74வது சுதந்திர தினத்தை அனுட்டித்துள்ளது. சாதனைகள் என்று சொல்லிக் கொள்ளும்படியாக எதையும் கூறமுடியாத நிலையில் சவால்களின் பட்டியல் மட்டும் நீண்டு செல்லும் காலப்புறச்சுழலில் இம்முறை சுதந்திர தினம் வந்து சென்றிருக்கிறது. தியாகங்களைச் செய்ய தயாராகுமாறு நாட்டு மக்களுக்கு செய்தியொன்றும் விடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு புறம் கோவிட் பெருந்தொற்றின் நவீன பிறழ்வுகள் நாட்டில் பெருகி வருகின்றன. மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டுள்ளன. விலைவாசி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. சாதாரண மக்களால் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்தத் தேவையான வருவாயை பெற முடியாத நிலை உருவாகி வருகிறது.

உற்பத்தித் துறைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களையும் ஏனைய உள்ளீடுகளையும் இறக்குமதி செய்வதில் சிக்கல்களை எதிர்கொள்வதாக தொழிற்றுறைத் தகவல்கள் கூறுகின்றன. நிதி நடவடிக்கைகள் டொலர் நெருக்கடி காரணமாக தினசரி சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. நாட்டில் மின்சாரத் துண்டிப்புகள் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டும் அறிவிக்கப்படாமலும் நடைபெறுகின்றன.

ஒரு இறுக்கமான பொருளாதார சூழலில் நாடும் அதன் மக்களும் பயணிப்பது அனுபவரீதியாக ஒவ்வொரு குடிமகனுக்கும் தெரிகிறது. அரசியல்வாதிகளுக்கு அது தெரிகிறதா இல்லையா என்பது தான் தெரியாத ஒன்றாகக் காணப்படுகிறது.

1948 இல் இலங்கை பிரித்தானியாவிடமிருந்து அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டபோது அப்போது நிலவிய அளவு கோல்களின் அடிப்படையில் ஆசியாவிலேயே வளமான நாடுகளில் ஒன்றாக இலங்கையை அடையாளம் காட்டினார்கள். பிரித்தானிய சாம்ராச்சியத்தின் கீழிருந்த நாடுகள் பலவற்றின் மத்தியில் சிறப்புச் சலுகைகளை பெற்று நல்ல பிள்ளையாக நடந்து கொண்ட நாடாக இலங்கை இனங் காணப்பட்டிருந்தது.

அன்றைய அமைச்சரவையில் அங்கம் வகித்த தமிழர்களான ஜி.ஜி. பொன்னம்பலம், சி. சிற்றம்பலம் மற்றும் சி. சுந்தரலிங்கம், ஜே.ஆர். மற்றும் டட்லியையும் காணலாம்.

பிரித்தானியாவில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் ஏற்பட்ட அபிவிருத்திகள் உடனடியாகவே இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையின் சனநாயக ஆட்சி முறைமை, அதன் அடிநாதமாகிய மக்களின் வாக்குரிமை, ரோமன் டச்சு நீதிப்பொறிமுறை, நாட்டின் நிருவாகக் கட்டமைப்புகள், பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான உட்கட்டமைப்புகள் போன்ற ஒரு நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் தன்னை கட்டமைத்து வளர்த்துக்கொள்ளத் தேவையான முன்நிபந்தனைகள் அத்தனையையும் ஒருங்கே பூர்த்தி செய்து கொண்டிருந்த ஒரு நாடாக இலங்கையை நாம் தயக்கமின்றி அடையாளம் காட்ட முடியும்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது பற்றி பிரித்தானியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் மீது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இலங்கையின் அப்போதைய பொருளாதார நிலைமைகள் குறிப்பாக அந்நியச் செலாவணி நிலைமைகள் பிரித்தானியாவை விட சிறப்பாக இருந்ததாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்துடன் இலங்கை சுயமாக ஆட்சிபுரியத் தகுதியான கட்டமைப்புகளையும் மக்களையும் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தனர். ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் வாண்மை பற்றியும் ஆங்கிலமொழிப் புலமை பற்றியும் சிலாகித்துப் பேசியிருந்ததுடன் அவர்களை பிரித்தானிய சாம்ராச்சியத்தின் நிர்வாகத்துடன் இணைத்துக்கொள்வது பற்றியும் ஆலோசித்திருந்தனர். அத்துடன் இலங்கை இனரீதியில் பிளவுறக்கூடிய அபாயம் பற்றியும் சிங்களவர்கள் தமிழர்களை ஆட்சியதிகாரத்தில் இணைத்துக் கொள்ளாவிட்டால் ஏற்படக்கூடிய அபாய நிலை குறித்தும் எச்சரிக்கையையும் விடுத்திருந்தனர்.

எனவே பிரித்தானியர்களின் பிரித்தாளும் தந்திரத்தால் இலங்கையில் இனப் பிரச்சினை ஏற்பட்டதாகக் கூறுவது மிகப்பெரிய பொய்யாகும். ஆங்கில மொழிப்புலமையுள்ள வாசகர்கள் பிரித்தானியப் பாராளுமன்ற ஹான்சாரட் குறிப்புகளை இணையவாயிலாகத் தேடினால் இலத்திரனியல் பதிவுகளை தரவிரக்கம் செய்து செய்து வாசித்துப்பார்க்கலாம்.

> **'இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது பற்றி பிரித்தானியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் மீது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இலங்கையின் அப்போதைய பொருளாதார நிலைமைகள் குறிப்பாக அந்நியச் செலாவணி நிலைமைகள் பிரித்தானியாவை விட சிறப்பாக இருந்ததாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்'**

> **"1953இல் உலக வங்கியானது இலங்கை பொருளாதாரத்தை அக்குவேறு ஆணிவேறாக ஆய்வு செய்து ஒரு அகராதியின் பருமனில் வெளியிட்ட வெகு விபரமான ஆய்வறிக்கையில் இலங்கை தனது பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான போதியளவு நிதிவளத்தைக் கொண்டிருப்பதாகவும் ஆகவே அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் இலங்கைக்கு நிதி நெருக்கடிகள் இல்லை எனவும் குறிப்பிட்டிருந்தது'**

எல்லாவற்றுக்கும் மேலாக பிரித்தானியர் இலங்கையை விட்டுச் செல்லும் போது இங்கிருந்து எல்லாவற்றையும் வாரிச்சுருட்டிக் கொண்டுபோய்விட்டதாகப்பலரும்கதையளக்கின்றனர். உண்மையில் சுதந்திர இலங்கையின் அபிவிருத்தி நிதித்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான பணத்தையும் பிரித்தானியர்கள் விட்டுச் சென்றிருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

மீண்டுமொரு பனிப்போருக்கு தயாராகிறதா ரஷ்யா?

கடந்த ஆறு வாரங்களாக சர்வதேச அரசியலின் முழுக்கவனத்தையும் ஈர்த்ததாக ரஷ்ய உக்ரைன் விவகாரத்தை மையப்படுத்தி எழுந்துள்ள கொதிநிலை அமைந்தது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள பல ஆய்வாளர்கள், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனின் முழுமையாக அல்லது ஒரு பகுதியிலாயினும் ரஷ்ய இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொள்வார் என்ற முடிவுக்குன் சிந்திக்கின்றார்கள். மறுமுனையில் மேலும் சிலர், உக்ரைன் மீதான படையெடுப்பு இப்போது எல்லைக்கு அருகே ரஷ்ய துருப்புக்களின் நகர்வுகளின் விளைவாகவே இருக்கலாமென உறுதியாக உள்ளனர். எனினும் ரஷ்ய இராணுவம் உக்ரேனில் ஒரு புதிய ஒழுங்கை நிறுவ முயற்சிக்கின்றது என்பதில் பரவலாக அனைவரிடமும் ஒரேவிதமான நம்பிக்கை காணப்படுகிறது. இக்கட்டுரையும் ரஷ்ய உக்ரைன் விவகாரத்தின் அண்மைய களநிலைமைகளின் தன்மைகளை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய உக்ரைன் விவகாரத்தின் நேரடி பங்குதாரர்களாக ஐரோப்பிய நாடுகளே காணப்படுகின்றன. ரஷ்ய உக்ரைன் விவகாரம் பெரும் மோதலாக பரிணமிக்குமாயின் அதன் உடனடி அபத்தங்களை எதிர்கொள்பவர்களாக ஐரோப்பியர்களே காணப்படுகிறார்கள். இதனடிப்படையிலேயே, பதற்றத்தைத் தணிக்கும் முயற்சிகளில் ஐரோப்பிய தலைவர்கள் களமிறங்கியுள்ளனர். அதன் ஒரு பகுதியாக டான்பாஸ் பிராந்தியத்தின் நிலையை முன்னேற்ற முயற்சிப்பதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ரஷ்ய மற்றும் உக்ரைன் தலைவர்களுடன் பெப்ரவரி 03 அன்று தனித்தனியாக நிகழ்நிலை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். மேலும், விரைவில் மக்ரோன் மாஸ்கோ சென்று புடினை சந்தித்து உரையாட உள்ளதாகவும் செய்திப்பரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஜனவரி 31அன்று பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் புடினுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டுள்ளார். குறித்த உரையாடலில், உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு எண்ணம் துயரமான தவறான கணக்கீடாக இருக்கும் என்று புடினிடம் ஜோன்சன் கூறியுள்ளதாக பிரித்தானிய பிரதம அலுவலகம் தெரிவித்துள்ளது. மேலும், போலந்து ஜனாதிபதி டுடா குளிர்கால ஒலிம்பிக்கின் தொடக்க விழாவில் கலந்துகொள்ள சீனா செல்வதுடன் அங்கு வருகை தரும் புடினுடன் சந்திப்பை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் ரஷ்யா உக்ரைன் விவகாரத்தில் அதீத தலையீட்டை வழங்குகின்ற போதிலும் ஐரோப்பிய பரப்பில் இவ்விடயத்தின் ஈடுபாடு தொடர்பில் இருவேறுபட்ட எண்ணங்கள் காணப்படுகின்றமை அவர்களது உரையாடல்களூடாக புலப்படுகிறது. குறிப்பாக, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகள் ரஷ்யாவுடன் இணக்கமாக செல்லும் வகையிலேயே தமது உரையாடல்களை முன்னகர்த்தி செல்கின்றார்கள். இதன் பின்னணியில் அந்நாடுகளுக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான பொருளாதார மற்றும் எரிவாயு கொள்முதல் தொடர்புகள் இறுக்கமான பிணைப்பை வழங்குகின்றது. எனினும் மறுதலையாய் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியுள்ள பிரித்தானியா அமெரிக்காவின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் ரஷ்யாவுடன் இறுக்கமான நிலைப்பாட்டில் உள்ளது. இவ்வாறான மாறுபட்ட எண்ணங்களின் பிரதிபலிப்பினுள் ஐரோப்பிய நாடுகள் காணப்படுவதனால், ரஷ்ய, உக்ரைன் பதற்றத்தை தணிக்கும் ஐரோப்பாவின் திறன் கேள்விக்குட்படுத்தப்படுகிறது.

பதட்டங்களை தணிக்க மேற்கொள்ளும் முயற்சிகளின் தோல்வி ரஷ்ய, உக்ரைன் விவகாரத்தின் கொதிநிலையே அதிகரித்து கொண்டு செல்கிறது. அதில் ரஷ்யாவின் பலம் ஓங்குவதனையே அவதானிக்கக்கூடியதாகவும் உள்ளது. இதனையே ரஷ்ய, உக்ரைன் விவகாரத்தை மையப்படுத்திய அண்மைக்கால செய்திகளும் உறுதி செய்கின்றது. அதனை நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகும்.

முதலாவது, ரஷ்யா மற்றும் நேட்டோ தொடர்ச்சியாக கிழக்கு ஐரோப்பிய பகுதியில் இராணுவ மேலாதிக்கத்தை அதிகப்படுத்தி வருகிறது. குறிப்பாக ரஷ்ய உக்ரேனிய எல்லை மற்றும் அண்டை நாடான பெலாரஸில் அதிக துருப்புக்கள் மற்றும் இராணுவ சாதனங்களை குவித்துள்ளது. மறுதளத்தில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளின் பிரசன்னமும் கிழக்கு ஐரோப்பா பகுதிகளில் அதிகரிக்கப்படுகிறது. ரஷ்யா கடந்த பெப்ரவரி 03அன்று அமெரிக்காவை கிழக்கு ஐரோப்பாவில் கூடுதல் துருப்புக்களை அனுப்பியதற்காக கண்டனம் செய்தது. அதாவது, இந்த நடவடிக்கை 'பதற்றங்களைத் தூண்டும்' நோக்கம் கொண்டது என்று கூறியது. அமெரிக்க அதிகாரிகளும், செயற்கைக்கோள் படங்களும் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுப்பு அச்சுறுத்தலை மேற்கொள்ளும் வகையிலான தனது பெரிய அளவிலான இராணுவப் படைகளை உருவாக்குவதை குறைக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது. இருதரப்பும் ஆயுதப் பிரசன்னத்தை அதிகரித்தாலும் ரஷ்யாவின் புவிசார் அரசியல் பிராந்தியம் என்ற ரீதியில் ரஷ்யாவின் ஆதிக்கம் உயரளவிலேயே காணப்படுகிறது. டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் சுமார் 130,000 துருப்புக்களை உள்ளடக்கிய சுமார் 80 பட்டாலியன் தந்திரோபாயக் குழுக்களின் ரஷ்யாவின் உருவாக்கம் உக்ரேனுக்கு ஒரு ஆழமான அச்சுறுத்தலைப் பிரதிபலிக்கிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. வான்வழி இராணுவப் பிரிவுகளின் வெளிப்படையான இருப்பு மற்றும் நீரிலும் நிலத்திலும் பயன்படும் ஆயுத சொத்துக்கள் எந்தவொரு இராணுவத் தாக்குதலும் எவ்வளவு பன்முகத்தன்மை கொண்டதாக மாறும் என்பதைக் குறிக்கிறது. இது ரஷ்யா உக்ரைனின் ஒழுங்கை மீளக்கட்டமைப்பதில் உறுதியாக உள்ளது என்பதையே வெளிப்படுத்துகிறது.

இரண்டாவது, கிழக்கு ஐரோப்பாவிலிருந்து நேட்டோவின் வெளியேற்றம் தொடர்பிலான புடினின் முடிவில் எவ்வித தளர்ச்சியையும் காண இயலாத சூழல் காணப்படுகிறது. எனவே, நேட்டோ விரிவாக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது போன்ற பிரச்சினைகளில் மேற்கு நாடுகளிடமிருந்து சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கான ரஷ்யாவின் கோரிக்கைகளைப் பொருட்படுத்தாமல், எவ்வித இராஜீக முயற்சிகளும் அச்சுறுத்தல்களும் ரஷ்சியாவைத் தடுக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மேற்கத்திய நாடுகள் அனுமானமாக என்ன உத்தரவாதத்தை வழங்கினாலும், அது புடின் ஆட்சிக்கு போதுமானதாக இருக்காது. டிசம்பர் 21, 2021அன்று ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சக வாரியத்தின் ஒரு நீடிக்கப்பட்ட கூட்டத்தில், மேற்கத்திய நாடுகள் ஒப்பந்தங்களில் இருந்து எளிதில் விலகுவதால் எழுதப்பட்ட மேற்கத்திய உறுதிமொழிகள் கூட எதற்கும் உத்தரவாதம் அளிக்காது என்று புடின் கூறினார்.

மூன்றாவது, ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே ஒரு போரின் கடுமையான வாய்ப்பை எதிர்கொண்டுள்ள மேற்கத்திய ஊடகங்கள், புடின் உக்ரேனில் என்ன விரும்புகிறார் என்ற கேள்வியில் அவரது பகுத்தறிவை யாராலும் புரிந்து கொள்ள முடியாது என்ற நிலையில் பிளவுபட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளில், புடினின் மற்றும் ரஷ்யாவின் தன்மை அதன் சுய உருவத்துடன் வெகுவாக மாறிவிட்டது. முந்தைய ஆண்டுகளில், புடின் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் விரோதமான வீரர்களால் சூழப்பட்ட புவிசார் அரசியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய அரசின் தலைவராக செயல்பட்டார். புவிசார் அரசியல் நீதியைக் கோரும் பாதிக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட தேசத்தின் பங்கை ரஷ்யா வகித்தது. 2014இல் கிரிமியாவை இணைத்த போதும், மேற்கத்திய நாடுகள் அதன் விவகாரங்களில் இருந்து விலகி இருக்கும்போது அதன் நன்மையைப் பெறுவதற்கு அது எப்போதாவது துணியலாம். ஆனால் அது அதன் நகர்வுகளில் வெளிப்படையான தற்காப்பு தர்க்கத்தை நம்பியிருந்தது. 2018இல், எல்லாம் மாறியது. சிரியாவில் ரஷ்யாவின் இராணுவ வெற்றியின் புத்துணர்வால், மத்திய ஆசியாவில் அதன் தனித்துவமான பங்கு, ஆபிரிக்காவில் அதிகரித்த இருப்பு மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக அதன் புதிதாக உருவாக்கப்பட்ட நவீனரக ஆயுதங்கள் புடின் ஒரு ஒடுக்கப்பட்ட வீரரைப் போன்ற உணர்விலிருந்து ரஷ்சியாவின் பாரம்பரிய செல்வாக்கு மண்டலத்திற்கு அப்பால் தாக்குதல் நடத்தக்கூடிய ஒருவராக மாறினார். ரஷ்யாவின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் ரஷ்ய துணை வெளியுறவு மந்திரி செர்ஜி ரியாப்கோவின் வார்த்தைகளில், 'இரும்புத்தடுப்பு, நீர்ப்புகா, குண்டு துளைக்காத, சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட உத்தரவாதங்கள் இனி புவிசார் அரசியல் பாதிப்பிலிருந்து உருவாகவில்லை, மாறாக, விதிகளை மீண்டும் எழுதுவதற்கு ரஷ்யாவின் வரலாற்று ரீதியாக நியாயப்படுத்தப்பட்ட முழு அளவிலான உரிமையில் நம்பிக்கை இருந்து வருகிறது. அது மேற்குடன் இணைந்து அல்லது மேற்கு இல்லாமல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)

ஐ எஸ்சின் இரண்டாவது தலைவரையும் தீர்த்துக் கட்டிய அமெரிக்கா

அருள் சத்தியநாதன்

பயங்கரவாதச் செயல்கள் என்ற வார்த்தைப் பிரயோகம் எழுபதுகளில் தான் உலகெங்கும் அடிபட ஆரம்பித்தது. இஸ்ரேலை அழித்துவிட வேண்டும்; பாலஸ்தீனத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற வெறியுடன் ஆரம்பிக்கப்பட்ட பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) தன் எதிரிகளாக இஸ்ரேலையும் அமெரிக்காவையுமே கருதி செயல்பட்டது. பயணிகள் விமானங்களைக் கடத்தி பயணிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பதன் மூலம் தனது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதை முதன்முதலாக செயல்வடிவத்தில் காட்டிய இயக்கம் யஸர் அரபாத்தினால் உருவாக்கப்பட்ட பாலஸ்தீன விடுதலை அமைப்பு. விமானங்கள் கடத்தப்படுவது, கமாண்டோக்கள் அதிரடி தாக்குதல் நடத்தி பயணிகளை மீட்பது அல்லது பெருமளவு பயணிகள் மரணிப்பது என்பது எழுபது எண்பதுகளில் ஆங்காங்கே அரங்கேறும் சம்பவங்களாகின. இந்த சூட்டோடு சூடாக இலங்கையரான சேபால ஏக்கநாயக்க இத்தாலிய விமானமொன்றைக் கடத்தி சிங்கள சமூகத்தின் மத்தியில் வீரரான கதையும் இலங்கையில் நிகழ்ந்தது.

பாலஸ்தீன விடுதலை அமைப்பைத் தொடர்ந்து பல தீவிரவாத அமைப்புகள் மத்திய கிழக்கை மையப்படுத்தியதாகவும் இஸ்ரேலையும் அமெரிக்காவையும் குறிவைத்ததாகவும் தோன்றின. விமானங்களை வெடிகுண்டாக ஏவி மூவாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கர்களைக் கொன்றொழித்த ஒசாமா பின்லேடனின் அல் கைதாவானாலும் சரி விடுதலைப் புலிகளானாலும் சரி இந்த அமைப்புகளுக்கெல்லாம் ஒரு அரசியல் நோக்கம் இருந்தது. அந் நோக்கங்கள் மக்களுடன் சம்பந்தப்பட்டவையாகவும் இருந்தன. அவை சரியா, தவறா என்பது வேறு விஷயம்.

தகர்க்கப்பட்ட ஹெலி

ஆனால் எந்தவொரு நோக்கமுமற்ற ஒரு பயங்கரவாத அமைப்பொன்று தோற்றம் பெற்று அசுர வளர்ச்சியும் பெற்றதென்றால் அது ஐஎஸ் அமைப்பாகத்தான் இருக்க வேண்டும். அமெரிக்காவையும் இஸ்ரேவேலையும் எதிரிகளாக இலக்கு வைத்த அமைப்பு என அறியப்பட்ட போதிலும் அவ்விரு நாடுகளுக்கும் எந்த சேதத்தையும் ஐ.எஸ்.ஐ.எஸ் விளைவிக்கவில்லை. இதனால் இவ்விரு நாடுகளும் தான் இவ்வியக்கத்தை உருவாக்கின என்றொரு விஷயமும் உள்ளது. இஸ்லாமிய நாடுகளை அழித்து தனியொரு இஸ்லாமிய நாடாக கலிபா இராச்சியமொன்றை மத்திய கிழக்கில் உருவாக்குவோம் எனக் கிளம்பிய ஐ.எஸ். மட்டுமல்ல; தலிபான்கள், அல் கைதா என்பன உருவாவதற்கும் அமெரிக்காவே துணை நின்றது. ஒரு காரியத்துக்காக இவ்வாறான அமைப்புகளை உருவாக்குவதும் பின்னர் அழிப்பதும் அமெரிக்காவுக்கு வாடிக்கை. ஐ.எஸ். ஈவு இரக்கமற்ற மிகக் கொடூரமான இயக்கம். அது மிகக் கடுமையான இஸ்லாமிய கோட்பாடுகளை முன்வைத்து இயங்கிய இயக்கம். அது மத்திய கிழக்கு இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டியவை என நம்பியது. இந்நிலையில் தான் அவ்வியக்கத்தை ஒடுக்காவிட்டால் மத்திய கிழக்கின் பாரிய எண்ணெய் வயல்கள் ஐ.எஸ்.வசம் சென்றுவிடும் எனக் கருதிய அமெரிக்கா ஐ.எஸ். மீது கடும் தாக்குதல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆரம்பித்தது. இறுதியாக மத்திய கிழக்கில் அதன் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது.

9/11தாக்குதலின் பின்னர் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படையெடுத்திருந்தாலும் பின்லேடனை கொல்லும் தன் தேடலை அமெரிக்கா கைவிடவே இல்லை. பின்லேடனை இறுதியாக பாகிஸ்தான் வீடென்றில் அடையாளம் கண்டு அவரை சுட்டுக்கொன்று கடலில் எறிந்தது. அதன் பின்னர் ஐ எஸ் ஐ எஸ்சின் முது கெலும்பை முறித்த பின்னரும் அதன் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதியை விட்டு வைக்கக் கூடாது என்ற கொள்கையில் தொய்வு ஏற்படவிடாது பின் தொடர்ந்த அமெரிக்க, 2019 இல் வட மேற்கு சிரியாவில் இட்லிப் பகுதியில் அவரைக் கண்டு பிடித்தது. தப்ப வழியில்லாத நிலையில் பக்தாதி தற்கொலை செய்து கொண்டார். தற்போது பக்தாதியின் இடத்தைப் பிடித்த அபு இப்ராஹிம் அல் –ஹஷிமி அல் குரேஷியை குறிவைத்து பின் தொடர்ந்த அமெரிக்க விசேட அதிரடிப்படை அவரையும் தற்கொலை செய்ய வைத்திருக்கிறது.

தன் வெள்ளை மாளிகை ரூஸ்வெல்ட் அறையில் இருந்து இச் செய்தியை உவப்புடன் அறிவித்த ஜனாதிபதி ஜோ பைடன், 'யுத்த களத்தில் இருந்து அபு ஹிப்ராஹிமை நாம் அப்புறப்படுத்தி விட்டோம்' என்பதாக அவரது மரணத்தை குறிப்பிட்டார். 'அமெரிக்காவின் கை எவ்வளவுக்கு நீளும் என்பதையும் உலகின் எந்த மூலையில் ஒளிந்தாலும் அவர்களை தேடிப்பிடித்து அழிக்கும் வல்லமை அமெரிக்காவுக்கு உண்டு என்பதற்கும் இந்த நடவடிக்கை ஒரு உதாரணம்' என்றும் அவர் தன் உரையில் பெருமையுடன் குறிப்பிட்டார்.

அபு இப்ராஹிம் வாழ்ந்த வீடு மூன்று மாடிகளைக் கொண்டது. இது வட மேற்கு சிரியாவின் இட்லிப் மாகாணத்தின் ஒரு ஒதுக்குப் புறமான கிராமத்தில் தனி வீடாக அமைந்துள்ளது. இங்கே மேல் மாடியில் தன் மனைவிமார் பிள்ளைகளுடன் அவர் வசித்து வந்தார். இங்கே வசிப்பவர்தான் ஐ.எஸ்.சின் தலைவர் என்பதை அமெரிக்க புலனாய்வு உறுதிப்படுத்திக் கொண்டதும் எப்படி அவரைப் பிடிக்கலாம் அல்லது அழிக்கலாம் என்பது தொடர்பான திட்டங்கள் வகுக்கப்படலாயின.

கீழ் தளத்தில் வசிக்கும் குடும்பத்துக்கும் அபு இப்ராஹிமுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை என்பது கண்டறியப்பட்டது. உலகில் மிக அதிகமாகத் தேடப்படும் நபர் இவர்தான் என்பது கீழ்த்தள குடும்பத்துக்குத் தெரியாது. எனவே இவ் வீட்டின் மீது விமானத் தாக்குதல் நடத்தும் யோசனையை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கைவிட்டனர். ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி அதிரடிப்படையினரை இறக்குவது, இறங்கிய வீரர்கள் வீட்டை சூழ்ந்து கொள்வது; சில வீரர்கள் கீழ்த்தள வீட்டுக்குள் நுழைந்து அங்கிருப்பவர்களை அப்புறப்படுத்துவது என்று திட்டம் வகுக்கப்பட்டது. அதுவரை அவ் வீரர்களுக்கு துப்பாக்கி ஏந்திய ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பு வழங்குவது என்றும் முடிவானது. அமெரிக்கா கண்மூடித்தனமாகத்தாக்கி அப்பாவிளைக் கொன்று விட்டது என்ற பெயர் வந்து விடக் கூடாது என்பதற்காகவே இப்படி முடிவெடுக்கப்பட்டதாக பென்டகன் தெரிவித்தது.

அபு இப்ராஹீம்

மூன்றாம் திகதி நள்ளிரவு சுமார் 50 அமெரிக்க விசேஷ அதிரடிப்படையினர் விசேட ஆயுதங்களுடன் சிரியாவுக்கு அண்மித்த ஒரு தளத்தில் இருந்து புறப்பட்டனர். அவர்கள் ஹெலிகளில் புறப்பட, அவர்களுடன் ஆயுதமேந்திய ட்ரோன்கள், தாக்குதல் ஜெட் விமானங்களும், புறப்பட்டன. முதலுதவி பிரிவும் அவர்களுடன் சென்றது. அரை மணித்தியாலயத்துக்குள் ஒபரேஷனை முடித்துவிடுவது என்றும் முடிந்தால் உயிருடன் பிடிப்பது அல்லது கொன்றுவிடுவது என்பதும் அவர்களுக்கு பிறப்பிக்கப்பட உத்தரவு. முழுவீட்டையும் தாக்கி நிர்மூலமாக்கவும் உத்தரவு இருந்தது. ஏற்கனவே பக்தாதியை அழிக்கும் திட்டத்துடன் ஏறக்குறைய ஒத்துப் போகும் வகையிலேயே இத்திட்டமும் வகுக்கப்பட்டிருந்தது. மூன்றாம் திகதி இரவு தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணம், அது ஒரு அமாவாசை நாள்.

பக்தாதி மறைந்திருந்த இட்லிப் பிரதேசத்தில் இருந்து கொஞ்ச தூரத்தில்தான் அபு இப்ராஹீமின் வீடும் அமைந்திருந்தது. அமெரிக்க உளவாளிகள் தொடர்ச்சியாக நடத்திய இரகசிய தேடுதல்களில் அப்பகுதியில் ஒரு முக்கியஸ்தர் வசிப்பது தெரியவந்தது. தொடர்ச்சியான தேடுதல்களில் அந் நபர் ஐ எஸ் தலைவர் இப்ராஹிமின் உருவத்துடன் ஒத்துப் போவதை அறிந்து கொண்டார்கள். இதை உறுதிப்படுத்தும் வகையில் புலனாய்வாளர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்திருப்பார்கள். ஆனால் அந்த விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. ஒரு கூரியர் அந்த வீட்டுக்கு அவ்வப்போது சென்று வருவதை புலனாய்வாளர்கள் கவனித்திருக்கிறார்கள். இதன் மூலம் அந்த வீட்டில் வசிப்பவர் அபு இப்ராஹீம் அல் ஹஷிமி அல்குரேஷி என்பது ருசுவானது. அந்த கூரியரின் நடமாட்டம் அவர் ஐ எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்தான் என்பதை நிரூபிகக போதுமானதாக இருந்தது.

இதையடுத்தே தாக்குதலை நடத்தும் உத்தரவை ஜோபைடன் பிறப்பித்தார். முதல் வேலையாக கமாண்டோக்கள் கீழ்தளத்தில் வசித்த பத்துப்பேரை அங்கிருந்து ஒரு பாதுகாப்பான தொலைவுக்கு நகர்த்தினார். அவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடக்கம்.

வீட்டை படையணி சூழ்ந்து கொண்டதும் ஒலிபெருக்கி மூலம் பத்து நிமிட கால அவகாசத்தில் சரணடைய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கு பதிலாக அங்கிருந்த ஐஎஸ் பாதுகாவலர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். கமாண்டோக்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் இடையே கடும் துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்தது.

அக்கம் பக்கத்தில் வசித்தவர்கள் இச்சம்பவம் பற்றி மறுநாள் விவரித்திருந்தார்கள். விமானங்கள், ஹெலிகள் பறக்கும் சத்தம் கேட்டது. பின்னர் கதைக்கும் சத்தம் கேட்டது. கொஞ்ச நேரத்தில் துப்பாக்கிகள் முழங்கின. இச் சண்டையின் போது ஏவுகணைகள் வெடிக்கும் சத்தமும் கேட்டது.பெரியதொரு வெடிக்கும் ஓசையும் கேட்டது என்று அயலவர்கள் தமது அனுபவத்தை கூறியுள்ளனர்.

மொத்தம் மூன்று மணித்தியாலம் இந்த ஒபரேஷன் நீடித்திருந்தது. அமெரிக்கத் தரப்பில் மரணம் நிகழவில்லை. ஆனால் ஒரு ஹெலியில் இயந்திரக் கோளாறு ஏற்படவே அது தரையிறக்கப்பட்டது.அதில் இருந்தவர்கள் ஏனைய ஹெலிகளில் ஏறிக் கொண்ட பின்னர் அந்த ஹெலி தாக்கி அழிக்கப்பட்டது. மூன்று மணித்தியாலத்தின் பின்னர் அமெரிக்க படையினர் தமது தளத்துக்கு திரும்பினர்.

தான் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதையும் தப்பிக்க மார்க்கம் இல்லை என்பதையும் அறிந்த ஐ எஸ் தலைவர் தானும் தன் குடும்பத்தினரும் உயிரை மாய்த்துக் கொள்வதே ஒரே வழி என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். அபு ஹிப்ராஹிமுடன் நான்கு பெண்களும் ஆறு குழந்தைகளுமாக மொத்தம் 13பேர் மரணத்தைத் தழுவியுள்ளனர். வீழ்ச்சி கண்டிருந்த ஐ எஸ் மீண்டும் வலிமை பெற்று இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றும் வகையில் திட்டங்களைத்தீட்டி வந்த நிலையிலேயே அந்த அமைப்பு தன் தலைவரை இழந்திருக்கிறது. ஐ எஸ்சுக்கு அது ஒரு பெரிய பின்னடைவு. இப்ராஹிமின் இடத்துக்கு இன்னொருவர் நியமிக்கப்படுவார். ஆனால் குறுகிய காலத்துக்குள் இரண்டு தலைவர்களை இழந்திருக்கும் ஐ எஸ் அமைப்பு தன் பழைய வலிமையை அடைவதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம் அல்லது சிதறியும் போகலாம்.

ஐஎஸ் தலைதூக்க அதிக காலம் பிடிக்கும் அது சிதறுண்டும் போகலாம்

சடலங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன

முன்னேஸ்வரத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ பிரத்யங்கிரா அம்மன் காவடிச்சிந்து

அலைமுகிலன்

பிரியமுடன் வணங்கி நின்றால்!
பிணிகளை தீர்க்கும் தாயவளே!
பரிவோடு பணிந்து வந்தால்!
பாவங்களை போக்கும் உத்தமியே!
உலகில் வணங்கும் அடியார்களை
உறவோடு காக்கின்ற உமையவளே!
முத்தாக அமைந்த முன்னேஸ்வரத்திலே
முழுமதி போல்வீற்று அருளுபவனே!
அனுதினமும் உனைநாடி வந்தாளே!
அன்பு மழை பொழிபவளே!
கருணையுடன் காத்து அணைப்பவளே!
கண் இமைபோல் காப்பவளே!
உருக் கொண்டு உருகி அருளுபவளே!
உணர்வுடன் உறவன்பு தருபவளே!
முத்தல சிறப்புடன் முகிர்ந்தவளே!
முன்னம் பதியில் ஆட்சிபுரிபவளே!
இணங்கி வந்தோம் உன்காலடியம்மா
இன்னல்கள் தீர்த்து இன்பம் தாராயம்மா
பரந்து வரும் கொடிய கொரனாவை
கொண்டொ ழித்து காத்து அருளம்மா!
இரக்க மில்லா இக் கொடியநோயை
இன்றே அழித்து காத்திடும்மா!
முன்னோர்க்குமுன் தோன்றி தலத்தினிலே
இன்னலை இன்றே தீருமம்மா
பரிவோடு பணிந்தோர்க்குபாசம் தருபவளே
பக்தர்களை காத்து அணைப்பவளே
பிரிவோடு உன்தலம் வந்தோமம்மா
கருணையோடு கண்ணிமையாக காத்திரும்மா
உரிமையோடு குடி கொண்டவனே,...!
உறவோடு உன்நாவில் நின்றோமம்மா
விருப்போடு முன்பதியில் வீற்றிருப்பவளே
ஒப்பாரும் மிக்காரும் தாயவளே!
தப்பாமல் தாயன்பை தந்திடுவாயம்மா!
எப்போதும் உன்நாமம் எம்நாவில்
உருகி மனம் உவகைகொள்ளுதம்மா
இப்பவரும் எம்மின இன்னல்களை
இன்றே ஒழித்து காத்திடுவாயம்மா
முப்பேறு பெயர் பெற்ற முன்தலத்திலே!
மூலவராய் நின்று அருள்தாரம்மா
ஒமிக்கிரா என்றும் கொடிய நோயம்மா
ஒழித்திடுவாய் எம்மை காத்திடுவாய்
பரிதவிக்கும் அப்பாவி பக்தர்களை
பரிவோடு அணைத்து அருளும்மா
உவகை உன்பாதமலர் நாடியம்மா
உண்மை அன்பை தந்திடுவாயம்மா
முன்தோன்றிய முன் ஸ்வரத்திலேயம்மா
நின்புகழ் நிரந்தரம்மா ஒலிக்கிதம்மா
உற்றதோர் தெய்வமாகி விட்டாய்தாயே!
உறவன்பு பூண்டு திருவடி வந்தோம்நாம்
ஏற்றதோர் உயர்வை ஏற்றிடுவாயம்மா
என்னாலும் உன்நாமம் உரைப்போமம்மா
கற்றோர் கவிமழை பொழிந்தாரம்மா
காலம் தோறும்பாடி மகிழ்வாரம்மா
வற்றாக வளம் பூண்ட முன்னம்பதியில்
வந்தோம் உன்திருவடி நாடியம்மா!
பார்போற்றும் பிரத்யங்கிரா தேவியம்மா
பத்தான பித்தாகி நின்றோமம்மா
ஊர் சிறக்க உத்தமியை வணங்கிவந்தால்
உள்ளமெல்லாம் உவகை கொள்ளுதம்மா!
சீர்காப்பாய என்று சிந்தனைகொண்டோமம்மா
சிறப்புக்கள் தந்து சிறந்தோங்கம்மா
ஏர் பிடித்து உழைத்துண்ணும் முன்பதியில்
ஓடி வந்தோம் புகழ் பாடிவந்தோமம்மா

பிரமிள் விருதும் நினைவுப் பேருரையும்

தமிழ் கவிஞர் பிரமிள் என அழைக்கப்படும் தர்மு சிவராம் நினைவாக கவிதை நூலுக்காக வழங்கப்படவிருக்கும் 'பிரமிள் விருது தொடர்பான அறிவிப்பும் நிபந்தனைகளும்.

★2018 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் விருது வழங்கல் 2019 ல் தொடர்ந்தது.

உலகளவிலான கொரோனா பேரிடர் காரணமாக 2020 இடம்பெறவில்லை இப்போட்டி 2020, 2021 இல் வெளிவந்த கவிதை நூல்களுக்காக (இரண்டு ஆண்டுகளையும் இணைத்து) நடாத்தப்படுகிறது.

உலகெங்கும் வாழும் தமிழ் கவிஞர்கள் அனைவரும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

இவ் விருதுக்காக கவிஞர்கள் 01012020 தொடக்கம் 31122021 வரையான இரண்டு வருட காலப் பகுதியில் வெளியிட்ட தமது கவிதை நூலை/நூல்களை சமர்ப்பிக்கலாம்.

போட்டிக்கு கவிதை நூலின் மூன்று (3) பிரதிகள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஒருவர் குறித்த காலப்பகுதியில் வெளியிட்ட எத்தனை கவிதை நூல்களையும் போட்டிக்கு அனுப்பலாம்.ஆனால் ஒவ்வொரு நூலிலும் தனித்தனியே மூன்று பிரதிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கவிஞர்கள் சார்பாக பதிப்பகங்களும் கவிதை நூல்களை விருது தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம். ஆனால் பரிசு கவிஞருக்கே வழங்கப்படும்.

போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் நூல்/நூல்கள் குறித்த 2020, 2021ஆகிய ஆண்டுகளில் முதல் பதிப்பு கண்ட நூலாக இருக்க வேண்டும்.

கவிதைகள் தமிழில் சொந்த படைப்பாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பு, பிற மொழி தழுவல், பல கவிஞர்களின் தொகுப்பாக இருக்கக்கூடாது.

போட்டி இறுதித் திகதி 10032022. இத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முடிவுகள் அனைத்தும் 15042022 அன்று அறிவிக்கப்படும்.

நூல்கள் வந்து சேரவேண்டிய தபால் முகவரி:

w.michael Collin, The Editor of Magudam, 90, Bar Road, Batticaloa, Sri Lanka. Phone: 0774338878 E.mail: magudammichael@gmail.com

தேசியக் கொடி ஏற்றுவோம்!

கல்லொளுவை பாரிஸ்

இலங்கைக் கொடியை ஏற்றுவோம் – நாம்
இலங்கைத் தாயைப் போற்றுவோம்
வீரத்துடன் கடமை ஆற்றுவோம் – நாம்
விண்ணுயர் புகழை ஈட்டுவோம்....!

விடுதலை வீரரைப் போற்றுவோம் – நாம்
வீணரைக் காலில் தூற்றிடுவோம்
கெடுதல் காரரை வீழ்த்திடுவோம் – நாம்
கேண்மை செய்வோரை வாழ்த்திடுவோம்...!

விண்கலங்கள் பல செய்திடுவோம் – நாம்
விண்ணிலவில் உலா வந்திடுவோம்
விண்வெளி வீதிகள் அமைந்திடுவோம் – நாம்
வீடுகள் அங்கே அமைத்திடுவோம்...!

பாலையிலும் பயிர் விளைத்திடுவோம் – நாம்
பாரினில் பஞ்சம் துடைத்திடுவோம்
நாளைய சரித்திரம் படைத்திடுவோம் – நாம்
நாளும் சாதனை புரிந்திடுவோம்...!

சுதந்திர வாழ்த்து

நல்லை அமிழ்தன்

மாங்கனித் தீவின்
மகிழ்ச்சி வாழ்த்து

பூங்கவி மொழிகளின்
புன்னகை வாழ்த்து

தங்கப் பூமியின்
வைர வாழ்த்து

தூங்காத உழைப்பின்
தூய வாழ்த்து

இருளைக் கலைத்தவர்களின்
வெளிச்ச வாழ்த்து

வறுமையை விரட்டியவர்களில்
வெளிச்ச வாழ்த்து

வறுமையை விரட்டியவர்களில்
வாசனை வாழ்த்து

சிங்கள தமிழ் இஸ்லாமியர்களின்
ஒற்றுமை வாழ்த்து

மகிழும் மனங்களின்
மதுர வாழ்த்து

சொந்தக் கால்களில்
சுதந்திரத்தை சுமக்கும்
இலங்கை வாழ்த்து

சுதந்திரம்

இணுவில் வாகீசன்

அந்நியர் கைகளில்
அகப்பட்ட திருநாட்டை
ஆண்டுகள் பல போரிட்டு
மீட்டனர் நம் தலைவர்கள்
மதவாதம் இல்லை
இனபேதம் இல்லை
இலங்கையராய் இணைந்தனர்
இலங்கையை பெற்றனர்
பெற்றதோர் சுதந்திரத்திற்கு
எழுபத்து நான்கு அகவை
இன்னும் பல நூற்றாண்டுகள்
இலங்கையராய் இணைவோம்
பெற்ற சுதந்திரம் பேணி
கொண்டாடி மகிழ்ந்திருக்கவே

போராடும் மகோன்னதங்கள்

இக்பால் அலி

முகவரிகளைத் தொலைத்தவர்களாய்
சுவாசிப்பதற்கு சுதந்திரக் காற்றுமின்றி
வீட்டுக் கைதியாய்
தாயின் கண்ணீரால் முகம்கழுவி
தாகம் தீர பருகி சுவைத்து
கள்ளம் படமின்றி கைதட்டி சிரித்து மகிழும்
அழகை படம்பிடித்த
என் கமரா அழுது புலம்புகிறது.

தாயின் கருவறையினுள்
தூக்குமாட்டி
தன் உயிரை மாய்த்திட
சற்றென
கயிறு திரிக்கத் தெரியாமல்
தவமிருந்து பெற்றெடுத்த ரத்தங்கள்
அ ஆ என்ற உயிரெழுத்திற்கும்
அம்மா, என்ற உச்சரிப்புக்கும்
உயிரொலி எழுப்ப முடியாமல்
நெஞ்சுருகி பரிதவிக்கும் அழகைப் படம்பித்த
என் கமரா அழுது புலம்புகிறது.

ஸ்மாட் போனில்
இனிமையாய் பேசி
மெதுவாக தொட்டுப் பார்த்து
தீர விளையாடி
ஸுமிலே பாடங்கள் படிக்கின்ற
கொள்ளை ஆசையெல்லாம் நீர்த்துப் போய்
பந்திக்கு வர முடியாமல்
போனில் தொடுகையெல்லாம் பழுதாகி
மரத்துப் போய்
கீழ் விழுந்து உடைந்து நொறுங்கி
அழுகின உடலின்
அழகைப் படம் பிடித்த
என் கமரா அழுது புலம்புகிறது

மழலைகள்
சின்னஞ் சிறிய
முச்சக்கர வண்டியில்
தத்தித் தாவிப் பிடித்து
வீடெங்கும் சுற்றி ஊர்வலமாய்
உலா வந்து
சுயமாய் நடை பயில
சக்தியின்றி
போராடும் மகோன்னதக் குழந்தைகள்
தாயின் கரங்களில் கொடி ஏந்தி
எழுந்து நடந்து வரும் அணிவகுப்பின்;
அழகைப் படம் பிடித்த
என் கமரா அழுது புலம்புகிறது

உன் அன்புக்கு அடிமை

சத்தார் எம் ஜாவித்

இரைக்கல்ல இனிதான பாசத்திற்காய்
இதயத்தில் இருக்கும்
இதயப் பறவையின்
இனிய ஞாபகம்
சூரியன் உதிக்கும் முன்பே
இதயத்தில் தூண்டில் போட்டு
கொழுவி விடுகின்றது
இரைக்கல்ல இனிதான
பாசத்திற்காய்
நற்பென்ற ஒளிக்கீற்றாய்
பாசமெனும் பனித்துளி
இதயத்தில் சிலிர்க்கின்றது
உன் நாமத்தை பார்க்கும் பேது
நீ மொட்டாகி பூவாகி
காயாகி கனியாகி
என் உள்ளத்தில் கணிந்து
ஊடுருவி விட்டாயே
தூரத்து விளக்கானாலும்
என் உள்ளத்தில் ஒரு தேவதையாக
நீ வலம் வருகின்றாயே
மனமும் விழிகளும்
உன் அன்புக்கு அடிமையாகி
ஏக்கத்தில் உலாவுகின்றது
அன்பே உனது ஒரு பதிவின்
வருகைக்காய்

காத்து கிடந்தேன்

அன்புடன் நதுநசி

படலைச் சத்தம்
கேட்கும் போது
கண்கள் திரும்பும்
படலையை பார்க்க...

இல்லையில்லை
அப்படி இருக்காது
அந்த படலையை
திறக்கும் அந்த...

அப்படித் தான்
இருக்க வேண்டும்
நேற்று அவள்
காற்றோடு பேசினாள்

இன்று வருவதாய்
தன் உயிரை பார்க்க

நிலா மங்கைக்கு பிறந்த நாள்

கலாபூஷணம் ஈழத்து நூன்

வானத்து நிலவுக்கு
மாதந்தோறும் பிறந்தநாள்
கொண்டாடுவது யாருமுண்டோ?
ஆனால்
பதினாலாவது நாளில்மட்டும்
பௌர்ணமிவிழா
இரவில் மட்டுமல்ல
பகலிலும் விழாதான்!

இனம், மதம், மொழி கடந்து
கலைகட்டும் பெருவிழா
அவரவர் விருப்பு படி
கொண்டாடி மகிழ்வுருகிறோம்
அவள் விடயத்தில்
வேறுபாடு இல்லவே இல்லை
பால் நிலவுக்கு யார்தான்
பாரபட்சம் காட்டுவரோ?

நிலா மங்கைக்கு மட்டும்
வருடத்தில் எத்தனை விழாக்கள்?
திங்கள் தோறும் விழாதான்
நிலவுக்கு பெயரும் திங்கள் தானே
கிழக்கில் பன்னிரு மாதமும்
திங்கள் தானே
பிறைநிலவே உனக்கெதற்கு
பிறந்த நாள் விழா?

மண்ணுக்கு மரியாதை

கலாபூஷணம்
"அக்கரைப்பற்று நஜ்மு"

மேகத்திரை உடைத்து
மலைமுகட்டின் மஞ்சம் தழுவி
கிளை நதியில் கலப்பதற்காய்
சீறிச் சினந்து புறப்பட்டது மழை நீர்
மலை உச்சியிலிருந்து புறப்பட்டாலும்
மண்ணைத் தொட்டதுமே
எப்படி மௌனித்து நகர்கிறது?
மலைநாட்டில்,
மழைக்குக் கூட தெரிகிறது
மரியாதை!
மலைபோல அகம் என்பதாலா
மலையகம் ஆனது?
மண்ணுக்கு மரியாதை!
அது,
மலையாக இருந்தாலும்
மழையாக இருந்தாலுமே!

நீங்களும் இணையலாமே!

எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா

உதவுவதில் உன்னதம்
சில மனிதர்கள்
உதவுவதற்கே பிறந்தவர்கள்
முகம் தெரியாத நபர்கள்!

தன் வியர்வைத் துளியில்
அடுத்த சந்ததியினருக்கு
அழகாய் அள்ளி வழங்கி
அரவணைக்கும் அன்புள்ளங்கள்!

நம் முல்லை மலர்களுக்கு
எழுது கருவிகள் வழங்கி
வாழ வழி வகுக்கும்
பரந்த மனதுடைய வள்ளல்கள்!

சில சிறந்தவர்கள்
இணை பாலமாக
மாணாக்கரை மாண்புமிக்கவரை
மகிழ்ச்சி பெறச் செய்திடுவர்!

கொடுப்பவரையும் பெறும்வரையும்
அழகாய் இணைத்து
பெறுபவரைக் கொடுப்பவராய் மாற்றும்
மகிமை மிக்கவர் நாம்!

இந்த ஏதாவதொரு பட்டியலில்
கல்விக் கனி வளர்க்க
அதன் ஆனந்தம் பருக
நீங்களும் இணையலாமே!

இது மனிதர்களின் தேசம்

பிரபு.ஐயாத்துரை
வேம்படி
வடமராட்சி கிழக்கு

இது மனிதர்களின் தேசம்
மனட்சாட்சி அடகு வைக்கப்படுகிறது
மானம் ரோசம் மறைகிறது
எது நடக்கக் கனவு கண்டோமோ
அது கனவாகவே மறைகிறது

உனக்கு வீரம் இருக்கு
உள்ளன்பில் காதலும் இருக்கு
உரசிட தீக் குச்சி தேவை
உண்மையை உனத்திட
பகவானும் குருச்சேத்திரமும் தேவை

இப்போது எண்ணங்கள் மாறி
இன்றைய சிந்தனை மட்டுமே
எப்போது மாறும் மனம்
பொதுவுடையாக

கட்டை விரல் பறிப்போர் கூடி
கலங்கும் ஏகலைவனாய்
சுற்றித் திரிவோர் பலர்
கண்ணெதிர் காண்கிறோம்

ஆச்சர்ய உலகமடா இது
அனைவரையும் புரிந்திட
ஆயுள் முடிந்திடும்
இதன் பின்
மறுபிறப்பு வேண்டாம்
மனிதராக
இந்த மாய தேசத்தில்

எனக்கென்ன தேவேண்டும்?

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்

கடவுளே
உனக்கென்ன வேண்டும்
எனக் கேட்டிடும்
சில மனிதர்கள்தான்
தேவை

அடர் மழையில்
நனைகையில்
ஆவி பறக்கும்
தேநீரைத் தரும்
சில தேவ தூதர்கள்தான்
தேவை

விடாது
அழுது ஓய்கையில்
இப்போது சரியா
எனக் கேட்டு
கண்ணீர் துடைக்கும்
சில கரங்கள்தான்
தேவை

தனிமைகளிலெல்லாம்
நானிருக்கிறேன்
எனவொலிக்கும்
கண்ணுக்குத் தெரியாததொரு
பெரும் அசரீரிதான்
தேவை

அவமானம் பிடுங்கித்தின்னும்
வார்த்தைகளை
கேட்க நேரிடுகையில்
ஓடி ஒழிந்திட
பெரும்காடுதான்
தேவை

இன்னுமென்ன தேவை

நானிருப்பதைச்
சொல்லிக்கொண்டிருக்க
சில சொற்கள்தான்
தேவை!

தோளாகும் தோழன்

"ஏரூர்க்கவி" எச்.எம்.எம்.றசீம்.

செல்வமாய்க் கிடைத்திடும்
சொல்லொன்னா நட்பவன்
செல்லமாய்ச் சிரித்திடும்
செவ்விதழ் வடிவானவன்

சொன்னதைச் செய்திடும்
நன்றி தவிர்ப்பவன்
சொல் மொழிந்திடும்
நாவினிலும் உயர்ந்தவன்

நேர்மை நிறைந்திடும்
நிமிர்ந்த நடையாளன்
நேர்த்தி தவறாதணிந்திடும்
நட்புக்கு ஆடையானவன்

உள்ளமதில் உரைந்திடும்
என்றும் உண்மையுடன்
கள்ளமது களைந்திடும்
எண்ணமதில் அன்பானவன்

உதிரமதில் உறைந்திடும்
தன்னுயிரில் தரித்தவன்
உண்மையதை உரைத்திடும்
தன்மையதில் தனித்தவன்

இன்பமதைத் தந்திடும்
பண்புநெறி கொண்டவன்
துன்பமது தொலைத்திடும்
பக்குவமெனக்குத் தந்தவன்

இறைவழி நிலைத்திடும்
இழிவழி தடுப்பவன்
இல்லார்க்கு ஈந்திடும்
இரக்க வள்ளலவன்

மனிதனில் வாழ்ந்திடும்
மாணிக்கக் கோயிலவன்
தோல்வியினில் உணர்ந்திடும்
தோளாகும் தோழனவன்

சந்தர்ப்பம்

ஆதவன்

பெரு வெளி
அதை வெல்ல முடியவில்லை
மீண்டும் மீண்டும் தோற்கிறேன்
வாழ விடச்சொல்லி மன்றாட்டம்
என் பயணம் நீள்கிறது
நீண்ட பெருமூச்சோடு

கடந்து செல்கிறான் மூன்றாவது மனிதனாக
அவனுடன் பேசத்தெரியாமல்,
பேசவிரும்பாமல் விட்டுவிடுகிறேன்
ஆனால் மீண்டும் மீண்டும் என்னை
எதிர்கொண்டும் கடந்தும் செல்கிறான்
சிலர் உணர்கிறார்கள், சுதாரிக்கிறார்கள்!

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்

சூழல் அமைச்சு

பதவி வெற்றிடங்கள் - சபை செயலாளருக்கான ஒப்பந்த அடிப்படையிலான பதவி

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. பட்டயம் பெற்ற கூட்டுரு செயலாளர் அல்லது
2. பட்டயம் பெற்ற கணக்காளர் அல்லது
3. சட்டத்தரணி மற்றும் பதிவு பெற்ற கம்பனி செயலாளர்

அனுபவம்:

1. உதவி சபை செயலாளராக/ சபை செயலாளராக ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம் அல்லது அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் நிகரான பதவியில் சபை செயலாளராக 5 வருடங்கள் அடங்கலானது.
2. வினைத்திறமை மற்றும் உயர் மட்ட துல்லியத்துடன் பணியை பூர்த்தி செய்தல் வேண்டும்.
3. ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் தேர்ச்சியுடன் கணினி அறிவு.
4. எந்நேரமும் சுதந்திரமாகவும் இரகசியதன்மையை பேணல்.

வயதெல்லை: 40 வயதிற்கு மேற்பட்டதாகவும் 55 வயதிற்கு குறைவாகவுமிருத்தல் வேண்டும்.
சம்பளம்: 81,670 ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட படிகள்

பதவிப் பொறுப்புக்கள்:

I. சபை கூட்டங்களை கட்டுப்படுத்தும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு தாக்கம் விளைவிக்கும் பொறுப்புக்கள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக சபையை வழிநடத்தல் மற்றும் மதியுரை வழங்கல்.
II. சபையின் அறிக்கைகள் விரிவானதாகவும் உரிய முறையில் தயாரிக்கப்பட்டதுமாக இருத்தலை உறுதிப்படுத்தல்.
III. சபைக் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது 5 நாட்களுக்கு முன்னராகவே கலந்தாலோசனை செய்ய வேண்டிய விடயங்களை சபை அங்கத்தினர்களுக்கு உரிய முறையில் விநியோகம் செய்தலை உறுதிப்படுத்தல்.
IV. சபை கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்தல் சபை செயற்பாடுகளின் குறிப்புக்களை திடநுட்பமாக பொருத்தமான பாங்கில் பேணல்.
V. சபையின் உப-குழுக்களின் செயலாளராக செயற்படுதல்.
VI. குறிப்பாக பணிப்பாளரின் அறிக்கையை தயாரிக்கும் வேளையில் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை, கணக்கிடல் மற்றும் உள்ளக கூற்றுக்களை நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளியக மதியுரையாளர்களுடன் ஆலோசித்து இவைகளின் பிரசுரம் மற்றும் விநியோகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.

பதவிக்கு ஏற்புடையதான பொதுவான நிபந்தனைகள்:

- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அவரது சம்பளத்தின் 10% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும். பணியகமானது 15% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மேலதிகமாக 3% ஐ ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தும்.
- வைத்தியசாலை மருத்துவ காப்புறுதி திட்டத்திற்கான உரித்து.
- வெளிநோயாளர் மருத்துவ விலைசிட்டைகளுக்கான மீள்நிரப்பல் உரித்து.
- விண்ணப்பதாரி தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்காக விண்ணப்பத்தில் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஆகியன வழங்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பத்துடன் கல்விசார் மற்றும் ஏனைய உரித்தான சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் 2022.02.24 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பமானது அனுப்பப்படல் வேண்டும்.
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

பணிப்பாளர் நாயகம்,
புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,
இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

அமெரிக்க தூதரகம், கொழும்பு

அச்சு மற்றும் ஊடக நிபுணர் [ஆண் / பெண்]

இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருணம உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

அச்சு மற்றும் ஊடக நிபுணர், தகவல் அதிகாரி அல்லது பொது விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியின் நேரடி கண்காணிப்புக்கு உட்படுவதுடன் அவர் உள்நாட்டில் சேவையாற்றும் தகவல் உதவியாளர்கள் மூவரை கண்காணிக்க வேண்டும். ஊடக தலையீட்டுடன் கொள்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான பிரதான ஆலோசகராகவும் செயற்பட வேண்டும். நீண்டகால போக்குகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக எழும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதுடன், ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கைகள் மற்றும் அமெரிக்காவின் விருப்பங்கள் தொடர்பில் பிரதிநிதித்துவத்தை வழங்கும் நாட்டில் அச்சு மற்றும் ஊடக சந்திப்புகளை நடத்துவதற்கான உத்திகள் தொடர்பில் தூதரக காரியாலயத்தின் தலைமைத்துவத்திற்கு அறியப்படுத்த வேண்டும். ஐக்கிய அமெரிக்காவுக்கு முக்கியத்துவம்மிக்க பிரச்சினைகள் தொடர்பில் பிரதிநிதித்துவத்தை வழங்கும் நாட்டில் நடத்தப்படும் அச்சு மற்றும் ஊடக சந்திப்புகளை கண்காணித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பில் அறிக்கையிடல் வேண்டும். ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அச்சு மற்றும் ஊடக துறைசார்ந்தவர்களுடன் பயன்மிக்க தொடர்புகளை கட்டியெழுப்புதல் வேண்டும். ஊடக சுற்றுப்பயணங்கள், ஊடகவியலாளர்களின் பயிற்சி அமர்வுகள் மற்றும் பரிமாற்ற வேலைத்திட்டங்களை மேம்படுத்துவதுடன் அவற்றை ஒருங்கிணைத்தல் வேண்டும்.

வேலை நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள் மாதச்சம்பளம் 260,524/-

தொழிலுக்கான தகுதி:

1. **கல்வி:** இதழியல், தொடர்பாடல், சர்வதேச உறவுகள், வரலாறு, சட்டம், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் அல்லது வணிக முகாமைத்துவம் தொடர்பில் பல்கலைக்கழக பட்டமொன்றை கொண்டிருத்தல்.
2. **தொழில் அனுபவம்:** ஊடக நிறுவனம், அரசியல் மற்றும் கொள்கை ரீதியிலான ஆலோசனைகளை வழங்கும் விசேட நிபுணர் குழு, பல்கலைக்கழகம், அரச சார்பற்ற நிறுவனம், தூதரக காரியாலயம், அரச நிறுவனம், பொதுமக்கள் தொடர்பு நிறுவனம் அல்லது கூட்டுத்தாபனம் ஆகிய ஏதாவதொரு நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஐந்து வருடகாலம் இடைவிடாது கட்டம் கட்டமாக பொறுப்புக்கள் மேம்படும் வகையில் சேவையாற்றியிருக்க வேண்டும். குறித்த சேவை காலத்தில் பொதுமக்கள் தொடர்பு, பொது விவகாரங்கள், ஊடகத்துறை, தொடர்பாடல், சந்தைப்படுத்தல், பொது மக்கள் தொடர்பு முகாமைத்துவம், சமூக நலன்புரி பணிகள், ஊடக கலந்துரையாடல்கள் அல்லது ஊடகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் ஏனைய தொடர்பாடல் செயற்பாடுகள் குறித்து குறிப்பிடத்தக்களவு மட்டத்தில் பொறுப்புக்களை வகித்திருக்க வேண்டும். அத்துடன் கண்காணிப்பாளராக குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
3. **மொழித்திறன்:** மட்டம் IVல் (சரளமாக) ஆங்கிலம் வாசித்தல், எழுதுதல், பேசுதல் திறன்கள் அவசியம்.
(இந்த ஆற்றல் பரிசீலிக்கப்படும்)
மட்டம் IVல் (சரளமாக) சிங்களம் அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல், பேசுதல் திறன்கள் அவசியம்.
4. **தொழில் அனுபவம்:** பிரதிநிதித்துவத்தை வழங்கும் நாட்டில் அரசியல், பொருளாதாரம், சமூக அல்லது கலாசார கொள்கைள் மற்றும் போக்குகள் தொடர்பில் பரந்த அறிவைக் கொண்டிருத்தல் அவசியமானது. பிரதிநிதித்துவத்தை வழங்கும் நாட்டில் அச்சு மற்றும் ஊடக நிறுவனங்கள், தொழில்சார் இதழியல் தரநிலைகள் மற்றும் நடைமுறைகள் உட்பட அச்சு, தொலைக்காட்சி, வானொலி, இணையம் ஊடாக தகவல்களை பயன்படுத்தும் போது நேயர்களின் முன்னுரிமையில் காணப்படும் போக்குகள் தொடர்பிலும் பூரண அறிவைக் கொண்டிருத்தல். பிரதிநிதித்துவத்தை வழங்கும் நாட்டில் தகவல் வரம்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சர்வதேச மற்றும் பிராந்திய தொடர்பாடல் போக்குகள் குறித்தும் அறிவைப் பெற்றிருத்தல். பிரதிநிதித்துவத்தை வழங்கும் நாட்டில் பயன்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் வியூகங்கள், சந்தை ஆய்வு மற்றும் நேயர்கள் தொடர்பான பகுப்பாய்வுமிக்க தரவுகள் தொடர்பிலும் அறிந்திருத்தல் வேண்டும்.
5. **திறன்கள் மற்றும் ஆற்றல்:**
   - பகுப்பாய்வு திறன்கள்
   - தொடர்பாடல்/தனிநபர் திறன்கள்
   - முகாமைத்துவ திறன்கள்
   - தொழில்நுட்ப திறன்கள்

விண்ணப்பிக்கும் முறை:

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரம் [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

தேவைப்படும் ஆவணங்கள்:

விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- கல்விச்சான்றிழ்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை /கடவுச்சீட்டு /வேறு ஆவணங்கள்).

நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
உங்கள் விண்ணப்பங்கள் **2022 பெப்ரவரி 16** ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.
தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

இலங்கை இராணுவம்

பெறுகை அறிவித்தல்

2022ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்கு பொருட்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

1. 2022ஆம் வருடத்தினுள் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

அ. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் சகல பொருட்களும் இலங்கை இராணுவத்தின் வெயாங்கொட இராணுவ துணிகள் களஞ்சியசாலைக்கு போக்குவரத்து செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

ஆ. இதற்கு ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் வேலை நாட்களில் முற்பகல் 1000 மணித்தியாலம் முதல் பிற்பகல் 1500 மணித்தியாலம் வரை உருப்படிகளுக்கு முன்னால் தரப்பட்டுள்ள திகதிகளில் ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள யுத்ரோபகரண சேவை பணிப்பாளர் சபையிடமிருந்து அந்த விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்காகவும் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவ நிதிப் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்ட விலைக்கோரல்களை உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்ததன் பின் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்தில் (பொருள் வகை) விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்'' கேள்வி இலக்கம் (DOS/2022/.....) திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

தொ. இல.	கேள்வி அடையாள இலக்கம்	விபரங்கள்	உள்நாடு/ வெளிநாடு (NCB/ICB)	அளவு		விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம்	விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா)
துணிகள்								
1	DOS/2022/1038	T 56 உறைகள்	ICB	20,000	எண்ணிக்கை	07/02/2022 முதல் 21/03/2022	23/03/2022 மு.ப. 11.00 மணிக்கு	3,500.00
2	DOS/2022/1053	ஆண்களுக்கான கறுப்பு நிற தோற் சப்பாத்துகள்	ICB	9,500	சோடிகள்	07/02/2022 முதல் 21/03/2022	23/03/2022 மு.ப. 11.00 மணிக்கு	12,500.00
3	DOS/2022/1055	விளையாட்டுத்துறை சப்பாத்துகள்	ICB	10,500	சோடிகள்	07/02/2022 முதல் 21/03/2022	23/03/2022 மு.ப. 11.00 மணிக்கு	12,500.00
4	DOS/2022/1077	ஆண்களுக்கான உடற்பயிற்சி உடைகள்	ICB	9,500	எண்ணிக்கை	07/02/2022 முதல் 21/03/2022	23/03/2022 மு.ப. 11.00 மணிக்கு	3,500.00

2. குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய போட்டி ரீதியில் மற்றும் சர்வதேச போட்டி ரீதியில் விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு முடிவுறுத்தப்படும் காலம் முடிவடைதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளல் காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் சேவை இடத்தின் கடிதத்துடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
யுத்த உபகரண முதன்மை கட்டளைப் பிரிவு,
இராணுவ முகாம், செலிங்கோ கட்டிடம்,
இல. 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்த.

4. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வழங்குநர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தொழில்நுட்ப மதிப்பீடுகளின் போது இயைபுடைய தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.
   அ) திருப்திகரமான வினைத்திறன் அறிக்கை சகிதம் சமமான கொள்ளளவுடைய அரச / தனியார் நிறுவனங்களுக்கு மேற்படி உருப்படிகளை வழங்குவதில் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
   ஆ) நிதிய இயலுமை
   இ) திருப்திகரமான வரி செலுத்தல் அறிக்கைகள், போதுமான உற்பத்தி இயலுமை, போதுமான களஞ்சிய வசதிகள்
   ஈ) வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி அல்லது கடந்த மூன்று வருடங்களுக்கான செயற்பாட்டு அறிக்கையுடனான கூட்டிணைப்புச் சான்றிதழ்
5. விலைக்கோரல் ஆவணங்களுடன் வெட் பதிவிலக்கத்தை வெளிப்படுத்துதல் கட்டாயமாகும். விலைமனுதாரர் வெட் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால் அதை உறுதி செய்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடமிருந்தான கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த தேவைப்பாட்டை வழங்காத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
6. முழுமையற்ற மற்றும் தேவையான ஆவணச் சாட்சிகள் இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் கொள்வனவு செய்யும் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.
7. உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு பதிவுத் தபாலில் அறியத்தரப்படும்.
8. வெளிநாட்டு வழங்குநர்களுக்கு கடன் கடிதங்கள் மூலமும் உள்நாட்டு வழங்குநர்களுக்கு காசோலைகள் மூலமும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 011-2987531 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

இராணுவத் தளபதி,
இலங்கை இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கொழும்பு.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

விலைமனுக்களுக்கான அழைப்பு

அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு மென்பொருள் அனுமதிப்பத்திரங்களை (Software Licenses) உத்தேச வழங்கல் விநியோகித்தல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கான அழைப்பு

பெறுகையின் விபரம்	24 உத்தேச மென்பொருள் அனுமதிப்பத்திரத்திற்கான அழைப்பு
பொருந்தக்கூடிய மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்	ரூபா 2,500/-
விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் திகதிகள்	2022.02.07 முதல் 2022.02.18 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை
கேள்விகள் மூடப்படும் திகதி மற்றும் நேரம்	2022.02.21 - மு.ப. 10.00
சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுப் பிணையின் பெறுமதி	ரூபா 25,000/-

1. RFP ஆவணங்களை, கொழும்பு-03, காலி வீதி, இல. 269, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, லொஜிஸ்டிக்ஸ் பிரிவு (4ஆம் மாடி), பிரதம முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஓர் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பிப்பதன் பேரில் வேலை நாட்களில் 2022.02.07 முதல் 2022.02.18 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை படிவங்கள் வழங்கப்படும்.
2. தகைமை தகவுத்திறன்
   - அ) விலைமனுதாரர் இலங்கையில் ஓர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக இருத்தல் வேண்டும்.
   - ஆ) ஓர் மைக்ரோசொப்ட் பங்காளராக விலைமனுதாரர் இருத்தல் வேண்டும்.
   - இ) விலைமனுதாரர் மைக்ரோசொப்ட் அனுமதிப்பத்திரத்தில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் இலங்கையில் வங்கிகள்/ நிதி நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட சட்டபூர்வ வழிகாட்டுதல்களை முழுமையாக அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
   - ஈ) முதன்மையாளர் அல்லது மைக்ரோசொப்ட் விநியோகஸ்தர் இடமிருந்து உற்பத்தி அங்கீகாரக் கடிதம்.
3. 2022.02.21 முதல் 2022.06.18 வரையான ஓர் குறைந்தபட்ச காலப்பகுதிக்கு செல்லுபடியாகும், ஓர் வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறு கேள்வியுடன் சம்பந்தப்பட்ட பெறுமதிக்கு, அரச ஈட்டு முதலீட்டு வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் விலைமனுப் பிணையை பூர்த்தியான RFP உடன் இணைத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் 2022.02.21 மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டவுடன் உடனடியாக திறக்கப்படும். அத்துடன் மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் மூடப்படாமல் நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படும்.
5. மேலதிக விபரங்களை அரசு ஈட்டு முதலீட்டு வங்கியின், லொஜிஸ்டிக் பிரிவு, பிரதம முகாமையாளரிடம் தொடர்பு இல. 011-7722879 ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

பிநிஅ/ பொது முகாமையாளர்,
அரச ஈட்டு முதலீட்டு வங்கி
இல. 269, காலி வீதி, கொழும்பு-03.

சதொச விலைமனுக்கோரல்

வர்த்தக அமைச்சு

லங்கா சதொச களஞ்சியங்களுக்கு தொழிலாளர் சேவைகளை வழங்கல்

லங்கா சதொச லிமிடெட் (LSL) விநியோக மொத்த களஞ்சியங்களுக்கு **கனரக மற்றும் வேறு வேலைகளுக்காக தொழிலாளர் சேவைகளை** வழங்க முடியுமான வழங்குனர்களிடம் இருந்து ஓர் ஆண்டு காலத்திற்காக தலைவர், லங்கா சதோச லிமிடட் மூலம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களிடம் இருந்து, அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த விலைமனு ஆவணங்களை **2,000.00 ரூபா தொகை ஒன்றை (மீளளிக்கப்படாத) செலுத்தி 2022.02.07 ஆம் திகதி தொடக்கம் 2022.02.28 ஆம் திகதி வரையான காலத்தில்** இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்சல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலத்தின், பெறுகை பிரிவிலிருந்து (3 ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022.02.18 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.**

முன்வைக்கப்படும் விலைமனுக்கள் **2022.02.28 ஆம் திகதி பி.ப. 03.00க்கு அல்லத அதற்கு முன்னர்,** லங்கா சதொச லிமிடெட், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிடெட் களஞ்சியங்களுக்கு தொழிலாளர் சேவையை வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் கொள்வனவு செய்யப்படுகின்ற விலைமனு ஆவணங்களுடன் உள்ள **"விலைமனு பிணை பிரகடனத்தில்"** குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தை தெளிவாக நிரப்பி விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது **2022.02.28 ஆம் திகதி பி.ப. 03.00க்கு முடிவுறுவதோடு** விலைமனுக்கள் திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். **வெற்றிகரமான விலைமனுதாரர்கள்** மூலம் (பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் தவிர) **பதிவு கட்டணமாக 5,000 ரூபா தொகை மற்றும் அந்த பெறுமதி மீது 8% வெட் தொகை ஒன்றை (மீளளிக்கப்படாத)** செலுத்த வேண்டும் என்பதோடு முதல் மாதத்திற்கு தொடர்புடைய விலைப்பட்டியல் பெறுமதியில் 5% **செயல்திறன் உத்தரவாதமாக தக்கவைத்துக்கொள்ளப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

மூத்த நிர்வாக அதிகாரி பெறுகை, LSL – 070 1560428

ஒப்பந்தம் வழங்கப்படும் இறுதி முடிவு, **தலைவர், லங்கா சதொச லிமிடட்** வசமானது.

தலைவர், லங்கா சதொச லிமிடட்,
சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்
இலக்கம் 27, வொக்ஷோல் வீதி கொழும்பு - 02

அபிவிருத்தியடையும் நாடாகவே இந்த நாடு... (12ஆம் பக்கத் தொடர்)

அப்போதைய மதிப்பில் அதன் பெறுமதி சுமார் 997 மில்லியன் இலங்கை ரூபாய்களாக இருந்தது. 1948இல் இந்தத்தொகை மிகப்பெரிய ஒரு அளவு என்பது வெளிப்படையானது.

1953இல் உலக வங்கியானது இலங்கைப் பொருளாதாரத்தை அக்குவேறு ஆணிவேறாக ஆய்வு செய்து ஒரு அகராதியின் பருமனில் வெளியிட்ட வெகு விபரமான ஆய்வறிக்கையில், இலங்கை தனது பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான போதியளவு நிதிவளத்தைக் கொண்டிருப்பதாகவும் ஆகவே அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் இலங்கைக்கு நிதி நெருக்கடிகள் இல்லை எனவும் குறிப்பிட்டிருந்தது. அதிகரித்துச் செல்லும் சனத்தொகையும் உணவுக்கான செலவினங்களும் சவாலாக அமையும் என அதில் குறிப்பிடப்பட்டது. இந்த அறிக்கையும் உலக வங்கியின் இணையத்தளத்தில் இருக்கிறது.

இவ்வாறு வேறெந்தக் குடியேற்ற நாடும் கொண்டிராத அபிவிருத்தியின் ஆரம்பத்திற்கு அவசியமான அத்தனை அம்சங்களையும் கொண்டிருந்த ஒரு நாடு 74 வருடங்களின் பின்னரும் ஒரு அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாடாகவே தொடர்வது யாருடைய குற்றம்? பிழையான பொருளாதாரக் கொள்கைத் தெரிவுகளும் உலக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு மாற்றங்களை மேற்கொள்ள மறுத்து அடம் பிடிக்கும் போக்குகளும்.

இலங்கை ஒரு பல்லின சமூகம் என்பதையும் பன்மொழி பேசும் பலமதங்களைப் பேணும் பல்வேறு கலாசாரங்களின் ஐக்கியம் என்பதையும் புரிந்து அனைவரையும் அரவணைத்துச் செல்ல மறுக்கும் சிந்தனைப் போக்குகளும் இந்நாட்டைச் சீரழித்துக் குட்டிச் சுவராக்கி விட்டிருக்கின்றன என்பதை புரிந்துகொள்ள முடியாத ஒரு நாடாக இலங்கை இன்னமும் இருக்கிறது.

இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்கத் தேவையான பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமாக தீர்வைக்கண்டு அனைத்து இனங்களும் தத்தமது சமய கலாசார தனித்துவங்களை பேணி மதித்து வாழக்கூடிய சட்டரீதியான புறச்சூழலை உருவாக்கி நடைமுறைப்படுத்தி உலக சமூகம் மதிக்கக்கூடிய ஒரு நாடாக இலங்கையைக் கட்டியமைக்க முயல்வதே நீண்டகாலரீதியில் இலங்கையின் நிலைத்த அபிவிருத்திக்கும் நிலைத்திருக்கும் அமைதிச் சூழலுக்கும் வழிவகுக்கும். அதைவிடுத்த மாற்றுத் தெரிவுகள் இலங்கைக்கு இல்லை. அத்தகைய தெரிவுகள் இன்னும் பல தலைமுறைகளுக்கு இலங்கையை ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாடாகத் தொடர்ந்து வைத்திருக்கவே உதவும்.

வேலை வாய்ப்பு

சதொச

லங்கா சதொச லிமிடட் நாடு முழுவதும் உள்ள தனது சில்லறை வர்த்தக சங்கிலி, அமைப்பை வழிநடத்த விறுவிறுப்பான நபர்களை தேடுகிறது. லங்கா சதொச அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய சில்லறை வர்த்தக சங்கிலி என்பதோடு 2022/23 இல் அதன் தடம் மற்றும் வருவாயை அதிகரிப்பதற்கும் நவீனப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறது.

உதவிக் கணக்காளர் (JM-1-1)

தகைமைகள்
வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ நிதி முகாமைத்துவம்/ வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல்.

உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் **MA**-4 பிரிவு பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
3. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் (**MA** 1-2) தரம் **II** பிரிவின் பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

வயது:

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:

JM 1-1 :ரூபா . [42,600 - 10 x 755 - 18 x 1135 - 70580]
அடிப்படைச் சம்பளம்: ரூபா : ரூபா. 42,600/=
(அரச சுற்றுநிருபங்களுக்கு அமைய பதவிக்கு பொருந்தும் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

கணக்காளர் (MM - 1-1)

தகைமைகள்
வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி முகாமைத்துவம்/ கணக்கியல்/ வர்த்தக நிர்வாகம்/ வர்த்தகம் அல்லது வர்த்தக முகாமைத்துவத்தில் இளமாணி பட்டம்
   மற்றும்
   பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பில் 01 ஆண்டு தகைமைக்கு பின்னரான சேவை அனுபவம்
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல்
   மற்றும்
   பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பில் 01 ஆண்டு தகைமைக்கு பின்னரான சேவை அனுபவம்

உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் உதவி முகாமையாளர் தரத்தில் (**JM**) ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

வயது:

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

MM 1-1 ரூபா. [53,175 - 10 x 1375 - 15 x 1910 - 95,575]
அடிப்படைச் சம்பளம்: ரூபா. 53,175/=
(அரச சுற்றுநிருபங்களுக்கு அமைய பதவிக்கு பொருந்தும் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

சிரேஷ்ட கணக்காளர் (HM - 1-1)

தகைமைகள்
வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம் அல்லது வர்த்தக நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்
   அத்துடன்
   தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட தகைமை (முதுமாணி) அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவம்
   மற்றும்
   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரத்தில்" குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் முழு அங்கத்துவம்.
   மற்றும்
   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரத்தில்" குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்

உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் (MM) தரம் I முகாமைத்துவ பிரிவின் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.ளரடிதநஉவ யசநய

வயது:

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

HM 1-1ரூபா . [80,295 - 15 x 2,270 – 114,345]
அடிப்படைச் சம்பளம்: ரூபா 80,295/=
(அரச சுற்றுநிருபங்களுக்கு அமைய பதவிக்கு பொருந்தும் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

நியமனத்தின் பண்பு:

EPF மற்றும் ETF இற்கு உரித்துடையதுடன் நிரந்தரமானது

பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:

- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை வெளிப்படுத்த முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **vacancies@lankasathosa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, இந்த விளம்பரம் வெளியான 14 நாட்களுக்குள் அனுப்பவும். (கடித உறையின் இடது பக்க மேல்/மூலையில் மின்னஞ்சலின் "Subject" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

(தேர்வு செய்யப்பட்ட அபேட்சர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)

வர்த்தக அமைச்சு

தலைவர்
லங்கா சதொச லிமிடட்
இல. 27, CWE செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

சதொச

உடலமைப்பு குறித்த தாழ்வு மனப்பான்மை

நமது உடலமைப்பைப் பற்றி நமக்கு ஒரு எண்ணம் இருக்கும். அது நமது உடலின் எடை, அமைப்பு, வடிவம் போன்றவற்றின் அடிப்படையிலானது. ஆனால், எப்போதுமே ஒருவர் அவரது உடலமைப்பைப் பற்றி நேர்மறையான சிந்தனையைக் கொண்டிருப்பது மிகவும் அவசியம் என்கிறார்கள். அது நமது வாழ்முறையை மட்டுமல்ல, நமது நன்னடத்தைக்கும் காரணமாக அமையுமாம்.

சில சிறார்கள், பள்ளியிலோ குடும்ப உறுப்பினர்களாலோ உருவக் கேலிக்கு ஆளாகியிருப்பார்கள். இதனால், அவர்களுக்கு தங்களது உடலமைப்பின் மீது ஒரு வெறுப்பு உருவாகும். இதனால், ஒரு நபரின் மன நலன் மற்றும் உடல் நலன் பாதிக்கப்பட்டு, அது மீண்டும் அவர்களது உடலமைப்பின் மீதே எதிரொலிக்கும். சிலருக்கு இதனால் மன அழுத்தம், உணவருந்துவதில் சிக்கல் உள்ளிட்ட பல பிரச்சினைகள் ஏற்பட வழிகோலும்.

அது மட்டுமல்ல, ஒருவர் தன் உடலமைப்பின் மீது கொண்டிருக்கும் தாழ்வுமனப்பான்மை காரணமாக, அடிக்கடி மனநிலை மாற்றம், சமுதாயத்திலிருந்து தங்களை தனிமைப்படுத்தி கொள்ளுதல், நட்பு பாராட்டாமை போன்றவை ஏற்படும். இதனை கண்டுகொள்ளாமல் விடும்போது, மற்றவர்களை புறக்கணிப்பது, தங்களது உடலமைப்பை ஏற்றுக் கொள்ளாமல் அதனை மாற்ற தவறான வழிகளைக் கடைப்பிடிப்பது அவ்வளவு ஏன் தங்களையே துன்புறுத்திக் கொள்ளும் நிலைக்கும் ஆள்படலாம்.

எனவே, பெற்றோரோ.. உங்கள் வீட்டிலிருக்கும் சிறார்களுக்கு இதுபோன்ற பிரச்சினைகள் இருந்தால் அவர்களை வெளியே கொண்டு வர வேண்டியது உங்கள் கடமை தான்.

உங்கள் பிள்ளைகள் உங்களிடம் மனம்விட்டுப் பேச அனுமதியுங்கள். எதைச் சொன்னாலும் அதற்கு ஆலோசனை வழங்குகிறேன் என்று களத்தில் குதிக்க வேண்டாம். அவர்கள் பேசும்போது குறுக்கிடாதீர்கள். இதைச் சொல்லலாமா, வேண்டாமா என்று சிந்தித்துப் பேசாமல், நினைத்ததை சொல்வதற்கு உங்களிடம் அவர்களுக்கு இடம்கொடுங்கள்.

ஒரு சில ஆடைகளை அவர்கள் அணியும் போது, அது நன்றாக இல்லை என்று நேரடியாகக் கூறாமல், மிகச் சிறந்த ஆடை அவர்களுக்கு எந்த அளவுக்கு தோற்றப் பொலிவைக் கொடுக்கிறது என்று எடுத்துச் சொல்லுங்கள். எந்த ஆடையை அணியும் போது அவர்களது நண்பர்கள் அதிகம் கேலி செய்கிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப அவர்களது ஆடை அலங்காரத்தை மாற்ற உதவலாம்.

என் மகள்/மகன் குள்ளமாக இருக்கிறார், ஒல்லியாக இருக்கிறார் என்றெல்லாம் மற்றவர்களிடம் கூறாதீர்கள். அவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்களா, நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கிறார்களா என்பதைப் பற்றி கூறுங்கள். உங்களுக்கு ஒன்று மிகச் சரியானதாகத் தோன்றும், ஆனால், அதுவே உங்கள் பிள்ளைகளுக்கும் சரியாக இருக்கும் என்று நினைக்கக் கூடாது, அவர்கள் அதற்கு நேர்மாறாக நினைக்கவும் வழி இருக்கிறது. அதனை ஏற்றுக் கொள்ளுங்கள். உடலமைப்பு எப்படியிருந்தாலும், உங்கள் பிள்ளைகள் சரியாக உடற்பயிற்சி செய்வதை சத்தான உணவு போன்றவற்றை உறுதி செய்யுங்கள். அதில் சமரசம் வேண்டாம் என்பதை அவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள்.

எக்காரணத்தைக் கொண்டும் பெற்றோர் தங்களது பிள்ளைகளை உருவக்கேலி செய்யக் கூடாது. மற்ற நண்பர்களோடு ஒப்பிடக் கூடாது. இந்த ஆடை உனக்கு நன்றாக இல்லை என்று சொல்லக் கூடாது. இதெல்லாம் சாதாரண விஷயம்தானே என்று நினைக்கலாம். ஆனால், ஏற்கனவே உடலமைப்பு குறித்து தாழ்வுமனப்பான்மையில் இருப்பவர்களுக்கு இது பெரும் துன்புறுத்தலாக அமையலாம் எச்சரிக்கை.

கொரோனா தொற்று; இளம்பெண்கள் தாய்மையடைவதற்கான காலம்

கொரோனாவிலிருந்து மீண்டு எத்தனை நாட்களுக்கு பின் தாய்மையடையலாம் என்று ஏராளமான இளம்பெண்கள் கேள்வி எழுப்பி வருகிறார்கள்.

தாய்மையடைதல் என்பது அவ்வளவு எளிதான வேலையல்ல. ஒன்பது மாதங்கள் கருவை சுமந்து ஏராளமான உடல் மாற்றங்கள், மன மாற்றங்கள், சுரப்பிகளின் மாற்றங்களை இந்தக் காலத்தில் ஒரு பெண் எதிர்கொள்ள வேண்டும். ஒன்பது மாதம் கருவைச் சுமந்து, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க ஒரு தாய் நிச்சயமாக நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது அவசியம்.

ஏற்கனவே கொரோனா பாதித்து, உடல் நலப் பிரச்சினைகளை சந்தித்த பெண் ஒருவர், உடனடியாக தாய்மையடைய நேரிட்டால், அவர்களுக்கு ஏராளமான சிக்கல்கள் ஏற்படும் அபாயமிருக்கிறது.<ெ

கொரோனாவிலிருந்து மீண்டதுமே தாய்மையடைவது தாய் சேய் உடல்நலனில் பாதிப்பை ஏற்படுத்தலாம். கொரோனா வைரஸ் என்பது ஏதோ நமது சுவாசப் பாதையை மட்டும் பாதிக்கும் விஷயமல்ல. அது பல உடல் உள்ளுறுப்புகளையும் தாக்கியிருக்கும். சிலருக்கு கொரோனா தொற்றின் அறிகுறிகளே பல காலத்துக்கு நீடிக்கிறது. எனவே, கர்ப்பமடைதலை எதிர்கொள்ள உடல்நலம் பூரண குணமடையும் வரை காத்திருப்பது அவசியம்தான்.

ஏற்கனவே கொரோனா என்ற பெருந்தொற்றுச் சவாலை எதிர்கொண்டுமீண்டுவந்திருக்கும்பெண், உடனடியாக மனதளவிலும் உடலளவிலும் மற்றொரு சவாலை எதிர்கொள்ளத் தயாராவது சற்று கடினமானது விஷயம்தான். எனவேதான் கொரோனாவிலிருந்து மீண்டு சில காலம் காத்திருக்கச் சொல்கிறார்கள்.

கடந்த காலத்தில் கொரோனா பாதித்து அதிலிருந்து மீண்டுவிட்டீர்கள். உடடியான உங்களது குடும்பத்தை திட்டமிட எண்ணுகிறீர்களா? அதற்கென எந்தக் குறிப்பிட்ட கால அவகாசத்தையும் மருத்துவத் துறை நிர்ணயிக்கவில்லை. ஆனால், சில மாதங்கள் உங்கள் உடல்நலம் தேறுவதற்காகக் காத்திருக்கலாம். கொரோனா அறிகுறிகள் உங்களிடமிருந்து முற்றிலும் விடைபெறும் வரை காத்திருக்கலாம்.

நீங்கள் முழு உற்சாகத்துடன் முழு உடல்நலனையும் பெற்றுவிட்டதாக உணரும்பட்சத்தில், குடும்பத்தை திட்டமிட ஆனந்தமாகத் தயாராகலாம்.

கரு கருவென்ற அடர்த்தியான கூந்தலை பேண இயற்கையான வழிகள்

கரு கருவென்ற அடர்த்தியான கூந்தல் மீது பெண்கள் பலருக்கும் ஆசை இருக்கும். நாகரிக வளர்ச்சியால் தோற்றத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதும் அடர்த்தியான முடி வளர்ச்சியை அனைத்து பெண்களும் விரும்புவார்கள். இயற்கைக் முறையில் அடர்ந்த கூந்தலைப் பெற.....

★வாரம் ஒரு முறை ஆமணக்கு எண்ணெய்யைத் தலையில் தடவி, அரை மணி நேரம் கழித்து குளித்து வந்தால் முடி நன்றாக வளருவதோடு, பளபளப்பாகவும் இருக்கும்.

★செம்பருத்தி இலையை அரைத்து தலையில் தடவி, அரை மணி நேரம் ஊறிய பின்பு சீயக்காய் அல்லது இயற்கையான முறையில் தயாரித்த ஷாம்பு போட்டு குளிப்பதன் மூலம் கூந்தல் அடர்த்தியாக வளரும்.

★கறிவேப்பிலை ஒரு கைப்பிடி, சின்ன வெங்காயம் நான்கு இவை இரண்டையும் நன்றாக அரைத்து, கப் தயிர் கலந்து தலையில் தேய்த்து மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும். பின்பு 15 நிமிடங்கள் கழித்து குளிக்கலாம். இவ்வாறு அவ்வப்போது செய்து வந்தால் கூந்தல் கருமையாகவும், அடர்த்தியாகவும் வளரும்.

★கடுக்காய், செம்பருத்திப் பூ, நெல்லிக்காய் ஆகியவற்றை சம அளவு எடுத்து தேங்காய் எண்ணெய்யில் கலந்து காய்ச்சி, ஆற வைத்து, தலையில் தடவினால் கூந்தல் நன்றாக வளரும்.

★வெந்தயத்தை ஊறவைத்து, நன்றாக அரைத்து தலையில் 'பேக்' போல போட்டுக் கொள்ளவும். 15 நிமிடங்கள் ஊறிய பிறகு தலைக்கு குளிக்கவும். இதன் மூலம் தலைமுடி அடர்த்தியாக செழித்து வளரும்.

★ஒரு லிட்டர் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யில், நெல்லிக்காய் பொடி, தான்றிக்காய் பொடி, மருதாணி பொடி, கறிவேப்பிலை பொடி, கரிசலாங்கண்ணி பொடி, வெட்டிவேர், ரோஜா இதழ்கள், சந்தன பொடி ஆகியவற்றை தலா 10 கிராம் சேர்த்து நன்றாகக் கலந்து கொதிக்க வைக்கவும்.

பின்னர் இந்தக் கலவையை 4 நாளுக்கு ஒரு முறை வெயிலில் வைக்க வேண்டும். இந்த எண்ணெய்யை வடிகட்டி வைத்து, வாரம் இரண்டு முறை தலையில் தேய்த்து குளித்து வருவதன் மூலம், முடி அடர்த்தியாக வளரும். முடி உதிர்தல் குறையும்.

கீழ் முதுகு வலி (Lower back pain) ஸ்மார்ட்-சென்சார் நாற்காலிகள்...

கீழ் முதுகு வலி (Lower back pain) என்பது இன்று அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்படும் ஒரு பிரச்சினை. அதிலும், ஓரிடத்தில் அமர்ந்தே வேலை செய்பவர்களுக்கும் வயதானவர்களுக்கும் மிகப்பெரும் சிக்கலானதாகும்.

நீண்ட நேரமாக ஓரிடத்தில் அமர்ந்தே வேலை செய்வது, நிமிர்ந்து நேராக உட்காராமல் கூன் விழுந்த நிலையில் உட்காருவது, நீண்ட நேரம் இருசக்கர வாகனம் ஓட்டுவது, முதுகுப்பகுதியில் உள்ள தசைகள், எலும்புகளில் பிரச்சினை, குறிப்பாக முதுகெலும்பில் பிரச்சினை, திடீரென உடற்பயிற்சி செய்வது, உடல் பருமன் என முதுகு வலி ஏற்பட பல காரணங்கள் இருக்கின்றன.

எனினும், உடல் பருமன் இன்றி உடல் ஆரோக்கியமாக இருந்தாலும் அலுவலகத்தில் பல மணி நேரங்கள் தொடர்ந்து கணினியின் முன் வேலை செய்வதாலும் முதுகு வலியை அனுபவிப்பவர் பலர்.

இதற்கெனவே சில அலுவலகங்களில் முதுகு வலி ஏற்படாத அளவுக்கு வசதியாக கதிரைகள் போடப்பட்டிருக்கும். ஏனெனில், இந்த முதுகு வலி ஏற்பட கதிரைகளும் ஒரு முக்கியக் காரணம்தான். இந்நிலையில், ஜப்பான் ஆய்வாளர்கள் இதற்கு ஒரு தீர்வு கண்டுள்ளனர். ஸ்மார்ட்சென்சார் கொண்ட நாற்காலிகளைப் பயன்படுத்தினால் முதுகு வலி ஏற்படாது என்று கூறியுள்ளனர்.

அலுவலகத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு 'கீழ் முதுகு வலி' வருவது ஒன்றும் புதிதல்ல.

ஜப்பானில், ஆரோக்கியமான அலுவலகப் பணியாளர்களிலே 10ல் ஒருவருக்கு முதுகு வலி ஏற்படுகிறது. அவ்வப்போது எழுந்து நடப்பது, முதுகை நீட்டி நெளிப்பதன் மூலமும் உடற்பயிற்சியின் மூலமும் இந்த வலியைக் குறைக்கலாம். ஆனால், வலி ஏற்படுவதற்கு முன்னதாகவே சரியாக அமர்வது, அடிக்கடி எழுந்து நடப்பது போன்ற எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். வலி வந்த பின்னர் சரி செய்வது சற்று கடினம்தான்.

எனவே, ஸ்மார்ட் சென்சார்கள் கொண்ட நாற்காலிகளை பணியாளர்கள் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

ஸ்மார்ட் சென்சார்கள் கொண்ட நாற்காலிகளை பயன்படுத்தும்போது தவறான முறையில் நீங்கள் அமர்ந்தால் அது உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கும். மேலும், சரியான முறையில் அமரும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும். அதாவது, உடலின் எந்தெந்த பகுதிகள் நாற்காலியின் எந்தெந்த பகுதிகளில் பொருந்த வேண்டும் என்றும் குறிக்கப்பட்டிருக்கும். உங்களது உயரத்துக்கு ஏற்றவாறும் சரிசெய்து கொள்ளலாம்.

இந்த ஸ்மார்ட் நாற்காலிகளை பயன்படுத்துவோருக்கு முதுகு வலி ஏற்படுவது கணிசமாக குறைந்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. முதுகு வலியைப் போன்று அடுத்ததாக கழுத்து வலி, தலைவலி ஏற்படுவது குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளவிருப்பதாகவும் அது தொடர்பான தரவுகளை சேகரிக்க உள்ளதாகவும் ஆய்வாளர் ரியோச்சி நாகடோமி தெரிவித்தார்.

ஒரு பதிவு

கோடி கணக்கில் வருமானம் ஆச்சரியத்தில் ரசிகர்கள்

சினிமா துறையில் முன்னணியாக விளங்கும் பிரபலங்கள் சமூக வலைத்தளத்தில் ஒரு பதிவின் மூலம் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தீபிகா படுகோனே ஷாருக்கான் இன்ஸ்டாகிராம் என்ற சமூக வலைதளம் கடந்த 2010ம் ஆண்டில் புகைப்படங்களை மட்டும் பகிரும் ஒரு செயலியாக அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் தற்போது பல்வேறு அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பேஸ்புக்கிற்கு அடுத்தபடியாக உலகளாவிய ஒரு சமூக வலைதளமாக தன்னை நிறுவிக் கொண்டுள்ளது.

இந்த இன்ஸ்டாகிராம் செயலியை பிரபலங்கள் பலரும் பயன்படுத்துகின்றனர். அவர்கள் வெறுமனே தங்களுடைய ரசிகர்களுடன் தொடர்பில் இருப்பதற்கு மட்டும் இந்த செயலியை பயன்படுத்துவதில்லை. அவர்களைப் பின்தொடர்பவர்களிடம் பலதரப்பட்ட பிராண்டுகளின் விளம்பரத்தை கொண்டு சேர்க்கவும் பயன்படுத்துகின்றனர். பாலிவுட் நடிகர், நடிகைகள் இன்ஸ்டாகிராமில் பிராண்டுகளை விளம்பரம் செய்ய கோடிக்கணக்கில் பணம் வாங்குகின்றனர்.

ஜோதிகாவின் 51வது திரைப்படம்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையான ஜோதிகாவின் 51 வது திரைப்படம் தயாராகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஜோதிகா திருமணத்துக்கு பிறகு சில வருடங்கள் சினிமாவை விட்டு ஒதுங்கி இருந்துவிட்டு, மீண்டும் 36 வயதினிலே படம் மூலம் நடிக்க வந்தார். தொடர்ந்து மகளிர் மட்டும், நாச்சியார், காற்றின் மொழி, ராட்சசி, ஜாக்பாட், பொன்மகள் வந்தாள் உள்ளிட்ட கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளை தேர்வு செய்து நடித்தார்.

ஜோதிகா நடித்த 50வது படமான 'உடன்பிறப்பே' சமீபத்தில் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகி வரவேற்பை பெற்றது. இந்நிலையில் அடுத்து 51 வது படத்தில் நடிக்க ஜோதிகா தயாராகி உள்ளதாகவும் சில இயக்குனர்கள் அவரிடம் கதை சொல்லி உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

கண்ட நாள் முதல், கண்ணாமூச்சி ஏனடா ஆகிய படங்களை இயக்கிய இயக்குனர் பிரியா சொன்ன கதை ஜோதிகாவிற்கு பிடித்துள்ளதாகவும், அதில் நடிக்க ஜோதிகா முடிவு செய்து இருப்பதாகவும் தகவல் பரவி வருகிறது. இதுகுறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சினி மஞ்சரி

இயக்குனர் மணிரத்னத்திற்கு 'பாரத் அஷ்மிதா' விருது

தமிழ் திரைத்துறையில் முன்னணி இயக்குனராக வலம் வரும் இயக்குனர் மணிரத்னத்திற்கு சிறந்த பங்களிப்பிற்கான 'பாரத் அஷ்மிதா' விருது வழங்கப்படுகிறது.

மணிரத்னம் பகல் நிலவு படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர்.

மௌன ராகம், நாயகன், தளபதி, ரோஜா, ராவணன் போன்ற பல படங்களை இயக்கியுள்ளார். இவருக்கும் மராட்டிய மாநிலம் புனேவில் அமைந்துள்ள எம்.ஐ.டி. உலக அமைதி கல்வி நிறுவனம் இந்தியாவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை தேர்வு செய்து அதில் ஐவருக்கு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கி கௌவுரவித்து வருகிறது.

அமீருடன் இணைந்த வெற்றிமாறன்

தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர்களான வெற்றிமாறன் மற்றும் அமீர் மீண்டும் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமீர் வெற்றிமாறன் மௌனம் பேசியதே படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு இயக்குனராக அறிமுகமானவர் அமீர். அப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவின் ரசிகர்களை கவர்ந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

அதன்பின் ராம், பருத்திவீரன், ஆதி பகவன் போன்ற படங்களை இயக்கி முன்னணி இயக்குனர்களின் பட்டியலில் இணைந்தார். இவர் யோகி என்ற படத்தின் மூலம் நடிகராகவும் பயணித்தார். நீண்ட இடைவேளைக்கு பிறகு வெற்றிமாறன் இயக்கிய 'வடசென்னை' படத்தில் நடித்து பல பாராட்டுக்களையும் பெற்றார்.

இந்நிலையில் அமீர் மீண்டும் இயக்குனர் வெற்றிமாறனுடன் இணைந்து பணியாற்றவுள்ளார். இது குறித்து அமீர் வெளியிட்ட தகவலில், "எனது அடுத்த பயணம் தொடங்குகிறது. திரைப்படமென்பது ஒருவரின் தனிப்பட்ட பார்வைதான். அது அழகாக மாறுவதென்பது, இன்னொருவருடன் கைக்கோர்க்கும் போதுதான். நடைபெறுகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார். விரைவில் படம் குறித்த அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆபாச புகைப்படத்தால் அதிர்ந்த மாளவிகா மோகனன்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வரும் மாளவிகா மோகனனின் ஆபாச படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவுகிறது.

மாளவிகா மோகனன் நடிகர் விஜய் நடிப்பில் வெளியான 'மாஸ்டர்' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் மாளவிகா மோகனன். இவர் தொடர்சியாக அவருடைய வலைத்தளப் பக்கங்களில் கவர்ச்சியான மற்றும் கிளாமரான புகைப்படங்களை பதிவு செய்து வந்தார். இந்நிலையில் அவருடைய புகைப்படம் ஒன்றை மார்ப்பிங் செய்து ஆபாசமாக சித்தரித்து வெளியாகி இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் மாளவிகா மோகனன் ஒரு புகைப்படத்தை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார்.

இதனை சிலர் ஆபாசமாக சித்தரித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்கள்.

இதனை பார்த்து அதிர்ந்து போன மாளவிகா மோகனன். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, நிஜ புகைப்படத்தை ஒரு சிலர் போட்டோஷாப் மூலம் ஆபாசமாக மாற்றி வெளியிட்டு உள்ளனர்.

ஒரு சில ஊடகங்களும் அந்த புகைப்படத்தை பதிவு செய்து வருகின்றனர்.

அரசியலில் களமிறங்கும் திவ்யா சத்யராஜ்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான சத்யராஜின் மகள் திவ்யா சத்யராஜ் அரசியலில் களமிறங்க இருக்கிறார். திவ்யா சத்யராஜ் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக இருப்பவர் சத்யராஜ். நடிகராக மட்டுமில்லாமல் சமூக செயற்பாட்டாளராகவும் குறிப்பாக திராவிட இயக்க சிந்தனைகளை பிரசாரம் செய்யும் பெரியாரின் தொண்டராகவும் இருக்கக் கூடியவர். இவருடைய மகள் திவ்யா சத்யராஜ்.

ஊட்டச்சத்து நிபுணரான இவர், கொரோனா தொற்று நோய் பரவும் நேரத்தில் தமிழ் மக்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவை இலவசமாக வழங்க 'மகிழ்மதி' என்ற இயக்கத்தை ஆரம்பித்து செயல்படுத்தினார். மேலும் கொரோனா நேரத்தில் பெரும் இழப்புகளை சந்தித்த விவசாயிகளுக்கு நேரடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று விவசாயத்துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்தார்.

அதுபோல் சில வருடங்களுக்கு முன் மருத்துவ துறையில் நடக்கும் முறைகேடுகள் பற்றியும் நீட் தேர்வை எதிர்த்தும் பிரதமர் மோடிக்கு திவ்யா சத்யராஜ் கடிதம் எழுதினார். இந்நிலையில், திவ்யா சத்யராஜ் அரசியலில் களமிறங்க இருக்கிறார். இவருக்கு ஆதரவாக இவரது தந்தை சத்யராஜ் பிரச்சாரம் செய்ய இருப்பதாகவும் திவ்யா சத்யராஜ் கூறியிருக்கிறார்.

களுகல்ஓயா நீர்ப்பாசன திட்டத்தின் திறப்பு விழா இன்று

அமைச்சர் சமல் ராஜபக்ச தலைமையில் மிகப் பிரமாண்ட விழா

எஸ்.எல்.எம்.பிக்கீர்
அம்பாறை மத்திய குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பண்டாரதுவ விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாக இருந்துவந்த மிகப் பிரமாண்டமான களு கல்ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் கோலாகலமான திறப்பு விழா இன்று அம்பாறை மாவட்டத்தின் உகன பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரதுவ விவசாய கிராமத்தின் களுகல்ஓயா நீர்த்தேக்க அணைக்கட்டில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு விவசாயிகளின் நெற்காணிகள் இருபோக நெற்செய்கைக்கென இங்கினியாகல கல்ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு கிழக்கு மக்களின் வாழ்வுக்கு வழிசமைத்த மறைந்த பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க ஏற்படுத்திய அந்த திட்டத்தின் பின் அம்பாறை பண்டாரதுவ மக்களின் நல்வாழ்வுக்காக இருபோகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ள இந்த நீர்ப்பாசனத் திட்டமே களு கல்ஓயா நீர்த்தேக்க பணியாகும்.

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புறமான ஊவா வெல்லஸ்ஸ பகுதியின் தொறகிந்த மலைச்சாரலுக்கு மத்தியில் ஊற்றெடுத்துப் பாயும் இந்த நீர் மிகப் பிரமாண்டமான முறையில் காடுகளுக்கு மத்தியில் சுமார் 16 கிலோ மீற்றர் நீரோட்டமாக வந்து அம்பாறை பண்டாரதுவ பகுதிவரை மலைப்பாங்கான பகுதிகளை ஊடறுத்து வந்தடைகிறது. மலைப்பாங்கான காடுகளுக்கு மத்தியில் பாய்ந்து செல்லும் நீரோட்டத்தை தடுத்து நிறுத்தி 300 மீற்றர் தூரம் கொண்ட அணைக்கட்டை நிர்மாணித்து நீர்த்தேக்கமாக மாற்றி பல்லாண்டு காலமாக மழையை நம்பி சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்த விவசாயிகள் தாங்கள் இருபோகங்களிலும் நெற்செய்கையை மேற்கொள்ள

- மகிந்த சிந்தனையின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை – 2350 மில்.
- வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி – 2014.10.21
- பிரதான அணைக்கட்டின் நீளம் – 300 மீற்றர்
- அணைக்கட்டின் உயரம் – 59.5 மீற்றர்
- நீர்த்தேக்கம் கொள்ளளவு – 8177 அடி ஏக்கர்
- பயன்பெறும் குடும்பங்களின் தொகை – 1500

வழிவகுப்பதே இந்த களுகல்ஓயா நீர்த்தேக்கத்தின் முதலாவது இலக்காகும். இதன்மூலம் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களது காணிகளையும் பெற்று பாசன வசதியினையும் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவின்படி பாசன வசதியின் மூலம் இருபோகத்திலும் கூடிய விளைச்சலைப் பண்டாரதுவ விவசாயிகள் பெற்றுக் கொள்வதே இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதனாலேயே கடந்த காலமாக காடுகளுக்கு மத்தியில் ஊற்றெடுத்துப் பாய்ந்து கொண்டிருந்த இந்த ஆற்றை பண்டாரதுவ பகுதியில் அமைந்துள்ள இயற்கையுடன் சதுப்பு நில குளமான நவகிரியாவ குளத்துடன் இந்த நீர்சேருகிறது. இதனால் இந்த குளம் காலாகாலமாக பெருக்கெடுத்து வெள்ள நிலமைகளை தோற்றுவிப்பதுடன் இதிலிருந்து வெளியேறும் நீர் மட்டக்களப்பு நோக்கி கடலுடன் சென்று வீணாகக் கலக்கிறது. இதனால் கடந்த பல்லாண்டு காலமாக பாதிக்கபட்டவர்கள் பண்டாரதுவ பிரதேச மக்களே. காலாகாலமாக வெள்ள நிலைமைகளுக்கு மத்தியிலும் வாழும் நிலை காணப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் காடுகளுக்கிடையில் ஒரு போகத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சேனைப்பயிர்ச்செய்கையை நம்பியே இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக தங்களது வாழ்வை ஓட்டி வந்தனர். எனினும் இந்த நீரோட்டத்தினை தடுத்து நிறுத்தி தங்களுக்கு பாசன நீராக மாற்றுமாறு காலம் காலமாக அரசியல்வாதிகளிடமும் அரசுகளிடமும் விடுத்து வந்த கோரிக்கைகளை அடுத்தே இப்பிரமாண்டமான நீர்ப்பாசத் திட்டம் அமையப்பெற்றுள்ளமையும் உண்மையே.

இதனாலேயே 2011ல் ஜனாதிபதி மகிந்த ஆட்சிக் காலத்தில் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் இதற்கான ஆரம்பக் கட்ட செயற்பாடுகள் முன்னாள் அமைச்சர் பி.தயாரத்னவின் தலைமையில் முன்னாள் நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவின் ஒத்துழைப்பிலும் 2014.10.21ல் இதன் ஆரம்ப நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எந்தவித வெளிநாட்டு உதவியுமின்றி நம் நாட்டில் பொறியியலாளர்களின் உதவியுடனும் பண்டாரதுவ மக்களின் உதவிகளைக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த திட்டத்திற்கென 2350 மில்லியன் இலங்கை அரசின் நிதி மட்டுமே இதுவரையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுகத் கமகே தெரிவித்தார்.

ஆனால் கிழக்கு மாகாணத்தை விவசாயத்தில் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றிய கல்ஓயா நீர்ப்பாசனத் திட்டத்துடன் எவ்வித சம்பந்தமும் இல்லாத இந்த நீர்த்தேக்கம் முழுக்க முழுக்க ஊவா வெல்லஸ்ஸ பகுதிகளில் இருந்து வனாந்தரக் காடுகளுடாக உகண பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சுமார் 30 கி.மீ தூரத்திற்கு அப்பால் உள்ள பண்டாரதுவ கிராமத்தை வந்தடைவதும் குறிப்பிடத்தக்கது. எனினும் கடந்த சில வருடங்களாக மந்தகதியில் செயற்பட்டு வந்த இந்த வேலைத்திட்டம் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவின் ஆட்சி மலர்விற்குப் பின் துரித கதியில் அபிவிருத்தி கண்டது.

என்றாலும் இந்த வேலைத்திட்டம் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு 2021.04.09ல் மக்களிடம் கையளிக்கப்படவிருந்தும் ஆனால் நாட்டில் ஏற்பட்ட கொரோனா நிலைமை காரணமாக அந்த நிகழ்வு கைவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஊவா வெல்லஸ்ஸ பகுதியில் 1815ல் ஆங்கிலேய ஆட்சிக்காரருடன் ஏற்பட்ட கலவரத்தில் புறமுதுகு காட்டி ஓடிய முதலாம் ராஜசிங்க மன்னனை துரத்திவந்த ஆங்கிலேயர் அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களை துன்புறுத்தி தாக்கியமையினால் ஊவா வெல்லஸ்ஸவை விட்டு பயத்தினால் இடம்பெயர்ந்து வனாந்திரக் காடுகள் ஊடாக சுமார் 18 கி.மீ தூரம் வரை நீர் வழிந்தோடும் திசையை நோக்கி வந்து குடியேறி சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வாழ்ந்து வருகின்றனர்.

சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு அதிகாலையில் தூங்கிக் கொண்டிருந்த 32 விவசாயிகள் மீது 1991.08.07ல் ஆயுதம் தரித்த பயங்கரவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டு உயிர் காவு கொள்ளப்பட்ட கிராமமே பண்டாரதுவ

பின்னர் நம் நாட்டின் வட,கிழக்கில் ஏற்பட்ட யுத்த காலப்பகுதியில் கூட 1991.08.07 அதிகாலையில் புகுந்த ஆயுதம் தரித்த பயங்கரவாதிகள் தூங்கிக் கொண்டிருந்த 32 குடிமக்களின் உயிர்களைக் காவு கொண்டனர். இவ்வாறு காட்டு வாழ்க்கையுடன் தொடர்புபட்ட இவர்களின் அடிப்படை வசதிகள்கூட மறுக்கபட்டு கல்வி, சுகாதாரம் என்பவற்றால் புறக்கணிப்பு ஏற்பட்டாலும் மிக அண்மையிலேதான் இவர்களுக்கான குடிநீர் கட்டமைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இப் பிரதேசத்தில் நீண்டகாலமாக வாழும் விவசாய பிரதிநிதி எம்.சோமரத்ன தெரிவித்தார்.

இந்த நீர்ப்பாசத் திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாவட்ட நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் சுமத் கமகே, நீண்ட காலமாக சேனைப் பயிர்ச்செய்கை செய்து வந்த விவசாயிகள் தற்போது சந்தோசமடைந்துள்ளதாகவும் ஆனால் முழுக்க முழுக்க எமது நாட்டில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்ட தொழிநுட்ப உபகரணங்களைக் கொண்டும் தனியே நமது நாட்டின் நிதியைக் கொண்டும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் இந்த திட்டத்தின் மேற்பார்வை பொறியியலாளராக ஏ.எல்.எம்.நியாஸ் தொடர்ந்தும் பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிகழ்வில் நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ச, இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜயரத்ன, இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ.டி.வீரசிங்க, திலக் ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் பி.தயாரத்ன, நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் நிஹால் சிறிவர்தன, மற்றும் அரசாங்க அதிபர் உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊர்காவற்றுறை பெண் அடித்துக் கொலை

ஐந்து வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்

மயூரபிரியன்

ஊர்காவற்துறை பகுதியில் கர்ப்பிணி பெண்ணொருவரை அடித்துக்கொலை செய்த பின்னர், நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில், ஐந்து வருடங்களின் பின்னர் சந்தேக நபர் ஒருவர் குற்ற புலனாய்வு துறையினரின் விசாரணைகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் கடந்த 2ஆம் திகதி புதன்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பகுதியில் கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஞானசேகரன் ஹம்சிகா (வயது 27) எனும் 7 மாத கர்ப்பிணிப் பெண் அடித்துக் கொலை செய்யப்பட்டு, அவரது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

கணவர் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் கடமையாற்றி வருவதனால், ஊர்காவற்துறை பகுதியில் வாடகைக்கு வீடெடுத்து தங்கி வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுக்கு நான்கு வயதில் ஒரு பெண் பிள்ளையும் உண்டு.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் அன்றைய தினம் வழமை போன்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றுக்கு கடமைக்கு சென்று உள்ளார்.

மனைவி கர்ப்பிணியாக இருப்பதனால், மதிய வேளைகளில் மனைவியுடன் தொலைபேசியில் உரையாடுவதனை வழக்கமாக கொண்டிருந்துள்ளார். அவ்வாறு அன்றைய தினமும், மனைவிக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்திய வேளை பதில் இல்லாததால் அயலவர்களுடன் தொடர்பு கொண்டு மனைவி பற்றி விசாரித்துள்ளார்.

அதனை அடுத்து அயலவர்கள் வீட்டுக்கு சென்று பார்த்தபோது அவரது மனைவி இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார். அதனை கண்ணுற்ற அயலவர்கள் உடனடியாக கணவருக்கு அறிவித்ததுடன் பொலிசாருக்கும் தகவல்கள் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணை படுகொலை செய்த கொலையாளிகள், பெண்ணின் தலையின் பின்புறத்தில் கட்டையால் பலமாக அடித்துள்ளனர். அத்துடன் கழுத்து பகுதியில் வெட்டியும் உள்ளனர்.

பெண்ணை படுகொலை செய்த பின்னர், தடயங்களை அழிக்கும் நோக்குடன் கொலையாளிகள் செயற்பட்டுள்ளனர். இரத்தக்கறைகளை கழுவியும் உள்ளனர். பின்னர் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்றுறை பொலிஸார், கொலை இடம்பெற்ற அன்றைய தினம் மாலை யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியை சேர்ந்த சகோதரர்கள் இருவர் இரத்தக்கறை படிந்த ஆடைகளுடன் முச்சக்கர வண்டியில், ஊர்காவற்துறை பக்கமாக இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி பயணித்தபோது மண்டைதீவு பொலிஸ் காவலரணில் கடமையிலிருந்த பொலிஸாரினால், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கைதான சகோதரர்கள் இருவரும், வாக்குமூலம் அளிக்கையில் சகோதரர், விபத்துக்கு உள்ளானதாகவும், அதனாலையே தமது ஆடையில் இரத்தகறை இருந்ததாகவும் தெரிவித்தனர்.

பின்னர் இருவரும் ஊர்காவற்துறை பொலிஸாரினால், ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் சம்பவம் நடந்த தினத்தன்று சம்பவ இடத்தில் இருக்கவில்லை என சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி திருக்குமரன்

கொலை நிகழ்ந்த வீடு

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன் போது சந்தேக நபர்கள் தரப்பு சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்த போது, கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவர் கொலை நடந்ததாக கூறப்படும் ஜனவரி 24ம் திகதி காலை 11.30 மணியளவில், சம்பவம் நடந்த ஊர்காவற்துறை பகுதியில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மருதனார்மடத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முச்சக்கர வண்டிக்கு எரிபொருள் நிரப்பி உள்ளார்.

அதற்கு ஆதாரமாக குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கமராவில் காட்சிகள் பதிவாகியுள்ளன. அவற்றை பெற்று விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதேவேளை மற்றைய சந்தேக நபர் சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் நேரத்தில் வேலணை பகுதியில் நின்று உள்ளார். அவர் வேலணை பகுதியில் துவிச்சக்கர வண்டியில் விபத்துக்கு உள்ளாகி உள்ளார்.

அதனால் அவருக்கு இரத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்காக வேலணையில் உள்ள மருத்துவ சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று உள்ளார்.

அத்துடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களின் தொலை பேசி அழைப்புகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதன் மூலம் அவர்கள் தொலைபேசியில் உரையாடியதனை வைத்து அவர்கள் எந்த தொலைத்தொடர்பு கோபுர வலையத்தினுள் இருந்து உரையாடல்

கணவருடன் ஹம்சிகா

களை மேற்கொண்டார்கள் என்பதனை கண்டறிய முடியும்.

அதன் மூலம் அவர்கள் கொலை நடந்த நேரத்தை அண்மித்த நேரங்களில் எந்த பகுதியில் இருந்தார்கள் என்பதனை கண்டறிய முடியும்.

எனவே தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என நீதிமன்றில் சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார்

அதனை அடுத்து நீதிவான் மருதனார் மடத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கமராவின் ஒளிப்பதிவு காட்சிகளை பெற்று விசாரணைகளை முன்னெடுக்குமாறும், வேலணையில் சந்தேக நபர்களில் ஒருவர் சிகிச்சை பெற்றதாக கூறப்படும் சிகிச்சை நிலையத்தில் வைத்தியர் மற்றும் பணியாளர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களின் வாக்கு மூலங்களை பெறுமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன் கடந்த 21ம் திகதி முதல் 24ம் திகதி வரையிலான காலப் பகுதியில் சந்தேக நபர்களின் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

படுகொலையை கண்ணால் கண்ட சாட்சியமாக 12 வயது சிறுவன் உள்ளதாக பொலிஸார் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி நீதிமன்றில் தெரிவித்து இருந்தனர்.

அந்நிலையில் இரு நாட்களின் பின்னர், 27ம் திகதி சாட்சியமான சிறுவனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக நன்னடத்தை பிரிவு உத்தியோகஸ்தரினால் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சிறுவனின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு சிறுவன் பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்கப்பட வேண்டும். சிறுவனுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டதற்கு அமைய பாதுகாப்பு வழங்கப்பட்டதா ? என்பது தொடர்பான அறிக்கை மன்றில் சமர்ப்பிக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்கான காரணம் தொடர்பில் மன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டார்.

சிறுவனின் வாக்கு மூலத்தை காவல் துறையினர் பதிவு செய்ய வேண்டும். அதற்கு நவில்ட் பாடசாலையில் இருந்து சைகை மொழி தெரிந்த ஆசிரியர்களை அழைத்து அவர்கள் உதவியுடன் வாக்கு மூலத்தை பதிவு செய்ய வேண்டும். அல்லது சிறுவனுக்கு பரிச்சியமான சிறுவனின் சைகை மொழி தெரிந்தவரின் உதவியுடன் வாக்கு மூலத்தை பதிவு செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்டவர் நலன் சார்ந்து மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கோரிக்கையை முன் வைத்தார்.

தொடர்ந்து குறித்த சட்டத்தரணி மன்றில் கோரிக்கை முன்வைக்கையில்,

அச்சுறுத்தல் விடுத்தவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். சிறுவன் கூறும் அங்க அடையாளங்களை கொண்டு அச்சுறுத்தல் விடுத்தவர்களை சாட்சியங்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றில் வழங்கு தொடர வேண்டும் என்றார்.

உரிய நிபுணர்களின் உதவியுடன், அச்சுறுத்தல் விடுத்தவர்கள் தொடர்பில், சிறுவன் கூறும் அடையாளங்களை கொண்டு ஓவியம் வரைந்து, அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைது செய்து அவர்கள் மீது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தனியாக வழக்கு தொடருமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

அத்துடன் நீதிமன்றில் மறு அறிவித்தல் வரை சிறுவனுக்கு காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது , சிறுவனின் தாயார் சாட்சியம் அளிக்கும் போது, கொலையுண்ட பெண்ணின் வீட்டுக்கு எனது மகன் செல்வான். அங்கு சென்று தொலைக்காட்சி பார்ப்பான். அவர்களது பிள்ளையுடன் விளையாடுவான். அவ்வாறே கொலை நடந்த தினமான கடந்த 24ம் திகதி இவன் அந்த வீட்ட சென்றுள்ளான். அப்போது அங்கு இருவர் நின்று அவனை மிரட்டி துரத்தி உள்ளனர். அவர்கள் தான் அந்த பெண்ணை கொலை செய்து இருக்க வேண்டும். கொலையாளிகளை என் மகன் கண்டுள்ளான்.

பிறகு 27ம் திகதி வீதியில் வைத்து யாரோ என் மகனைக் கொலை செய்வதாக மிரட்டி உள்ளனர். அதனை நீதிமன்றுக்கு தெரிவித்தோம். அத்துடன் ஊர்காவற்துறை காவல்நிலையத்திலும் அது தொடர்பில் முறைப்பாடு செய்தோம்.

தற்போது எனது மகனுக்கு காவல் துறை பாதுகாப்பு அளித்துள்ளது. இருந்தாலும் எனது மகனை தனியே விட்டு விட்டு நான் வேலைக்கு செல்ல முடியாதுள்ளது. அவனை நான் வேலை பார்க்கும் இடத்திற்கு சில வேளைகளில் அழைத்து செல்வேன். சில இடங்களுக்கு அழைத்து செல்ல முடியாது. அதனால் நான் வேலைக்கு போக முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் நானும் அவனும் மிகவும் வறுமையில் வாழ்கின்றோம் என தெரிவித்தார்.

கடந்த 2012ம் ஆண்டு பங்குனி மாதம் 3ம் திகதி நெடுந்தீவு சந்தைக்கு சென்ற சிறுமியை நெடுந்தீவை சேர்ந்த ஜெகன் என அழைக்கப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் என்பவர் கடத்தி, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி, கல்லொன்றால் அடித்து கொலை செய்தார் எனும் குற்றச்சாட்டில் யாழ். மேல் நீதிமன்றம் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி குற்றவாளியாக கண்டு மரண தண்டனை விதித்தது.

குறித்த மரண தண்டனை கைதியான ஜெகன், படுகொலை சம்பவத்தின் கண்கண்ட சாட்சியான சிறுவனின் உறவினர் முறையான நபர் ஒருவருடன் சிறையில், குறித்த படுகொலை தொடர்பில் தனக்கு தகவல்கள் தெரியும் எனவும், அதனை தான் நீதிமன்றில் கூறுவதற்கு தனக்கு ஐந்து இலட்சம் பணம் தருமாறும் பேரம் பேசியதாக ஊர்காவற்துறை பொலிஸார் 2017 ஏப்ரல் 28ஆம் திகதி நீதிமன்றில் தெரிவித்தனர்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையை சிறந்த மென்பொருள் வடிவமைப்பு பிராந்தியமாகத் திகழச் செய்யும் Rootcode Studio

உலகத் தரம் வாய்ந்த மென்பொருள் மற்றும் பொறியியல் ஆற்றல்களுக்கான, வளர்ந்து வரும் சந்தையாக இலங்கையை திகழச் செய்வதுடன், இலங்கையின் வடிவமைப்பு திறமைசாலிகளை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்லும் வகையில், முன்னணி மென்பொருள் வடிவமைப்பு பொறியியல் நிறுவனமான Rootcode Labs தனது புதிய துணை நிறுவனமான Rootcode Studio ஐ இலங்கையில் நிறுவியுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வு கொழும்பு Movenpick ஹோட்டலின் Mont Blanc Ballroom இல் ஜனவரி 29 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாட்டின் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த புகழ்பெற்ற பலர் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையின் முன்னணி வடிவமைப்பு ஸ்ரூடியோக்களில் ஒன்றாக Rootcode Studio, தமது வர்த்தக நாமங்களையும் சிந்தனைகளையும் மாற்றியமைக்கும் சிறந்த வடிவமைப்புத் திறனை நிறுவனங்களுக்கு வழங்கி உதவுகின்றது. Rootcode இனால் பல நிறுவனங்களுக்கு மொபைல் மற்றும் வெப் அப்ளிகேஷன்கள், AI தீர்வுகள், அளவிடக்கூடிய Minimum Viable Products (MVPs), வடிவமைப்பு தயாரிப்புகள் மற்றும் புரொடோடைப்பிங் மற்றும் மென்பொருள் தரத்தை கணக்காய்வு செய்வது போன்றன வடிவமைத்து வழங்கப்பட்டுள்ளன.

UI/UX வடிவமைப்பாளர்கள், தயாரிப்பு வடிவமைப்பாளர்கள், வடிவமைப்பு ஆலோசகர்கள், தந்திரோபாய நிபுணர்கள் மற்றும்

ஆக்கத்திறனாளர்கள் போன்ற பரந்த அணியினர் ஒவ்வொரு செயற்திட்டத்தையும் சவால்கள் நிறைந்த சிந்தனைகளின் அடிப்படையில் முன்னெடுப்பதுடன், சகல எதிர்பார்ப்புகளையும் விஞ்சும் வகையில் நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்கின்றனர்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகளில் UI/UX வடிவமைப்பு, பாவனையாளரை மையப்படுத்தி அனுபவ அடிப்படையிலான, மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய வர்த்தக நாம அலங்காரம், UX கணக்காய்வு, பாவனையாளர்களின் தேவைகளை ஆராய்ந்து அதற்கு பொருத்தமான வகையிலமைந்த தீர்வுகளை வழங்கக்கூடிய UX ஆய்வு முறைகள் போன்றன அடங்கியுள்ளன.

Rootcode ஸ்ரூடியோ வடிவமைப்பு செயன்முறையில் (3i's) முதலில் ஈடுபாட்டுடனான (Immerse) செயன்முறை உள்வாங்கப்பட்டுள்ளது.

தேசிய தொழில் கண்காட்சி மற்றும் விருது விழாவுக்கு Dialog Enterprise அனுசரணை

இலங்கையின் கைத்தொழில்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் புதிய இயல்புநிலையில் புத்துயிர் பெறுவதற்காக அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, டயலொக் ஆசிஆட்டாவின் கார்ப்பரேட் தீர்வுகள் பிரிவான Dialog Enterprise 2022 தேசிய தொழில் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழாவிற்கான அனுசரணையை வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்த நிகழ்வற்கு Dialog Finance மற்றும் Dialog genie உத்தியோகப்பூர்வ கொடுப்பனவு பங்காளராகவும் FinTech பங்காளராகவும் செயல்படுகின்றன.

கைத்தொழில் அமைச்சின் அனுசரணையில் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய தொழில் கண்காட்சியானது பெப்ரவரி 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உற்பத்தி, வர்த்தகம், கட்டுமானம் மற்றும் பல தொழில்துறைகளைச் சேர்ந்த பல தொழில்முனைவோர், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் கண்காட்சியாளர்களைக் உள்ளடக்கியுள்ளது. இந் நிகழ்வின் பிரதம அதிதிகளாக ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷ உட்பட, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் இந்தோனேசியா தொழில்துறை அமைச்சர் அகஸ் குமிவாங் கர்தசஸ்மிதா ஆகியோரின் முன்னிலையில் தேசிய கைத்தொழில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது

Dialog Enterprise இன் குழும பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், "தொற்றுநோயின் பின்னணியில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் புத்தாக்கம் மற்றும் வாய்ப்புகளைத் தேடும் இயல்பு காரணமாக இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகிவுடன், மேலும் இலங்கையை சிறந்த முறையில் மீளக் கட்டியெழுப்புவதற்கு அவை முக்கிய பங்களிப்பினை வழங்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்றார்.

தினகரன் வாரமஞ்சரி
BUDGET
It suits your budget
ADZ
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

கொழும்பு 3
10 பேர்ச் விற்பனைக்கு
வர்த்தகத்திற்கு அல்லது உயர் வசிப்பிடத்திற்கான முதன்மையான ஆதனம்
காலி வீதியிலிருந்து 2 ஆம் தொகுதி முன் பக்கமாக 40 அடி
076 197 8 333

60 பேர்ச் வெற்றுக் காணி விற்பனைக்கு
கம்மலதொட்ட - சுற்றுலாத்துறை பிரதேசம் நீர்கொழும்பு புதிய கிங்ஸ்பெரி ஹோட்டலுக்கு முன்பாக
076 197 8 333

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு
100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342

மீண்டுமொரு பனிப்போருக்கு...

(12ஆம் பக்கத் தொடர்)

இவ் எண்ணங்களுடனேயே உக்ரைன் எல்லைகளிலும் இராணுவ பிரசன்ன அதிகரிப்பை புடின் மேற்கொள்கின்றார்.

நான்காவது, ரஷ்யா, உக்ரைன் பதற்றத்தில் சீனா ரஷ்யாவிற்கு தொடர்ச்சியாக பலமான ஆதரவை வழங்கி வருகிறது. புடினுக்கான பொருளாதார மற்றும் அரசியல் ஆதரவுக்கான வாக்குறுதியை சீனா வழங்கியுள்ளது. இது, இராணுவக் கட்டமைப்பிற்காக ரஷ்யத் தலைவரை ஒதுக்கி வைப்பதற்கான பைடனின் மூலோபாயத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடியதாகும். பெப்ரவரி 03 அன்று புடின் சீன அரசு செய்தி நிறுவனமான சின்ஹுவாவுக்கு அளித்த நேர்காணலில், சீன ஜனாதிபதி உடன் வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் ஒருதலைப்பட்ச தடைகளின் எதிர்மறை தாக்கத்தை ஈடுசெய்யும் உலகளாவிய நிதி வழிமுறைகளை உருவாக்குவதற்கான உத்திகள் பற்றி விவாதிக்க உள்ளதாக தெரிவித்தார். பெப்ரவரி 04அன்று புடின் மற்றும் ஷி ஜின் பின் பெய்ஜிங்கில் சந்திப்பு மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் உக்ரைன் மீதான நடவடிக்கையைத் தடுக்க ரஷ்யாவுடன் சீனா இணைந்து செயற்பட்டிருந்தது.

எனவே, ரஷ்யா, உக்ரைன் விவகாரத்தின் கொதிநிலை அதிகமாக ரஷ்யாவிற்கு சாதகமான சமிக்ஞையையே வெளிப்படுத்துவதனை உணர முடிகிறது. வரலாற்றில் ரஷ்யாவுடனான அமெரிக்காவின் நெருக்கடிகளை அமெரிக்காவிற்கு சாதகமாக்கியமையில் ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பே அதிகமாக காணப்பட்டிருந்தது. எனினும் தற்போது ஏற்பட்டுள்ள ரஷ்சிய, உக்ரைன் நெருக்கடியில் ஐரோப்பிய நாடுகள் பிளவுபட்டுள்ளதுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் பலமான நாடுகள் ரஷ்யாவை எதிர்க்க விரும்பாமை அமெரிக்காவிற்கு பேரிடரான விடயமாகவே உள்ளது. மறுதலையாய் ரஷ்யாவின் பக்கம் புடினின் தலைமைத்துவ ஆளுமை, புவிசார் அரசியல் பலம் மற்றும் சீனா ஆதரவுத்தளம் என்பன வெற்றிக்கான அடையாளங்களை காட்டுவதாகவே புலப்படுகிறது.

பஞ்சாங்க வழக்கில்...

(05ஆம் பக்கத் தொடர்)

மேற்குறிப்பிடப்பட்ட சாட்சியங்களுக்கு அமைய செலவிடப்பட்ட நிதியானது சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்காக சட்டபூர்வமான முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்து சட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றி சரியான முறையில் செலவிடப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

4 வ து குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட 2014.11.22 திகதியில் ஆன PER/2015/43 சுற்றுநிருபம் மீறப்பட்டுள்ளதாக எவ்விதமான சாட்சியங்களும் வழங்கப்படவில்லை.

குறிப்பிடப்பட்ட சாட்சிகளுக்கு அமைய நான்காவது குற்றச்சாட்டும் உறுதி செய்யப்படாத தோடு அந்த முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஐந்தாவது குற்றச்சாட்டும் தோல்வி அடைந்துள்ளது. 1வது குற்றம்சாட்டப்பட்டவராக இந்த நீதிமன்றின் முன்னாலுள்ள அன்றைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ மற்றும் 2 வது குற்றம்சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றின் முன்னால் உள்ள திவிநெகும திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரணவக்க ஆராய்ச்சிலாகே அமித்த கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை போதுமான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மூலம் உறுதி செய்ய முறைப்பாட்டாளர்கள் தவறியுள்ளதாக உறுதிசெய்து குற்றம்சாட்டப்பட்டவர்கள் இருவரையும் குற்றங்களில் இருந்து விடுவித்து விடுதலை செய்கின்றேன்.என உயர் நீதிமன்ற நீதிபதி தமித் தொவவட்டத்தை இதற்காக கையொப்பம் இட்டுள்ளார்.

திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

தேசிய ஆரம்பக் கல்வி நிறுவனம் NIFS

கண்டி, தேசிய ஆரம்பக்கல்வி நிறுவனத்தில் வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் பதவி தொடர்பான அறிவித்தல் 2022.02.06 அன்று சண்டே ஒப்சவர் பத்திரிகையை மற்றும் எமது www.nifs.ac.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காகத் தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

செயலாளர்/ நிருவாக சபை,
தேசிய ஆரம்பக் கல்வி நிறுவனம்,
ஹன்தான வீதி,
கண்டி.

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

மோட்டார் வாகனங்கள்

109 மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு

மிட்சுபிஷி லான்சர் மெனிக்மொடல் சிறந்த நிலை 12 1/2 இலட்சம். ஆர்.டி.என்டர்பிரைசஸ் (கார்சேல்) ஹைலெவல் வீதி, பன்னி பிட்டிய 0777316909, 011 2514769 009136

வர்த்தகம்

207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கண்டி பெறுமதியான கட்டிடம் விற்பனைக்கு. 06 மாடிகள் (20 பேர்ச்) கண்டி, குண்டசாலை குடியிருப்புப் பிரதேசம். 18000 சதுர அடி. பிரதான வீதிக்கு முகப்பாக 80 அடி அகலம். பிரதான வீதிக்கு சமாந்தரமாக மாடி. 06 கடைகள், மேல் மாடி 07 கடைகள், 02 பிரத்தியேக மண்டபங்கள். நிலக்கீழ் மாடி உண்டு. பிரத்தியேகமாக 02 மண்ட பங்களுடன் களஞ்சியங்கள், குடியிருப்பு அறை பிரதே சங்கள். மாதாந்த வருமானம் 4 இலட்சம் (வங்கிக் கடனுடன்) ரூபா 1200 மில்லியனுடன் எல்லா வசதிகளும். தரகர்கள் வேண்டாம். 0777438169, 0777282147. 007993

கண்டி, குண்டசாலை பெறுமதியான காணி குறைந்த விலைக்கு விற்பனைக்கு. சதுர வடிவ காணி. 160 அடி அகலம், கென்டோஸ் சொக்லேட் தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ளது. வர்த்தக வங்கிகள், Earls Regent ஹோட்டலுக்கு மிக அருகில். ஆலோசனை நிலையத்திற்கு பொருத்தமானது. காணியைச் சுற்றி பாரிய சுவர், இரும்பு கேட் உடன். நடைதூரம் 5 நிமிட ஓட்டத்தில். BOI பல்லேகெலே கிரிக்கெட் அரங்கு, மின்சாரம், நீர் உண்டு. 80 பேர்ச் மொத்த சதுர அடி 21780. தொகை 85 மில்லியன். பாவனையாளருக்கு மட்டும். தொடர்பு 0777438169, 0777282147. 008014

0777282147 கண்டி முதல் கடுகண்ணாவ வரை, கண்டி முதல் திகன நகர் வரை, கண்டி முதல் குருநாகல் வீதி வரை, கண்டி முதல் மாத்தளை வீதி வரை காபட் வீதிக்கு முகப்பாக பல்வேறு வியாபார ஸ்தலம் மற்றும் வீதியிலிருந்து உட்புறமாக 100, 200 மீற்றர். சாதார ண ஹோட்டல்/ வீடு/ வெற்றுக் காணி 20 மில்லியன் முதல் அதற்கு மேல் விற்பனைக்கு. (வங்கிக்கடன் உள்ள/ இல்லாத) 077 7 4 381 69 008013

வேலைவாய்ப்பு

308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

தெல்கொட பிரதேசத்தில் முதன்மையான சுப்பிரி வியாபார நிலையத்திற்கு உதவியாள் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். விசாரணைக ளுக்கு. 0712906 222, 2402405 009157

முன்னணி கம்பனிக்கு சந் தைப்படுத்தல் அதிகா ரிகளை சேர்த்துக்கொள்கிறது. கொழும்பு புறநகர் 45 வயதிற்குக் கீழ் சம்பளம் கமிஷன், போனஸ், மெடிக்கல், தொ. பேசி, வாகனங்கள் உள்ளடக்கம். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இன்ஹவுஸ் மார்கடிங் 0776300429, 0773928246 003372

309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

Audit Trainee Secretary Trainee with A/L Commerce apply agape accounting services 89-1/2 Bank Shall Street, Colombo-11. e-mail - agapeaccservices@gmail.com whatsapp - 07 55 03 09 54 Telephone - 0777239397 005041

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

பவர் ஜெனரேட்டர், பவர் டிஸ்டிரிபியூஷன் பெனல், மாற்றீடு களை நிறுவுதல் மற்றும் பழுதுபார்த்தல்களுக்கு இலெக்ரிசியன் மற்றும் மின்னியல் தொழில்நுட்பவியலாளர் தேவை. தொடர்பு 0768232310. 009280

317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

கொழும்பு15 முகத்துவாரம் பிரதேசத்தில் அமைந்துள்ள தையல் நிலையத்திற்கு தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை. நாள் சம்பளம். அல்லது பேசித் தீர்த்து, தைக்கும் ஆடைகளின் படி தீர்மானிக்கலாம். தங்குமிட வசதிகள் உண்டு. அழையுங்கள் 0786014352, 0759031310 008691

Juki Machine Operators, Trainees/ He lpers வத்தளையில் அமைந்திருக்கும் ஏற்றுமதி தரத்தில் துணி உற்பத்தி செய்யப்படும் கம்பனிக்கு துவாய் மற்றும் பெட்ஷீட் தைப்பதற்கு அனுபவமுள்ள தையல் இயந்திர இயக்குநர்கள் (Juki Machine Operators), பயிற்சி பெறவிரும்பு ம் தையல் இயந்திர இயக்குனர்கள் (Juki Machine Trainee Operators) மற்றும் ஆண், பெண் உதவியாளர்கள் (Helpers) தேவை. (Sub Contract கொடுக்கப்பட மாட்டாது ஒருநாள் சம்பளம் ரூ. 1,200/ வருகை கொடுப்பனவு கள். தங்குமிட வ சதி இலவசம், குறைந்த விலைக்கு மூன்று நேர ஆகாரம். (மாதாந்த சம்பளம்.) இல. 18, வெளிமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல. 0777800682/ 07662 00300 009410

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கண்டி தோட்ட அதிகாரி ஒருவருக்கு கௌரவமான சூழலில் தங்கி வேலை செய்யக் கூடிய ஒருவர் தேவை. சம்பளம் ரூபா 40,000/= சகல வசதிக ளுடன் ரம்மியமான சூழலி ல் வேலை செய்வதற்கு பாடசாலை செல்லும் பிள்ளையையும் வைத்துக் கொள்ள வசதியுண்டு. விண்ணப்பங்களை தெவ்சிரி, வட்டப்பொல. பிலிமத்தலாவ. 009220

பிலியந்தல வீட்டிற்கு 50 வயதிற்குக் குறைந்த சமையல் (Cooking) தெரிந்த மற்றும் ஏனைய வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பெண்கள் தேவை. 0742526555 009431

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

மாத்தறை நகரத்திற்குள் அமைந்துள்ள ஹோட்டலுக்கு திறமையான கொத்து, ரைஸ் பாஸ், சமையலறைக்கு கையுதவியாட்கள், சுத்திகரி ப்பா ளர்கள் மற்றும் அனுப வமுள்ள வெயிட்டர்கள் தேவை. திறமை அ டிப்படையில் கூடுதல் சம்பளம். தங்கி வேலை செய்வதற்கு விரும்புபவர்கள் அழையுங்கள். 0761659807, 0714170801. 009412

0759565603, பேஸ்ட்ரி சொப் மற்றும் ஹோட்டலுக்கு ஆ ண்/ பெண் ஊழியர்க ள், கோக்கி, கொத்து, ரைஸ் பாஸ் தேவை. வேயன்கொட. 009415

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

குருநாகல் தோட்டத்தில் சேவைக்கு குடும்பம் அல்லது தனி நபர் தேவை. பொலிஸ் அறிக்கை, கிராம சேவகர் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை தேவையெனி ல். 0770311 9 63 008012

தென்னந் தோட்டத்தில் மா ட்டு வண்டி பூட்டவும் ஏனைய வேலைகளுக்குமாக காவலாளி தேவை. தொலைபேசி இல. 0777897837 007838

322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

நிர்மாண விடயங்களுக்கு மேசன் பாஸ் (2750/= முதல்) கையுதவியாட்கள் (2500/=) தேவை. கொட்டாவ. 0775185625. 009420

பாணந்துறை வேலைத்தளத்திற்கு திறமையான மேசன், டைல் பாஸ். கையுத வியாட்கள் தேவை. (மாதாந்த சம்பளம்) சம்பளம் 2500/= முதல் அதற்கு மேல். அழையுங்கள் 0775161291, 0771271930. 009417

325 தொழில்துறை பொது

கொழும்பு சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு சுப்பவைசர் ஆண்/ பெண். பொலிஷர் இயந்திர இயக்குநர்கள் தேவை. கூட்டுதல் சம்பளம் அழையுங்கள் 0772771022 008684

சிறந்த கணனி அறிவுள்ள 3050 வயது பெண் அலுவலக உதவியாளர் தேவை. ஆங்கில மொழியில் கருமமாற்றுதல் மேலதிக தகைமையாகும். கொழும்பு 13 இற்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை உண்டு. தொலைபேசி இல. 0757700926. Mona Marine (Pvt) Ltd, இல. 164/3, இரண்டாம் மாடி, மகா வித்தியாலய மாவ த்தை, கொழும்பு13. 007373

தெஹிவளை யில் ஹாட்வெயா ர் கடைக்கு அ னு ப வ முள்ள, அனுபவமற்ற பெண் விற்பனையாளர்கள் மற்றும் காசாளர்கள் தேவை. 0771375434 008893

மோட்டார் மற்றும் இன்ஜின் துணைப்பாகங்கள் மற்றும் மின் பாகங்களில் அனுபவமுள்ள களஞ்சிய பொறுப்பாளர் தேவை. அனுபவம் மற்றும் உங்களுக்காக பரிந்துரைக்கக்கூடிய இரண்டு உறவினரல்லாத பரிந்துரைப்பவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களை மின்னஞ்சல் செய்வதற்கு ceo@esnaallied.com 0768232310 009295

பொது

426 தொழில் கல்வி

புளுமின் பட்ஸ் சமூக கண்காணிப்பு மன்றத்திற்கு செயற்றிட்டம் எழுதுவதற்கு ஆங்கிலம் சிறந்த திறமையுள்ள எமது செயற்றிட்டத்திற்கு மதிப்பீடு செய்து நிர்வகிப்பதற்கு இயலுமான வர்கள் தேவை. 388/1/1, பேஸ்லைன் வீ தி, தெமட்டகொட. 0112 677641, 0771 529731, 0775 509641. 009351

மொன ராகல, நுவரெலியா, கம்ப ஹா மாவட்டத்தை மையமாகக் கொண்டுள்ள புலுமின் பட்ஸ் சமூக ஒத்துழைப்பு மன்றத்தினால் செயற்படுத்தப்படும் "தவறவிடப்பட்ட கல்விக்கு கைகொடுத்தல்" என்ற கல்வி நிகழ்ச்சிக்கு தொண்டர் அடிப்படையில் உதவி செய்யக்கூடிய ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தேவை. மேலும் அந்த வேலைத் திட்டத்திற்கு ஏதேனும் வகையில் பங்களிப்பு செய்யக்கூடிய பரோபகாரிகள் தேவை. 388/1/1, பேஸ்லைன் வீ தி, தெமட்டகொட, 011 2677641, 0703318641, 077 5509641 009320

432 நானாவிதப் பொருட்கள்

வவுனியாவில் குழாய்க்கிணறு நிர்மாணம் மன்னார் வீதி, வவுனியாவில் ஆலய வளாகத்தில் முழுமையான குழாய்க் கிணற்றை வழங்குவதற்கு விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. தயவு செய்து விலை மனுக்களை மின்னஞ்சல் செய்யவும் senaka.desoysa@srilankan.com அல்லது பதிவுத் தபாலில் அனுப்பவும். 53/38B, தர்மபால பிளேஸ், ராஜகிரிய குழாய்க்கிணற்றின் அதிகூடிய ஆழம் 100 அடி ம ட்டுமே. அழையுங்கள் 0710212648 009327

சொந்த விடயம்

528 தங்குமிட வசதிகள்

காலி மாவட்டத்தின் போத்தல மற்றும் மொனராகல மாவட்டத்தில் புத்தல மிகவும் இதமான சூழலில் ஆரம்பித்து நடத்திச் செல்லப்படும் சமிந்து செவன முதியோர் பாதுகாப்பு நிலையத்திற்கு ஓய்வு பெற்ற, நோயாளியான, நோயற்ற அங்க வீனமா ன முதியோர் போல வே புத்தி சுவாதீனமற்ற 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 0775509641, 0703318641, பதுவத்த, பலகொட, போத்தல, கா லி. 009302

காணி/தோட்டம்

601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

கொழும்பு03, கொள்ளுப்பிட்டி ஆடம்பர மாடி வீடு விற்பனைக்கு. கடலுக்கு முகப்பாக பா ரி ய பெல்கனி உண்டு. லிபர்ட்டி பிளாஸாவில் அலுவலகத்திற்கு மிகவும் பொருத்தமானது. உரிமையாளர் வெளிநாட்டில் நிரந்தர வதிவு. 50 மில்லியனுக்கு மேல். முதலாம் கோரிக்கையாளருக்கு. Contact: seevalihillgreentea@gmail.com 009195

602 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் வாடகைக்கு/ குத்தகை

கல்கிசை 7ஆம் மாடி கடல் காட்சிதரும் அறை தளபாடமற்ற 2 அறைகள், 2 குளியலறைகள் புதிய அப்பாட்மென்ட் நீண்ட கால வாடகைக்கு. பம்பலப்பிட்டிய கிங்ரோஸ் அவெனியூ, 7ம் மாடி 2000 சதுர அடி, தளபாடமற்ற 3 அறைகள் (A/C) 3 குளி யலறைக ளு டன் அப்பா ட்மென்ட் கடல் காட்சி தரும் அறைகள். நீண்ட கால வாடகைக்கு. ராஜசிங்ஹ வீதி 3 அறைகள், தளபாடமற்ற 1400 ச. அடி. நீண்ட கால வாடகைக்கு. தளபாட வ சதிகளுடன் நீண்ட கா ல, குறுகிய கால வா டகைக்கு. இயூரோ ஹோம்ஸ். சிவா 0777778806 008885

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

ஆதனம் விற்பனைக்கு 12.2 பேர்ச் விஸ்தீரணமுள்ள வெற்றுக்காணி கொழும்பு9 இல் அதிகளவில் மக்கள் வசிக்கும் பிரதேசம், விற்பனைக்கு, அனைத்து வசதிகளுடன் மின்சாரம், நீர், தொலைதொடர்புகள் மற்றும் வடிகாலமைப்பு உள்ளது. உயர் மட்ட பாடசாலைகள், அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகள், அரசாங்க மற்றும் தனி யார் அலுவலகங்களுக்கு வசதியாக அமைந்துள்ளது. உயர் நகரங்களான மருதானை, புஞ்சி பொரளை, பொர ளை, நகர மண்டம் , தெமட்டகொட, பேஸ்லைன் வீதி க்கும் இன்னும் பலவ ற்றிற்கும் கால் நடைதூ ரம். விசாரணைகள் மற்றும் சந்திப்பு ஏ ற்பாடுகளுக்கான தொலைபேசி இலக்கங்கள் 0 777217746, 0702 7 77335 009423

கெ ஸ்பேவ பிலியந்தல நகரிற்கு அருகில் பட்டுவத்தர 25 பேர்ச் மற்றும் இருமாடி வீடுகள் 2 விற்பனைக்கு. பஸ்பாதைக்கு 100m, சுற்றிவர மதில் கேட் உண்டு. அரச வங்கிக் கடன் பெறப்பட்டுள்ளது. விலை 28/ இலட்சம் பெரிய குடும்பத்திற்கு வியாபா ர வாய்ப்பிற்கு சிறந் தது. அழையுங்கள். 0772061030/ 0716240043 008484

கொழும்பு 10 (மாளிகாவத்தை) இல் 4.5 பேர்ச் பழைய வீடு விற்பனைக்கு தயவு செய்து தொடர்புகொள்ளவும் 0771825131 007597

துறைமுக நகரம் மற்றும் கொழும்புத் துறைமுகம் காட்சிதரும் 400 பேர்ச் கண்டெயினர் வீதி மற்றும் கோல்டன் சிட்டிக்கு இடையில் கடற்கரை காணி விற்பனைக்கு. கட்டுநாயக்க விமான நிலையத்தின் பழுனுகம பிரவேசத்திலிருந்து 9 விநாடிகள். ஆடம்பர மாடி வீடு. கன்டைனர் யார்ட், ஹோட்டலுக்கு உகந்தது. உரிமையாளர் வெளிநாட்டில் நிரந்தர பதிவைக் கொண்டுள்ளார். தற்போது இலங்கைக்கு வந்துள்ளார். ஒரு பேர்ச் 7 இலட்சம் அல்லது கூடிய கோரிக்கைக்கு. Contact: seevalihillgreentea@gmail.com 009206

பெ லவ த்த, பத்த ர முல்ல, பெ ல வத்த சந்திக்கு ந டை தூரத்தில், முன்ன ணி சுப்ப ர் மார்க்கட்டுகள், விற்பனை நிலையங்க ள், ரெஸ்டுரண்ட்டுக ள், வைத்திய சாலைகள் சர்வதேச மற்றும் அரச பாடசாலைகள், கோயில் மற்றும் பன் ச ல கண்ணுக்கெட்டிய தொலைவில். 6 படுக்கை அறைகள், (3 குளி ரூட்டப்பட்டவை) மேல் மாடி வீடு C/W3 குளியலறைகள் (சுடு நீருடன்) இரட்டை கராஜ்கள் 13 பேர்ச் காணியில் தொடர்புகளுக்கு 0742402970 008396

ராஜகிரியவில் சிறிய வீட்டுடன் 7.35 பேர்ச் விற்பனைக்கு (06 அடி வீதி வாகனம் செல்லலாம் 0710824806 008839

வத்தளை மாபோலையில் இரண்டு மாடி வீடு விற்பனைக்கு. 4 படுக்கை அறைகள் விலை 40 மில்லியன் பேசித்தீர்க்கலாம். 0770311963 008011

621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777438169 தொடம்வல 17 பேர்ச் வீடு, அருப்பல 14 பே ர்ச் வீடு, நத்தரம்பொத்த 22 பேர்ச் வீடு, குண்டசாலை 24 பேர்ச் வீடு, யக்கஹபிட்டிய 40 பேர்ச் வீடு, கட்டுகஸ்தொட்ட 17 பேர்ச் வீடு. இவ்வீ டுகள் 15 25 மில்லியனுக்கு இடையி ல். 10 30 பே ர்ச் வெற்றுக் காணி உ ட ர ட் ட ச தெ ல் ல, வேவெல்ல, அ முனுகம 1 பேர்ச் 3 இலட்சம் 5 இலட்சத்துக்கு இடையில். ஹரெகம வீதி 1 ஏக்கர் 10 மில்லியன். பேசித் தீர்க்கலாம். 0777282147. 008004

641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கொலன்னாவ வீடு வாடகைக்கு. 3 படுக்கையறை, 2 குளியலறைகள், 1 ஓய்வு மண்டபம், 1 TV அறை, பென்ரி, சமை யலறை, பள்ளி வாசல் சந் திக்கு 100 Mts. தொடர்பு 077 8978801/ 077 4368373. 009217

தெ ஹிவளை நகரில் பெயார்லைன் வீதியில் 2 அறைகள், குளியலறை, டொய்லட் உடன் வாடகைக்கு 15,000/ அழையுங்கள். 0777 170754 008826

வெள்ளவ த்தை, மெனிங் பிளே ஸ், 24/18/1/1 முக வரியில் 2 ப டுக்கை யறைகளுடன் நவீன வீடு வா ட கைக்கு உண்டு. 07 6 1 2 6 3828. 009421

670 வீடு சொத்து விற்பனைக்கு/குத்தகைக்கு

கொழும்பு 10 பன்சல வீதியில் ஆனந்தாக்கல்லூரிக்கு 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள மூன்று மாடி வீடு, இரண்டு அலகுகள், கராஜ், படுக்கை அறைகள் நான்கு 35/ மில்லியன். விலைபேசித்தீர்மானிக்கப்படலாம். 3.5 பேர்ச் தரகர் வேண்டாம். வாடகைக்கு எனின் ரூபா 120,000 2200 ச.அடி வர்த்தக நடவடிக்கையொன்றிற்கும் உகந்தது. 0772955117, 0756279635 008786

திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER ADZ Classified
Green Light for Online Transfer
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Lake House Branch Acc. No. 000000377

விலைக்கோரலுக்கான அழைப்பு

ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு

ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சினால் பின்வரும் சுற்றுலா பயணிகளை கவர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு ஏற்புடையதான வடிவமைப்பு, திட்டம், மதிப்பீடு மற்றும் அளவுப் பத்திர (BOQ) முப்பரிமாண வடிவமைப்புகளைத் தயாரிப்பதற்காக அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பொதி

1) ஹப்புத்தளை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சுற்றுலா வசதிகள் நிலையமொன்றை ஸ்தாபித்தல்
2) தேமோதர ஒன்பது வில் வளைவு பாலத்திற்கு அண்மையில் சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல்
3) வெள்ளவாய நகரத்தில் சுற்றுலா வசதிகள் நிலையமொன்றை ஸ்தாபித்தல்

இரண்டாவது பொதி

4) எல்ல நகரத்தில் சுற்றுலா வசதிகள் நிலையமொன்றை ஸ்தாபித்தல்
5) மடோல்சீம சிறிய உலக முடிவிடத்திற்கு அண்மையில் சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல்

1. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் கணக்குப் பிரிவிலிருந்து 2022-02-09ஆம் திகதி முதல் 2022-02-25ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான பொதுவான வேலை நாட்களில் 1000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைமனுப் படிவங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன், தேவையானால் மேற்கொள்ளவுள்ள வேலைகள் தொடர்பான விபரக்குறிப்புத் தரவுகள் மற்றும் ஏனைய விபரங்களை 2022-02-09ஆம் திகதி முதல் 2022-02-25ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஊவா மாகாண சுற்றுலா அமைச்சிற்கு வருகை தந்து அல்லது 055-2231973/ 0701111881 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு அல்லது uvatourismsl@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-02-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சில் இடம்பெறும்.
4. இயைபுடைய துறையில் மூன்று வருட காலம் அனுபவமுள்ள அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளாகாத விலைமனுதாரர்கள் இதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

   இதன்போது பின்வரும் தகைமைகள் தொடர்பான எழுத்து மூலமான சாட்சிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

   அ) இயைபுடைய துறையில் அண்மைய 5 வருட கால தொழில்சார் மட்டத்தில் அனுபவமிருத்தல்
   ஆ) இதற்கு முன் இவ்வாறான செயற்றிட்டங்களில் தொடர்பில் செயலாற்றியிருத்தல்
   இ) இயைபுடைய துறை தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கல்வி தகைமை (இயைபுடைய துறை தொடர்பில் பெற்றுக்கொண்ட பட்டம் / பட்டப்பின்படிப்புப் பட்டம் / பட்டய கட்டிடக் கலைஞர்கள்) மற்றும் சான்றுபடுத்தப்பட்ட செயல்முறை அனுபவத்தைக் காட்டும் ஆவணங்கள்
   ஈ) ஏனைய திறமைகள் மற்றும் தகைமைகள்
5. விலைக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுற்றுலாப் பயணிகளைக் கவர்தல் தொடர்பான மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்றிடங்களுக்கு இயைபாக விலைமனு கோரல்'' எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022-02-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் கணக்காளர், ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு, ரஜ மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2022-02-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு அலுவலகத்தில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
8. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது மீளளிக்கப்படும் 5000.00 ரூபாவுக்கான அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகிரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

செயலாளர்,
ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து,
கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு,
ரஜ மாவத்தை,
பதுளை.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

வெளிவாரி பட்டப் படிப்பு மற்றும் நீடிப்பு கற்கை பிரிவு

15வது வெளிவாரி பட்டமளிப்பு விழா

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 15வது வெளிவாரி பட்டமளிப்பு விழா 2022 மார்ச் மாதம் 19ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த பட்டமளிப்பு விழாவில் பின்வரும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

முகாமைத்துவக் கல்வி மற்றும் வர்த்தக பீடத்தின் கீழ் வழங்கப்படவுள்ள வெளிவாரிப் பட்டங்கள்

- 2011/2014 விஞ்ஞான இளமாணி வியாபார நிர்வாக (பொது) வெளிவாரிப் பட்டம் (புதிய பாடத்திட்டம்)
- 2014/2015 வர்த்தக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டம் (புதிய பாடத்திட்டம்)
- வர்த்தக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டம் (பழைய பாடத்திட்டம்)
- 2014/2015 விஞ்ஞான முகாமைத்துவ இளமாணிப் (அரச) பொது (வெளிவாரி) பட்டம் (புதிய பாடத்திட்டம்)
- விஞ்ஞான முகாமைத்துவ இளமாணிப் (அரச) பொது (வெளிவாரி) பட்டம் (பழைய பாடத்திட்டம்)

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் கீழ் வழங்கப்படவுள்ள வெளிவாரிப் பட்டம்

- 2014/2015 சுற்றாடல் சமூக விஞ்ஞானம் மற்றும் அபிவிருத்திக் கல்வி இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்
- 2014 மானுடவியல் மற்றும் சமூகக் கல்வி இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்
- 2014/2015 ஆங்கிலத்தில் கலை இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்

மேற்படி பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்கு உள்ள பட்டதாரி அபேட்சகர்கள் www.external.sip.ac.lk எனும் இணையதளத்திற்குள் பிரவேசித்து அதில் பிரசுரிக்கப்பட்டுள்ள Google form படிவத்தில் தமது தகவல்களை 2022-02-10ஆம் திகதிக்கு முன் இத்தால் தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

பதிவாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

2022 பெப்ரவரி 06ஆம் திகதி.

SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

வர்த்தக அமைச்சு

பெறுகை அறிவித்தல்

04 மோட்டார் கார்களை வாடகை அடிப்படையில் பெறுதல்

EDB/DPC/NCB/2022/01

1. கீழ் குறிப்பிடப்பட்டவாறு 2022 ஆம் ஆண்டுக்காக வாகனங்களை வாடகைக்கு பெறுவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய சேவை வழங்குநர்களிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
   - மோட்டார் கார் - **AC 04 No.**
2. எதிர்பார்க்கப்படும் ஒப்பந்தக் காலம் தோராயமாக 12 மாதங்கள்.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறையை (NCB) பின்பற்றி, இலங்கையில் கிடைக்கப்பெறும் உலக புகழ்பெற்ற வாகன வர்த்தக முத்திரையுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட புகழ்பெற்ற வாகன முகவர்கள், இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் 10 வாகனங்களுடன் கார் வாடகை சேவைகளிடம் இருந்து கோரப்படும் விண்ணப்பங்கள் மூலம் இந்த விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. பெறுகை அதிகாரி, பெறுகை பிரிவு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, 6ஆவது மாடி, இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெறலாம் அல்லது "Announcement" இன் கீழ் www.srilankabusiness.com என்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை இணையதளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்ய முடியும்.
5. விலைமனு ஆவணத்திற்கான மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா ரொக்கப்பண வைப்பை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00க்கு இடையே இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை காசாளருக்கு செலுத்த வேண்டும்.
6. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "EDB இற்காக வாகனம் வாடகை/ குத்தகை" என்று குறிப்பிட்டு 2022.02.21 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (DPC), இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பெறுகைப் பிரிவு, 6ஆவது மாடி, NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது பெறுகை பிரிவில் (கட்டம் 06) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட முடியும். கேள்விமனு அதன் பின் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் பங்கேற்க கோரப்படுகின்றனர்.
7. அனைத்த விலைமனுக்களும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பெயரில் வரையப்பட்டதும் 2022.03.07 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான 72000 இலங்கை ரூபாவின் இலங்கையில் இயங்கும் வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களுக்கு, சாதாரண வேலை நாட்களில் 0112300702/ 0706652666 இல் பெறுகை அதிகாரி - நயனா அல்லது 0112300702 இல் முகாமைத்துவ உதவியாளர் - திரு வசந்த அவர்களை தொடர்பு கொள்ளவும்.

தலைவர் - திணைக்கள பெறுகை குழு

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

பெறுகை பிரிவு, 6ஆவது மாடி,
NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை,
கொழும்பு-02, இலங்கை
தொ.பே. - +94112300700 தொலைநகல் - +94112300715
இணையதளம்: www.srilankabusiness.com

ஒப்பந்தம் (டென்டர்)
ஊடாக வாகன விற்பனை

சியபத பினான்ஸ்
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)
Company No. PB 917 PQ

வாகன இல.	வகை மற்றும் மாதிரி	விபரம்	மார்ட்
மோட்டார் கார்			
KV-3xxx	MICRO MX7 MARK II	2013, 1498CC, SRI LANKA, PETROL, BLACK	A
WP CAZ-5xxx	TATA NANO TWIST XT	2017, 624CC, INDIA, PETROL, BROWN	A
18-7xxx	HONDA ACCORD	1994, 2000CC, JAPAN, PETROL, RED	A
15-7xxx	NISSAN WHB11-SUNNY	1985, 1480CC, JAPAN, PETROL, WHITE	D
SP-KW-7xxx	FORD FOCUS	2006, 1600CC, INDIA, PETROL, GOLD	A
14-6xxx	HYUNDAI STELLAR	1986, 1439CC, SOUTH KOREA, BLACK	D
டுவெல் பேய்பர்ஸ்			
PU-8xxx	MAHINDRA MAXXIMO	2012, 909CC, INDIA, DIESEL, WHITE	D
53-6xxx	MAZDA BONGO BROWNY	1990, 2180CC, JAPAN, DIESEL, WHITE BLUE	B
54-0xxx	NISSAN CARAVAN	1988, 2280CC, JAPAN, DIESEL, BLACK SILVER	B
DAC 2xxx	MAHINDRA MAXXIMO PLUS VX	2015, 909CC, INDIA, DIESEL, PURPLE	D
WP-JM-1xxx	MITSUBISHI SPACE GDI-V	2000,1998CC, JAPAN, Diesel, RED	A
முச்சக்கர வண்டி / மோட்டார் சைக்கிள்			
YA-4xxx	BAJAJ RE	2010,173.5CC,INDIA,PETROL,JET BLACK	D
WP YE-3xxx	BAJAJ AR45 UG	2010,173.5CC,INDIA,PETROL,NEPTUNE BLUE	A
WP QH-4xxx	BAJAJ AUTO RE 2 STROKE	2006,145.4CC,INDIA,PETROL,ECO GREEN	A
AAV-7xxx	TVS KING	2014,200CC,INDIA,PETROL,NEPTUNE BLUE	A
BGU-4xxx	Demark	2016,110CC,MALAYSIA,BLACK	A
மோட்டார் லொறி மற்றும் பஸ்			
EP-RF-0xxx	MAHINDRA 595 DI	2016, 2523CC, INDIA, DIESEL, RED	C
HG-9xxx	TATA LP 1510 (1-28 seats)	2003, 5675CC, INDIA, DIESEL, MARY GREEN	D
WP HS-6xxx	LANKA ASHOK LEYLAND / VIKING	2002, 6540CC, INDIA, DIESEL, WHITE BLUE	D
NW-LG-3xxx	DAIHATSU-HIJET	2004, 650CC, JAPAN, PETROL, WHITE	B
WP LJ-5xxx	LANKA ASHOK LEYLAND UFRIE-COMMET 912	2009, 3838CC, INDIA, DIESEL, WHITE ALUMINIUM	B

மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரிசீலிக்கும் இடம்:

முற்றம் "A"
இல. 01, ஸ்ரீ மஹா விஹார வீதி,
பாமன்கட, தெஹிவளை.
(ஸ்ரீ மஹா விஹாரயின் உள்ளே)
விசாரணை: 0117 209 358
ஸ்ரீலால் - 076 573 1397, சுரன்ஜித் - 076 324 1184

முற்றம் "B"
இல. 344, ஸ்ரீ மங்கலவத்த,
மம்பே, பிலியந்தல.
ஸ்ரீலால் - 076 573 1397
சுரன்ஜித் - 076 324 1184

முற்றம் "C"
12வது மைல்கல்,
கல்முனை வீதி,
வலகபிடிய, சம்மாந்துறை.
தமித் 0769 665 224
அஜுர 0762 775 942

முற்றம் "D"
இல. 516, பிரிவெனா சந்தி,
குருநாகல வீதி, தம்புள்ளை.
சரித் 0762 092187

ஒப்பந்த படிவங்களின் மீள செலுத்தப்படாத கட்டணமான ரூ. 400/- ஐ செலுத்தி ஒப்பந்த விண்ணப்பத்தை வாகன முற்றத்திலிருந்து பெறலாம். (பூரணப்படுத்தப்படாத அல்லது தவறான வடிவத்தில் இருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

2022 பெப்ரவரி 06 (ஞாயிறு) முதல் பெப்ரவரி 10ம் திகதி (வியாழன்) வரை
மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை (இரு தினங்களும் உட்பட)

2022 பெப்ரவரி 10ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு டென்டர் மூடப்படும்

விசாரணைகள்: தலைமை - மீள்பெறுகை,
சியபத்த பினான்ஸ் பீஎல்சீ,
இல. 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
தொலைபேசி: 011 7 605 605 நீட்சி. 1804

ஏற்கெனவே வாகனத்தையும் முன்னரிலிருந்தல் இன்றி ஏலவிலையிலிருந்து விலக்கி கொள்ள சுயவிலக்கு உரிமையுண்டு

குறுக்கெழுத்துப் போட்டி இல. 347

01	02	03	04	05	06
07	08		09		10
	11	12			13
14		15	16	17	18
19	20	21			22
23		24	25		

பெயர் .....
வகுப்பு .....
பாடசாலை பெயர் .....
பாடசாலை முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(01) அந்நியர் ஆதிக்கத்தில் இருந்து 74 வருடங்களுக்கு முன்னர் இலங்கை மக்கள் பெற்றுக் கொண்ட விடுதலை. நேற்று முன்தினம் இத்தினத்தை நாம் கொண்டாடினோம்.
(07) எலியின் வசிப்பிடம் இது. (தலைகீழான சொல்)
(11) எருது, இளைஞன் ஆகிய இரு பொருள் தருகின்ற ஒரு சொல். (தலைகீழான சொல்)
(15) முகத்தை இச்சொல்லாலும் குறிப்பிடலாம்.
(19) இனிப்புச் சுவை நிறைந்த உணவுப் பண்டம். தித்திக்கும் இந்த உணவுப் பண்டத்தை சிறார்கள் மிக விரும்புவர். (தலைகீழான சொல்)
(24) இது வினாச்சொல். எப்படி, எது, எங்கே என்பது போல இச்சொல்லும் வினாவுக்கும் பயன்படுத்தப்படுவது. (தலைகீழான சொல்)

மேலிருந்து கீழ்

(01) மாம்பழத்தின் உள்ளீடு சதை எனப்படும். அதுபோன்று பலாவின் உள்ளீடு இது.
(02) எமது நாட்டில் நாம் காணக்கூடிய ஈரூடகவாழி.
(04) 'அரைப்பங்கு' என்ற அர்த்தம் தருகின்ற சொல். (தலைகீழான சொல்)
(06) வேலை செய்வோருக்கு வழங்கப்படுகின்ற ஊதியம். (தலைகீழான சொல்)
(12) மக்களை காவல் காக்கும் பணியைப் புரிபவன் என்பதால் அரசனுக்கு இப்பெயரும் பொருந்தும்.
(14) உணவுக்கு (கறி) சுவையூட்டுவது. மிகச் சிறிது என்றாலும் காரம் பெரிது என்பர்.

போட்டி இல. 347
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834.
கொழும்பு

குறுக்கெழுத்துப் போட்டி இல. 346

விடைகள்

இடமிருந்து வலம்

(01) ஏகலைவன் (06) மழை (08) காண்
(10) லட்டு (14) நம் (16) பாலை
(19) யானை (22) பஞ்சு (25) வீணை

மேலிருந்து கீழ்

(01) ஏழை (02) கமலம் (04) வண்டு
(05) கான் (13)தலையணை (14) நஞ்சு
(19) பனை

தற்போதைய சூழ்நிலை காரணமாக குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படாது என்பதை எமது சிறார்களுக்கு அறியத் தருகின்றோம். ஆனாலும் ஆர்வம் கொண்ட சிறார்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்தும் இடம் பெறும். (ஆர்)

சுதந்திரத் திருநாள்!

நமது சுதந்திரத் திருநாள் இது
நவிலுரும் இன்பப் பெருநாள்
அறமது வழியலே சுதந்திரம் நாம்
அடைந்ததெனும் பெரும் நாள்!
அடிமைத் தளையைப் போக்கி ஆண்ட
அந்நிய ஆட்சியை நீக்கி
குடிமை சமைத்த நிலையில் இன்று
கூடி உழைத்தே உயர்வோம்!
அடைந்த சுதந்திரம் அனை நாம்
ஆருயிர் போன்றே காப்போம்
இடைவெளி என்பதை அகற்றி நாம்
இணைந்தே புகழைக் காப்போம்!

அல்மா பாரிஸ்,
மள்வானை.

தாவரங்களின் இனப்பெருக்கம்

வித்துக்களின் மூலம் இனம் பெருக்கும் தாவரங்கள்
நெல், பலா, கோப்பி, மரமுந்திரிகை, எலுமிச்சை.
இலைகள் மூலம் இனம் பெருகும் தாவரங்கள்
சதை, கரைச்சான், பிகோனியா.
வேர்கள் மூலம் இனம் பெருகும் தாவரங்கள்
தண்டுகளின் மூலம் இனம் பெருகும் தாவரங்கள்
மரவள்ளி, ரோசா, குரோட்டன்
நிலக்கீழ்த் தண்டுகள் மூலம் இனம் பெருகும் தாவரங்கள்
வாழை, இஞ்சி, மஞ்சள், உருளைக் கிழங்கு
ஒடித் தண்டுகள் மூலம் இனம் பெருகும் தாவரங்கள்
வற்றாளை, வல்லாரை.

கே. எல். ஹில்மி,
தேசிய பாடசாலை,
சம்மாந்துறை 10.

குறளமுதம் :

தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

தெளிவுரை :

ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும்; அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பது நல்லது.

நமது நாடு



எமது நாடு இலங்கை. இந்து சமுத்திரத்தின் மத்தியில் நாற்புறமும் கடலால் சூழப்பட்டு காணப்படும் ஓர் அழகிய தீவாகும். இயற்கை வளங்களை கொண்ட நம் நாட்டில், ஏராளமான பிரசித்தி பெற்ற இடங்களும், வணக்கஸ்தலங்களும் காணப்படுகின்றன. நம்நாட்டில் முக்கியமாக தேயிலை, இறப்பர், தென்னை போன்ற தாவரச்செய்கைகள் அதிகமாக காணப்படுகின்றன.

இலங்கையை தம்பன்னி, செரண்டிப், தப்ரபேன், சீல துவீபம், சீலயி, செயிலான், செயிலாவோ, சிலான், சிலோன், ஈழம் என பல பெயர்களால் அழைப்பதுண்டு. இலங்கையின் மொத்தப்பரப்பளவு 65610 சதுர கிலோமீற்றராகவும் மொத்த நீளம் 433 கீலோ மீற்றராகவும் மொத்த அகலம் 226 கீலோ மீற்றராகவும் காணப்படுகின்றது.

இலங்கையின் வரலாற்றை நாம் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் போன்ற காவியங்களினூடாக அறியலாம். இலங்கையின் உயரமான மேட்டு நிலமாக ஹற்றனும் உயரமான குன்றாக கொக்காகல குன்றும் உயரமான அணைக்கட்டாக விக்டோரியா அணைக்கட்டும் உயரமான மலையாக பேதுருதாலகால மலையும் உயரமான நீர்வீழ்ச்சியாக பம்பரகந்த நீர்வீழ்ச்சியும் காணப்படுகின்றது.

இலங்கையின் தேசிய வனமான சிங்கராஜ வனத்தில் இலங்கைக்கே உரித்தான தாவரங்களும், அதிசய தாவரங்களும் வளர்கின்றன. இலங்கையின் தேசிய மரம் நாக மரமும் தேசிய மலர் அல்லி மலரும் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டமும் தேசிய பறவையாக காட்டுக்கோழியும் விளங்குகின்றன.

சுஸ்மிதன் ஆனந்தன்,
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

இயற்கையும் மீள் சுழற்சியும்

இயற்கை எதையுமே வீண் விரயம் செய்வதில்லை. இயற்கையின் அமைப்பில் அது ஒரு இயங்கியல் முறையாக இடைவிடாது மீள் சுழற்சி செய்யப்படாவிட்டால், நாம் இப்புவியில் வாழவே முடியாது. தண்ணீர் எவ்வாறு மீள் சுழற்சி செய்யப்படுகிறது? நீர் தரையிலிருந்து ஆகாயத்திற்குச் செல்கின்றது. அது நீர்ச் சக்கரத்தின் மூலம் மீண்டும் பூமிக்குத் திரும்பி வருகின்றது. தரையிலுள்ள நீரின் அளவு மாற்றமடைவதில்லை. திண்மமான நிலையிலுள்ள பனிக்கட்டி, திரவமாக உள்ள நீர், வாயு நிலையிலுள்ள நீராவி என உருமாற்றமடைந்த நிலையில் நீரின் சுழற்சி இடம்பெறுகின்றது.

நீர் பயணம் செய்யும்போது தரைக்கு மேலாகவும், தரையினூடாகவும், நதிகள், ஏரிகள், சமுத்திரங்கள் என்பவற்றினூடாகவும் நம்மைப்போல உயிர் வாழ்வனவற்றினூடாகவும் நீர் நகருகின்றது. சமுத்திரங்கள், நதிகள், ஏரிகள் போன்றவற்றில் உள்ள திரவ நீரை சூரியனின் வெப்பம் நீராவியாக மாற்றுகின்றது. இந்த செயல்முறை ஆவியாதல் எனப்படும். இப்பொழுது நீர் வாயுவாகிவிட்டது. இந்த வாயு நம்மைச் சூழவுள்ள காற்றின் ஒரு பகுதியாகி விட்டது. தாவரங்களும் நீரை வெளியேற்றி ஆவியாக்குகின்றன. காற்றிலுள்ள நீராவி, குளிர்ச்சியான காற்றைச் சந்திக்கும் வரை நீராவியாக இருக்கும். பின்னர் ஒடுங்கி முகில்களாக மாறி மழையாக அல்லது பனிக்கட்டியாக மீண்டும் பூமிக்கு வந்துசேரும். இந்த இயற்கை சுழற்சி காலமெல்லாம் இடம்பெற்றுக் கொண்டே இருக்கும்.

ஏ.எச். அப்துல் அலீம்,
தரம் 08 சி, அலிகார் தேசியக் கல்லூரி,
ஏறாவூர்.

ஹப்புத்தளை ஆரம்ப தமிழ் வித்தியாலய பொங்கல் விழா

ஹப்புத்தளை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தில் பொங்கல் விழா கடந்த 04 ஆம் திகதியன்று வெகுவிமரிசையாக இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் எஸ். ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி அதிபர் என். சந்திரமோகன், பண்டாரவளை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். யோகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டதுடன் ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி பழைய மாணவர்களும் பங்கேற்றிருந்தனர். பொங்கல் வைக்கப்படுவதையும், கண்கட்டிக் கொண்டு முட்டி உடைப்பதையும், ஆரம்ப தமிழ் வித்தியாலய மாணவ, மாணவிகளுக்கு கற்கை உபகரணப் பொதிகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்களும் செய்தியும் : பதுளை எஸ். செல்வராஜா)

மரம் வளர்ப்போம்!

மரத்தை வளர்த்து மகிழவோம்
மண்ணில் அனை மதிப்போம்
முரசு அறைந்த எங்கும்
மரத்தை காக்க உரைப்போம்

மரங்கள் இல்லா உலகை
மறந்து விட வேண்டும்
மறக்கமுடியா தினத்தில்
மரத்தை நட்டு மகிழ்வோம்

காட்டை அழிக்கும் செயலை
கண்டே அழிக்க வேண்டும்
வீட்டை அமைக்க உதவும்
காட்டை காத்தல் வேண்டும்

மனிதன் புவியில் வாழ
மரங்கள் வேண்டும் மனிதா

இனிய உலகம் இயங்க
எமக்கு மரம் துணையே

நிழலில் நாங்கள் நிற்க
நிலைக்க வேண்டும் வாழ
உழைத்து நாங்கள் வாழ
உதவி தருமே மரங்கள்

வளியை எமக்கு தந்து
வாழ வைக்கும் மரங்கள்
பழத்தை எமக்கு தந்து
பசியை போக்கும் மரங்கள்!

கபிலகன்,
லுணுகலை.

கல்வி

கல்வி எனும் வித்து
அழிக்க முடியாத சொத்து
அள்ள முடியாத முத்து
அள்ள அள்ளக் குறையாது
சொல்லச் சொல்ல தெவிட்டாது
பயிலப் பயில மிகையாது
மெல்ல மெல்ல வெற்றி தருவது.
வாழ்வின் அடிப்படைத் தத்துவம் கல்வி.
அது இல்லையேல் வாழ்க்கை தோல்வியே!

ஸைனப் ரிபாய்,
தரம் 02, ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை,
தர்கா நகர்.

இவ்வார மழலை

வில்சன் - நித்தியா,
கொட்டாஞ்சேனை. கொழும்பு 13

பி. தனுஷ்கர்,
தரம் 12, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

மு. மேஷிகா,
தரம் 10, இரத்தினபுரி கலைமகள் தமிழ் வித்தியாலயம்,
இரத்தினபுரி.



யோ. கவீஷா,
தரம் 02, ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்,
வத்தளை.

விளையாட்டு

அக்ரமின் உலக சாதனையுடன்

இலங்கையை வீழ்த்திய பாக். இளையோர் அணி

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வருகின்ற ஐசிசி இன் 19 வயதின்கீழ் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற 5ஆம், 6ஆம் இடங்களைத் தீர்மானிக்கும் நிரல்படுத்தல் போட்டியில் சகல துறைகளிலும் பிரகாசித்த பாகிஸ்தான் அணி 238 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

இதன்மூலம் 16 அணிகள் பங்குகொண்ட இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் 19 வயதின்கீழ் அணி 5ஆவது இடத்தையும், இலங்கை 19 வயதின்கீழ் அணி 6ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

அண்டிகுவாவில் உள்ள சேர்.விவியன் ரிச்சர்ட்ஸ் மைதானத்தில் கடந்த (03) நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் துனித் வெலால்கே முதலில் துடுப்பாடும், பாகிஸ்தான் வீரர்களுக்கு வழங்கினார்.

அதன்படி முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய முஹம்மத் ஷெஸாத் – ஹஸீபுல்லாஹ் கான் ஜோடி அதிரடியான ஆரம்பத்தைக் கொடுத்தது.

இவர்கள் இருவரும் முதல் விக்கெட்டுக்காக சத இணைப்பாட்டம் புரிந்து 134 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். எனினும் முஹம்மத் ஷெஸாத் ரவீன் டி சில்வாவின் பந்துவீச்சில் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து ஜோடி சேர்ந்த ஹஸீபுல்லாஹ் கான் – காசிம் அக்ரம் ஆகிய இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்து சதமடித்து அசத்தினர்.

இதில் ஹஸீபுல்லாஹ் கான் 136 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மறுமுனையில் இருந்த அணித்தலைவர் காசிம் அக்ரம் ஆட்டமிழக்காமல் 135 ஓட்டங்களை எடுத்தார்.

பாகிஸ்தான் அணித்தலைவர் காசிம் அக்ரம் 65 பந்துகளில் சதம் அடித்து இளையோர் உலகக் கிண்ண போட்டிகளில் அதிகவேக சதம் எனும் உலக சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார். அதேபோல ஹஸீபுல்லாஹ் கான், இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தில் 2ஆவது சதத்தைப் பதிவுசெய்தார்.

இதன்மூலம் பாகிஸ்தான் 19 வயதின்கீழ் அணி, 50 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 365 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் மதீஷ பத்திரன 2 விக்கெட்டுகளையும், ரவீன் டி சில்வா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். எனினும், இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தில் 17 விக்கெட்டுகளை எடுத்து அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ள இலங்கை அணித்தலைவர் துனித் வெல்லாலகேவினால் இந்தப் போட்டியில் எந்தவொரு விக்கெட்டினையும் கைப்பற்ற முடியாமல் போனது.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்கினை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை 19 வயதின்கீழ் கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் வீரர்களின் பந்துவீச்சினை சமாளிக்க முடியாமல் 34.2 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து வெறும் 127 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து போட்டியில் படுதோல்வி அடைந்தது.

இலங்கை 19 வயதின்கீழ் அணியின் துடுப்பாட்டத்தில் 9ஆம் இலக்க வீரராகக் களமிறங்கி இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த வினுஜ ரன்புல் அரைச்சதம் அடித்து 58 பந்துகளில் 53 ஓட்டங்கள் பெற்று தனது தரப்பில் கூடுதல் ஓட்டங்களைப் பதிவு செய்ய, அணித்தலைவர் துனித் வெலால்கே தனது பங்கிற்கு 40 ஓட்டங்களை எடுத்து வலுச்சேர்த்தார்.

மறுபுறத்தில் இலங்கை அணியின் துடுப்பாட்டத்தை பொறுத்தவரை சதீஷ ராஜபக்ஷ மாத்திரம் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள, ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் 19 வயதின்கீழ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு சார்பில் ஏற்கனவே துடுப்பாட்டத்தில் சதமடித்து அசத்தியிருந்த அணித்தலைவர் காசிம் அக்ரம் 37 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதன்மூலம் இளையோர் உலகக் கிண்ண வரலாற்றில் சதமடித்து, 5 விக்கெட் குவியலைப் பதிவுசெய்த முதல் வீரர் என்ற உலக சாதனையை நிலைநாட்டினார்.

இதுதவிர பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு தமது பந்துவீச்சு மூலம் அவைஷ் அலி, ஸீசான் சமீர், அப்பாஸ் அலி மற்றும் மெஹ்ரான் மும்டாஸ் ஆகிய வீரர்களும் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றி தமது பங்களிப்பினை வழங்கினர்.

இறுதியில் 238 ஓட்டங்களால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் 19 வயதின்கீழ் அணி, இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தில் 5ஆவது இடத்தையும், தோல்வியைத் தழுவிய இலங்கை 19 வயதின்கீழ் அணி 6ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணி சார்பில் சகலதுறையிலும் பிரகாசித்திருந்த அந்த அணியின் தலைவர் காசிம் அக்ரம் தெரிவாகினார்.

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்:

இராஜதந்திர ரீதியாகப் பகிஷ்கரிக்கும் ஐரோப்பிய நாடுகள்!

24வது பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் கொரோனா தொற்றின் காரணமாக பல கட்டுப்பாட்டுகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. 30 நாடுகள் கலந்து கொள்ளும் குளிர்கால ஒலிம்பிக் விழா 20 திகதி வரை நடைபெறுகிறது. இதில் முக்கிய பிரமுகராக கலந்துகொள்ளவிருந்த சர்வதேச ஒலிம்பிக் உறுப்பினரான இளவரசி அன்னே, கொரோனா பரவல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டினால் பங்கேற்கமாட்டார் என பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது. இவர் கடந்த வருடம் டோக்கியோவில் நடைபெற்ற 2020 ஒலிம்பிக் விழாவிலும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக்கின் போது கொரோனாவால் தடை ஏற்பட்டது போன்றே பீஜிங் ஒலிம்பிக்குக்கும் தடைகள் ஏற்பட்டுள்ளன. கொரோனாவின் அச்சுறுத்தல் இன்னும் முற்றாக அங்கு நீங்கவில்லை. கடந்த வருட இறுதியில் பீஜிங்கில் அடங்கிப் போயிருந்த கொரோனா தொற்று மீண்டும் ஜனவரி ஆரம்பம் முதல் பரவ ஆரம்பித்துள்ளது. கணிசமான தொற்றாளர்கள இனம் காணப்பட்டுள்ளார்கள். குளிர்கால ஒலிம்பிக் கிராமத்திலுள்ள வீரர்களுக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் போட்டி தவிர்ந்த நேரங்களில் கட்டாய முகக் கவசம் அணிதல், இடைவெளி பேணல் போன்ற சுகாதாரத் துறையினரின் கட்டுப்பாடுகளுடன் கூடிய ஒலிம்பிக்கில் இம்முறை கைலாகு, பதக்கம் அணிவிக்கும் போது கட்டியணைத்து மகிழ்ச்சி தெரிவித்தல் போன்ற நிகழ்வுகளுக்கு தடைவிதித்த போதும், வெற்றி வீர, வீராங்கனைகள் புகைப்படம் பிடிக்கும் சந்தர்ப்பத்தில் மட்டும் தமது முகக் கவசங்களை 30 செக்கன்கள் அகற்றிக் கொள்ளலாம் என்ற கட்டுப்பாட்டில் நடைபெற்று வருகிறது.

சீன பீஜிங் நகரில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்கை பல நாடுகள் இராஜதந்திர ரீதியில் பகிஷ்கரிப்பதாகக் கூறியதுடன் அவ்விளையாட்டு விழாவுக்கு தமது நாட்டு வீர, வீராங்கனைகளை மட்டுமே அனுப்பியுள்ளன.

கடந்த வருட ஆரம்பத்தில் 160 மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகள் ஒன்றிணைந்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் இவ்வருட பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டி பகிஷ்கரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மகஜரை சமர்ப்பித்தது. சீனாவில் நடத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்த அமைப்புகள் கோரியிருந்தன. இதையடுத்தே சீன குளிர்கால ஒலிம்பிக் பகிஷ்கரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மேற்கத்திய நாடுகளில் தீவிரம் பெறத் தொடங்கியது.

சீனாவில் சிறுபான்மையினருக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுவருவதால் இதை பகிஷ்கரிக்கும் முஸ்தீபுகளில் இங்கிலாந்து ஆரம்பம் முதலே ஈடுபட்டு வந்தது.

பீஜிங்கில் நடைபெறவிருக்கும் 2022 குளிர்கால ஒலிம்பிக்கை இங்கிலாந்து பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இங்கிலாந்து பாராளுமன்றம் கொண்டுவந்தது. பின்னர் கடந்த வருட நடுப்பகுதியில் ராஜதந்திர ரீதியான பகிஷ்கரிப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற பிரேரணை அங்கு ஏகமனதாக நிறைவேற்றியது. பெருமளவு அட்டூழியங்களை செய்திருக்கும், செய்துகொண்டிருக்கும் ஒரு நாட்டில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடத்தப்படக்கூடாது என்பது அதற்கான காரணமாகும். இந்த ஒலிம்பிக் விழாவில் கலந்துகொள்ளுமாறு சீனா விடுக்கும் அழைப்பை லண்டன் நிர்வாகம் ஏற்கக்கூடாதெனவும் பங்குபற்றுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் சீனாவின் ஸின்ஜியாங் மாகாண உய்குர் முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர் மீது சீன அரசு மேற்கொண்டுவரும்அட்டூழியங்களைஅந்நாடு நிறுத்தாதவரையிலும், இங்கிலாந்து இப்போட்டியில் கலந்து கொள்ளக்கூடாது என்ற கருத்தை கன்சர்வேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினர் டிம்லோட்டன் பிரேரணையாக சபையில் சமர்ப்பித்தார். சபையில் உள்ள பெரிய கட்சிகளும் இப் பிரேரணைக்கு ஆதரவு அளித்தன.

சர்வாதிகார நாடுகள் ஒலிம்பிக் போட்டியை தமது குற்றச்செயல்களை மறைப்பதற்கான ஒரு தருணமாக பயன்படுத்தி வந்துள்ளன. சீனாவும் உலகெங்கும் இந்த ஒலிம்பிக் வழியிலான பிரசாரங்களை முன்னெடுத்தன. இந்த தருணத்தைப் பயன்படுத்தி பிரிட்டனும் உலக ஜனநாயக நாடுகளும் பீஜிங்குக்கு ஒரு தெளிவான செய்தியை தெரிவிக்க வேண்டும். உய்கர் பிரதேசத்திலும், திபெத் மற்றும் ஹொங்கொங்கிலும் நிகழ்த்தப்படும் துஷ்பிரயோகங்களை நாம் பார்த்தும் பார்க்காதது போல இருக்கவில்லை என்பதை சீனாவுக்கு சொல்ல வேண்டும். குளிர்கால ஒலிம்பிக் மூலம் மேற்கொள்ளப்படும் ஒரு பெரும் பிரசாரத்தில் சீனா வெற்றியடைய நாம் அனுமதிக்கக் கூடாது" என்று அவர் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து பல நாடுகள் பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கை இராஜதந்திர ரீதியாகப் பகிஷ்கரிப்பதாக கடந்த பல மாதங்களாக அறிவித்து வந்தது. அதில் முன்னிலை பெற்றுள்ள நாடு அமெரிக்காவாகும்.

சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் இருப்பது குளிர் யுத்தமாகும். அது குளிர் யுத்தமென்றாலும் பொருளாதார, இராணுவபலம், மற்றவர்களை அடக்கியாளும் அதிகாரத்தில் இரு நாடுகளுக்குமிடையிலுள்ள யுத்தம் கடினமானமாகும். அதற்காக இவ்விரு நாடுகளும் ஆசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க மற்றும் தென்னாபிரிக்க பிராந்தியங்களிலுள்ள அநேக நாடுகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளன. உலகளாவிய ரீதியில் உள்ள பிராந்தியங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பெருமுயற்சியில் இவ்விரு நாடுகளும் முயற்சித்து வருகின்றன. ஆனால் இவ்விடயங்கள் விளையாட்டுடன் தொடர்பில்லாவிட்டாலும், பொருளாதார, அரசியல் ரீதியாக பலத்தை நிரூபிக்கவும், இன ரீதியான பாகுபாடுகளால் பாதிக்கப்பட்ட தரப்புகள் இவ்விளையாட்டு விழாக்களை பகிஷ்கரிக்கவும், எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் சம்பந்தப்பட்ட நாடுகள் மற்றும் தரப்புகள் ஒலிம்பிக் விழா மற்றும் பரிசளிப்பு மேடைகளைப் பயன்படுத்தி வருகிறன.

கடந்த வெள்ளியன்று சீனாவில் ஆரம்பமான குளிர்கால ஒலிம்பிக் தொடர்பாக அமெரிக்க வெளியிட்டுள்ள அறிக்கை விளையாட்டின் மூலம் இருநாடுகளும் முட்டி மோதும் சந்தர்ப்பமாகவே காணமுடிகிறது. சீனாவில் பீஜிங்கில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் விழாவுக்கு இராஜதந்திரிகளை அனுப்புவதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்துள்ளது அமெரிக்கா. சீனாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களைக் காரணம் காட்டியே மேற்படி அறிவிப்பை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

"நாம் எந்தவொரு இராஜதந்திரிகளையும், அதிகாரிகளையும் இவ்விழாவில் பங்குகொள்ள அனுமதிக்கப் போவதில்லை எனவும் சீனாவில் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக இந்நடவடிக்கையை எடுப்பதாகவும் அறிவத்துள்ளது. அவர்கள் மேற்கு ஷிங்ஜியாங்க் பிரதேசத்தில் உய்குரில் முஸ்லிம்களை வழிநடத்தும் முறைமையும், அதேபோல் மனித உரிமை மீறலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இராஜதந்திர ரீதியில் புறக்கணிப்பதாக" வெள்ளைமாளிகை ஊடக செயலாளர் ஜேன் ஸாகி தெரிவித்தார்.

"ஜனாதிபதி பைடன் நிர்வாகத்தின் கீழ் எந்தவொரு இராஜதந்திரிகளையும், அதிகாரிகளையும் 2022 பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் விழாவுக்கு அனுப்புவதில்லை என உறுதியாகத் தெரிவித்துள்ளது. இம்முடிவில் மாற்றமெதுவுமில்லை. மேலும் இங்கு நடைபெறவுள்ள குளிர்கால பராலிம்பிக் தொடர்பாகவும் எமது முடிவுகளில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்து ஷிங்ஜியாங்கை மையப்படுத்தி நடைபெறும் இனப்படுகொலைச் சம்பவங்களுக்கும் வன்முறைகளுக்கும் கடுமையான எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதாகவும்" அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் பீஜிங் விளையாட்டு விழாவில் பங்குகொள்வதற்கு அமெரிக்க வீர வீராங்கனைகளுக்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை எனவும் இதில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைக்கு உச்சகட்ட பங்களிப்பை வழங்கிவுள்ளதாகவும் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் விழாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து இராஜதந்திரிகளையும் அதிகாரிகளையும் அனுப்ப மாட்டோம் என அமெரிக்க கூறியுள்ளதன் பின்னணியிலுள்ளது அரசியல் காரணமேயன்றி வேறொன்றுமில்லை என சீனா அறிவித்துள்ளது. அவர்களின் இம்முடிவானது எமது நாட்டில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என வாஷிங்டனிலுள்ள சீன தூதுவராலம் அறிவித்துள்ளது.

"நாம் அமெரிக்க அரசியல்வாதிகளுக்கு எவ்வித அழைப்பும் விடுக்கவில்லை. அதனால் அவர்கள் இராஜதந்திர எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய அவசியமோ, தேவையோ இல்லையன வாஷிங்டனிலுள்ள சீனத் தூதவராலயம் மேலும் தெரிவித்துள்ளதுடன், அரசியல் ரீதியாக இவ்வாறான தீர்மானங்களால் ஒலிம்பிக் கலாசாரங்களில் ஒரு பின்னடைவு ஏற்படுவது மட்டுமே நடைபெறும்" எனவும் சீன தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் இத்தீர்மானத்தை ஆதரித்த அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா போன்ற ஐரோப்பிய நாடுகளும் ஆதரவு தெரிவித்துடன் இவ்விளையாட்டு விழாவுக்கு தமது விளையாட்டு வீரர்களை மட்டுமே அனுப்பியுள்ளது.

ஷிங்ஜியாங் மாகாணத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் அவுஸ்திரேலியா தொடர்ந்து எழுப்பி வரும் பல பிரச்சினைகளின் பேரில் இந்த ஒலிம்பிக்கை இராஜதந்திர ரீதியில் புறக்கணிக்கப் போவதாக தெரிவித்தன. எனினும் விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கெடுப்பார்கள் என்றும் அவுஸ்திரேலியப் பிரதமர் மொரிஸன் குறிப்பிட்டுள்ளார். மேலும் சில ஐரோப்பிய நாடுகளும் இராஜதந்திர ரீதியில் பகிஷ்கரித்துள்ளன.

இப்பகிஷ்கரிப்பு விளையாட்டு விழாக்களின் போது பல நாடுகளில் அரசியல், மற்றும் இன ரீதியான பாகுபாடு காரணமாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக பயன்படுத்தும் ஒரு கருவியாக இருந்து வந்துள்ளது. நாடுகளுக்கிடையிலுள்ள குரோதங்கள், ஒற்றுமையின்மை, போட்டி பொறாமைகளை இல்லாமல் செய்யும் பெரும் கைங்கரியத்தை இவ்விளையாட்டின் மூலமே செய்ய முடியும் என்பதும் மறுக்க முடியாத உண்மையே!

அமெரிக்கா சார்பு, ரஷ்யா சார்பு என நாடுகள் இரண்டாகப் பிரிந்திருந்த காலப் பகுதியில்தான் இம்மாதிரியான விளையாட்டு விழாக்களில் பெரும்பாலான பகிஷ்கரிப்புகள் இடம்பெற்றிருந்தன. ஆனால் எதிர்காலத்தில் மீண்டும் ஒலிம்பிக் போட்டிகளில் நாடுகள் பகிஷ்கரிப்பில் ஈடுபடக்கூடும் என்பதற்கான முஸ்தீபாகவே 2022 பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் புறக்கணிப்பு அமையக் கூடும்.

எம்.எஸ்.எம்.ஹில்மி...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

மஞ்சரி களஞ்சியம்

வாழ்வாதாரமா சேதாரமா 210

தமிழ்க் கவி பேசுகின்றார்

கிழவன் செத்த அன்றைக்கு விட்டுது தொல்லை என்று இருந்த கிழவிக்கு ஆறு மாதங்களின் பின் வாசல் படி தலையில் இடித்து விட்டதாம். அந்த வலியில் அவளுக்கு கண்ணீர் முட்டி அழுகிறாளாம். யாரோ அவளிடம் ஏன் பாட்டி அழுகிறாய் என்று கேட்க அவள் ஐயோ என்ரராசா என்னை விட்டுப் போயிட்டியே இனிநான் என்ன செய்யப் போறனோ...என்று பிலாக்கணம் வைத்தாளாம். 'பிலாக்கணம்'மரபுச் சொல் இப்போது வழக்கில் மிக அரிதாக பயன்படுத்தப்படுகிறது. புலம்புதலைக் குறிக்கும். இப்படி நீண்டகாலமாக கணவன் மனைவியாக வாழ்ந்து கிழவன் கிழவியாகி அதன்பின் கிழவனோ கிழவியோ மறைந்துபோவதை இனிநாம் கதைகளில்தான் பார்க்கமுடியும்.

பெண்கள் விடும் தவறுகளே குற்றவாளி தப்பிக்க ஏதுவாகிறது

அந்த முதியோரிடம் சொல்லிப் புலம்பதிறைய இருக்கும். அதை ராகமாக பாடினால் பிலாக்கணம் அதைப்போல இதைப்போல என்று ஒப்புச் சொல்லிஅழுதால் அது ஒப்பாரி அவ்வளவுதான். எமது மக்களிடம் தம்மையறியாமலே வந்து ஒட்டிக்கொண்ட ஏராளமான வேற்றுமொழிச் சொற்கள் இப்போது திரிபடைந்து வழக்கத்தில் உள்ளது. இது மொழி ஆராய்ச்சிக்கான கட்டுரை அல்ல. ஆனாலும் என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. எம்மிடையே பலஅறிஞர் பெருமக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கல்வியால் தொழிலால் சமூக அந்தஸது பெற்றவர்களாகவும் உள்ளார்கள். ஆனால் அடிப்படையில் கிராமநகரவாசிகளாகவாழ்ந்துபழக்கப்பட்டமக்களின் வாழ்வியலைஏட்டுக்கல்வியளவிலேயேகற்றிருப்பதானதுவிந்தை.உயர் கல்விவாய்ப்புகளுக்காககிராமத்திலிருந்துநகரத்துக்குவரும் பெண்களில் பலர் இவர்களதுஅடாவடிகளில் சிக்குவதுண்டு. கிராமமக்களின் வாழ்க்கையும் நகரமக்களின் வாழ்க்கைமுறையும் வேறுபட்டவை. ஆனால் கிராமவாசிகள் அதிலும் இளையோர் தாமும் நகரவாசிகளைப்போல வாழவேஆசைப்படுகிறார்கள்.

இதற்காகவேஅவர்கள் கல்விவாழ்க்கை முறைதொழில் நட்புகள் எனஎல்லாவற்றையும் தேடிக் கொள்கிறார்கள். பிள்ளைகளின் இந்தவாழ்க்கைப் பாதைபெற்றோருக்குசினிமாவில் பார்த்தகாதாநாயகனையோகதாநாயகியையோஅவர்களுக்குகாட்டுகின்றது. அதைஒருபெருமையாகவும் அவர்கள் நினைக்கிறார்கள். இந்தவகையில் பெண் பிள்ளைகளுக்கானபாதுகாப்புகேள்விக்குறியாகிறது.

எமதுஅயலில் பதினான்குவயதுப் பெண்ணைக்காணவில்லைஎன்றசெய்திமிகதாமதமாகஎமக்குத் தெரிந்தது. உண்மையில் அந்ததாயோஅல்லதுவேறுயாருமோஎமதுவீடுகளில் வந்துவிசாரிக்கவில்லை. பெண்கள் தற்துணிவும்,தன்னம்பிக்கையும் கொண்டவர்களாகமாறவேண்டும். அவர்களுக்குபூரணசுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்றகோரிக்கைகள் எல்லாம் நாங்கள்தான் வைக்கிறோம் அதற்காக இப்படியாபதின்னான்குவயதுப் பெண்ணைபக்கத்துவீட்டில் வைத்துவிட்டு தாயும் தந்தையும் சந்தைக்கோவேலைக்கோ செல்வது. வீட்டில் எப்போதும் ஆண்பிள்ளைகளைக் கூட்டிவைத்துகிட்டியடிக்கவும் கிளித்தட்டுமறிக்கவுமாகஅந்தப்பிள்ளைவிளையாடுவாள். அதுஎனக்கும் கூட பிடித்திருந்தது.பெண்களென்றால் இப்படித்தான் பால் வேறுபாடின்றிகலந்துபேசவும் பழகவும் வேண்டும் எனநினைத்துக் கொள்வேன்.

இப்போதுஅந்தப் பெண்ணைக் காணவில்லை. தாய் தேடுகிறாள்.அவளுக்குதந்தைகிடையாதுதாயின் இரண்டாவதுதிருமணத்தில் வந்தஒருவனேவீட்டில் இருந்தான். விசாரணைகள் தொடங்கினால் அவளுடையபுதியதகப்பனால் அவளுக்குபாலியல் தொந்தரவு இருந்ததாகதெரியவருகிறது. இதுஎன்னபுதினமுங்கபோர் நடந்தகாலத்தில் ஒருகர்ப்பிணிப் பெண்ணைதிருமணமாகாமல் அவள் கர்ப்பமடைந்திருந்ததால் கைதுசெய்துவிசாரித்தார்கள்.

அந்தக்கருவுக்குதந்தையேகாரணம் என தெரியவந்தது. எமதுபெண் போராளிஒருத்திவிசாரித்துக் கொண்டிருந்தாள். அந்தத் தகப்பன் என்னசொன்னான் தெரியுமா? இது என்னம்மாகேள்விஅவள் நான் பெத்தபிள்ளை எனக்குஉரிமையில்லையோ. மரம் வச்சவன் பழந்தின்னக்கூடாதுஎண்டுசட்டம் போடுறியள்'எப்படிநியாயம்?

பெண்களின் பாதுகாப்பைப் பற்றிபேசும் போதெல்லாம் இப்படிஒருசிக்கல் இருக்கிறது. அல்லதுஉருவாக்கப்படுகிறது. இப்போதெல்லாம்வயதுவந்தபெண்களுக்குமுதல் எதிரிதாய்தான் என்றுநினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.'அவனோடபேசதை' உடுப்பை கொஞ்கம் இறக்கிப் போடுதுப்பட்டாவை மூடிப்போடுஎன்பதுபோன்றசொற்கள் கட்டளைகள் தணிக்கைசெய்யப்பட்டுள்ளன. காரணம் பெண்களின் உடைவிடயம் கற்பனைக்கும் எட்டாதவிதத்தில்,சுதந்திரமாக... சுதந்திரமாகஅவிழ்த்துவிடப்பட்டுள்ளது. விளைவுஆண்கள் கறுப்புக் கண்ணாடிஅணியவேண்டியகட்டாயத்தைகொண்டு வந்திருக்கிறது.

ஆப்கான் பெண்களைப்போலஎங்கள் பெண்களும் சில் கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்தகாலம் உண்டு.உடல் தெரிய ஆடை உடுத்துதல் விருந்துநிகழ்ச்சிகளில் ஆண்பெண் பேதமின்றிஆடுதல்.; மயிர் விரித்துவிட்டு செல்லுதல் என,பலவிடயங்களுக்குதடை இருந்தது.நாம் சினிமாப்படங்களையே பார்க்கத்தடை இருந்தது. பிறகுஅந்தத் தடைநீங்கியபின்னரும் படங்களை'திரைப் படவெளியீட்டுப்பிரிவு'போட்டுப்பார்த்து அதிலுள்ளஆடைக்குறைப்புக் காட்சிகள். கவர்ச்சிநடனங்கள் காதல் நெருக்கங்கள் போன்றவற்றைவெட்டிவிட்டேவெளியில் விட்டார்கள்.அவ்வளவுக்குபாதுகாக்கப்பட்டபெண்களுக்கும்..... சிலஅசம்பாவிதங்கள் நடக்கவேசெய்தன.

குடும்பத்தில் பெண்கள் தனித்துவாழும் நிலைஏராளமானகுடும்பங்களுக்குஉள்ளதுகணவன் வெளிநாடுசெல்வது. தொலைவில் வேலைபார்ப்பது. கோபித்துக் கொண்டு தாய்வீட்டில் வசிப்பது. இன்னுமொரு பெண்ணுடன் கூடி வாழ்வதுஎன இன்னோரன்னபலகாரணங்கள் உண்டு. அந்தத் தாய் சிலபலகாரணங்களுக்காகவேறுஆண்களுடையஉதவியைஅல்லதுஅனுசரணையைபெறவேண்டியதேவைவருகிறது. இப்போதுஅவளுடையமுடிவுக்குயாரும் தடைபோடமுடியாது.எனவேஅவள் துணிந்து எல்லாவேலைகளையும் செய்வதுபோலவே இதையும் ஏற்றுக் கொண்டால் அதுஅவளுடையபிள்ளைகளுக்குஆபத்தாகமுடிகிறது.

பெற்றோர் எக்காரணம் கொண்டுபிரிந்தாலும்,பிள்ளைகளுக்குதாய் தந்தை இருவருமேதேவைப்படுகிறார்கள். தந்தையின் இடத்தைநிரப்பக்கூடியஎவரையும் அவர்கள் வெறுக்கவேசெய்கிறார்கள்.

இவர்களதுமனஉழைச்சலானதுஅவர்களதுகல்வியைப் பாதிக்கிறது. மற்றவர்களுடன் உரையாடும் மகிழ்ச்சியைபாதிக்கிறது. ஒருகட்டத்தில் தாய் மீதானவன்மமாகஉருவெடுக்கிறது. அவர்களில்சிலர்தற்கொலைமுயற்சியில் இறங்குகிறார்கள். சிலர் வீட்டைவிட்டுஓடத் தலைப்படுகிறார்கள். பெண்களுக்குபாதுகாப்புஏனென்றாகேட்டீர்கள். சேலைமுள்ளில் வீழுந்தாலும், முள் சேலையில் விழுந்தாலும் சேதம் சேலைக்குத்தான். இந்தியப் பெண்களுக்குஉள்ளதுபோலகருவைக்கலைக்கும் உருமை இலங்கைப் பெண்களுக்கில்லை. அந்தக்கருமுறையற்றவரால் உருவாக்கப்பட்டிருந்தாலும்...

ஒருபெண் தான் மற்றவரால் பாலியல் உறவுக்குஆட்படுத்தப்பட்டால் அவள் செய்யும் முதற்காரியம் போய் நன்குஅலசிமுழுகுவதுதான். இதுபெரியதவறு. அவள் குளிக்கவோ தன்னைக் கழுவவோசெய்யாமல் உடனடியாககாவற்றுறையில் புகார் செய்தாகவேண்டும்.; இதற்கெல்லாம் இப்போதுகாவல் நிலையம் போகவேண்டியதில்லை.தொலைபேசிஅழைப்பேபோதுமானது. அப்போதுஅணிந்திருந்தஆடைகள் மிகமுக்கியசான்றாகும். அதைக்கழுவாமல் வைத்தியசாலைக்குசென்றால்...அந்தசான்றுகள் பாதுகாக்கப்படுவதுடன் அந்தஉறவின் காரணமாகஅந்தபாதிக்கப்பட்டபெண் கர்ப்பமாவதும் தடுக்கப்படும். இதை அறியாமல் பெண்கள் விடும் தவறுகளே குற்றவாளி தப்பிக்க ஏதுவாகிறது.

அல்லாமா ம. மு உவைஸ் நூற்றாண்டு விழா

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித் துறை பிரிவின் ஏற்பாட்டில் பேராசிரியர் அல்லாமா ம. மு உவைஸ் நூற்றாண்டு விழா ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெற்றன.

அந்நிகழ்வில் பேராசிரியர் அல்லாம உவைஸ் பற்றி தென்கிழக்கு பல்கலைக்கழகம் மொழித்துறையினர் வெளியிட்ட 'மகர்ஷி' எனும் பேராசிரியர் அல்லாமா ம. மு. உவைஸ் நூற்றாண்டு விழா சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.



ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் சிறப்பு மலர் வெளியீடும்

இந் நூற்றாண்டு சிறப்பு மலர் பேராசியர் ரமீஸ் அப்துல்லா மற்றும் கே. ஆர். பாத்திமா சிபா ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்துள்ளது. மகர்ஷி என்பது அ. ம மு. உவைஸின் வீட்டின் பெயராகும்.

இந்த மலரில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் தொன்மை, சிறப்பு, பயன்பாடு, வளம் முதலிய பற்றி ஆய்வு ரீதியிலான ஆங்கில் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் அமைந்த கட்டுரைகளும், பேராசிரியர் அல்லமா ம. மு. உவைஸ் நூற்றாண்டு சிறப்பினைக் குறிப்பிட்டு வாழ்த்துரைகளும், மலரின் பின்பகுதில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிழல் படங்களும் தாங்கிய வண்ணம் அழுகிய அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது. இந்த நூற்றாண்டு சிறப்பு மலர் தமிழ் கூறும் நல்லுலகில் காலம் கடந்தும் பேசப்படும் நூலாக அமையும்

இந்நூலில் மற்றுமொரு அம்சமாக ம. மு. உவைஸ் நூற்றாண்டு ஞாபகார்த்த கருத்தரங்கு உரைகளின் சுருக்கமும் அடங்கியுள்ளது. தகைசால் பேராசிரியர் எஸ் தில்லைநாதனின் 'அறிவாலும் பண்பாலும் உயர்ந்த ஆளுமை ' என்ற தலைப்பில் அமைந்த தலைமையுரை கட்டுரைச் சுருக்கமும், பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவின் 'பேராசிரியர் உவைஸைக் கொண்டாடுவது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பணி' என்ற தலைப்பிலான அறிமுக உரைச்சுருக்கமும், தகைசால் பேராசிரியர் அ. சண்முகதாஸின் ' தமிழ் இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் அல்லாமா ம. மு. உவைஸ்' என்ற தலைப்பிலான கட்டுரைச் சுருக்கமும், கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் செ. யோகராசாவின் 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுகைளில் ம. மு. உவைஸ் ஒரு விமர்சனப் பார்வை' என்ற தலைப்பிலான கட்டுரைச் சுருக்கமும் பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரனின் ' இலங்கை தமிழ் இலக்கியத்தில் உவைஸின் படைப்புக்கள்' என்ற தலைப்பிலான கட்டுரைச் சுருக்கமும் இடம்பெற்றுள்ளது.

இக்பால் அலி...✍

புள்ளக் கூடு

காற்றில் தள்ளப்பட்டு மீண்டும் மீண்டும் அதே இடத்தில் தன்னைப் பொருத்திக் கொண்டிருந்தது கதவு; அன்று அந்த மதியப் பொழுதில் வீட்டுச் சுவரில் புள்ளக் கூடு கட்டிய குளவிகளின் அட்டகாசம் அதிகரித்திருந்தது; பத்து வயது நிரம்பப்பெற்ற சதைப் பிடிப்பான சருமம் கொண்ட என்னால் அந்தப் புள்ளப் பூச்சிகளை விரட்டியடிக்க முடியவில்லை; பாவமே அறியாத சிறு சிறு உயிர்களைக் கல்லால் அடிப்பதா இந்தக் கேள்வியோடு அசைவின்றி அங்கேயே நின்றிருந்தேன்...

சிறு இறக்கைகளுடன் காற்றில் எம்பிப் பறக்கும் இந்தப் பூச்சி, நிலை இடுக்குகளில் பூக்கல் ஓரங்களில் சுவர் மூலைகளில் தம் வாழிடங்களை அமைக்கும்; வீட்டில் கர்ப்பிணிகள் அல்லது அவர்கள் யாராவது வந்து சென்றால் கூடக் கூடு கட்டுமாம்; பெரிய கூடு கட்டினால் ஆண் பிள்ளையென்றும் அது சிறிதாக இருந்தால் வயிற்றில் வளர்வது பெண் சிசு எனவும் ஆருடம் கூறுவர்; அதிக நேரங்களில் சிறிய தென்னை ஓலையால் கிழிக்கப்பட்ட காய்ந்த குச்சிகள் மூலமாகவும் மற்றைய பொழுதுகளில் தேங்காய் நார்களினால் திரிக்கப்பட்ட கயிறு மற்றும் தும்புகள் போன்ற உபயங்களாலும் வீட்டின் ஒட்டறை அகற்றும்போது இந்தப் புள்ளப் பூச்சிகள் தவறித் தடம்பட்டு விழ நேர்ந்தால் உம்மா அன்றெல்லாம் கவலையோடே இருப்பார்...

உயிர்களின் மகத்துவம் வெறும் சதைப் பிண்டங்களாகக் கணிக்கப்படாத ஒரு காலமிருந்தது; அதுவும் சிறு மகவுகள் வயிற்றில் இருக்கும்போதே மரித்துப் பிறந்து விட்டால், குழந்தை "மதித்துப் பிறந்தது" என்பார்கள்; அப்படி நிகழும் சந்தர்பங்களில் மரணித்த குழந்தையின் பெயரால் தெருவில் விளையாடி நிற்கும் பிள்ளைகளை வாசலுக்கு அழைத்துச் சீனி பால் பழங்கள் கலந்த "பால் பழம்" கொடுப்பார்கள்; ஏன் எதற்கு என்று கேட்டால் "இது ரூஹானிகள் அல்லது கூராணிகள் பங்கு.." என்று கூறுவர்...

பெரியவர்கள் எவராவது மரணித்து விட்டால் வீடுகளின் புழக்கடைப் பக்கமாகப் பச்சோலை தறித்து ஆனைக் கிடுகு பின்னி ஒத்தாப்பு இறக்கி அதில் கட்டி விடுவார்கள்; அது காயும் நாட்கள் ஏறக்குறைய நான்கு மாதங்களும் பத்து நாட்களுமான "இத்தா" மறைந்திருக்கும் காலம் வரை வாடாதிருக்கும்; அதிசயம்தான் தென்னோலை காய்ந்து சருகாகும் காலமும் இஸ்லாமிய முறைப்படி கணவனை இழந்த பெண் இத்தா அனுஷ்டிக்கும் நாட்களும் ஒரே கணக்காகவே படுகிறது....

தலை கீழாகத் தொங்கியபடியே நூல் இழுக்கும் கொட்டுப் பூச்சிகளின் ஜிம்னாஸ்ட்டிக் மோட்டு வளையிலிருந்து கீழ்க் கம்பம் வரையெங்கும் நீளும்; இப்படிப் படுக்கை அறைகளில் எவ்வித சேதாரமுமின்றித் தனக்குள்ளிருந்து பீச்சிக் கொண்டிருக்கும் திரவம் தங்களின் எட்டுக் கால்களினாலும் புரிகின்ற வித்தையாய் பார்த்த கணமே "புது உடுப்பு வரப்போகிறது." என்று கட்டியம் கூறும் மூத்தம்மாவின் வாய்ச்சொல் ஒரு சில தினங்களில் நிறைவேறியிருகிறது; பட்டுப் புடவைகளுடனும் களிசான், சாறன்களுடனும் வெளியூரிலிருந்து வந்துசேர்ந்த தாய் மாமனின் பொதி எனக்கு அதிர்வைத் தந்தது; குழந்தைகளின் கை வண்ணம் வெளிப்படும்படி அவர்களே எழுதிப் பார்க்கும் வகையில் அதற்குள் பொதிந்திருந்த "மண் மணம் வீசும் மக்களின் விடுகதைகள்" என்ற நூல் ஆடைகளை விடப் புதுமையாக இருந்தது.. .

இரும்பு, மரம், சிற்பம், செம்பு, தங்கம் சார்ந்த தொழில்கள் மூலம் படைக்கருவி, எழுத்தாணி, கொழுமுனை, ஏர் கலப்பை, நாணயம், பாத்திரங்கள், நகை உள்ளிட்ட சமூகப் பண்பாட்டு அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி ஆகின; இதில் இரும்பு சார்ந்த பொருட்களில் குதிரையாடம், அலவாங்கு, கொடுவாக்கத்தி என்பன அதன் உபயோகம் முடிந்த கடைசித் தருவாயில் மழுப்போடுவதற்குப் பயன்பட்டன;; நெருப்பில் பழுக்கக் காய்ச்சியபின் நீரில் அமிழ்த்தி அந்த நீரை மூன்று மிடறு குடிக்க வேண்டும்; ஆறிய பின்னர் கை, முகம், கால்களைக் கழுவிக் கொள்வதால் கண்ணூறு உட்பட வேறு பல நோய்களும் அகன்று போகுமாம்...

தொன்மமும் வரலாறும் யதார்த்தமும் ஞாபகங்களில் நிழலாட ஓதிப் பார்த்தல் அல்லால் ஊதிப் பார்த்தல் சமூகத்தின் விசித்திர முதலுதவியாகக் கணிக்கப்பட்டது; மாப்பிள்ளை ஆலிம் என்பவர் ஊதிப் பார்த்தால் மனதில் குடி கொண்ட பயம் விலகிவிடும் என்று நம்பினார்கள்; சிந்துச்சமவெளி நாகரிகத் தொல்குடிப் படிவங்களாக அறியப்பட்ட இம்முறை, பலரின் நாவுகளுக்கு அப்போது வாலாயமாக வசப்பட்டிருக்கிறது; ஒரு தம்ளரில் தண்ணீரெடுத்து எங்கு, எதில்சரி பயந்துபோய் நடுங்கும் சிறுவர்களை நேரில் உட்கார வைத்துத் தண்ணீர் ஓதி அடிப்பார்கள்; மாப்பிள்ளை ஆலிம் ஓதும்போது கெட்டாவி பறிவார்; "செம்பட்டை செரியாப் பயந்திருக்கான்" என்பார்; ஓர் உறுமலுடன் முகத்தைக் கோபமாக்கிக் கையிலிருந்த நீரை முகத்தில் வீசி அடிப்பார்; அந்நேரமே பயந்த நிலை நீங்கி உடலில் தெம்பு ஏறிவிடும்...

ஓதின பிரம்பும் அவ்வாறே; உருவெளித் தோற்றமாய் நம்பிக்கைகள் ஒருசேர உருப்பெற்றிருந்தன; பள்ளிக்குப் போகாத பிள்ளைகளை உசுப்பேற்றி நகர வைக்கும் கைங்கரியம் இந்தப் பிரம்புகளுக்கு இருந்தது; வீடுகளின் சுவர் மூலைகளில் தொங்கிக் கொண்டிருக்கும்; பெரும்பாலும் தகப்பன்மாரே இதனைக் கையிலெடுப்பர்; அடம் பிடிக்கும் பிள்ளையின் முன் இதனைக் கையிலெடுத்துக் காட்டினாலேபோதும்; தன்னாலே அவர்கள் தணிந்து, பணிந்து கொள்வர்; ஒரு முழாக்கோலின் தொடர்ச்சிதான் ஓதின பிரம்பு; முழாக்கோல் இது மந்திர சக்தி வாய்ந்த கோல், சத்தியம் சத்தியத்தை மீறல் என்பதான அன்றைய அன்றாட மக்களின் வாழ்வியலைத் திசை திருப்பி ஒழுக்க விழுமியங்களுக்குக் கட்டுப்படும் நூதன முறைமை எனலாம்; இழைக்கப்படும் துரோகத்திற்கு இந்த முழாக்கோலை விசுக்கித் தண்டனை பெறப்படும்; இதிலிருந்து அருகிய வடிவமே இந்தப் பிரம்புகள்....

சிரட்டைக் கரியின் துருவேறிய வாசம் கிளம்பினால் அன்றைய நாள் பூராக மச்சம் மாமிசம் சாப்பிடுவதைத் தவிர்த்து வந்தனர்; உமிக் கருக்கின் தவிட்டு மனத்திலும் வெங்காரத்துருசின் கந்தக நாற்றத்திலும் விஷம் பரவுவதாக எண்ணி ஆடைகளை வெளியில் உலரப் போடுவதற்கு முழுக்குப் போட்டனர்; வேப்பெண்ணெய் மணம் காற்றில் பரவுமானால் எந்தச் சிறுவர்களும் தெருவில் விளையாடுவதைக் காண முடியாது; எல்லாம் அங்கு நின்ற மரங்களின் வாசம்தான்; ஒவ்வொரு மரத்துக்கும் தனித்தனி மணம் பதிவாகியிருந்தது; சரியாகப் புலால் வாசம் வீசும் மரமொன்று எங்கள் கொல்லைப் புறத்தில் நின்றது; நீளநீளமாகப் பூக்கும்; வெயிலில் கருகி முறுகும் வரை எவ்வாறான காற்றுக்கும் ஒரு பூத்தானும் கீழே விழாது; வலிமையான தோல் கொண்ட மரம்; "சாம்" என்றே அதனை அழைத்தோம்; அர்த்தங்களும் உணர்ச்சிகளும் நமக்கு மட்டுமா? சார்லி, வூடோ, கிளியோபெட்ரா, லேடி புளு என்று மணங்கள் வந்து துரத்தி விட்டாலும் சாம் மரம் பூப்பதை இன்னும் நிறுத்தி விடவில்லை.

TVS – BMW Motorrad இணைந்து மின்சார வாகனங்களுக்கான ஒத்துழைப்புக்கு ஒப்பந்தம்

TVS Motor C ompany மற்றும் BMW Motorrad ஆ கிய இரு நிறுவனங்களும் மின்சார வாகனங்கள் உள்ளிட்ட எதிர்கால இலத்திரனியல் தொழில்நுட்பங்களின் கூட்டு அபிவிருத்தியுடன் தங்கள் நீண்டகால கூட்டாண்மையை விரி வுபடுத்துவதாக அறிவித்துள்ளன. இந்த முடிவின் அடிப்படையில், எதிர்கால BMW M otorrad தயாரிப்புகளின் வடிவமைப்பு, மேம்பாடு, உலகளாவிய தரம், விநியோகச் சங்கிலி முகாமைத்துவம், கைத்தொழில்மயமாக்கல் ஆகியவற்றில் TVS மோட்டார் நிறுவனத்தின் நோக்கு அமைந்திருக்கும். இந்த மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பின் கீழ், இரு நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க வர்த்தக ரீதியான பலன்களை வழங்குவதற்காக பல்வேறு தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டுள்ளன.

BMW Motorrad மற்றும் TVS மோட்டார் நிறுவனம் பல்வேறு சந்தைகளில் உள்ள வாடிக்கையாளர் பிரிவுகளின் உலகளாவிய தேவைகளை மனதில் கொண்டு, எதிர்கால போக்குவரத்திற்கான தேவையை, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்காக இரு தரப்பும் கவனம் செலுத்துவதன் மூலம் பொதுவான தளங்களை உருவாக்கவுள்ளன. இந்த இரண்டு நிறுவனங்களினதும் பிரத்தியேக உற்பத்திகள் இந்த பொதுவான தளங்களில் உருவாக்கப்படவுள்ளதுடன், நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை உலகளாவிய ரீதியில் சில்லறை ரீதியாக விற்பனையை மேற்கொள்ளும். TVS மோட்டார் நிறுவனமானது, வடிவமைப்பு, உற்பத்தி, விநியோகச் சங்கிலித் திறன்களில் பொறியியல் வல்லமையைத் தொடர்ந்து கொண்டு வருவதோடு, சிறந்த தரம் மற்றும் பொருளாதார நன்மைகளையும் வழங்கும். இந்த ஒத்துழைப்பின் மூலமான, முதலாவது தயாரிப்பு எதிர்வரும் 24 மாதங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

TVS மோட்டார் நிறுவனமானது, ஒரு புகழ்பெற்ற இரு மற்றும் மூன்று சக்கர வாகன உற்பத்தியாளர் என்பதுடன், 8.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி கொண்ட TVS குழுமத்தின் முதன்மையான நிறுவனமுமாகும். TVS உலகளாவிய ரீதியில் 70 நாடுகளில் முன்னிலையில் உள்ளது. அத்துடன், BMW குழுமமானது, அதன் நான்கு தரக்குறியீடுகளான BMW, MINI, RollsRoyce, BMW Motorrad ஆகியவற்றின் மூலம் மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் துறையில் உலகின் முன்னணி ப்ரீமியம் உற்பத்தியாளராக திகழ்கின்றது. குழுமத்தின் உற்பத்தி வலையமைப்பானது 15 நாடுகளில், 31 உற்பத்தி மற்றும் பாகங்களை பொருத்தும் வசதிகளைக் கொண்டுள்ளது. இக்கூட்டாண்மை ஆனது, இரு தரப்பிற்கும் வெற்றி மிக்க ஒன்றாகும்.

கடந்த ஏப்ரல் 2013 இல், TVS மோட்டார் நிறுவனம் மற்றும் BMW Motorrad

ஆகியன இணைந்து, உலகிற்கு sub500cc மோட்டார்சைக்கிள்களை தயாரிப்பதற்கான நீண்ட கால மூலோபாய கூட்டாண்மையில் கையெழுத்திட்டன.

SABEA விருதுகள் வென்று சாதனை படைத்துள்ள பெட்போர்ம் நிறுவனம்

ப்ளாஸ்ரிக் மற்றும் கடதாசி பொதியிடல் துறையின் முன்னணி நிறுவனமான வரையறுக்கப்பட்ட பெட்போர்ம் தனியார் நிறுவனம், 2021 ஆம் ஆண்டுக்கான தெற்காசியாவின் சிறந்த தொழில் முயற்சியாளர் விருது விழாவில் உற்பத்திபிரிவின் ஆண்டின் சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரி, சிறந்த புத்தாக்கப் பொதியிடல் உற்பத்திநிறுவனம் மற்றும் நெருக்கடியான சூழலில் அளித்த சிறந்த தொழில் முயற்சி தலைமைத்துவம் ஆகிய மூன்று விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது. விருதுவழங்கும் விழாஅண்மையில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் அமைச்சர் தயாசிரி ஜயசேக்கர ஆகியோரின் தலைமையில் கொழும்பு மொனேஸ் இம்பீரியல் ஹோட்டலில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. தரத்தில் உயர்வான உற்பத்திகளை வழங்குவதையே அடிப்படை நோக்கமாக கருதி செயற்படுவதே எமது வெற்றியின் இரகசியமாகும். இந்த வெற்றிக்காக உழைத்த நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன், எனபெட்போர்ம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. பேரின்பம் மதிதரன் தெரிவித்தார்.

தெல்கொட மற்றும் மல்வானை பிரதேசங்களில் அமைந்துள்ள 04 கைத்தொழிற்சாலைகளில் 250 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பெட்போர்ம் நிறுவனம் ஐக்கிய இராச்சியம், சவூதிஅரேபியா மற்றும் மாலைத்தீவு போன்ற நாடு களுக்கு தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்றது. ப்ளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் மூடிகள் உள்ளிட்ட பொதியிடல் உற்பத்திகளுக்கு மேலதிகமாக கடதாசிகளை அடிப்படையாக கொண்டு கோப்பைகள், பீங்கான்கள் மற்றும் பொதியிடல் சாதனங்களை உற்பத்தி செய்கின்ற பெட்போர்ம் நிறுவனம் ISO 9001: 2015 தரச் சான்றிதழுடன் SLS 1336 தரச் சான்றிதழையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், இந் நிறுவனமானது, இன்றளவில் உணவுப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் கருதி SLS 22000தரச் சான்றிதழைபெறுவதற்கும் நடவடிக்கை எடுத்துவருகிறது. மல்வானை பிரதேசத்தில் சிறியதொழிற்சாலையாக 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பெட்போர்ம் நிறுவனம் தற்பொழுது இலங்கையில் முழுமையான பொதியிடல் தீர்வுகளை வழங்கும் முதன்மையாக நிறுவனமாக காணப்படுகிறது.

BCCS விருதுகளில் இரண்டாமிடத்தை சுவீகரித்தது CDB

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) நிறுவனத்தின் People.Planet. Profit கொள்கைக்கான அர்ப்பணிப்புக்கான கௌரவிப்பாக சிறந்த கூட்டாண்மை குடிமகன் விருதுகள் வழங்கும் நிகழ்வில் மொத்தம் ஐந்து விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலைபேறாண்மை அடிப்படையையும் பின்பற்றும் CDB, 15 பில்லியன் ரூபாய் வருடாந்த புரள்வுக்கு அதிகமான தொகையை பதிவு செய்யும் நிறுவனங்கள் மத்தியில் ஒட்டுமொத்த இரண்டாமிட விருதை சுவீகரித்திருந்தது.

மேலும், தொடர்ச்சியான நான்காவது தடவையாக சிறந்த பத்து கூட்டாண்மை குடிமகன் விருதுக்காக CDB தெரிவு செய்யப்பட்டிருந்தது. கொவிட்19 தொற்றுப் பரவல் காலப்பகுதியில் நிறுவனம் பின்பற்றியிருந்த சிறந்த செயன்முறைகளுக்காக, Demonstrated Resilient Practices during COVID19 கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டது. சிறந்த அணிச் செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் ஊழியர் உறவுகள் பிரிவின் விருதையும், CDB இன் ஆக்கத்திறனை வெளிப்படுத்தியிருந்தமைக்காக Best Presentation of an Application விருதும் வழங்கப்பட்டிருந்தது.

CDB பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவ பணிப்பாளருமான மஹேஷ் நானயக்கார கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஆண்டில் வழங்கப்பட்ட ஒவ்வொரு ஐந்து விருதுகளும் எமக்கு மிகவும் விசேடமானதாக அமைந்திருந்தது. ஏனெனில் இந்த விருதுகளினூடாக நிலைபேறாண்மையை பின்பற்றியிருந்த இலங்கையின் கூட்டாண்மை நிறுவனங்கள் கௌரவிக்கப்படுகின்றன. 26 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த எமது பயணம் மிகவும் எளிமையானதாக அமைந்திருந்ததுடன், கடினமானதாகவும் இருந்தது. ஆனாலும், இன்று நிதிச் சேவைகள் துறையில் நாம் முன்னோடிகளாகத் திகழ்வதுடன், நாட்டின் சிறந்த ஐந்து வங்கிசாராத

நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக அமைந்துள்ளோம். எமது அணியினர் பல சவால்களுக்கு மத்தியிலும் கைகோர்த்து, எமது வருமானத்தையும் இலாபத்தையும் அதிகரிப்பதற்கு செயலாற்றுவதை நாம் அவதானித்திருந்தோம்." என்றார்.

CDB இன் பயணம் என்பது தொடர்ச்சியாக நிலைபேறாண்மை மற்றும் தொழில்நுட்ப புரட்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தது. "எமக்கு பெறுபேறுகளை பதிவு செய்வது என்பது மாத்திரம் இலக்கல்ல. கூட்டாண்மை வழிமுறைகளின் பிரதான கொள்கைகளை எமது வியாபார தந்திரோபாயத்தில் உள்வாங்கி இயங்குவதில் கவனம் செலுத்துகின்றோம். இதன் காரணமாக நிலைபேறாண்மை என்பது எமது வியாபாரத்தின் பிரதான மூலோபாயத்தில் எப்போதும் உள்வாங்கப்படும் உள்ளம்சமாக அமைந்துள்ளது." என்றார்.

People.Planet.Profit உடன் தொடர்புடைய ஒவ்வொரு கொள்கையுடனும் தொடர்புடைய பாரம்பரிய வியாபார விதிமுறைகளுக்கு அப்பால் CDB க்கு கவனம் செலுத்துவதற்கு இந்த நிலைபேறாண்மை மற்றும் தொழில்நுட்ப புரட்சி போன்றன தூண்டியிருந்தன. எதிர்பார்ப்புகள் நிறைந்த எதிர்காலத்தை நோக்கி CDB நகரும் நிலையில், குறைந்த காபன் வெளியீட்டைக் கொண்டு செயலாற்றுவதுடன், சமூகத்தில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் நிறுவனம் எனும் வகையில், காபன் நடுநிலை என்பதை நோக்கிய தனது நகர்வை தொடர்ந்திருந்தது. CDB'இன் தொழில்நுட்ப மூலோபாயம் என்பது, அதன் நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளிப்பதாக அமைந்திருப்பதுடன், அதன் விரிவாக்கத்துக்கு கைகொடுத்து, அதிகளவு வளங்கள் வினைத்திறனான நிறுவனமாக திகழ பங்களிப்பு வழங்குகின்றது. இந்த தொழில்நுட்ப கவனம் செலுத்துகை என்பதனூடாக CDB க்கு, மிகவும் பின்தங்கிய, இலகுவில் பாதிப்புறக்கூடிய மற்றும் கிராமிய சந்தைகளைச் சென்றடைந்து, நிதி உள்ளடக்கத்தை வகைப்படுத்திக் கொள்ள ஏதுவாக அமைந்துள்ளது.

CDB இன் நிலைபேறாண்மை மற்றும் திறன் முகாமைத்துவ பிரிவின் தலைமை அதிகாரி அரோஷி ரணதுங்க கருத்துத் தெரிவிக்கையில், "CDB தனது கூட்டாண்மை நிகழ்ச்சி நிரலில் இரு தந்திரோபாய தூண்களைக் கொண்டுள்ளது. அதில் காபன் நடுநிலையாக செயலாற்றுவது, 2030 ஆம் ஆண்டளவில் சமூக அக்கறையுடனான முன்னேற்றங்களை நோக்கி நகர்வதற்கு பங்களிப்பு வழங்குவது மற்றும் நிலைபேறான நிதியாண்மை துறையில் முன்னோடியாக அமைந்திருப்பது போன்றன உள்ளடங்கியுள்ளன. கல்வி, சுகாதாரம், நீர், தூய வலு, பொறுப்பு வாய்ந்த நுகர்வு, நிலத்தில் வாழ்க்கை மற்றும் பங்காண்மை ஆகிய, ஏழு UNSDGக்கு முன்னுரிமையளித்து எட்டு பிரிவுகளை நிறுவியுள்ளோம். எமது எட்டு பிரிவுகளும் புதுப்பிக்கத்தக்க வலு அடிப்படையிலான தீர்வுகளை வழங்குவது, பகிரப்பட்ட பொருளாதாரத்தை செயற்படுத்துவது, உயிரியல் பரம்பலுக்கு பங்களிப்பு வழங்குவது மற்றும் பாதுகாப்பு, நிதி உள்ளடக்கம், சமூக தாக்கம் வகிக்கும் செயற்பாடுகள், ஈடுபாட்டுடனான அர்த்தமுள்ள அணி அங்கத்தவர்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த மற்றும் நிலைபேறான வர்த்தக நாமம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன." என்றார்.

தொழில்முனைவோருக்கான இலவச இணையவழி வழிகாட்டல் தளத்திற்கு உதவி செய்யும் அமெரிக்கா

கொழும்பு, இலங்கை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க அரசாங்கத்தின் முகவரமைப்பு (USAID) வளர்ந்து வரும் தொழில்முனைவோரை அனுபவம் வாய்ந்த வணிக நிபுணர்களுடன் இணைப்பதற்காக இலவச இணையவழி வழிகாட்டல் தளத்தை இன்று தொடங்கிவைத்தது. www.yes.youlead.lk எனும் இணையத்தளத்தில் பொதுமக்களுக்குக் கிடைக்கும் தளமானது, இலங்கை முழுவதிலுமுள்ள ஆர்வமுள்ள தொழில்முனைவோர் அவர்கள் முன்னெப்போதும் எதிர்கொள்ளாத சவால்களை எதிர்கொள்ள உதவுவதற்காகவும் மற்றும் அவர்களது வணிகங்களின் நீண்ட கால வெற்றிக்கு உதவுவதற்காகவும் அவர்களை 100 இற்கும் மேற்பட்ட அனுபவமிக்க வணிகத் தலைவர்கள் மற்றும் விடயதான நிபுணர்களுடன் இணைக்கிறது.

USAID இன் YouLead செயற்திட்டம் மற்றும் சஸ்னக்க சன்சத மன்றம் ஆகியவற்றிற்குடையிலான ஒரு பங்காண்மையின் ஊடாக, வணிகங்கள் வெற்றிபெற உதவுவதற்காக தங்கள் நேரத்தையும் நிபுணத்துவத்தையும் வழங்குவதற்கு முன்வரும் தன்னார்வல வழிகாட்டிகளுடன் தொழில்முனைவோரை இந்தத் தளம் இணைக்கிறது. நீண்ட கால நிலைபேறான தன்மையை உறுதிசெய்வதற்காக, வழிகாட்டிகள் மற்றும் வழிகாட்டப்படுவோரை உள்வாங்குவதற்கும், வழிகாட்டிகள் மற்றும் வழிகாட்டப்படுவோருக்கிடையிலான

தொடர்புகளில் மத்தியஸ்தம் வகிப்பதற்கும் மற்றும் புகழ்பெற்ற வழிகாட்டிகளை வலையமைப்பில் இணைத்துக்கொள்வதற்கும் ஒரு தனியான குழுவினர் உள்ளனர்.

"இலங்கையில் தொழில்முயற்சியுடைமை மனப்பாங்கு மிகுதியாக உள்ளது. எனினும் பல தொழில்முனைவோருக்கு அவர்களின் சிந்தனைகளை செயற்படுத்துவதற்கான அனுபவம் இல்லாதிருப்பதுடன் ஒரு வணிகத்தை நடாத்துவதில் உள்ள சிக்கல்களை கையாளும் போது அவர்கள் தமது கவனத்தை இழக்கின்றனர். இந்த வழிகாட்டல் தளத்தின் ஊடாக, அனுபவமிக்க வழிகாட்டிகளுடன் ஆர்வமுள்ள தொழில்முனைவோரை சிறந்த முறையில் இணைக்கவும் மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட செயன்முறையின் ஊடாக இலங்கையில்ஆரம்பிக்கப்படும்பல தொழில்முயற்சிகளின் வெற்றி விகித த்தை அதிகரிக்கவும் எங்களால் இயலுமாயிருக்கும்." என சஸ்னக சன்சத மன்றத்தின்தலைவர்ஹசித விஜேசுந்தர குறிப்பிட்டார்.

உக்கும் பொதியை அறிமுகம் செய்யும் New Anthoney's Farms

பிளாஸ்ரிக் கழிவுகளால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையில் தேசத்தின் கோழி இறைச்சி உற்பத்தியில் நன்மதிப்பை வென்றுள்ள New Anthoney's Farms (Private) Ltd, 100 சதவீதம் உக்கும் பொதியை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக, தமது உணவு பொதியிடல் செயன்முறையில் உக்கும் பொதியை அறிமுகம் செய்த முதலாவது மற்றும் ஒரே கோழி இறைச்சி உற்பத்தியாளராக திகழ்கின்றது.

புகழ்பெற்ற ஹரிதஹரி கோழி இறைச்சி தெரிவுகளுக்காக இந்த உக்கும் பொதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொதி உற்பத்தியில் கஞ்சிப்பசை, செலுலோசு, தாவர எண்ணெய், சீனி, கோரைப்புல் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை நுகர்வுக்கு பாதுகாப்பானதாகவும்,

விரைவில் உக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளன. பிளாஸ்ரிக் கழிவு மீள்சுழற்சி என்ப குறுங்கால தீர்வுகளை மாத்திரம் வழங்குகின்றது என்பதால், சூழலுக்கு நட்பான மாற்று பொதியிடலை நிறுவனம் இனங்கண்டிருந்தது.

நுகர்வோருக்கு மீள்சுழற்சி செய்து கொள்ளக்கூடிய அல்லது கொம்போஸ்ட் உரமாக மாற்றிக் கொள்ளக்கூடிய பொதிக்கான தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், New Anthoney's Farms இனால் நெகிழ்ச்சியான ஃபிலிம் மாதிரியை வடிவமைக்க முடிந்திருந்தது.

அண்மைய மாதங்களில், பொறுப்பு வாய்ந்த பிளாஸ்ரிக் கழிவகற்றல் செயன்முறை தொடர்பில் நாட்டினால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, உற்பத்தியாளர்களும் தயாரிப்பாளர்களும் தற்போது மீளப் பயன்படுத்தக்கூடிய, மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய அல்லது கொம்போஸ்ட் ஆகக்கூடிய பொதியிடல் முறைகளை பின்பற்ற தம்மை அர்ப்பணித்த வண்ணமுள்ளன. கோழி இறைச்சி உற்பத்தித் துறையில் இந்த வழிமுறையை பின்பற்றுவதையிட்டு New Anthoney's Farms மிகவும் பெருமை கொள்கின்றது.

இலங்கையின் அதிவிசால Online Search தளமாக patpat.lk

சகல வாழ்க்கை முறைகளுக்கும் தீர்வளிக்கும் வகையில் தனது சேவை வழங்கல்கள் மற்றும் இணையத்தளத்தை மேம்படுத்தியுள்ளதனூடாக, இலங்கையின் அதிவிசால Online Search தளமாக patpat.lk திகழ்கின்றது. இந்த புதிய மேம்படுத்தல்களுடன், வாடிக்கையாளர்களுக்கு தற்போது பரந்தளவு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஐந்து பிரிவுகளான வாகனங்கள், சந்தைப்பகுதி, சொத்துகள், கல்வி மற்றும் ஓய்வு போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இவற்றில் 100,000க்கும் அதிகமான விளம்பரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளதுடன், தனிநபர்களின் தேவைகளுக்கு பொருத்தமான வகையில் பிரத்தியேகமான நிதி உதவித் தெரிவுகளையும் கொண்டுள்ளது.

இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவை தொடர்பில் அவசியமான நிதிசார்

உதவிகளை வழங்குவதனூடாக, பாவனையாளர்களுக்கு தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய உதவிகளை வழங்குவது இந்த இணையத்தளத்தின் பிரதான உள்ளம்சங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. வாகன குத்தகைகள், சொத்துக் கடன்கள், கல்விக் கடன்கள், பிரத்தியேகக் கடன்கள் மற்றும் கடன் அட்டைகள் போன்றவற்றுக்கு இந்தத் தளத்தினூடாக இலகுவாக விண்ணப்பிக்க முடியும். ஒன்லைன் வாயிலாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், patpat.lk அணியினர் விண்ணப்பதாரியுடன் பதினைந்து நிமிடங்களினுள் தொடர்பை ஏற்படுத்துவார்கள். விற்பனையாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள் என இருசாராருக்கும் அனுகூலமளிக்கும் வகையில் இந்தத் தளம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இலகுவாக அணுகி பார்வையிடக்கூடிய பக்கங்களையும் கொண்டுள்ளது.

100 க்கும் அதிகமான பிரிவுகளைக் கொண்ட இந்த சந்தைப்பகுதியில், இலத்திரனியல் சாதனங்கள், அழகுசாதனப் பொருட்கள், உணவு மற்றும் பானங்கள், பலசரக்குப் பொருட்கள் மற்றும் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. வாடிக்கையாளர்கள் மத்தியில் புகழ்பெற்ற தளமாக இது அமைந்துள்ளது. பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக, WhatsApp மற்றும் Viber ஊடாக விற்பனையாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் தெரிவை வாடிக்கையாளர்கள் கொண்டுள்ளனர்.

வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜுவலரியின் சமூகப்பணியில் 7ஆவது இரத்ததான நிகழ்வு

வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜுவலரி ஏழாவது தடவையாகவும் ஏற்பாடுசெய்த இரத்ததான நிகழ்வு அண்மையில் நிறுவன வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜுவலரி நிர்வாகத்தினரும் அதன் பணியாளர்களும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த இரத்ததான நிகழ்வில் சுமார் 210 பேர் கலந்துகொண்டனர்.

நித்திய கல்யாணி பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வருகைதந்த பொதுமக்களுடன் பனாகொடை இராணுவ முகாமின் பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களும் இந்த உயரிய பணியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். தேசிய இரத்த வங்கியின் பணியாளர்கள் கொழும்பு கிழக்கு ரோட்டரி கழகம் ஆகிய தரப்புகள் இப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி இருந்தார்கள். வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜுவலரி சமூகப் பணியாக ஏற்பாடுசெய்து இந்த இரத்ததான நிகழ்வுதொடர்ச்சியாகஏழாவதுதடவையாகவும் மிகச் சிறப்பானமுறையில் நடைபெற்றது. அடுத்தஆண்டும் இந்தநிகழ்வைநடத்துவதற்குநாம் எதிர்பார்த்துள்ளோம் என வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜுவலரியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் கொழும்பு கிழக்கு ரோட்டரி கழகத்தின் தலைவருமான ஏ.பீ. ஜெயராஜா தெரிவித்தார்.

வெள்ளவத்தைகடற்கரைப்பகுதிகளைசுத்தப்படுத்தல்,சர்வமத நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பு வழங்குதல், பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவி அளித்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு இந்நிறுவனம் முன்னுரிமை அளித்து ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறது.

தொழில்முயற்சியாளர்களுக்கு அதிக இலாபத்தை தரும் குளோபல் லைஃப் ஸ்டைல் லங்கா

தொழில்முயற்சியாண்மையானது வெற்றிக்கான நுழைவாயிலாக காணப்படும் நிலையில் விசேடமாக இந்நிலையை நாம் முந்தைய கோவிட் 19 சூழலில் அவதானிக்க கூடியதாக இருந்தது. அதிகளவு மக்கள் நெகிழ்வான மணித்தியாலங்கள் மற்றும் தொழில்முயற்சியாண்மையை தெரிவு செய்ததுடன் தமது சொந்த சமூகத்துக்கிடையே வர்த்தகத்தை கட்டியெழுப்ப உதவும் நேரடி விற்பனைத்துறை போன்றவற்றை அவர்கள் தெரிவு செய்வது அதிகரித்தது.

அவர்கள் பெரும்பாலும் பொருளாதார வலுவூட்டல் மற்றும் பொருளாதார சுதந்திர தொழில்முயற்சியாண்மை கொண்டு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.அவர்களின் வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளை இத்தகைய இயக்கவியலைப் புரிந்துகொள்வது நேரடி விற்பனைத் துறையின் அடித்தளமாக அமைகிறது என குளோபல் லைஃப்ஸ்டைல் லங்காவின் [Global Lifestyle Lanka] பேச்சாளர் தெரிவித்தார். இலங்கையின் முன்னணி நேரடி விற்பனை நிறுவனமாக, GLL முன்னோடியான முயற்சிகளைக் கொண்டுள்ள நிலையில் இது தொழில்முயற்சியாளர்களை வளர்ப்பதுடன் மட்டுமல்லாமல், சமூகத்தின் சிறந்த நல்வாழ்வுக்கான ஆதரவையும் வழங்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

சுய தொழில்வாய்ப்பானது வெற்றிக்கு தேவைப்படும் அனைத்து பண்புகளையும் கொண்டுள்ளதுஉங்கள் சொந்தமணித்தியாலங்களில் தொழில் செய்வது, தனிப்பட்ட இலக்குகளை நிர்ணயிப்பது போன்றவை திறமையைக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான தெரிவாகும் . "உங்களுக்காக வேலை செய்வதன் நன்மைகள் மற்றும் தனிநபருக்கு விதிவிலக்கான முடிவுகளை அளிக்கும் அத்தகைய முயற்சிகளின் மதிப்பை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள்".

வாரபலன்

06.02.2022 - 12.02.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

மேஷம்

மேஷ ராசிக்காரர்களே, உங்கள் ராசிக்கு இந்த வாரம் நவ கிரகங்களின் சாதகமாக உள்ளது. பத்தாம் வீட்டில் சூரியன், சனி, புதன், லாப ஸ்தானத்தில் குரு, இரண்டாம் வீட்டில் ராகு, எட்டாம் வீட்டில் கேது செவ்வாய், ஒன்பதாம் வீட்டில் சுக்கிரன் என கிரகங்கள் பயணம் செய்கின்றன. ராசிநாதன் செவ்வாய் ஒன்பதாம் வீட்டில் சுக்கிரன் உடன் பயணம் செய்கிறார். பணத் தேவைகள் பூர்த்தியாகும். தொழிலில் உள்ள பிரச்சினைகள் நீங்கும். சுப செலவுகள் அதிகரிக்கும். இந்த வாரம் எதிர்பாராத பண வரவு வரும். குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். சொத்து பிரச்சினையில் சுமூக தீர்வு ஏற்படும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

ரிஷபம்

சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட ரிஷப ராசிக்காரர்களே, ராசியில் உள்ள ராகு சில நேரங்களில் மனக்குழப்பத்தை தருவார். உடல் ஆரோக்கியத்தில் கவனமும் நிதானமும் தேவை. சூரியன், சனி, புதன் இணைந்து ஒன்பதாம் வீட்டில் பயணம் செய்கின்றன, எட்டாம் வீட்டில் சுக்கிரன் செவ்வாய் இணைந்து பயணம் செய்வதால் பேச்சில் கவனம் தேவை. பயணங்களில் நிதானம் அவசியம். பணம் விசயங்களில் கவனம் அவசியம் கடன் வாங்கும் போது கவனம். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். வேலையில் இருந்த பிரச்சினைகள் நீங்கும்.

மிதுனம்

புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட மிதுன ராசிக்காரர்களே, இந்த வாரம் சூரியன் உங்கள் ராசிநாதன் புதனோடு இணைந்து எட்டாம் வீட்டில் சனியோடு பயணம் செய்கிறார். ஏழாம் வீட்டில் சுக்கிரன், விரைய ஸ்தானத்தில் ராகு, ஆறாம் வீட்டில் கேது, செவ்வாய், ஒன்பதாம் வீட்டில் குரு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. நீண்ட காலமாக எதிர்பார்த்த நல்ல காரியம் நடைபெறும். அஷ்டம ஸ்தானத்தில் மூன்று கிரகங்கள் இணைந்துள்ளதால் செயல்களில் நிதானம் தேவை. பெரிய அளவில் பண முதலீடுகள் செய்ய வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நரம்பு தொடர்பான பிரச்சினைகள் வரலாம்.

கடகம்

சந்திரனை ராசி அதிபதியாகக் கொண்ட கடக ராசிக்காரர்களே, இந்த வாரம் ராசிக்கு ஐந்தாம் வீட்டில் கேது, ஆறாம் வீட்டில் சுக்கிரன் செவ்வாய், ஏழாம் வீட்டில் சூரியன், புதன், சனி, எட்டாம் வீட்டில் குரு லாப ஸ்தானததில் ராகு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. இந்த வாரம் உங்களுக்கு சுப செலவுகள் அதிகம் இருக்கும். சகோதரர்கள் வீட்டு விஷேசங்களில் பங்கேற்பீர்கள். பிரச்சினைகள் முடிவுக்கு வந்தாலும் பொறுமையை கடைப்பிடிக்கவும். வேலையில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன் மனைவி இடையே பிரச்சினைகள் வர வாய்ப்பு உள்ளது

சிம்மம்

சூரியனை ராசி அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்களே, இந்த வாரம் ராசிக்கு நான்காம் வீட்டில் கேது ஐந்தாம் வீட்டில் செவ்வாய் சுக்கிரன், ஆறாம் வீட்டில் சூரியன், சனி, புதன், ஏழாம் வீட்டில் குரு பத்தாம் வீட்டில் ராகு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. யோகங்களும் வெற்றிகளும் நிறைந்த அமோகமான வாரமாக அமைந்துள்ளது. எதிரிகள் தொல்லைகள் நீங்கும். தேவைக்கு ஏற்ப பண வரவு அதிகரிக்கும். வேலை வாய்ப்புகளுக்கான போட்டி தேர்வுகளில் வெற்றி கிடைக்கும்.

கன்னி

புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நவ கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக அமைந்துள்ளது. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சூரியன், சனியோடு ராசிநாதன் புதன் இணைந்துள்ளார். பிள்ளைகளால் நல்ல செய்திகள் தேடி வரும் சொத்து சேர்க்கை ஏற்படும். நான்காம் வீட்டில் சுக்கிரன் செவ்வாய் இணைவதால் ரியல் எஸ்டேட் தொழில் சிறப்படையும். சொத்து சேர்க்கை ஏற்படும். திருமணம் சுப காரியம் கை கூடும். சந்தோஷ நிகழ்வுகள் நிறைய நடைபெறும். விருந்து விஷேசங்களில் பங்கேற்பீர்கள்.

துலாம்

சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட துலாம் ராசிக்காரர்களே, இந்த வாரம் உங்கள் ராசிக்கு இரண்டாம் வீட்டில் கேது மூன்றாம் வீட்டில் சுக்கிரன், செவ்வாய், நான்காம் வீட்டில் சூரியன், சனி, புதன், ஐந்தாம் வீட்டில் குரு, எட்டாம் வீட்டில் ராகு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. திருமண தடைகள் நீங்கும் சுப காரியம் கை கூடி வரும். பண வரவு அதிகமாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் வரும். குழந்தைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். விவசாயம் விருத்தியாகும். எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும். சகோதர சகோதரிகளால் சந்தோஷம் அதிகரிக்கும். உறவினர்களால் உதவி கிடைக்கும். சுப காரியங்கள் நடைபெறும்.

விருச்சிகம்

செவ்வாய் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களே, மூன்றாம் வீடான முயற்சி ஸ்தானத்தில் சூரியன், சனி, புதன் இணைந்து பயணம் செய்கிறார். ராசியில் கேது இரண்டாம் வீட்டில் செவ்வாய் சுக்கிரன், நான்காம் வீட்டில் குரு, ஏழாம் வீட்டில் ராகு என கிரகங்கள் பயணம் உள்ளது. புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வேலையில் இருந்த தடைகள் தாமதங்கள் நீங்கும். சிலருக்கும் உத்யோக உயர்வும் வருமானமும் அதிகரிக்கும். உறவினர்கள் வீட்டு விஷேசங்களில் பங்கேற்பீர்கள். தடைபட்ட காரியம் தடையின்றி நிறைவேறும். தகவல் தொடர்பு சிறப்படையும்.

தனுசு

குரு பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட தனுசு ராசிக்காரர்களே, உங்கள் ராசிக்குள் சுக்கிரன், செவ்வாய், இரண்டாம் வீட்டில் சூரியன்,புதன், சனி, மூன்றாம் வீட்டில் குரு, ஆறாம் வீட்டில் ராகு, விரைய ஸ்தானத்தில் கேது என கிரகங்கள் பயணம் செய்கின்றன. இந்த வாரம் உங்களுக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன் சனி இணைந்துள்ளதால் வீட்டிலும் அலுவலகத்திலும் தேவையற்ற வீண் பேச்சினை தவிர்க்கவும். வாக்கு கொடுத்து மாட்டிக் கொள்ள வேண்டாம். பண வருமானம் நன்றாக இருக்கும். வேலையில் இருந்த சிக்கல்கள் நீங்கும். தெளிவான மனநிலையில் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் சின்னச் சின்ன சண்டை சச்சரவுகள் வரலாம், விட்டுக்கொடுத்து செல்வது நன்மையை ஏற்படுத்தும்.

மகரம்

சனி பகவானை ராசிநாதனாகக் கொண்ட மகர ராசிக்காரர்களே, ராசிநாதன் சனி உங்கள் ராசியில் சூரியன் புதனோடு பயணம் செய்கிறார். இரண்டாம் வீட்டில் குரு ஐந்தாம் வீட்டில் ராகு, லாப ஸ்தானத்தில் கேது, விரைய ஸ்தானத்தில் சுக்கிரன் செவ்வாய் என கிரகங்கள் பயணம் செய்கின்றன. வேலையில் இருந்த மந்த நிலை நீங்கும், உடல் ஆரோக்கியம் நலமடையும் சுறுசுறுப்பு ஏற்படும். மரியாதையும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தெளிவான மனநிலையில் இருப்பீர்கள். மூத்த உடன் பிறப்புகளின் உதவி கிடைக்கும். உறவினர்களால் நன்மை உண்டாகும். திடீர் பண வரவு வரும். வீண் செலவுகள் வரலாம் கவனம் தேவை. வங்கி சேமிப்பு அதிகரிக்கும். தெளிவான மனநிலையில் இருப்பீர்கள்.

சனி பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கும்ப ராசிக்

கும்பம்

காரர்களே, நன்மைகள் நிறைந்த வாரமாக அமைந்துள்ளது. ராசியில் குரு நான்காம் வீட்டில் ராகு, பத்தாம் வீட்டில் கேது, விரைய ஸ்தானத்தில் சூரியன், சனி, புதன் லாப ஸ்தானத்தில் செவ்வாய் சுக்கிரன் என கிரகங்கள் பயணம் செய்கின்றன. நிம்மதியும் சந்தோஷமும் நிறைந்த வாரமாக அமைந்துள்ளது. உணவு விசயத்தில் கவனம் தேவை. செய்யும் தொழிலில் லாபத்தை அதிகரிக்கும். திடீர் பண வருமானமும் சுப விரைய செலவுகளும் அதிகரிக்கும். குபேர யோகம் தேடி வரப்போகிறது. வேலை செய்யும் இடத்தில் சம்பள உயர்வும் அதிகரிக்கும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் நீங்கும்.

மீனம்

குரு பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட மீன ராசிக்காரர்களே, விரைய ஸ்தானத்தில் குரு, லாப ஸ்தானத்தில் சூரியன், சனி, புதன் இணைந்துள்ளதால் தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். முதலீடுகளில் லாபம் இரட்டிப்பாகும். மூன்றாம் வீட்டில் ராகு, ஒன்பதாம் வீட்டில் கேது என கிரகங்கள் பயணம் செய்கின்றன. புதிய தொழில் தொடங்கும் யோகம் கை கூடி வந்துள்ளது. விரைய ஸ்தானத்தில் உள்ள குரு சுப விரைய செலவுகளை ஏற்படுத்துவார். திடீர் திருமண யோகம் கை கூடி வரும். உறவினர்கள் வீட்டு விஷேசங்களில் பங்கேற்பீர்கள். சுப விரைய செலவுகள் அதிகரிக்கும். செவ்வாயுடன் சுக்கிரன் இணைந்து பத்தாம் வீட்டில் பயணம் செய்வதால் பதவியில் உயர்வு தேடி வரும்.

அன்னை முத்துமாரியின் மாசிமக உற்சவத்தினை அகக்கண்ணால் தரிசிப்போம்

ஓம் சக்தி, ஓம் சக்தி என உளமார அழைத்திட்டால் ஓடோடி வருபவளே நம் அகிலாண்ட நாயகியாம் அன்னை பராசக்தி, அமுத பிள்ளையின் குரல்கேட்டு, அரவணைத்து பால் கொடுத்த பாலாம்பிகையல்லவா நம் பராசக்தி. அகிலத்திற்கே அன்னையாய் எம்மை அரவணைத்து காக்கின்ற அம்பிகையே, அழகுமலையின் அடிவாரத்தில் அன்னை 'முத்துமாரி' எனும் நாமத்தோடு, பன்னகமாம் பதியாகிய மாத்தளையின் மண்ணிலே வீற்றிருந்து, ஆண்டாண்டு காலமாக மாசிமாத மக நட்சத்திரத்தில் மங்கலம் நல்கிட பஞ்சரத பவனியிலே நடுநாயகியாய் வலம் வந்து பக்தர்தம் அஞ்ஞான இருள் அகற்றி மெய்ஞானமெனும் அருள் ஒளி நல்கி, உலகெங்கும் வாழும் இந்துக்களுக்கும் தன் அருள் மாரி பொழிவது என்பது வரலாற்றுச் சான்றும், சிறப்பும் மிக்கது என்பதை இந்துக்களாகிய நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். அவ்வகையில் இவ்வருடமும் 28.01. 2022 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் அன்னை முத்துமாரி அபிஷேகம், அலங்காரம், ஆராதனை என விழாக்கோலம் பூண்டு கணபதி, சிவன், அம்பாள், முருகன், சண்டேஸ்வரி சகிதமாக பஞ்சரதத்திலே சித்திரத் தேரிலே பவனிவரும் காட்சியை காணாத கண் தான் என்னவோ? என சிந்திக்க வேண்டிய நிலையில், நாம் இலங்கை நாட்டின் இன்றைய சூழ்நிலையிலே 'கொரொனா-19' என்ற கொடிய அசுரன் கையில் சிக்கித் தவித்து, ஆலயவழிபாடு, அபிஷேகம், ஆராதனை என அகக்காட்சியில் காண வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எனவே இன்றைய நிலைமைகளை கருத்தில் கொண்டு நாமும் நம் நாடும் ஆரோக்கியமான, ஆன்மீக உணர்வுகொண்டு அன்பே வடிவானவர்களாக வாழ அன்னை முத்துமாரி 17.02.2022 இல் தேரோடும் காட்சியையும் நம் அகக்கண்களால் தான் கண்டு தரிசித்து அருளாசியைப் பெறுவோம்.

மலையகத்தின் குலவிளக்கே மாரியம்மா

மாத்தளை யோகராணி பாலசுப்ரமணியம்
மாத்தளை.

மாரியம்மா முத்து மாரியம்மா!
மலையகத்தின் குலவிளக்கே மாரியம்மா!
மாத்தளையெனும் பதினிலே
மங்கலம் பல நல்கிடும் மங்கள நாயகியே!
தாயாய் நீயும் தேரேறிவந்தே
தரணியில் துயரதனை தீராயோ திருமகளே
உயிர் கொல்லும் கொரோனாவின்
கோரப்பிடியினின்று காத்திடாயோ கருமாரியே
வேண்டுவோரின் வரமெலாம் தருபவளே
வேருடனே அழித்திடாயோ வேதனையை வேதநாயகியே
தேரேறியே பஞ்சரத தேரேறியே நீ
பாவங்களை ஒழித்திடாயோ பவானியே
அவனியிலே அல்லலுறும் யாவரையும்
ஆனந்தமாய் ஆரோக்கியமாய் ஆதிசக்தியே
அச்சமின்றி அவனிதனில் வாழ
அருளாயோ நீ தேரேறி வந்தே அபிராமியே
ஆண்டாண்டு தோறும் நீயும் அம்மையே
ஆடியாடி அசைந்தாடி தேரேறிவரும் தேவகியே
அடியார்தம் குறைதீர்த்திடவே நீயும்
வாராயோ அம்பிகையே எங்கள் குலவிளக்கே
விண்ணவர் துயர்கெடவே நீயும்
மகிடாசரனை சங்கரித்த சங்கரியே
மண்ணுயிராம் எம் மன இருளகல
மாசி மக தேரேறி வாராயோ மகாலட்சுமியே
மாமரியம்மா முத்து மாரியம்மா
மலையகத்தின் குலவிளக்கே முத்து மாரியம்மா

முஸ்லிம் சமூகத்தின் பெருமுதுசொம் அப்துல் சமட்

இலத்திரனியல் ஊடகங்களினூடாகவும், பத்திரிகைகள், மொழிபெயர்ப்புக்கள் மற்றும் கல்வியியல் செயற்பாட்டில் நீண்டகால அனுபவம் கொண்ட அப்துல் சமட் தனது 82 ஆவது அகவையில் இறைவனின் அழைப்பை ஏற்றுக் கொண்டார்

சாய்ந்தமருதில் பிரல்பயமிக்க வைத்தியராக திகழ்ந்த மீராசாஹிபு முகம்மது ஹுஸைன் மற்றும் மீராலெப்பை கதீஜா உம்மா தம்பதிகளுக்கு ஏக புதல்வனாக அப்துல் சமட் 1940.01.13 இல் பிறந்தார். கடந்த 32 வருட காலமாக தனது 7 பிள்ளைகளுடன் கல்கிசையில் நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். தனது இரண்டு வயதில் தாயை இழந்த இவர் வாப்பம்மாவின் அரவணைப்பிலும் தந்தையின் ஆதரவிலும் வளர்ந்தார். மகனின் குழந்தைப் பருவத்தில் மனைவியை இழந்த போதிலும் மகனை உரிய முறையில் வளர்க்க வேண்டுமென தந்தை அதிக பிரயனத்தனங்களை மேற்கொண்டார். அப்போதைய நிந்தவூர் யூனியர் ஆங்கிலப் பாடசாலையில் (தற்போதைய அல் அஸ்ரக்) தரம் 01 முதல் 05 வரையான ஆரம்பக் கல்வியைக் கற்றார். தரம் 06 முதல் மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். இங்கு பிற்காலத்தில் மருதமுனையின் அடையாளங்களாக காணப்பட்ட மருதூர்கனி, மருதூர் கொத்தன், யூ.எல்.ஏ. மஜீட் ஆகியோருடன் சக மாணவனானார். இவர்களுக்கு கற்பித்த புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் ஆசிரியரின் கற்பித்தல் போக்கில் ஈர்க்கப்பட்டு அவரது விருப்பத்துக்குரிய மாணவனாக மாறினார். புலவர்மணி ஆ.மு சரிபுத்தீனுக்கு ஆசிரியர் இடமாற்றம் வழங்கப்பட்ட போது, இவர் தரம் 07 இல் இப்பாடசாலையிலிருந்து விலகினார்.புலவர்மணி ஆ.மு சரிபுத்தீன் அப்போதைய கல்முனை அரசினர் ஆண்கள் கலவன் பாடசாலைக்கு (தற்போதைய அல் அஸ்ஹர்) இடம்மாற்றம் பெற்றபோது அப்துல் சமடும் அப்பாடசாலையில் சேர்ந்து தரம் 08 முதல் SSC வரையான கல்வியை தொடர்ந்தார். SSC பரீட்சையில் சித்தியெய்திய எம் எச் ஏ சமட் 1961 இல் ஆசிரியராக நியமனம் பெற்று, மாவடிப்பள்ளி முஸ்லிம் வித்தியாலத்தில் ஆசிரியர் கடமையை ஆரம்பித்து ஒரு வருடம் கடமையாற்றினார். பின்னர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1962 முதல் 1964 வரையில் பயிற்சி பெற்று, சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ், கல்முனை சாஹிறா கல்லூரி, அநுராதபுரம் விவேகானந்தக் கல்லூரிகளில் பயிற்றப்பட்ட ஆசிரியராக கடமையாற்றினார்.தொடர்ந்து அநுராதபுரம், மிகிந்தலிலுள்ள மிகிந்து சிங்கள மகா வித்தியாலயத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு இஸ்லாம் பாடத்தை கற்பித்தார். ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டருந்த இக்காலப் பகுதியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய இவருக்கு பேராதனைப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. அநுராதபுரத்தில் இருந்து கொண்டு கண்டியில் பட்டப்படிப்பை தொடர முடியாத காரணத்தினால் கண்டி உடதும்பர ஜாமிஉல் அஸ்ஹர் மகா வித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டு முழு நேரமும் பல்கலைக்கழத்தில் கற்க முடியாத காரணத்தினால் வெளிவாரியாக பட்டப்படிப்பை தொடர முடியுமான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பல்கலைக் கழகப் படிப்பை தொடர்ந்தார். பல்கலைக் கழத்தில் முதல் வருடம் பொருளியல் பாடத்தில் இவர் பெற்ற A சித்தி காரணமாக அப்பாடத்தை விசேடமாக ஆங்கிலத்தில் கற்றார். இதன் காரணமாக இறுதி வருடத்தை முழு நேரமாக கற்பதற்கான கற்கும் விடுமுறை (study leave) யைப் பயன்படுத்தி B.Com கற்கையை நிறைவு செய்தார். பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் வரையில் பாடசாலை ஆசிரியராக சுமார் 12 வருடங்கள் தொழில் புரிந்து வந்த இவர், பின்னர் மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் வணிக விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.சில வருடங்கள் இங்கு கடமையாற்றிய பின்னர் நாவலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தொலைக் கல்வி நிறுவனத்திற்கு (தற்போதைய திறந்த பல்கலைக் கழகம்) தமிழ் மொழிப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் கொழும்பில் ஏற்பட்ட கலவர சூழல் காரணமாக சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 1977 முதல் 1980 வரையில் பணிபுரிந்தார். கல்வி பயிற்சிக்காக வெளி நாடுகள் பல வற்றிற்கு விஜயம் செய்துள்ள இவர், 1980 களில் நைஜீரியா, கம்பியா ஆகிய நாடுகளில் விரிவுரையாளராக கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தினார். 1983 நாடுதிரும்பி சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், அதிபராகவும் 1990 வரையில் கடமையாற்றினார். 1990 முதல் 1991 வரையில் தெஹிவலை தொழில்நுட்பக் கல்லூரியில் கடமையாற்றும் காலத்தில் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் அதிபராக கடமைற்றிய காலத்தில் தமிழ் முஸ்லிம் மாணவர்களது தொழில் நுடப் கல்விக்காக தமிழ்ப் பிரிவொன்று அமைப்பதில் முன்னின்று முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீட்டின் அனுமதியுடன் எச்என்.டி ஏ பயிற்சிகளையும் மருதானை தெஹிவளை கண்டி தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆரம்பித்தார். ஓய்வு பெற்ற பின்பும் பகுதிநேர விரிவுரையாளராக அக் கல்லூரிகளில் கற்பித்தார்.

மறைந்த தலைவர் அஸ்ரப்பின் புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஆலோசகராக 6 வருடங்கள் கடமையாற்றிய காலத்தில் கிழக்கு மாகணத்தில் அம்பாறை, நிந்தவூர், மட்டக்களப்பு ,மாவட்டங்களில் தொழிற்பயிற்சி, நைட்டா, போன்ற பயிற்சி நிலையங்களை, அமைப்பதற்கு மறைந்த தலைவர் அஸ்ரப்புடன் இணைந்து செயலாற்றினார். அம்பாறை தெஹியத்த கண்டி, பதியத்தலாவை, தீகவாபி போன்ற பகுதிகளுக்கெல்லாம் தொழிற்பயிற்சி நிலையங்களை புனர் வாழ்வு அமைச்சின் ஊடகாக நிதியைப் பெற்று ஆரம்பித்து வைத்து அதனை தொழிற்பயிற்சி அபிவிருத்தி அதிகார சபைக்கு பாரப்படுத்தும் திட்டமொன்றுக்காகவும் மறைந்த அஷ்ரபுடன் இணைந்து முன்னின்று உழைத்தார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் கப்பல்துறை அமைச்சாராக பதிவி வகித்த காலத்தினுள் 1995 முதல் 2000 வரையில் அமைச்சின் ஆலோசகராக இருந்ததோடு மட்டுமல்லாது, அம்பாரை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் RVTC, DVTC பயிற்சி மையங்கள் அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியவராவார். அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரஃப்பின் மறைவிற்குப் பின்னர் அமைச்சர் பேரியல் அஷ்ரஃப்பின் விஷேட ஆலோசகராகவும் 2000/2002 வரையில் பணியாற்றினார்.

இவர் கொண்டிருந்த ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழித் தேர்ச்சிகள் காரணமாக 2002 களில் வீரகேசரி பத்திரிகையிலும், IMO (UN) இலும் தமிழ், ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வாறாக ஊடகத்தில் பணிபுரியும் காலத்தில் அதிகம் எழுதுவதற்கானக் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தினார். ஓய்வு பெற்ற காலத்திலும் இறுதியாக மரணிக்க முன்னும் பலரது கவிதைகளை இரசித்து அதனை ஆங்கில மொழி மாற்றம் செய்து தனது முகநூலில் பதிவிட்டார். தெஹிவளை, மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் அவரை நேசித்த பெரும்பான்மை சக அதிபர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், அக் கல்லூரிகளில் கற்ற மாணவ மாணவிகள் அவரை இறுதிக் கட்டத்திலும் அவரைத் தேடி வந்து உரையாடிச் செல்வார்கள். அவர் தனது மகனுடம் பேசிவிட்டு இறுதி மூச்சுக்கு முன் தனது அசர் தொழுகையை நிறைவேற்றுவதற்கு வுலுச் செய்து கலிமா சொன்னவாறே அமைதியாக சிரித்த முகத்துடன் தனது குடும்பத்தினையும் இந்த உலகத்தினையும் விட்டு விடைபெற்றுச் சென்றார். எம்.எச். அப்துல் சமட்டின் ஜனசா 31.01.2022 அசர் தொழுகையுடன் தெஹிவளை ஜம்ஆப் பள்ளி வாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது சகல பாவங்களையும் மன்னித்து ஜன்னத்துல் பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த சுவர்க்கத்தை வழங்குவானாக ஆமீன்

கல்முனை பறக்கத்துல்லாஹ் ...✍

14

கொழும்பின் கதை

என். சரவணன்

சிங்கள கலைத்துறை வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்கிய டவர் மண்டபம்

1880களில் கொழும்பின் பல்வேறு இடங்களில் நாடகங்களை அரங்கேற்றுவதற்காக பல தற்காலிக கொட்டகைகளும் கூடாரங்களும் உருவாகின. கொழும்பு மணற்பாதைகளில் குதிரை வண்டிகள் தான் ஓடிக்கொண்டிருந்தன. அந்தக் காலத்தில் நாடகம் மட்டுமே கொழும்பு மக்களுக்கு இருந்த ஒரே ஒலி காட்சி ஊடகம்.

பெவிலியன் தியேட்டர், பொது மண்டபம் (பப்ளிக் ஹோல்), சரஸ்வதி மண்டபம் போன்ற அரங்குகள் அப்போதிருந்தன. இவற்றில், கொழும்பு கோட்டையில் உள்ள ராக்கெட் கோர்ட்டில் இருந்த பிளவர் மண்டபம் மிகவும் பிரபலம். ஆனால் 1886ல் அதுவும் தீயில் அழிந்து போனது.

1888களில் ஓடு வேயப்பட்ட கட்டடத்துடன் கூடிய புதிய மண்டபம் கட்டப்பட்டு வந்தது. பெஸ்டியன் நடன நிறுவனத்தின் முகாமையாளர் சைமன் சில்வா இதற்கான முயற்சியை எடுத்திருந்தார். ஆனால் புதிதாக கட்டப்பட்ட மண்டபமும் தற்காலிக கட்டிடமாகவே இருந்தது. இப்பன்வலசந்திக்கு அருகில் மிகவும் வசதியான, முழுமையான பொதுமண்டபம் (பின்னர்எம்பயர்மண்ட பம்) கட்டப்பட்டு முடிக்கப்பட்டது. அதுவும் சிறிது காலத்தில் இடிந்து விழுந்தது. 1900 அளவில்புறக்கோட்டை மல்வத்தை வீதியில் நியூ ஸ்போர்ட்ஸ் போர்ட் ஹோல் என்ற தற்காலிக அரங்கமும் இயங்கி வந்தது.

முதன்முதலில் இவ்வாறு நாடகங்களைக் காண்பித்த இடமாக புறக்கோட்டை தான் திகழ்ந்தது. பின்னர் புறக்கோட்டையிலிருந்து சிறிது தூரத்தில் இருந்த மருதானை நாடகங்களை காண்பிக்கும் பிரபலமான இடமாக மாறியது. புறக்கோட்டையைச் சேர்ந்தவர்களும் நள்ளிரவில் நாடகம் பார்க்க மருதானைக்கு வந்தார்கள். 'மருதான ப்ரீதி நத்தல் நாட்டிய கண்டாயம்' மருதானை போபஸ் வீதியில் (இப்போது தேவனம்பியாதிஸ்ஸ மாவத்தை) ஓரியண்டல் தியட்டர் நிறுவனம் போன்ற நாடகக் கம்பனிகள் அப்போது பிரபலமாக இயங்கின.

1908 இல் சிங்கள நாடகக் கம்பனி மருதானையில் ஆரம்பமானது. ஜேம்ஸ் பெரேரா என்கிற பிரபல வர்த்தகர் தான் அதன் தலைவர். அவர் முதன் முதலில் 1906 ஆம் ஆண்டு புதிய மண்டபம் ஒன்றில் முதலில் நாடகத்தை மேடையேற்றினார். பிற்காலத்தில் அந்த இடத்தில் தான் இன்றைய எல்பின்ஸ்டன் மண்டபம் நிறுவப்பட்டது.

சண்டை சவாலால் உருவான டவர் மண்டபம்

மருதானையில் யூனியன் மெசேஞ்ஜர் ஹோட்டல் உரிமையாளர் கனேகொட அப்புஹாமிலாகே ஹெந்திரிக் செனவிரத்ன. ஒரு நாள் அவருடைய மகன் எட்மண்ட் புறக்கோட்டையில் உள்ள ஒரு தியேட்டருக்கு நாடகம் பார்க்கச் சென்றபோது வம்புச் சண்டையில் அகப்பட்டார். அப்போது மருதானைக் குழுவினர் புறக்கோட்டை கும்பலிடம் அடிவாங்கி வரவேண்டி ஏற்பட்டது. இந்தக் களங்கத்திலிருந்து விடுபட எட்மண்ட் ஒரு விசித்திரமான யோசனையை முன்வைத்தார். அதாவது அவரது குடும்பத்தினர் தலைமையில் ஒரு திரையரங்கை கட்டுவது. அதுவே மற்ற திரையரங்குகளை முறியடிக்கும் என்ற எண்ணம் அவருக்கு உருவானது. எட்மண்ட் இந்த யோசனையை தனது தந்தை ஹெந்திரிக்கிடம் சொன்னார். மருதானையில் நிரந்தர திரையரங்கம் அமைக்கும் இத் திட்டத்தை ஹெந்திரிக் ஏற்றுக்கொண்டார். இப்படித்தான் இலங்கையின் முதலாவது நிரந்தர நாடக மண்டபமான டவர் மண்டபம் கட்டப்பட்டது.

ஹெந்திரிக் முதலாளி 1907 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி பஞ்சிகாவத்தை வீதியில் குதிரைத் தொழுவத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியை 2000 ரூபாவுக்கு வாங்கினார். அந்த 68 பேர்ச்சஸ் காணி 'மெரக்ஞகே வத்த' என அழைக்கப்பட்டது.

ஜோன் த சில்வா தலைமையிலான நாடகக் குழுவுக்கு அப்போது வரவேற்பு அதிகம். நாடகம் நடத்தும் அரங்கங்களின் பற்றாக்குறை இருந்ததால் அதற்கான முயற்சியும் கூட வணிக ரீதியில் இலாபம் தரத்தக்கதே என்பதை அவர் உணர்ந்தார். இறுதியில் இந்த நிலத்தில் ஒரு தேசிய திரையரங்கத்தைக் கட்டுவதென முடிவானது.

பௌத்த மறுமலர்ச்சி காலத்தைத் தாண்டி சுதேசியத்தைக் கோருகிற இயக்கங்கள் வீரியமாக எழுச்சியடைந்த காலம். மதுவொழிப்பு இயக்கம் இதில் முக்கியமான அங்கத்தை வகித்தது. சுதேசிய பண்பாட்டை வலியுறுத்தும் பல முயற்சிகளை அப்போதைய இலங்கைத் தலைவர்கள் முன்னெடுக்கத் தொடங்கியிருந்தனர்.

டவர் திரையரங்கிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சம்பிரதாய முறைப்படி இடம்பெற்றதுடன் அக்கால சுதேசிய தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சம்பிரதாயபூர்வமாக காலை ஏழு மணிக்கு திறந்து வைத்தவர் அனகாரிக தர்மபால. இந்த நிகழ்வில்டீ.எஸ். சேனநாயக்க, எப். ஆர். சேனநாயக்க, சேர்.பொன்னம்பலம் இராமநாதன், டி. பி. ஜயதிலக, வலிசிங்க ஹரிச்சந்திர, பியதாச சிறிசேன, சட்டத்தரணி ஜோன் த சில்வா போன்ற அன்றைய பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

டவர் மண்டபம் ஒன்றரை ஆண்டுகளில் கட்டப்பட்டது. டிசம்பர் 16, 1911 இல் திறக்கப்பட்டதும் சார்ல்ஸ் டயஸின் "பாண்டுகாபயா" என்கிற நாடகம் முதலில் அரங்கேற்றப்பட்டது. ஹெந்திரிக்கின் மகளை விவாகம் செய்த வழக்கறிஞர் தான் சார்ல்ஸ் டயஸ். அவரின் முதல் நாடகம் தான் "பாண்டுகபாய". இந்த நாடகத்துக்கான உடைகள் அனைத்தும் பம்பாயில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சி. அது அமோக வெற்றி பெற்றதோடு, அன்று இரவு நடைபெற்ற சிறப்ப மேடையேற்றத்துக்கு அப்போதைய இலங்கையின் பிட்டிஷ் ஆளுநர் ஹென்றி மெக்கலம் வருகை தந்திருந்தார். அப்போதிருந்து டவர் மண்டபம் இலங்கையின் நாடகம் மற்றும் நாடகக் கலை வரலாற்றில் ஒரு தனித்துவமான மையமாக மாறியது.

லண்டன் கோபுரத்தை (Tower of London) மாதிரியாகக் கொண்ட மூன்று முகங்களைக் கொண்ட கடிகாரக் கோபுரத்தின் மாதிரியில் தான் அது கட்டப்பட்டது. பெயரும் கூட அதனை முன்மாதிரியாகக் கொண்டு "டவர் ஹோல்" எனப் பெயரிடப்பட்டது. பம்பாயிலிருந்து கொண்டு வரப்பட்ட சிறப்புத் திரையையும், நவீன மேடை உபகரணங்களுடன் கூடிய டவர் தியேட்டரை 1,500 பார்வையாளர்கள் வரை அமரக் கூடியதாக அது கட்டி முடிக்கப்பட்டிருந்தது. முதன்முதலில் அரங்கேற்றப்பட்ட "பாண்டுகாபய" நாடகம் இலங்கை நாடகக் கலை வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாகவும் திகழ்கிறது. அன்றைய பாரம்பரிய மரபுகளைத் தாண்டி, சாதாரண கிராமத்து வாழ்க்கையை வியத்தகு முறையில் உள்ளடக்கிய நாடகம் அது.

டவர் மண்டபம் ஒரு தேசிய நாடக அரங்காக நிறுவப்பட்ட நேரத்தில், அது சுமார் 120 நிரந்தர கலைஞர்களைக் கொண்டிருந்தது. டவர் மண்டபம் நினைவு மலரொன்றின் பிரகாரம், டவர் மண்டபத்தின் சிரேஷ்ட நாடக கலைஞர் ஒருவரின் மாதாந்த சம்பளம் 400 ரூபாவாக இருந்தது. இது ஒரு பெரிய வருமானம். காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை பயிற்சி, மதியம் 12.30 மணி முதல் 4.20 மணி வரை ஓய்வு, மாலை 4.30 மணிக்கு நாடகத்திற்கான ஆடைகளை அணிந்து அரிதாரம் பூசி தயாராதல், மாலை 6.30 மணிக்கு முதல் நாடகம், இரவு 10.30 மணிக்கு இரண்டாவது என்பது இவர்களுக்கான தினநிகழ்ச்சி நிரல்.

டவர் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட நாடகத்தில் "தேவனாம்பிய திஸ்ஸ" நாடகத்தில் உயிருள்ள மான் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் மான் இறந்தபோது மதச் சடங்குகளுடன் கூடிய இறுதிக் கிரியை நடத்தப்பட்டதாகவும் அறியக் கிடைக்கிறது. 1915 இல் சிங்களமுஸ்லிம் கலவரத்தின் போது டவர் மண்டப உரிமையாளரும், முக்கிய நாடக ஆசிரியர்களும் சிறை வைக்கப்பட்டிருந்தனர். அக்கால நாடகங்களில் பெரும்பாலானவை தேசாபிமானத்தை தூண்டுகிற நாடகங்களாகவும் சிங்களவர்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டின என்றும் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் குற்றம் சுமத்தப்பட்டதே இதற்கும் காரணம். ஜோன் எண்டர்சன் ஆளுநராக வந்ததன் பின்னர் 1916 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட டவர் மண்டபத்தின் உரிமையாளர்கள் விடுவிக்கப்பட்டனர், டவர் மண்டபம் உள்ளிட்ட மற்ற அரங்குகளின் மீது இருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

டவர் மண்டபத்தின் நாடக ஆசிரியர்கள் ஒவ்வொரு பிரதியையும் ஒவ்வொரு பாடலையும் மனப்பாடம் செய்ய வேண்டியிருந்தது. இதன் விளைவாக, நாட்டின் முதல் தொழில்முறை நாடகக் குழு உருவானதுடன் டவர் மண்டபத்து சுற்றுலா நாடகக் குழு உருவானது. இக்குழுக்கள் நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களுக்குச் சென்று நாடகங்களை நிகழ்த்தினார்கள்.

ஹெந்திரிக் முதலாளியின் மரணத்தின் பின்னர் அவரின் பிள்ளைகளின் சொத்துச் சண்டைகளால் டவர் மண்டபத்தின் செயல்பாடுகள் ஸ்தம்பித்து போனது. இதே காலப் பகுதியில் இலங்கையில் மௌனப்படம் (Silent Film) களத்துக்கு வந்து சேர்ந்தது. இது நாடகத்துறையை மெதுமெதுவாக அரித்து விழுங்கியது. இதன் பின்னர் இலங்கைக்குள் பிரவேசித்த சினிமாத்துறையில் சினிமா நடிகர்களாக ஆனவர்கள் பலர் டவர் மண்டப நாடக சபையில் இருந்து சென்றவர்களே. சிங்கள சினிமாவின் முதலாவது கதாநாயகியான ருக்மணி தேவியும் டவர் நாடகக் குழுவைச் சேர்ந்தவரே.

செப்டம்பர் 12, 1931 இல் "சைரன் ஆஃப் பாக்தாத்" (Baghdad Nu Bulbul என்கிற தலைப்பு ஆங்கிலத்தில் Siren of Bagdad) திரைப்படம் வெளியானவுடன், அதுவரை தேசிய நாடக மையமாக இருந்த டவர் மண்டபம்; சினிமா தியேட்டராகவும் வடிவெடுத்தது.

தமது தொழிலை இழந்த நாடகக் கலைஞர்கள் அன்றைய தொழிற்சங்கத் தலைவரான ஏ.ஈ.குணசிங்கவை அணுகி சட்ட உதவி கோரினர். அதன் பிரகாரம் வியாழக் கிழமைகளில் நாடகங்களுக்கு பயன்படுத்துவது என்கிற சமரசத்துக்கு வந்தனர். இந்த காலகட்டத்தில் திரைப்படங்களின் வருகையால் நாடகத்துறை கடும் சவால்களை எதிர்கொண்டது. டவர் மண்டபத்தில் நாடகங்கள் சனிக்கிழமைகளில் மட்டுமே மேடையேற்றபட்டன. ஆனால் டவர் திரையரங்கம் ஒரு நாடக அரங்கமாக அறியப்பட்டிருந்ததே தவிர சினிமா தியேட்டராக அல்ல. 1935 முதல் 1955 வரை, நாட்டின்பெரிய நாடகக் கலைஞர்களை உருவாக்கி வெளிக்கொணர்ந்ததில் டவர் மண்டபம் பெரும் பணியாற்றி இருந்தது.

1927 ஆண்டளவில் கொழும்பில் இயங்கி வந்த ஒரேயொரு நாடக மண்டபம் டவர் தியேட்டர் மட்டும் தான்.

டவர் ஹால் தியேட்டர் 1941 இல் இரண்டாம் உலகப் போரின் நெருக்கடிகள் காரணமாக மூடப்பட்டது. மீண்டும் 1947 ஏப்ரலில் சிலோன் தியேட்டர்ஸ் நிறுவனம் டவர் மண்டபத்தை 125,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்தது. அதன் பின்னர் சிலோன் தியட்டர்ஸ் நிறுவனத்தின் இயக்குனரான எம்.செல்லமுத்துவும், சினிமா கம்பனி லிமிட்டட் உரிமையாளர் கே.குணரத்தினத்துடன் இணைந்து டவர் மண்டபத்தை சினிமா தியேட்டராக இயக்குவதற்காக "சினிமா டோக்கீஸ்" என்கிற நிறுவனத்தை ஆரம்பித்தார்கள்.

டவர் மண்டபத்தை அரச உடமையாக்கி பழைய படி நாடகங்களை நிகழ்த்தும் மண்டபமாக ஆக்கும் படி 1965 – 1970 காலப்பகுதியில் அன்றைய டட்லி அரசாங்கத்துக்கு டவர் நாடகக் கலைஞர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஆனால் அது நிறைவேறவில்லை. இந்தக் காலப்பகுதியில் டவர் நாடக சபையின் கலைஞர்கள் வாழ்வதற்கு சிரமப்பட்டு கொண்டிருந்தார்கள். சரளா பாய் என்கிற பெண் கலைஞர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். சுசிலா ஜயசிங்க தனது வீட்டை வாடகைக்கு கொடுத்துவிட்டு அதன் சமையலறையில் வாழ்க்கை நடத்தினார். ஏனையோரின் நிலையும் இது தான்.

1970களில் சுதேசியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பலவற்றை தேசியமயமாக்கிய சிறிமா அரசாங்கமும் டவர் மண்டபத்தை அரசுடமையாக்கவில்லை. டவர் ஹால் தியேட்டர் மார்ச் 16, 1973 இல் "பயாஸ்கோப்" சினிமாவாகவே மாறியது. 1977 இல் பிரேமதாச பிரதமராக பதவியேற்றதும் 1978 இல் டவர் மண்டபத்தை அதன் உரிமையாளர் கே.குணரத்தினம் இலவசமாக அரசுக்கு அளித்தார். இலங்கையின் சிங்கள சினிமாத் துறைக்கும், கலைத்துறைக்கும் பெரும் அர்ப்பணிப்பையும், பங்களிப்பையும் செய்த கே.குணரத்தினம் 09.08.1989 அன்று அடையாளம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

டவர் மண்டப கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டதுடன் மாளிகாவத்தை தொடர்மாடிக் குடியிருப்புகளில் அவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன. அவர்களின் நிகழ்சிகளுக்கு வாய்ப்புகளை வழங்கி கொடுப்பனவுகளுக்கான வழிவகைகளை பிரேமதாச ஏற்படுத்தினார். அவர் 1978 இல் ஏற்படுத்திய டவர் ஹோல் மண்டப அறக்கட்டளையின் (Tower Hall Theatre Foundation) கீழ் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மருதானை எல்பின்ஸ்டன் மண்டபமும் அதன் ஒரு அங்கமாகத் தான் பிரேமதாசாவால் தொடக்கப்பட்டது. இன்றும் தமிழ், சிங்கள மொழிகளில் நாடக, அரங்கியல் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டின் பண்பாட்டு பாரம்பரியத்தின் அங்கமாக டவர் மண்டபம் திகழ்ந்து வருகிறது.

டவர் மண்டபம் பழைய படம்.

சினமாஸ் கே.குணரத்தினம் மண்டபத்தை இலவசமாக அரசிடம் வழங்கினார்

டவர் நாடகமொன்றில் ருக்மணிதேவி



ஹெந்திரிக் செனவிரத்ன

கே. குணரத்தினம்

கொடகே விருது 2020/2021

2020 ஆண்டு வெளிவந்து , தெரிவுக்கு வந்த சிறுகதைத் தொகுப்புகளில் 2020ஆம் ஆண்டு வெளிவந்த சிறுகதைத் தொகுப்புகளில் சிறந்த சிறுகதைத் தொகுப்பாக மல்லிகை சி.குமாரின் " வேடத்தனம் ' தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

2020ஆண்டு வெளிவந்து,தெரிவுக்கு வந்த கவிதைத் தொகுப்புகளில் 2020ஆம் ஆண்டு வெளிவந்த கவிதைத் தொகுப்புகளில் சிறந்த கவிதைத் தொகுப்பாக வெலிமடை ரபீக்கின் " ஒரு நானும் இன்னும் ஒரு நானும் ' தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு சிங்களத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நாவலாக எம்.ரிஷான் ஷரீப்பின் மொழிபெயர்ப்பில் வெளி வந்திருக்கும் கத்யானா அமரசிங்ஹ வின் தரணி எனும் நாவல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2020ஆண்டு வெளிவந்து ,தெரிவுக்கு வந்த நூல்களில் முதல் நூல் வெளியிட்ட இளம் படைப்பாளியின் நூலுக்கான விருதுக்கு ஆ.லெ.மு.இர்ஷாத்தின் ஒளி பூக்கும் இரவு எனும் ஹைக்கூ தொகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவை 23வது கொடகே தேசிய சாகித்திய விருது முடிவுகள். கீழ்க்காணுவது 2020க்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டிமுடிவுகள் சிறந்த சிறுகதைத்தொகுதியாக பாலரஞ்சனி ஜெயபாலின் " நெத்திக்காசு" எனும் தொகுப்பும், சிறந்த கவிதைத் தொகுப்பாக ஜன்ஸி கபூரின் " பிறப்பிட நிழலிலே"எனும் தொகுப்பும் தெரிவாகி இருக்கின்றன .

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில்

கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம் பெறும் தகைசால் பேராசிரியர் எஸ். தில்லைநாதன்

பேராசிரியர்
ரமீஸ் அப்துல்லா ...✍

இன, மத, பேதங்களுக்கு அப்பால் மானுடத்தையும் சமூக நலனையும் நேசிக்கும் மாண்புறு பேராசிரியர் தில்லைநாதன் தனது தேசிய பணிகளுக்காகவும் கல்விப் பணிகளுக்காவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றிய அர்ப்பணமிக்க சேவைகளுக்காகவும் கௌரவ இலக்கிய கலாநிதி பட்டத்தினைப் பெற்றுக் கொள்கின்றார். எதிர்வரும் 08.02.2022 ஆம் திகதி தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது 14வது பட்டமளிப்பு விழாவில் இக் கௌரவத்தினை பேராசிரியருக்கு வழங்குகிறது. இப்பட்டத்தினை அவருக்கு வழங்குவதன் மூலம் வாழ்வில் எல்லாப் பேறுகளையும் பெற்றிருக்கும் பேராசிரியர் தில்லைநாதன் பெறுகின்ற பெருமையை விட தென்கிழக்குப் பல்கலைக்கழகமே பெருமை பெறுகின்றது, எனலாம்.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற சுன்னாகம் கிராமத்தில் சின்னத்தம்பி நாகம்மா தம்பதிகளுக்குப் மகவாகப் பிறந்த தில்லைநாதனுக்கு இப்போது 85 வயது. தமிழ் கூறும் நல் உலகில் மூத்த பேரறிஞராக விளங்கும் இவர் சமகால அறிஞர்களுக்கும் நிருவாகிகளுக்கும் முன் உதாரணம் மிக்கவர். பேராசிரியர்களான க. அருணாசலம், துரைமனோகரன்,வ. மகேஸ்வரன், றமீஸ் அப்துல்லா, பிரசாந்தன் ஆகியோரும் இன்னும் பல பல்கலைக்கழக ஆசிரியர்களும் இவரிடம் பாடம் பயின்றவர்கள். இவர் வழிவந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று அவர் இக் கௌரவ விருதினைப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் முதன் முதலில் அவரை சந்தித்த ஞாபகம் வருகிறது. வேலை நாட்களில் காலை 9.00 மணி என்றால் அந்த ஹில்மன் கார் பல்கலைக்கழக வாசலில் வந்து நிற்கும். அதிலிருந்து அந்த வாட்ட சாட்டமான உருவம் வெளியே விடப்பட்ட அரைக் கை சேட்டுடன் மிகக் கம்பீரமாக நடந்து வரும். சரியாக நேரத்துக்கு இயங்குகின்ற பண்பும் தொழிலைத் தெய்வமாக கருதுகின்ற வழக்கமும் அவரிடம் இருந்தது. இன்றைய விரிவுரையாளர்கள் அவரிடம் படிப்பதற்கு ஆயிரம் உண்டு. இப்படி அவருக்கே தனித்துவமான பல அம்சங்கள் அவரிடம் உண்டு. அவையெல்லாம் இருக்க அவருடைய கற்பித்தலைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

பல்கலைக்கழகத்திலே பாடம் பயில்வதென்றால் பேராசிரியர் தில்லைநாதன் அவர்களிடம் கற்க வேண்டும். ஏலவே தயாரித்து வைக்கப்பட்ட பிரதியுடன் வந்து குறிப்பை வாசிக்கும் அறிவிப்பாளரல்;ல அவர். மிக அற்புதமாகத் தானெடுத்துக் கொண்ட விடயத்தை மணித்தியாலக் கணக்கில் விவரித்து இலக்கிய நோக்கில், தத்துவ நோக்கில் விளக்குகின்ற ஒரு பேராசிரியர். மீண்டும் மீண்டும் அவருடைய விரிவுரையைக் கேட்க வேண்டும் என்ற அவா நம்முள் ஏற்படும் அளவுக்கு அவர் பேசுவார். கம்பராமாயணம் அவருக்குக் கை வந்த கலை. இன்றும் 'கைகேயி சூழ்வினைப் படல'த்தை அவரிடம் படித்த ஞாபகம் எனக்குண்டு. அவருடைய விரிவுரைப் பாங்கு பலருக்குப் பிடிக்காமலும் இருக்கும். ஏனென்றால் அது மிக ஆழமானதும் உன்னிப்பாகக் கேட்க வேண்டியதுமாகும். இடையிடையே நகைச்சுவையுடன் அமையும் அவருடைய விரிவுரை தனித்துவமானது.

பெரும்பாலான பேராசிரியர்களைப் போல அவர் அதிகம் எழுதியவரல்ல. ஆனால், குறைந்தளவிலே எழுதி அதிக தாக்கத்தை அவருடைய எழுத்துக்கள் உண்டுபண்ணியது. ஒப்பீட்டளவில் அவருடைய கட்டுரை சிறிதாக இருக்கும்; ஆனால், மிக ஆழமாக அமையும். சொல்ல வேண்டிய அத்தனையையும் அவர் மிகுந்த தாக்கத்துடன் அந்தக் கட்டுரைகளில் சொல்லியிருப்பார். அதன் மூலம் மற்றவர்களைச் சிந்திக்கத் தூண்டி இருப்பார். இதுதான் அவருடைய கட்டுரைகளின், ஆய்வுகளின் தனித்துவம் என்று சொல்ல வேண்டும். மிக எளிமையாக எழுதும் அவருடைய மொழி நடையும் விதந்து குறிப்பிடத்தக்கதாகும். கட்டுரைகளை அவர் ஆரம்பிக்கும் முறையும் தனியழகு. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரைப் பற்றி எழுதவந்த அவர் அக்கட்டுரையைப் பின்வருமாறு தொடங்குகிறார்:

'கருத்துக்களைச் செவ்வனே பரிமாறிக் கொள்ளத்தக்க மொழியாற்றலையும் மானிட வாழ்வு சுமுகமாய் அமைய உதவும் ஒழுக்க நெறிகளையும் மேற்கொள்ளும் கருமங்களில் நேர்மையான முயற்சியுடைமையையும் மாணவர் மத்தியில் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து அதிகமாக இன்று பேசப்படுகிறது. அவை குறித்த ஆர்வமும் அறிவும் துலங்குவதற்குக் குமாரசுவாமிப் புலவரின் வாழ்வும் பணிகளும் பற்றிய சிந்தனை உதவும் என்பதில் ஐயமில்லை.'

இவ்வாறு அவர் மிக வித்தியாசமாகக் கட்டுரைகளைத் தொடங்குவதும் அவருடைய சொல்லாட்சியும் கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

பத்திரிகைகளின் தேவைக்காகவும் சஞ்சிகைகளின் தேவைக்காகவுமே அவர் கட்டுரைகளை எழுதிவந்தார். ஆனால், ஆறுமுக நாவலர், விபுலாந்த அடிகள், பாரதியார், பாரதிதாசன் முதலானவர்களைப் பற்றி அவர் எழுதிய பல கட்டுரைகளைச் சேர்த்து தனித் தனி நூலாகப் பிரசுரிக்க முடியும். அவ்வளவுக்கு அவ்வறிஞர்களைப் பற்றிய விரிவான பல கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். இவர்கள் தவிர்ந்த மேலும் பல இலக்கிய ஆளுமைகளைப் பற்றி பல்வேறு கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். அதேபோல ஈழத்து இலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழியியல், சமூகவியல் சிந்தனைகள், கலை இலக்கிய விமர்சனம், சமய வாழ்வும் வழிபாடும், தொடர்பாடல், நாட்டாரியல் முதலான பல்துறைகள் பற்றி கட்டுரைகளையும் ஆய்வுகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். ஆனால் அவற்றின் வழியாக நூலாக வெளிவந்தவை 'வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை'இ 'இலங்கைத் தமிழ் இலக்கியம்', 'இலக்கியமும் சமுதாயமும்', 'பண்பாட்டுச் சிந்தனைகள்', 'சோழர் கால அரசவை இலக்கியங்கள்' முதலானவை மாத்திரமே. தற்போது அவரது சில நூல்களை குமரன் புத்தக இல்லம் வெளியிடவுள்ளது. ஆனால், அவரால் நூலாக்கப்பட வேண்டிய பல கட்டுரைகள் அவரிடத்தே உள. அவ்வப்போது தேவைக்கே எழுதிய அவர் அவற்றினை நூலாக்க வேண்டும் என்பதில் அதிகம் அக்கறைப்படவில்லை. அவ்வாறான பணிகளில் ஈடுபடுவதற்கு அவருக்கு நேரம் இருப்பது மில்லை. இன்றும் கறங்கு போல் சுழன்று பல்வேறு பணிகளை அவர் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தனைக்குள்ளும் பேராசிரியர் தில்லைநாதன் நல்ல இலக்கியவாதியாகவும் தொழிற்பட்டுள்ளார். இலக்கியவாசிப்பு மாத்திரமின்றி சிறுகதைகளையும் கவிதைகளையும் அவர் எழுதியுள்ளார். 'தகுதி', 'மானிடம் என்பது புல்லோ' ஆகிய நாடகங்களை எழுதி மேடை ஏற்றிய அவர் 'சமுதாய விலங்கு' எனும் நாடகத்தைத் தயாரித்து அளித்துமுள்ளார். நாடகத்துறை சார்ந்த பல்வேறு கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார்.

நல்லாசிரியராகவும் ஆய்வாளராகவும் இருந்த அவர் தொடர்ச்சியாக நிருவாகப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். நிருவாகப் பணியில் அவர் எப்போதுமே தனித்துவமாகச் செயற்பட்டவர். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த காலம் பொற்காலமாகும். அவருடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்து எதுவும் தளர்ந்து விடாது. அத்தகைய ஆற்றல் அவருக்கிருந்தது. மாணவர் நலனிலும் ஆசிரியர் நலனிலும் அவர் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டு வந்தார். பல்கலைக்கழக பீட சபையிலும் மூதவையிலும் துணிவுடன் கருத்துக்களை பகிர்ந்துக்கொண்ட அவர் பல்லினச் சமூகத்திற்கு மத்தியில் வாழ மிகப் பொருத்தமானவர். எந்த இடத்திலும் யாருக்கும் அஞ்சாது கருத்துக்களைக் கூறுகின்ற திறன் அவரிடமிருந்தது.

பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் தனது அனுபவம், ஆற்றல் காரணமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பதவிகளை வகித்த அதே வேளை பல்கலைக் கழகத்துக்கு வெளியே கலாசார அமைச்சின் கீழ் இருந்த தமிழ் இலக்கியக் குழுத் தலைவராகவும் தமிழ் நாடகக் குழு அங்கத்தவராகவும் பணியாற்றியுள்ளார். இலங்கைக் கலைக் கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றிய அவர் அதேபோல இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஈடுபட்டு வருகின்றார். பரீட்சைக் காலங்களில் அவருடைய பணி மிகவும் போற்றத்தக்கதாகும். தனக்குக் கீழ் பரீட்சைப் பணிகளில் கடமையாற்றுபவர்களுடன் மிக நிதானத்துடனும் கண்டிப்புடனும் நடந்து கொள்வார். 'விடைத்தாள் மதிப்பீட்டின் போது நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு புள்ளிக்கும் உயர் நீதிமன்றத்தில் பதில் சொல்வதற்கு நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா' என்று கேட்பார். அவ்வளவு கவனமாக , நேர்மையாகப் பரீட்சைப் பணிகளில் ஈடுபடுவதற்கு மற்றவர்களை பழக்கியவர் அவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை மாத்திரமன்றி யாழ்ப்பாணம், கிழக்கு, தென்கிழக்கு, ஊவா வெல்லஸ்ஸ, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டியவர். யாழ்ப்பாணம், கிழக்கு தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் அவரது மாணவர்களே பெரும்பாலும் ஆசிரியப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார். இன்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்திலும் மொழி தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

இலங்கையின் தமிழ் கல்வி பாடத் திட்டம் தொடர்பாக விதந்துரைக்கத் தக்க பணிகளை ஆற்றிய பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ் மொழிப் பிரிவின் ஆலோசனைச் சபை அங்கத்தவராகவும் நிபுணத்துவ ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார். அதன் ஆட்சிச் சபை உறுப்பினராகவும் அவர் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. பரீட்சைத் திணைக்களத்தின் பல்வேறு பொறுப்புமிக்க பணிகளில் மிக நீண்ட காலமாக அதிதிப் பேராசிரியராகவும், நிபுணத்துவ ஆலோசகராகவும் கடமையாற்றிய அவர் இன்றும் அப்பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை வளர்ச்சியில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார். அத்தோடு ஈழத்துப் பல்கலைக்கழகங்களில் இன்று தமிழ்த் துறையில் கடமையாற்றுகின்ற அத்தனை பேருக்கும் வழி காட்டுகின்ற முதன்மையாளராகப் பேராசிரியர் தில்லைநாதன் விளங்குகின்றார்.

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத்துறை வளர்ச்சியிலும் அவருக்குக் குறிப்பிடத்தக்க பங்குண்டு. 1960களில் தினகரன் ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிய அவர் அக்காலகட்ட ஈழத்து இலக்கியத்தின் திருப்பு முனைக்கும் முக்கிய பங்காற்றியவர். இலக்கிய சர்ச்சை பலவற்றை முன்னின்று செம்மையாக வழி நடத்தியவர். ஒப்சேவர் பத்திரிகையிலும் தமிழ் விடயங்களைப் பற்றி எழுதுவதற்கான ஆசிரியராக இருந்த அவர் தமிழ் இலக்கியச் செழுமையை ஆங்கிலப் பத்திரிகை வாசகர்கள் வருவதற்கும் உதவியாக இருந்தார். உண்மையில் இன்றும் ஈழத்தின் புலமைசார் அறிஞர்களுள் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியராகப் பல்துறை ஆளுமைகளுடன் பெருமை பெறுகிற பேராசிரியர் தில்லைநாதனுக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பெருமை பெறுகிறது.

பிரியாவிடை நிகழ்வும், நூல் வெளியீடும்

தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளும் கல்விமாணி கற்கைநெறியின் பதுளை நிலைய 2017 /2020 தொகுதி கற்கை நெறி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரியாவிடை நிகழ்வும், ' நினைவேட்டில் தாரகைகள் ' நூல் வெளியீட்டு நிகழ்வும் (30) பதுளை கெப்பிட்டல் சிடி ஹோட்டலில் கல்விமாணி கற்கைநெறியின் பேரவை தலைவர் எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

பதுளை கல்விமாணி கற்கைநெறி நிலைய இணைப்பாளர் மறைந்த பாலசந்திரன், சிரேஷ்ட விரிவுயாளரும் ஆசிரியர் மத்திய நிலையத்தின் (தமிழ்பிரிவு) முன்னாள் முகாமையாளருமாகிய பால சுப்ரமணியம் ஆகியோரும் நினைவுகூரப்பட்டனர்.

பதுளை கல்விமாணி கற்கைநெறி நிலையத்தில் அர்ப்பணிப்பு மிக்க சேவையாற்றிய விரிவுரையாளர்கள் அனைவரும் ஆசிரியர் மாணவர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம், ஆசிரியர் கல்வித் துறை பணிப்பாளர் மற்றும் கல்விமாணி கற்கை நெறியின் தேசிய தமிழ்ப்பிரிவு இணைப்பாளர் திருமதி. சுதர்சினி மணிமொழி , கல்விமாணி கற்கைநெறியின் தேசிய இணைப்பாளர் மாதவ பண்டார, கல்வி ஆலோசகர்கள் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் நாடாளாவிய ரீதியில் மாவட்டரீதியில் கல்விமாணி கற்கைநெறி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

ஊஷார் பெற்றோர்களே!

முகநூல் காதலர்களின் விபரீத விளையாட்டு!

பேஸ்புக் என்றால் அதை அறியாதவர்கள் எவருமே இருக்கமாட்டார்கள். பேஸ்புக் அதாவது முகநூல் இன்று உலகின் மிக முக்கியமான ஒரு சமூக வலைத்தளமாக மிளிர்கின்றது. கோடிக்கணக்கான மக்கள் இதை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்களிடையே மிகவும் பிரசித்தி பெற்றுள்ள இத்தளம் எளிதாக பயன்படுத்தக்கூடியதாக இருப்பதால் அனைவருமே இதைப் பயன்படுத்த விரும்புகின்றன.

பேஸ்புக்கை பெரும்பாலும் பொழுது போக்காக பயன்படுத்துகின்றனர். இதில் நன்மைகள் இருப்பது போல் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

சமூக வலைத் தளங்கள் மாணவர் கற்கைக்கு இந்த அளவுக்கு உதவும் என யாரும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். கொவிட் அடைப்புகளின்தே தமது பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பிள்ளைகளுக்கு ஸ்மார்ட் போனை வாங்கிக் கொடுக்க வேண்டியதாயிற்று. இதன் மூலம் கற்கக் கூடியவர்கள் நல்ல பெறுபேறுகளை பெறத் தவறவில்லை. தமது கல்விக்காக மாணவ மாணவியர் கைபேசியை பயன்படுத்தும்போது அதை அவர்கள் சரியாகத்தான் பயன்படுத்துகிறார்களா என்பதை பெற்றோர்கள் முழுமையாக அவதானித்துக் கொண்டிருப்பது சாத்தியமானது அல்ல. பல பெற்றோருக்கு ஸ்டார் ஃபோனின் அடுத்த பக்கம் பற்றி தெரியவும் செய்யாது.

மாணவர்கள் தமது நண்பர்களுடன் வாட்சப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறான தொடர்பு பெரியவர்கள் மத்தியிலும்

இல்லாமலில்லை. இதன் விளைவாக கணவன்மனைவிக்கு இடையே பிரச்சினைகள் ஏற்பட்டு, விவாகரத்து அளவுக்கு உறவுகள் விவகாரமாகியுள்ளன. ஏன் தற்கொலை செய்யும் அளவுக்கு பிரச்சினைகள் முற்றியதையும் நீங்கள் அறிவீர்கள்.

இதனால் பல குடும்பம் பிரிந்து சின்னாபின்னமாக மாறியதையும் கண்டுள்ளோம். மாலை பருவத்தில் உள்ளவர்கள் தேவையற்ற விடயங்களை பார்ப்பது மட்டுமல்லாமல் நண்பர்களுடன் பரிமாற்றிக்கொள்ளவும் செய்கிறார்கள். இவ்வாறான செயல்கள் கூட தீவிரமான குடும்பப் பிரச்சினைகளாக மாறியுள்ளன.

இவ்வாறு பேஸ்புக் மூலம் நண்பர்களான ஒரு நிஜக் கதையை இங்கு தருகிறோம் .இதில் வரும் பெயர்கள் இடங்கள் யாவும் கற்பனையே.

வசந்தி 14 வயது நிரம்பிய ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவி. கோவிட்19 காலத்தில் தனது படிப்பை தொடர அம்மாவிடம் கெஞ்சி கேட்டதற்கு அமைய சொந்தமாக ஒரு ஸ்மார்ட் போன் கைக்கு கிடைத்தது. இதன் மூலம் சகல பாடங்களையும் நன்றாகக் கற்று, எதிர் கால இலட்சியத்தை அடைய முற்படுகிறாள். வகுப்பு மாணவிகள், உறவினர்கள் உட்பட சிலரை தனது பேஸ்புக் நண்பர்களாக அந்த கைபேசி மூலம் உள்வாங்கிக்கொள்கிறாள்.தனது படிப்பிற்கு தேவையான தகவல்களையும் சந்தேங்களுக்கான விளக்கங்களையும் பெற்று திருப்தி காண்கிறாள். தனது ஒய்வு நேரத்தை பேஸ்புக்கில் செலவழிக்கும் வசந்தி, அதில் 75 சதவீத நேரத்தை பேஸ்புக் நண்பரான ரஞ்சித்துடன் கழிக்கத் தொடங்கியதில்தான் விபரீதம் ஆரம்பமானது. நண்ப ரஞ்சித் வசந்திக்குத் தேவையான பல தகவல்களை பெற்றுக்கொடுத்தவன்.

மஹரகமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரமேஷ் ரத்னசிங்க

வசந்தியின் உள்ளத்தில் நம்பிக்கையை வளர்ப்பதில் ரஞ்சித் வெற்றிபெற்றான். தனக்கு ஏற்படும் எல்லா சந்தேகங்களையும் ரஞ்சித்திடம் கேட்கப் பழகிக்கொண்டாள் 22 வயது நிரம்பிய ரஞ்சித் திருமணமாகாத இளைஞன். அவனை நேரில் பார்க்க வேண்டும், சந்தித்து பேச வேண்டும் என்ற ஆசையை மனதிலே வைத்திருந்த வசந்திக்கு அவன் தன்னை சந்திக்க விரும்புவதாக கேட்டதும் அவள் அதற்கு சம்மதித்தார்.

அந்த 10ம் திகதி ரஞ்சித் வசந்தியின் இல்லத்தை தேடி அவளது கிராமத்திற்கு நேரில் வந்தான். ஆசையாக வரவேற்று, உணவுகள் பரிமாறி, ரஞ்சித் கேட்டபடி வெளியில் போய் வர அவனுடன் புறப்பட்டாள். உடவளவையில் உள்ள உல்லாச ஹோட்டல் ஒன்றிற்கு சென்று அங்கே இருவரும் தங்கினார்கள். ரஞ்சித்தின் அரவணைப்பில் சுகம் கண்ட வசந்தி அவனுடைய அன்பில்தன்னை மறந்தாள். அதன் பின்னர் இருவரும் கொழும்புக்கு வந்தனர்.

கொழும்பை சுற்றி பார்த்த பின் மஹரகமைக்கு சென்ற இளம் சோடி, அங்கு ஒரு விடுதியில் அறை எடுத்து தங்கியது. எனினும் உள்ளுணர்வு உந்துதல் காரணமாக வசந்தி தான் இருக்கும் நிலை பற்றியும், தனக்கு பயமாக இருப்பதாகவும் தாயிடம் இரகசியமாக தொலைபேசி மூலம் கூறியுள்ளார்.

ஏற்கனவே மகளை காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்து பல இடங்களிலும் தேடிக் கொண்டிருந்த வசந்தியின் தாய், தனக்கு கிடைத்த தகவலை பொலிஸாரிடம் தெரிவித்தாள் பொலிஸார், கொடுத்த தகவலுக்கு அமைய, மஹரகம போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பரிசோதகர் ரமேஷ் ரத்னசிங்க

தலைமையில் சென்ற போலீஸ் கோஷ்டி ரஞ்சித்தையும் வசந்தியையும் கைது செய்தது.

இருவரையும் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது, ரஞ்சித்தை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவித்திட்ட நீதவான், வசந்தியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாரைப் பணித்தார். கொழும்பு தெற்கு தேசிய வைத்திய சாலையில் வசந்தி அனுமதிக்கப்பட்டாள்.

மஹரகம உட்பட மேலும் இரண்டு பொலிஸ் நிலையங்கள் இணைந்து மேலதிக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மொறட்டுவ அஸ்வர் ...✍

'பலதும் பத்தும்''

நான் கலைநேசன் வீடுநோக்கிப் போனேன். போகும்போதே சிந்தனைக் காற்று சுழன்று கொண்டிருந்தது. அவரைப்பற்றி.... அவர் ஒரு சிறுகதை எழுத்தாளர். தேசிய பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த வண்ணமுள்ளன. பரிசுகள் விருதுகள் பெற்று பிரபலமாகி வருகிறார்! ஆனாலும் எவருடனும் கனிவாய் பணிவாய் பேசிப் பழகுவார். அவருடைய ஆக்கங்களை நான் வாசித்து இலக்கிய காற்றை சுவாசித்திருக்கிறேன். நமது நாட்டில் தரமான படைப்புக்களை படைக்கும் வெகுசிலரில் அவரும் ஒருவர் என்றுதான் சொல்ல வேண்டும்! அவருடைய எழுத்துக்களில் நான் கண்ட விசேடம் என்னவென்றால், கட்சி இயக்கம் கொள்கை கோட்பாடு பக்கச்சார்பு என்றில்லாமல் எழுதிவருபவர். சமூகத்தில் மானிட வாழ்வில் காணப்படும் குறைகளை சீர்கேடுகளை எடுத்துக்காட்டி, அவற்றிலிருந்து மீழ்வதற்கான ஆலோசனைகளை சொல்லியிருப்பார். கருத்தில்லாமல் ஒரு கதையும் இருக்காது வெறும் கருத்துப் பிரசாரம் செய்கிறார் என்ற குற்றச்சாட்டும் இவரில் உண்டு.... இவருடைய படைப்புக்களைப் படிக்கும்போது எனக்கு ஏற்படும் ஆச்சரியம் என்னவென்றால், பலரின் பலவிதமான வாழ்க்கையின் அந்தரங்கமான சமாசாரங்களை பிரச்சினைகளை எல்லாம் நுணுக்கமாக குறிப்பிட்டு சுவாரஸ்யமாக எழுதிவிடுகிறார்! எப்படி இப்படியெல்லாம் இவரால் எழுதிவிட இயலுகிறது என்று எனக்கும் கனநாளாகவே வியப்பாகவே இருந்தது!

அவர் இல்லம் ஏகியதும் அவர் வெளிக்கிட்டு எனக்காக காத்திருந்தார். நாமிருவரும் துவிச்சக்கரத்தை எடுத்து வெளிக்கிடுகையில் அவர் மனைவி முன்னே வந்து சொன்னா "நீங்கதான் கேடு கெட்டுப் போறீங்கள் என்றால், அந்த மரியாதையான மாஸ்ரரையுமா கெடுக்கப்போறீங்க!" அவர் பதிலாக புன்னகை சிந்திக்கொண்டே என் முன்னால் போனார். நான் பின் தொடர்ந்தேன். சற்று நேரத்தில் சற்று வயதானவர் கலைநேசனை நோக்கி வந்துகொண்டிருந்தார். தலைமயிரும் நன்றாக வளர்ந்திருந்தது. முகத்திலும் வெள்ளையும் கறுப்புமாக மயிர் வளர்ந்திருந்தது. பேருக்கு ஒரு சட்டையும் போட்டு சாறத்தையும் மடித்துக் கட்டியிருந்தார். அழுக்காகியிருந்தன அவை, அவரும்தான் தோய்ந்து தோய்த்துக் கழுவி எத்தனையோ நாளாயிருக்கும் ! சுய கௌரவத்தைப் பற்றி துளியும் அக்கறைப்படாத பிறவிகள் எத்தனையோ பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அசடராய் கசடராய்த்தான் இருப்பார்கள் ! ஆனால் இவர் ஒரு அப்பாவி என்று பார்த்தாலே புரிந்துவிட்டது.

அவர் கலைநேசன் பக்கமாக வந்தமர்ந்தார். கலைநேசனும் அவரை வரவேற்றார். இருவருக்கும் ஏற்கனவே நல்ல பழக்கம் போலும்....." என்னப்பா இப்பதானா வாறாய்?" " ஓமையா, இண்டைக்கு காட்டுக்குப் போய் விறகு கொத்தி பொலிசுக்காரருக்குப் பயந்து கள்ளவழியால் கொண்டுவந்து, ஊருக்குள்ள சைக்கில்ல உழக்கிக்கொண்டு திரிஞ்சி அலைஞ்சி உலைஞ்சி இப்பதான் ஒருமாதிரி வித்து முடிஞ்சிது, இங்கினைக்க வந்து ஒண்டப் பாதிய அடிச்சுப்போட்டு போவம் எண்டுவந்த நான் ஐயா. இதில் கொஞ்சமெண்டாலும் அடிச்சாத்தான் இண்டு முழுக்க சீவியத்துக்காக நான் பட்டபாடுகள் கஷ்டம் கரைச்சல்கள் எல்லாம் பறந்து போகும்'' என்று சொல்லிக்கொண்டே மதுப் புட்டியை ஊற்றிக் குடித்தார்.

''நீர் வழக்கம்போல காட்டுக்குப் போய் விறகுவெட்டி கொண்டுவந்து வீடுகளுக்கும் கடைகளுக்கும் குடுத்து சீவனம் நடத்துற நீர்தானே, இண்டைக்கு அப்பிடி என்ன புதுப் பிரச்சினை?" ''புதுப்பிரச்சினை இல்லை ஐயா இடைக்கிடை இப்பிடி நடக்கிறதுதான் , எங்களுக்கும் பழகிப்போச்சுது! நாங்கள் ஏலுமான மட்டும் பட்ட மரங்களத்தான் விறகாக்குற நாங்கள். பட்டமரங்களும் நெடுகக் கிடைக்குதே? பச்சை மரங்களையும் இடைக்கிடை பதம் பார்க்கிறதுதான்!

ஒளிச்சு மறைச்சுக் கொண்டுவந்தாலும் இந்த வனபரிபாலன அதிகாரிகளாம் பொலிசுப் புள்ளைகளாம் எண்டு நிண்டு மறிச்சு சோதனை போட்டு ஆக்கினைப் படுத்துவாங்கள் ! இனி அவங்கள்ர கைக்கு கொஞ்சம் வைச்சாத்தான் தப்பலாம். இல்லாட்டி கோடு வழக்கெண்டு திரிய வேணும் ! இவையளுக்கும் நெடுகக் குடுக்கேலுமோ? அதுதான் கள்ள வழிகளால் உலைஞ்சு போட்டு வாறன்.... நான் பின்னே திரும்பிப் பார்த்தேன். சைக்கிள் விடும் இடத்தில் அகலக்கரியரில் நாலு பக்கமும் தடி நட்டபடி நின்றது. கோடரியும் தெரிந்தது..... அவர் மேலும் பேசினார்: ''இப்ப ஐயா இந்த கேஸ் அடுப்பு வந்ததால் அனேக வீடுகளில் விறகடுப்பு பாவிக்கிறது நல்லா குறைஞ்சு போச்சுது! எங்க பிழைப்பிலையும் மண் விழுந்து போச்சுது! தெருவெல்லாம் சுத்த வேண்டிக் கிடக்குது! விறகு கொள்ளியில் சமைக்கிற ருசி வருமா ஐயா? இப்ப கேசுக்கு விலையக் கூட்டிக் கொண்டே வாறான். அதாலை இப்ப கொஞ்சம் எங்கள நாடுகினம் !".... அவன் இன்னும் தன் தொழில் பிரச்சினைகளைப் பற்றி குடும்ப சிக்கல்களைப் பற்றியெல்லாம் பேசினான்.

பேசிப்பேசியே ஒரு போத்தலைக் காலியாக்கிவிட்டான்.

வாறன் ஐயா, ஆரும் சேர்ந்தா இன்னுமொரு அரை எடுத்துக்கொண்டு வாறான். நீ என்னப்பா பாடுபட்டு உழைச்ச காசை எல்லாம் குடிச்சுப்போட்டு வீட்டுக்கு என்னத்தக் குடுக்கப்போறாய்? இல்லை ஐயா, நான் ஒன்றரைக்கு மேல் குடிக்கிற இல்ல. மிஞ்சின காச அப்பிடியே என்ர பெண்டாட்டியிட்ட குடுத்துப் போடுவன் என்று சொல்லிக் கொண்டே போனார்.

அவர் போனதும் இன்னொருவர் அந்த ஆசனத்தில் வந்தமர்ந்தார். இவர் சற்று வாட்டசாட்டமாய்த்தான் இருந்தார். நடுத்தர வயதுக்கும் குறைவாகத்தானிருக்கும். முகச் சவரம் செய்து தலையையும் வடிவாக விட்டிருந்தார்.

நீளக்கால் சட்டை போட்டு கம்பீரமாயே வீற்றிருந்தார். ஆனால் முகத்தில் வாட்டம் சோர்வு இருப்பது போலிருந்தது. அவரும் நம்ம ஐயாவுக்கு ஏற்கனவே பழக்கப்பட்டவர் போலுமிருந்தார். அவர் இவரை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார். தன் மனப்பாரங்களை இறக்கி வைக்க சரியான

ஆள் கிடைத்துவிட்ட திருப்தியில் இருப்பது தெரிந்தது. கலை நேசன் எல்லாக் கதைகளையும் மனமொப்பி காது கொடுத்து கேட்பதால் போலும் அவர்முன் விரும்பிவந்து தங்கள் பாரத்தை இறக்கிவைப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள் போலுள்ளது.

'' என்னப்பா அரவிந்தா கனநாளா உன்னை இந்தப்பக்கம் காண இல்ல. சிலநேரம் கண்டாலும் முகத்த மற்றவளமாகத் திருப்பிக் கொண்டு போய்விடுவாய்! இண்டைக்கு என்னத்தேடி வந்திருக்கிறாய் முகமும் வாடிச் சோர்ந்திருக்கு முன்னர்மாதிரி பூரிப்பா இல்ல: கலகலப்பாயில்ல! என்ன சங்கதி? '' அதையா என் குடும்பத்தில் பெரிய பிரச்சினை ஒண்டு நடந்துபோச்சுது! அந்த மனக் குழப்பத்திலதான் ஆரோடையும் கதைக்கப் பிடிக்காம மூக்கு முட்டக் குடிச்சுப்போட்டு விழுந்துகிடப்பன்! என்று சொல்லிவிட்டு அங்காலையும் இங்காலையும் பார்த்தார். நீர் ஒண்டுக்கும் யோசிக்காதையும், இவர் நம்ம ஆள்தான் என்னப் போல ஒருவர்தான் நீர் தயங்காம உம்மிட கதையச் சொல்லும்.

''ஐயா, நான் ஒரு பண்ணையில வேல செய்யுற நான் எண்டு உங்களுக்குத் தெரியும்தானே, சம்பளமும் பரவாயில்ல. நல்ல ''ரெஸ்பெக்' ராத்தான் குடும்பம் நடத்தி வந்தன். லீவு நாளையிலதான் பாருக்க வந்து குடிச்சு சல்லாபிச்சுப் போட்டு போவன். உங்களுக்குத் தெரியும்தானே? ஓமோம் நல்லாத் தெரியும். இப்பகொஞ்ச நாளாத்தான் உம்மில் பெரிய மாற்றம் தெரியுது. என்ன நடந்தது என்று சொல்லும்.

அவன் சற்று நேரம் தலையைக் கவிழ்ந்து கொண்டான். திடீரென்று எழுந்து பேசத்தொடங்கினான். ....." எனக்கு சிலநேரம் நைற்" வேலையும் செய்ய வேண்டிவரும். குடும்ப நன்மைக்காக கண்விழிச்சு பாடுபட்டு உழைச்சுவாறன்!..... கொஞ்சநாளா அரசல் புரசலா என்ர காதுக்கு ஒரு கதை எட்டிச்சிது என்ர மனைவியப் பற்றித்தான்!" என்று சொல்லிவிட்டு தலையை மேசையில் வைத்து விம்மினான் .... இதையெல்லாம்

அக்கம் பக்கமாக இருப்போர் கவனிக்கவில்லை. அவர்கள் தங்கள் தங்கள் பிராக்கு

கலைநேசன் எழுந்து அவன் தலையை தடவி ஆசுவாசப்படுத்தினார். அவன் தலை நிமிர்ந்து பேசத் தொடங்கினான். எனக்கு இதக் கேள்விப்பட்டதில் இருந்து ஊண் உறக்கம் இல்ல. இது உண்மைதானா எண்டு அறியவேணும் எண்டு, இரவு வேலைக்குப் போவதாக பாசாங்கு செய்துவிட்டு நள்ளிரவு நெருங்கும் நேரம் முன்வளவில் பூமரங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன்.....

நான் எதிர்பார்த்தவர் வந்தார் முன்வாயிலைத் திறந்துகொண்டு, அவர் வருகைக்காக கதவு பூட்டாமலே விடப்பட்டிருக்கிறது! அவருக்காக விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டு இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கிறது! என்றாலும் பக்கத்து தெரு விளக்கு எரிந்து கொண்டிருந்ததால் எனக்கு ஆளை அடையாளம் காட்டிவிட்டது! அவன் எங்கள் தெருவின் பக்கமாக பலசரக்கு கடை வைத்திருக்கிறவன்... அவனைப் பற்றி என் பெண்டாட்டி வர்ணிப்பதும் உண்டு. காசில்லாவிட்டாலும் கடனாக எண்டாலும் கேட்ட சாமான் சக்கட்டுக்கள் எல்லாம் தந்து போடுவார்! கடன் காச குடுக்கப் பிந்தினாலும் தவணை சொன்னாலும் இல்ல குறைச்சித்தான் குடுத்தாலும் ஏச பேச மாட்டார். நல்ல மனிசன். என்னக் கண்டாக் காணும், நல்லா சிரிச்சி அன்பாதரவா கதைக்கும் மனுசன் ! என்பாள். இப்போது புரிகிறதுதானே இந்த நாடகமெல்லாம் யாருக்காக எதுக்காக என்று!.... அவன் வராந்தாக் கதவு அறைக்கதவுகளை எல்லாம் இலேசாக தள்ளித் திறந்துகொண்டே போய்க் கொண்டிருந்தான் அவ்வளவு எதிர்பார்ப்பு வரவேற்பு!... நடுஇரவில் பிள்ளைகளுக்குத் தெரியாமல் நான் பதுங்கிப் பதுங்கிப் போனபோது எத்தனை இரவுகள் என்னை விரட்டியிருக்கிறாள்! நான் அவளுக்கு பிள்ளைகளுக்கு என்ன குறைய விட்டன்? ஏன் எனக்கு இப்பிடித் துரோகம் செய்தாள்? அவன் மேசையில் தலைக விழ்ந்து குலுங்கி குலுங்கி அழுதான் சத்தம் வெளிவராமல்!

கலைநேசன் அவன் தலை தடவி ஆசுவாசப்படுத்தினார். ''இப்போது எப்படி இருக்கிறது உமது குடும்ப நிலைமை? நீர் வீட்டுக்குப் போவதில்லையா? பிள்ளைகளுக்காக எண்டாலும் போகத்தானே வேணும் ! ''நான் இந்தக் காட்சியக் கண்டதிலிருந்து வீட்டுக்கே போவதில்லை! பண்ணையில் ஒரு மூலையில் இரவைக் கழித்துவிடுவேன். பகலில் பண்ணை வேலையோடு பொழுதுபோகும். மிஞ்சன பொழுது இங்கே போன்ற இடங்களில்த்தான் கழியும்! இந்த இடம்தான் ஆரும் தராத ஆறுதலை ஏன் கடவுளே தராத மன ஆறுதலை தந்துவருகிறது! இது இல்லை என்றால் நான் செத்துத் தொலைந்திருப்பேன்! அவன் உறுதியான குரலில் கத்தினான் !

கலைநேசனும் சிறிதுநேரம் அதிர்ச்சிக்குள்ளாகி என்ன பேசுவது என்று தெரியாமல் ஆடாமல் அசையாமல் இருந்தான். "சரி, இது ஈடுசெய்ய முடியாத பரிகாரம் செய்ய முடியாத பெரிய துரோகம்தான்! ஆனால் உம்முடைய பிள்ளைகளின் நிலைமை என்ன? அவர்களுக்காகவாவது நீர் வீட்டுக்குப் போகத்தானே வேணும்? '' இனியும் என்னால் புருசன் மாதிரி அக்ற் பண்ணிக் கொண்டிருக்க ஏலாதையா! நான் பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளை சந்திப்பேன் அவர்கள் வேண்டுவதை கொடுத்து வருகிறேன். அவர்களுக்காக மட்டும் இறைவனிடம் மன்றாடுவேன் " ஆண்டவா, என்பிள்ளைகளுக்கு நல்வழி காட்டு இந்த நாசக்காரியால் நாசமாகிப்போகாமல் காப்பாற்று!''

சற்று நேர மௌனத்தின் பின் அவனே தொடர்ந்து சொன்னான்: 'இன்னும் கொஞ்ச நாளில் எனக்கு கோட்டில் இருந்து அழைப்பாணை வரும். மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் படியளிக்கச் சொல்லி தீர்ப்பு வரும் ! அவள் கள்ளப் புருசன் இவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதில் கைதேர்ந்தவன்!..... நீதிபதிக்குத் தெரியுமா யார் குற்றவாளி என்று? அவர் சட்டப்படி எனக்கு தண்டனை கொடுப்பார்! அவன் மீண்டும் தலை கவிழ்ந்தான் ! அவனுக்கு என்ன ஆறுதலைச் சொல்வது என்று புரியாமல் கலைநேசனும் மௌனியானார்..... அவன் எழுந்து நின்று சொன்னான்:

"நான் பண்ணையில் ஆடு மாடு கோழியோட பழகி கனவருசமா சீவிச்சு வாறன். அதுக்கள் எல்லாம் கடவுள் படைச்ச மாதிரியே அப்பிடியே வாழ்ந்து வருகுதுகள். துரோக புத்தியே அதுகளுக்குத் தெரியாது. ஆனா பகுத்தறிவு மனிதனுக்குத்தான் துரோக புத்திதான் எப்போதும் முன்னிலை வகிக்கிறது! என்று சொல்லிக் கொண்டே எழுந்து போய்விட்டான்.

பக்கத்து வட்டங்களில் இருந்தும் பேச்சுக் குரல்கள் கேட்டன. "நானிப்ப வீட்ட போனனெண்டால் என்ர பொஞ்சாதி வாங்கோ இருங்கோ எண்டு பயந்து நடுங்கிக் கொண்டு வரவேற்பாள் ஓ! சாப்பாடு தந்து, பாயும் தலகாணியும் போட்டு என்ன படுக்கவைச்சி பீடியையும் நெருப்பெட்டியையும் தருவாள் ஓ!..... இதுகள்ள ஒரு சின்ன பிரச்சினை வந்தாலும் பானை சட்டிகள் எல்லாம் உடைஞ்சி சுக்கு நூறாகும் எண்டாலும் இந்தப் பொம்பிளைகள் பாராட்டத்தான் அப்பா வேணும்! எங்களைப் போல குடிக்காம புகைக்காம! புருசன் புள்ளைகளுக்காக ஆனமான சாப்பாடும் இல்லாமை தங்கள் தற்தியாகம் செய்து வாழுதுகள் அப்பா!!!1

எங்கள் வட்டத்திலும் நாங்கள் ஒருவரின் துயரக் கதையில் கவனமெடுத்திருந்த போதும் பலவிதமான சர்சையான விளையாட்டுத்தனமான சிரிப்புக்கிடமான கெட்டிக்காரத்தனமான பேச்சு வாக்குகளும் நிகழ்ந்து கொண்டுதான் இருந்தன. அப்போது கவனமெடுக்கவில்லை, இப்போது காது கொடுத்தேன்..... ஒன்றை முக்கியமாக குறிப்பிடத்தான் வேண்டும்: இங்குவந்து போதை சற்று ஏறியதில் இருந்து இதுவரை கண்டறியாத ஒரு புது உலகில் மிதப்பது போலவும் எல்லாவற்றிலும் இரசனை உள்ளது போலவும் யாவற்றிலும் ஈடுபாடு காட்ட வேண்டும் போலவும் இருந்தது!

அவர்கள் நொடி (விடுகதை) சொல்லி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் இப்படிக் கேட்டார்: 'ஓடும் பாயும் நடக்காது. அது என்ன? ஒருவராலும் பதில் சொல்ல இயலவில்லை . ஒன்றிரெண்டு குரல்கள் பதிலாய் ஒலித்தன. ஏற்கப்படவில்லை . மௌனம் நிலவியது..... எனக்கு ஒரு ஞானம் வந்தது போலிருந்தது. 'ஆறு' என்றேன் ஆனால் பிழை என்றார். அது பிழையாக எனக்குத் தோன்றவில்லை . ஆறு ஓடும் என்பார், பாயும் என்பார் நடப்பதாக சொல்வதில்லையே! சரி நீயே பதிலைச் சொல்லப்பா என்றார்கள். ''கொஞ்சம் தாரும் சொல்லுறன் என்றார். ஊற்றிக் கொடுத்தார்கள். சொன்னார். ''கூரைக்குப் போடுற ஓடும், விரிச்சுப்படுக்கிற பாயும் நடக்காது."... இன்னொருவர் அடுத்த விடுகதை சொன்னார்: ''பாண்டவர் பிறந்தது எப்படி, பசுவில் பால் கறப்பது எப்படி?" இரண்டுக்கும் ஒரு சொல்த்தான் பதில் என்றும் சொன்னார். எல்லோரும் கண்களை அகலவிரித்து தலையைச் சொறிந்து யோசித்தார்களே அல்லாமல் ஒருவரும் ஒரு பதிலும் சொல்லவில்லை. கலைநேசனின் குரல் ஒலித்தது 'குந்தி' என்றார். சரி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவரே விளக்கமிளத்தார். பாண்டவர் பிறந்தது குந்தி (தேவி)யாலதான், பசுவில் பால் கறப்பதும் குந்தி (யிருந்து) தான் என்றார்.

பக்கத்து வட்டப்பக்கமிருந்து ஒருவர் குரல் கொடுத்து கைகாட்டி அழைத்தார் கலைநேசனை. அவர் உத்தியோகத்தர் போல் தோற்றம் காட்டினார். அங்கிருப்பவர்களும் அவ்வாறே காட்சியளித்தனர்.

கலைநேசன் அந்தப்பக்கம் என்னையும் கூட்டிக்கொண்டு போனார். போயமர்ந்தோம். எங்களை அழைத்தவர் புன்னகையோடு வீற்றிருந்தார். அவர் நெற்றியில் திருநீறு பூசியிருந்தார். நான் வியப்போடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கலைநேசன் காதோடு சொன்னார். ''இவர் ஒரு சிவபக்தர் இந்து சமயத்தத்துவங்களை எல்லாம் நல்லா விளக்கிச் சொல்வார். வெள்ளிக்கிழமை தவிர்ந்த நாள்களில் இங்கே வந்து போவார். அதிகம் மெனக்கெட மாட்டார்'' என்றார்'

"நேரமாகிறது போவோம் எழுந்துவர மனமில்லை போலிருக்கிறது!'' என்றார். நான் பிரிய மனமில்லாமல்தான் எழுந்தேன்! ''இவை எல்லாம் சிற்றின்பம் என்பார். என்றாலும் சிற்றின்பத்துள் இது பேரின்பமானதுதான்! உண்மையான பேரின்பத்தைக் காண்பதென்றால் குடும்பத்தை விட்டு சன்னியாசியாகவல்லோ திரிய வேண்டும்!'' என்றார். "மீண்டும் சந்திப்போம்'' என்று எனக்குள் சொல்லிக்கொண்டே வெளியேறினேன்.

சூசை எட்வேட் ...✍

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 09



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 09
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :09

இடமிருந்து வலம்

(01) குறிப்பிட்ட தேவைக்கேற்ற தகுதி அல்லது திறமை.
(05) இரண்டு .
(07) இராமாயணக் கதையில் வரும் கதாபாத்திரங்களுள் ஒன்று. (குழம்பியுள்ளது)
(08) பருவ காலங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)
(09) மோகம்.
(10) ஏதாவது பொருள் பற்றி குறிப்பிடுவது. தலைப்பு என்றும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
(12) ஒருவகை மீன்.
(13) சரக்கு வகைகளுள் ஒன்று.
(15) காற்று.
(17) திறப்பு. (திரும்பியுள்ளது)
(18) ஆழமானது என்பதைக் குறிக்கும். (குழம்பியுள்ளது)
(21) பெண்.
(23) நெருப்பில்லாமல் இது வராது.
(24) அம்பு. (குழம்பியுள்ளது)
(25) செயற்பாடு அல்லது பணி.

மேலிருந்து கீழ்

(01) இயல்பான செழிப்பு நிலை.
(02) இதுவும் ஒரு பறவை.
(03) கூறுபாடு அல்லது விதம்.
(04) போர்களின்போது அம்பு போன்ற ஆயுதங்களின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் கவசம். (குழம்பியுள்ளது)
(05) இழப்பினால் ஏற்படும் சோகம். (குழம்பியுள்ளது)
(06) அவலட்சணம். (குழம்பியுள்ளது)
(11) இதுவும் ஒருவகை மரம்.
(12) கீர்த்தி (குழம்பியுள்ளது)
(13) பாடல்.
(14) போதை தரும் பானங்களுள் ஒன்று. (குழம்பியுள்ளது)
(16) மகிழ்ச்சி (குழம்பியுள்ளது)
(19) இதுவும் பறவை வகைகளில் ஒன்று.
(20) விரோத நிலை.
(22) சத்துமிக்க திரவப் பொருள். (தலைகீழ்)

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 08

விடைகள்

மேலிருந்து கீழ்
01. விருது 04. மருதம் 08. யாசகம்
10. குடல் 11. திங்கள் 12. ஆல்
13. கஞ்சி 15. அரும்பு 17. சுமை
20. அவா 22. தயக்கம் 24. தினை
25. குடாநாடு

மேலிருந்து கீழ்
01. வியாதி 02. சருக்கம் 03. துகள்
05. குரு 06. தடல் 07. ஆம்பல்
09. அங்கம் 14. சிசு 15. புனிதம்
16. செருக்கு 18. அமைதி 19. நாணம்
21. வாசனை 23. கடா

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 07

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
எஸ். தமயந்தி,
இல. 357,பொதுஜய மாவத்தை,
அங்குலானை, மொறட்டுவ.

இரண்டாம் பரிசு
ஏ.ஆர்.எம். அபூபக்கர்,
411, அலுத் வீதிய,
வெலிகம.

மூன்றாம் பரிசு
ஏ.டபிள்யூ.எம். நியாஸ்,
A29/9, சமித்தியா வீதி,
மாவனெல்ல.

பாராட்டு பெறுவோர்

1. எஸ். செல்வராஜா,
ப/ ஸ்ரீவாணி வித்தியாலயம்,
மலங்கமுவ, பதுளை.

2. ஏ.எச். அப்துல் அலீம்,
தபாலக விடுதி,
ஏறாவூர்.

3. ஏ.எல். அப்துல் ஜலீல்,
191/3, மூர் வீதி,
மன்னார்.

4. மங்கையர்கரசி மனோகரன்,
53ஏ, லேடி மென்னிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

5. எம்.ஆர்.எம். நுபைல்,
12பி, மாளிகாஹேன,
பேருவளை.

6. கனகசபை நாகேந்திரன்,
113/1, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு 06.

வினோ மதிவதனி,
இல : 54A, அத்தனகொல்ல வீதி,
லுனுகலை.

எஸ். நாகராஜா,
சாரதா வீதி,
காரைதீவு 02.

எம்.என்.எப். நிஸ்மியா,
இல. 174/சி, இலுக்வெல,
வேவுட.

கசப்பு–1

"MILLION" (மில்லியன்) என்றொரு ஆங்கில வார்த்தை ஆனால் "புதியதொரு தமிழ் வார்த்தையோ" என்கிறபடி ஊடகத்துறையின் சகல பிரிவுகளிலும் உபயோகமாகிறது. உச்சரிக்கப்

1,000,000

படுகிறது. இதன் அசல் தமிழை எவரும் சொல்ல ஆர்வப்படுவதில்லை. "பத்து லட்சம்" என்பது தான் வாழையடி வாழையாக வழக்கில் உள்ள பிரயோகம்.

இருந்தும் என்ன, **"பத்து இலட்சம்"** என்பது அப்படியே அகன்று போய் "மில்லியன்", "மில்லியன்" என்பது தான் எழுத்திலும் பேச்சிலும்!

ஆக – தமிழ் அகராதி புதிய பதிப்பில் 'மில்லியன்' இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் எக்கச் சக்கம் என்பதைக் கசப்பு கசப்பாக நான் பதிவிட பச்சைக்கொடி கூட்டுவீர்களா?

ஒரு வேண்டுகோள்;

ஊடுருவல் பேர்வழி ஆங்கில மில்லியனே, இன்னும் சில ஆங்கில வார்த்தைகளுடன் சுந்தரத்தமிழில் இரண்டறக் கலக்குக! கலக்குக!

கசப்பு –2

'ஏடி.எம்' ATM இயந்திரத்தில் களவுசெய்வது எப்படி? அதாகப்பட்டது, பணத்தை அந்த இயந்திரத்திலிருந்து,

அதற்கு எந்தப் பழுதும் ஏற்படாமல் கொள்ளை அடிப்பது எப்படி? எப்படி?

"கிராமம் ஒன்றில்" குலத்தொழில் போல வாலிபர்களுக்குப் பயிற்சி நடத்துகிறார்கள்!

அங்குள்ள மனிதர்கள் யாரும் தவறு என்று தடைசெய்வதில்லை!

வங்கி ஏ.டி.எம். மையங்களில் நூதன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் விதம் பற்றிச் சொல்லிக் கொடுக்க 'ஒரு பயிற்சிக் கூட'மே இயங்குகிறது.

அந்தக் கூடத்தில் கொள்ளை அடிக்கும் கலையில் 'கலாநிதிகளான' நால்வர் தமிழகத்திற்கு வந்து கொள்ளையோ கொள்ளை! 30க்கும், மேற்பட்ட மையங்களில் கைவரிசை!

அவர்கள் போன்ற பெரிய கும்பலைப் பயிற்றுவிக்கும் 'கலாசாலை' இருப்பது, வட இந்தியா, அரியானா மாநிலத்தில் மேடாக மாவட்டம், வல்லப்கர் கிராமம்!ஒரு சுற்றுலாவில் அந்தக் கிராமத்தைச் சென்று பார்த்தால் என்ன? ஆனால் பயிற்சி எதுவும் எடுக்கக் கூடாது!

இனிப்பு

இன்றையப் பொழுதில், என் வயதில், என் பார்வைக்கு எட்டிய வரையில், **'இலக்கியக் குடும்பம்'** எனத் தெரிவது வடதிசைப் புன்னாலைக் கட்டுவான் வழி வெள்ளவத்தையில் வதிகின்ற சாகித்ய விருதாளர் **தி. ஞானசேகரன்** குடிலே!

அங்கு அவருக்கு உற்ற துணைவியாக **'ஞானம்'** எனும் பெயரை உடைய இலக்கிய சகோதரியும், **அருமந்த புத்திராகப்** புன்னகை மன்னன் **பாலச் சந்திரனும்.**

இந்த மும்மணிகளும் இருபத்தியிரண்டு ஆண்டுகள் அலுக்காமல் சளைக்காமல் இலக்கியப் பயிர் விதைத்து, **'ஞானம்'** என்னும் பெயர் சூட்டி, மாதத்தின் முதலாம் நாள் விளைச்சல் கண்டு அறுவடை செய்து வலைத்தளங்களில் வழங்க அலைகடலுக்கப்பாலும் பயணித்து விடும். அதன்பின் அஞ்சல் வழி இங்கும் கிடைக்கும்.

அதன் நிறுவனரும் பொறுப்பாசிரியரும் ஞானசேகரன் அய்யா என்றால், துணைவியார் இணை ஆசிரியர். மகன் நிர்வாக ஆசிரியர்.

இப்படிபொரு இலக்கியத் குடும்பப் பூங்காற்று இலங்கையில் இவர் குடிலில் மட்டுமே வீசுகிறது!

இப்பொழுது அவருக்கு அகவை எண்பது. இந்த வயதில் பெரும் பெரும் இலக்கிய ஜாம்பவான்களை மிஞ்சிக்கொண்டு காரியம் ஒன்று.

அது, பெருந்தொகை பணத்துடன் சம்பந்தப்பட்டது சுமார் மூன்றரை லட்சம்! இன்றையக் கிருமி காலத்தில் பறந்து பறந்து போய் இலக்கிய ஆளுமைகளுக்குப் போய்ச் சேர வழி

'ஞானம்' கடந்தாண்டுப் பிறபகுதி சஞ்சிகை ஒன்றின் முகப்பட்டையைப் பார்த்த மாத்திரத்தில் திருப்பி உள் அட்டையை கண்கள் மேயும் பொழுது ஒரு முழுப்பக்க வண்ண விளம்பரம். இங்கே இந்தப் பந்தியில் கால் பக்கத்தை மட்டுமே வழங்க இடம்.

இம், முயற்சியை, இலங்கை இதழில் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. முன் குறிப்பிட்டது போல் பரிசளிப்பு வைபவமும் நடக்க வேண்டிய இடத்தில் நடக்க உள்ளது. மகிமை மிகு தமிழ் சங்கம், 12 பெப் சனிக்கிழமை.

திட்டமிட்டபடி, ஆறு பிரிவுகளுக்குப் பரிசுகள், பாராட்டுகள். அவற்றிலே என்னை மிகவும் கவர்ந்தது ஆறாம் பிரிவு 'ஈழத்துச் சிற்றிதழ்கள்'. போட்டி ஏற்பாடே ஒரு சிற்றிதழ் குடும்பக்காரர்கள் தான்! அவர்களே ஏனைய சிற்றிதழ்காரர்களுக்கு பரிசளிப்பது என்றால்...?

போற்றுதும் போற்றுதும்

காதோடு காதாக ஒரு தகவல்:

என் மூத்த பேனையும் இந்தப் போட்டிக்கு 'முண்டாசுக் கவிஞரின் முஸ்லிம் நேசம்' அனுப்பி தோற்றுப் போனது! எவ்வாறாயினும் தோல்வி கசப்பில் துவண்டு விடாத பேனா இனிப்பை அள்ளி வழங்கி இருக்கிறது. காரணம் ஒரு தனி மனிதரின், ஒரு குடும்பத்தின், உன்னத இலக்கியப்பணியைத் தோற்ற பேனா மறைத்து இருட்டடிப்பு செய்வது அதர்மம். அதனை எண்பத்தைந்து அகவைப் பேனைக்கு புரியாது.

14 பாதாளத்தில் கிடைத்தது ஒரு துப்பு கொலைகாரன் செய்தானே ஒரு தப்பு!

தனக்கு வந்த சந்தேகத்தை தீர்த்துக் கொள்வதற்காக,

உடனே இருவரை தனது அறைக்கு வரச்சொன்னார் துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

அது,

இன்ஸ்பெக்டர் ராகவன்.

மற்றது

துப்பறியும் பிரிவில் உள்ள பெண் பொலிஸ் கான்ஸ்டபிளான சரண்யா

இருவரும்,

தனது அறைக்குள் வந்ததும்,

முதலில்,

சரண்யாவுக்கு சில ஆலோனைகளை வழங்கினார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

"ம்... சரண்யா...உங்களுக்கு ஒரு பெரிய வேலை இருக்கிறது!"

"சொல்லுங்க சேர்... நீங்க எவ்வளவு பெரிய வேலையைச் சொன்னாலும் விரைவாகவே செய்து முடிப்பேன் சேர்!"

"தீபன்... தீபிகாவை நீண்ட நாட்களாகவே காதலித்திருந்தாலும் கெம்பஸ்ல படிக்கும் போது வேறு எந்தப் பெண்ணுடனாவது தொடர்பில் இருந்திருக்கலாம்..

அல்லது வேறு ஏதாவது ஒரு பெண் அவனைக் காதலித்திருக்கலாம்.. இது சம்பந்தமாகத்தான் நீங்கள் விசாரணை செய்யவேண்டும். இதை உடனடியாகவே செய்ய வேண்டும். அப்படி ஒரு பெண்ணுடன் தீபனுக்கு இருந்ததா என்பது எனக்கு உடனடியாகத் தெரிந்ததாக வேண்டும்!

"புரிகிறது சேர்... தீபன் படித்த பல்கலைக்கழகத்திற்குப் போய் இது சம்பந்தமாக இப்போதே விசாரிக்க வேண்டும். இதைத்தானே நான் இப்போது செய்ய வேண்டும்?"

"அதேதான்... நீங்கள் அங்கு போய் தீபனின் நெருங்கிய நண்பர்கள் மூன்று பேரையும் சந்தியுங்கள். அவர்களின் பெயர், சஞ்சை, பிரதீப், ஜீவன், இவர்கள் மூவரும் ஒரே அறையில் தான் தங்கி இருக்கிறார்கள். மாலை நேரத்தில் போனால் மூவரையும் ஒரே இடத்தில் சந்திக்கலாம். போகும்போது தனியாக போகாதீர்கள். இன்னும் இருவரையும் கூட அழைத்துச் செல்லுங்கள். போய்வந்து எனக்கு விபரங்களைத் தாருங்கள். அதன் பிறகு என்ன செய்ய வேண்டுமென்று நான் சொல்லுகிறேன்!"

"சரி சேர்... எனக்கு இப்போது எல்லாமே புரிந்தது. நான் நாளையே போய் அவர்களைப் பார்க்கின்றேன்!"

"ம்.... நீங்கள் இப்போது போகலாம்!"

"ஆகட்டும் சேர்!"

சரண்யா போன பிறகு,

ராகவனின் பக்கம் திரும்பினார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்!

"உங்களுக்கு ஒரு சிறிய வேலை இருக்கிறது ராகவன்!"

"சொல்லுங்க சேர்... இப்போதே வேலையை ஆரம்பித்து வருகிறேன்... ம் அதில்ல சேர்... நீங்க அ..... தீபிகாவின் தோழிகளான மல்லிகா ஜீவிதா இவர்களைப் பற்றி விசாரிக்கச் சொன்னீங்கதானே!?"

"ஆமாம்... அவர்களைப் பற்றிய தகவல்களைத்தான் நீங்க குடுத்திட்டீங்களே... அதைப்பற்றியும்... நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன்...!"

"இல்ல சேர் நான் உங்களுக்கு கொடுத்தது மல்லிகாவின் தகவல்களைப்பற்றி மட்டும்தான். ஜீவிதாவைப் பற்றிய தகவல்கள் எதுவும் அதில் இல்லை... அதை பெற்றுக் கொள்வதற்காக சார்ஜன்ட் வசந்தை அனுப்பவா சேர்?"

"ம்... இப்போதைக்கு அது முக்கியமில்லை... தேவையானால் நான் சொல்லுகிறேன்... இப்தே சொல்வதை நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்!"

"சரி... சொல்லுங்க சேர்?"

"தீபன்..., தீபிகா, இருவரும் பாடசாலையில் படிக்கிற காலத்தில் இருந்து காதலர்கள் என்பது உண்மைதான்.

ஆனாலும், தீபிகாவின் மீது காதல் கொண்டிருந்த ஒருவன் அந்த பாடசாலையிலோ அவள் படித்த கல்லூரியிலோ இருந்திருக்கலாம். அப்படியும் இல்லையென்றால் தீபிகா எவரையாவது விரும்பியிருக்கலாம்.. இன்றைய சமூகம் போகும் போக்கில் இதைப் பற்றியெல்லாம் எங்களால் எந்த உறுதியையும் செய்ய முடியாது...!"

"நீங்க சொல்வதும் உண்மை தான்சேர்!"

"அதனால் தீபிகா படித்த கல்லூரிக்குச் சென்று அவளுடைய தோழிகள் மூவரையும் அவள் படித்த கல்லூரிக்குச் சென்று சந்தியுங்கள். அவர்கள் மூவருடைய பெயர்களும் தெரியும் தானே...?"

"ஆமாம் சேர் எங்கிட்ட இருக்கு"

"சரி...அப்படியானால் நாளையே அங்குபோய் அவர்களைப் பற்றி விசாரித்து விட்டு எனக்கொரு ரிப்போட் தாங்க, தனியாக பேகாதீர்கள். சாஜன்ட் வசந்தையும் அழைத்துச் செல்லுங்கள். மாலை நேரத்தில் போனால்தான் மூவரையுமத் ஒரே இடத்தில் பார்க்கலாம்!"

"ஆகட்டும் சேர்!" எல்லோரும் போன பிறகு, தனியாக விடப்பட்ட இன்ஸ்பெக்டர் இன்பராஜ்,

தீபிகா... தீபன் கொலை வழக்கில் கொலைகாரனை எப்படி கண்டு பிடிப்பது என்ற சிந்தனையில் மூழ்கினார். அவர் மனம் எண்ணியது,

"இதுவரையில் நடந்த விசாரணையை வைத்துப் பார்க்கும் போது,

அவர்களுக்குள் யாருமே கொலை காரனாக இருப்பான் என்று சந்தேகிக்க முடியவில்லை.

சிலசமயம்,

இவர்களுக்குள் ஒருவராகவும் இருக்கலாம்.

தீபிகாவும் தீபனும் வட்டவல பாதாளத்தின் அருகில்,

எப்படிச் சென்றார்கள் என்பதை கண்டு பிடித்தால்,

உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு வழி பிறக்கும். இப்போதுள்ள சிக்கலே, அந்த இடத்திற்கு இவர்கள் எப்படி போனார்கள் என்பதுதான்.

மரணவிசாரணை அறிக்கையின் படி,

அவர்கள் இருவரும்,

பாதாளத்தில் பாய்ந்தோ, அல்லது,

தள்ளிவிட்டோ தான் இறந்திருக்கிறார்கள் என்பது தான்!

அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம்,

பாதாளத்தின் அருகில் வந்து,

அவர்கள் இருவரும் பாய்வதற்கான வாய்ப்பே இல்லை!

அப்படி தள்ளி விடுவதாக இருந்தால்,

அவர்கள் இருவருக்கும் மிகவும் நெருக்கமானவர்கள் யாராவது தான்,

அவர்களை அங்கு அழைத்து வந்து, இந்த காரியத்தைச் செய்திருக்க வேண்டும்!

இவர்கள் இருவரையும், எப்படி பாதாளத்திற்கு அருகில் அழைத்துச் சென்றார்கள் என்பதில்தான் இப்போது சிக்கலே இருக்கிறது!

இதில்,

எனது சிந்தனைக்குவராத ஏதோ ஒரு விஷயம், விடுபட்டுப் போயிருக்கிறது!

அது என்ன? அது என்ன?

இந்த எண்ணம் வந்ததும்,

அடுத்த கணமே

வேறு இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் அழைத்துக் கொண்டு, வட்டவல வளைவில் உள்ள பாதாளத்தின் உச்சிக்கு சென்றார்!

அந்த மூவருக்கும்,

பாதாளத்தின் உச்சிக்கு செல்வதற்கு, சுமார் ஒரு மணித்தியாலம் வரையில் சென்றது. உச்சிக்கு வந்த இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

அங்கிருந்த பாறை ஒன்றின் மீது அமர்ந்து கொண்டு.

சிந்தனையுள் மூழ்கினார்.

அதேநேரம்,

அந்த பாறையின் அருகில் இருந்த பாதை வழியாக,

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவன் விரைவாக நடந்து சென்றான்.

கையைத்தட்டி,

அவரை அழைத்தார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

சிறிது தயங்கிய படியே,

அவர் அருகில் வந்தான் அந்த முதுமகன்.

"ஐயா... நீங்க இந்த பகுதியிலா இருக்கீங்க...!"

"ஆமாம் சேர்... பள்ளத்துக்கு கீழே இருக்கும் பாலத்தின் அருகில் இருக்கிறேன்!"

"உங்கள் பெயர் என்ன?"

"கோபால் சேர்!"

"இந்த பள்ளத்தில் இருக்கும் பாதாளத்திற்கு போவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?"

"போகமுடியும் சேர், ஆனா மூன்று மணித்தியாலத்துக்குமேல் போகும் கொஞ்சம் கஷ்டமாகவும் இருக்கும்!"

"உங்களுக்கு வழி தெரியுமா? "

"பொலிஸ்துறைமாருடன் இந்தப்பயணம் போவது கஷ்டம் சேர். மிகவும் கரடு முரடாண பாதையாக அது இருக்கும்!"

"சரி பரவாயில்லை கோபால்... பாதை தெரிந்த இருவரை எங்களுக்கு தேடித்தர முடியுமா?"

"ஆமா சேர்.. அதை என்னால் செய்ய முடியும்... நீங்க எப்போது வருவீங்க? கேட்டுவிட்டு,

துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜை நிமிர்ந்து பார்த்தான் கோபால்.

(இளமை வளரும்)

படித்ததும் பகர்வதும் 82

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்!

இலங்கையின் 74வது சுதந்திர தினத்தை கொண்டாடி மகிழ்ந்திருக்கும் இவ்வேளையில், "இலங்கையர்" என்ற வகையில் எங்கள் நாட்டின் மீது எமக்குள்ள பொறுப்புக்களை பற்றி சிந்திப்பது அவசியம்.

ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு எமக்கென சுய ஆட்சி அமைந்து எம்மை நாமே ஆளுகின்ற சுதந்திரம் கிடைக்கப்பெற்று, எழுபத்தி நாலு ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாயினும், 'தாய் நாட்டின் மக்கள்' என்ற வகையில், இந்நாட்டில் வாழும் பல்வேறு இனங்களுக்கிடையே ஒற்றுமையும், புரிந்துணர்வும், சகவாழ்வும் எந்த அளவில் உயர்வடைந்திருகிறது? அவை திருப்திகரமாக உள்ளதா? போன்ற கேள்விக்குறிகள் தலைதூக்கவே செய்கின்றன.

அவ்வப்போது ஏற்பட்ட இனக்கலவரங்கள், மூன்று தசாப்தங்கள் வடக்கில் நடந்த யுத்தம், ஓர் இனத்தை குறிவைத்து தாக்குகின்ற செயற்பாடுகள் போன்றன நாட்டு மக்களிடையே சிறப்பாக ஊன்றியிருந்த ஒற்றுமையை சீர்குலைத்து, வளரும் தலைமுறையினரிடையே தப்பான அபிப்ராயங்களை தோற்றுவித்துள்ளன என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளமை கசப்பான உண்மையாகும்.

நாட்டுப் பற்றோடு நாட்டுப் பிரஜைகள் அனைவரும், அவர்கள் எந்த இனத்தை, மதத்தை, குலத்தை சேர்ந்தவர்களாயினும், வேற்றுமைகளை மறந்து, ஒற்றுமையாக ஒரு தாய் மக்களென வாழ திடசங்கற்பம் கொள்ளுவதே சுதந்திர தினத்தின் அவசியமான பணியாகும்.

"நாடென்ன செய்தது நமக்கு?" என்று கேள்விகள் கேட்காமல் "நாமென்ன செய்தோம் நாட்டுக்கு??" என்று நாங்கள் எங்களையே கேள்வி கேட்டு, சரியான வழியில் முறையாக செயல்படுவது அவசியமாகும். இதனை நன்கு புரிந்து கொண்டு எம்மை சூழ வாழுகின்ற பிற இன மக்களோடு நல்லுறவோடும், நம்பிக்கையோடும், புரிந்துணர்வோடும், விட்டுக்கொடுப்புடனும், பரந்த உள்ளத்தோடும் நடந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள தார்மீக பொறுப்பாகும்.

'நாட்டுப்பற்று' என்ற பரந்த கருத்துக்களை கொண்ட விடயத்தில், 'சக வாழ்வு' என்ற ஒரு விடயத்தையாவது சரியான முறையில், நேர்மையோடு செயல்படுத்த நாம் முன்வருவோமாயின் அதுவே சுதந்திரதின கொண்டாட்டத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கும் என்பதை எவராலும் மறுக்க முடியாது..

நெஞ்சக்கு நீதி

அடிமை உணர்வை அழித்திட்ட சுதந்திரம்
அருமை பெருமைகள் அளித்திட்ட மந்திரம்
உரிமைகள் நன்மைகள் வழங்கிடும் வச்சிரம்
உணர்ந்து வாழ்ந்தாலே உயர்வுகள் நிச்சயம்!

பிரிந்தார் பெருமை

பல்துறை ஆளுமை எம். எச். ஏ. சமட்

நாடறிந்த கல்விமான், சிறந்த அதிபர், ஆசிரியர், ஆலோசகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், தொழில் நுட்பக்கல்வி விரிவுரையாளர், அரசியல் ஆலோசகர் எனப்பல்துறை ஆற்றல்மிக்க அறிஞர் எம். எச். ஏ. சமட், கடந்த ஜனவரி 30ம் திகதியன்று (30.01.2022) தனது 82வது வயதில் இம் மண்ணுலகிலிருந்து மறைந்தார்.

தொழில் நுட்பக் கல்வி எனும்போது கட்டாயமாக இலங்கையர் மனதில் தோன்றும் பெயர் இவருடையது என்றால் மிகையல்ல. இலங்கையின் பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளராக திறம்பட பணியாற்றியவர். தொழில் நுட்பக்கல்வியில் மாணவர்கள் ஆர்வம் கொள்ளும் வகையில் கருத்தரங்குகள், வானொலி, தொலைக்காட்சிப் பேட்டிகள், பேச்சுக்கள் என நிகழ்த்தி அவர்களை உற்சாகமூட்டியவர்.

காலஞ்சென்ற நளீம் ஹாஜியார் பேருவளையில் ஆரம்பித்த 'இக்ரா' தொழில்நுட்பக் கல்லூரியின் ஸ்தாபக அதிபராக பொறுப்பேற்று அதனை வளர்த்தெடுத்தவர்.

மருதானை தொழில் நுட்பக்கல்லூரியில் தமிழ்ப் பிரிவு, அம்பாரை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள் அமைய திறம்படப் பணியாற்றியவர். தெல்தோட்டை இப்ராஹிமியா தொழில்நுட்பக் கல்லூரியின் ஆலோசகராக செயலாற்றியவர்.

கல்வித்துறை பயிற்சிக்காக வெளிநாடுகள் பலவற்றிற்கு விஜயம் செய்துள்ள எம். எச். ஏ. சமட், ஸம்பியா, நைஜீரியா போன்ற நாடுகளில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

"புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்களின் மாணவன் நான்" என்று சொல்வதில் மகிழ்ச்சி கொண்ட இவர், பல தமிழ் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து உலகறியச் செய்துள்ளார். இதனால் பல நாடுகளிலும் வாழும் தமிழ் பேசும் மக்களால் நன்கு அறியப்பட்டவர். தமிழ், சிங்களம், ஆங்கிலம் என மும்மொழிகளிலும் புலமை பெற்றிருந்ததால் தமிழ், ஆங்கில, சிங்கள மொழிமாற்றுனராகவும் சிறப்பாக கடமையாற்றியுள்ளார்.

இவரது மெலிந்த தோற்றம், இளகிய மனம், அமைதியான பேச்சு, அன்பான உறவு, அழியாத சமூக சேவை, இலங்கும் இலக்கியப் பணி, தொழில் நுட்பத்துறையின் அதீத ஆற்றலும், வழிகாட்டலும், சேவையும், இலக்கியத்துறை பங்களிப்புகள் என இன்னோரன்ன இவரது சிறப்புகள் மக்களின் மனங்களில் என்றும் நீங்கா இடம் பிடித்திருக்கும்.

புது வரவு

தொடக்க கால இஸ்லாம் ஒரு சமூக பண்பாட்டு பார்வை

தொடக்க கால இஸ்லாம் பற்றித் தமிழ்ச் சூழலில் பேசப்படுவது குறைவாகவே உள்ளது எனலாம். ஆனால் இன்று உலகெங்கும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளிடையே இஸ்லாத்தின் தோற்றக் காலத்தையும் நபிகளாரின் பணிகளில் அரசியல் பொருளாதாரப் பின்னணியையும் அறிந்துகொள்ளும் ஆர்வமும் அதிகரித்து வருகின்றன.

இந்த ஆர்வத்துக்கு தீனிபோடும் வகையில் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் எழுதிய, 'தொடக்க கால இஸ்லாம் ஒரு சமூக பண்பாட்டு பார்வை' என்ற நூல் வெளிவந்துள்ளது. இந்த நூலில் பேராசிரியர், சமூகப் பண்பாட்டியல் நோக்கில், இஸ்லாத்தின் தோற்றத்தையும் இஸ்லாத்திற்கு முற்பட்ட அரபுச் சமூகத்தின் வழிபாடுகள், சமூக அமைப்புகள் பற்றியும் ஆராய்கின்றார்.

ஒரு சமயத்தின் தோற்றத்தை நிர்ணயிப்பதில் சமூகவியல், அரசியல், பொருளாதாரம் முதலியவை ஏற்படுத்தும் தாக்கங்கள் எவ்வகையானவை என்பதே இந்த நூலின் மையக் கருவாக உள்ளது.

இஸ்லாம் தோன்றிய மக்கா ஒரு வணிக நகரம். ஆனால் பூர்வீகத்தில் அது நாடோடி பதாவிகளின் பூமி. நாடோடிப் பொருளாதாரம் வணிகப் பொருளாதாரமாக மாற்றமடந்ததும், பழங்குடிச் சமுதாயம் அரசியல் சமூகமாகியதும், பல தெய்வ வழிபாடுகளை ஓரிறைவாதம் நிறைவு செய்ததும் தற்செயலான நிகழ்வுகள் அல்ல.

ஒரு சமுதாயப் புரட்சிக்கான சூழல் அங்கு உருவாகிக்கொண்டிருந்தது. சிதறிக்கொண்டிருந்த பழங்குடி அமைப்பை ஒருங்கிணைத்து, பெருவணிக ஆதிக்கத்தைத் தகர்க்கும் தலைமைத்துவப் பொறுப்பை நபிகளார் ஏற்கிறார். சீர்திருத்தங்களின் மூலம் 'உம்மா' என்னும் புதிய ஐக்கியச் சமூகத்தையும் புரட்சிகர பண்பாட்டையும் அவர் கட்டி எழுப்புகிறார். இதன் வரலாற்றுப் பின்னணியை பேராசிரியர் அனஸ் இந்த நூலில் சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார்.

பழங்குடிச் சமுதாய மரபுகளில் நிகழும் மாற்றங்கள் வரலாற்றுப் பூர்வமானவை. இந்த வரலாற்று நிகழ்வை மார்க்ஸ், எங்கெல்ஸ், மோர்கன், பெக்கோபன் போன்றோரின் அணுகு முறைகளின் வழியாக விளக்குகிறார் நூலாசிரியர்.இது சமயத்திலும் பண்பாட்டு அரசியலிலும் ஆர்வமுள்ளவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய ஒரு முக்கியமான புத்தகம்.

நூல்: **தொடக்க கால இஸ்லாம்ஒரு சமூக பண்பாட்டு பார்வை**, நூலாசிரியர்: **பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்,** பக்கங்கள்: **248**, விலை: **200.00** தொடர்புகளுக்கு: **0773494889.**

தகவல் களஞ்சியம்

இலங்கையில் கேபிள் கார்

நுவரெலியா பிரதேசத்தில் கேபிள் கார் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் சுவீடன் நாட்டு நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நானுஓயாவிலிருந்து நுவரெலியா வரை 4 கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு கட்டங்களைக் கொண்ட இக்கேபிள் கார் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 18 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுவீடன் நாட்டு முழுமையான உதவித் திட்டத்தின் கீழ் 55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

09 நாட்களில் 86 பேர் பலி

2022 ஜனவரி 03ம் திகதி வரையான 9நாட்களில், நாட்டில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் 86 பேர் பலியாகியுள்ளனர். 2021 டிசம்பர் 25 முதல் டிசம்பர் 31ம் திகதிவரை 52 வீதி விபத்துகளில் 53 பேர் உயிரிழந்துள்ளனர். 2022 ஜனவரி முதலாம் திகதி இடம்பெற்ற வீதி விபத்துகளில் 18 பேரும் 02 ஆம் திகதிய விபத்துகளில் 12 பேரும் பலியாகியுள்ளனர்.

இதேவேளை 2021 ஆம் ஆண்டில் 2,385 விபத்துகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 2, 461 பேர் உயிரிழந்துள்ளனர். ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பார்வையற்றோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் பார்வைக் குறைபாடுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக இலங்கை கண் பராமரிப்பு ஒளியியல் சங்கம் தெரிவித்துள்ளது.

கண் மருத்துவ மனைகளுக்குச் செல்லும் பெரும்பாலான மக்களில் 80 சதவீதமானவர்கள் பார்வையை இழந்துள்ளனர். 80 சதவீதம் சேதத்திற்குள்ளான கண்களில் பார்வையை மீட்டெடுக்க வழி இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2021உலகின் கடும் வெப்பமான ஆண்டு

உலகில் மிக அதிக வெப்பம் மிகுந்த ஆறாவது ஆண்டாக 2021 வகை படுத்தப்பட்டுள்ளது. புதிய தகவல்கள் அதற்குச் சான்றாய் அமைந்திருப்பதாக, அமெரிக்கப் பருவநிலை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

உலக மக்கள் தொகையில் சுமார் கால்வாசிப் பேர் கடந்த ஆண்டு கடுமையான வெப்பத்தால் பாதிக்கப்பட்டனர். தெற்காசியா, வட அமெரிக்கா, தென்னமெரிக்கா ஆகிய வட்டாரங்களில் கடந்த ஆண்டு சூரியன் சுட்டெரித்தது. ஆர்க்டிக்கில் மீண்டும் அதிகமான பனி உருகியது. ஆயினும் உலக சாராசரியை விட ஆர்க்டிக் மும்மடங்கு அதிகம் சூடாவதாக நாசா ஆய்வு நிறுவனம் கூறியது.

காடுகளை அழித்தல், படிம எரிபொருள் பயன்பாடு போன்ற நடவடிக்கைகளைக் குறைக்காவிட்டால் நிலைமை மேலும் கடுமையாகலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரித்தனர்.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் வெப்பம் அதிகமாக இருக்கலாம் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

கலை, இலக்கிய வாழ்வில் முன்மாதிரியான செயற்பாட்டாளர் கே.பொன்னுத்துரை

பொது வாழ்வில் பலரும் ஈடுபடாலம். உள்ளார்ந்த உணர்வு மேலோங்க செயற்பாடுகளை செய்வதில் சிலரே ஆத்மார்த்த உந்துதலோடு கருமமாற்றுகின்றார்கள். அவ்வாறான உணர்வு பூர்வமிக்க செயற்பாட்டாளராகவே. கே.பொன்னுத்துரையை இனங்காண்கிறேன். சமய, சமூக, இலக்கிய பணிகளில் தன்னலம் கருதாத அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன. எனது சமூக, கலை, இலக்கிய வாழ்வில் தெளிவான பாதையை காண்பித்த ஒருவராக அவரது பங்களிப்பை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரியில் உயர்தரம் கற்றுக்கொண்டிருக்கும் போது நாவலப்பிட்டியில் மலையக ஆன்மிக கலை இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகள் முனைப்பாக இடம் பெற்றுக் கொண்டிருந்தன. பாரதி விழா, பிரதேச சாகித்திய விழா நூல் வெளியீடுகள், எழுத்தாளர் கௌரவிப்பு, 5ம் ஆண்டு புலமைப்பரிசு மாணவர்களுக்கான பரீட்சைக்கான கருத்தரங்குகள், க.பொ.தா(சா/ த) பரீட்சைக்கான பயிற்சி பட்டறைகள், எழுத்தாளர் அறிமுகம், மூத்த ஆளுமைகள் அறிமுகம் என்றவாறு பரவலாக நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் அந்நிகழ்வுகள் ஏற்பாட்டின் பின்னணியில் அடிப்படும் பெயர்தான் கே.பொன்னுத்துரை.

இந்தியாவின் பிரபல நாடக ஆளுமை கோமல். சுவாமிநாதன் எமது பாடசாலைக்கு அழைத்து வந்து சந்திப்பை நடத்திய தருணம். அன்று கோமல் சுவாமிநாதன் அவர்களையும், கே.பொன்னுத்துரையையும் முதலில் பார்வையுற்றேன். பேசுவதற்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை. பின்னர் நகரில் வேட்டி சட்டையுடன் அவ்வப்போது காண்பது வழமை பொதுவாக எப்போதும் வெள்ளைவேட்டி சட்டையுடனே அவரை காண முடியும்.

பாடசாலை காலங்களில் (உயர்தரம்) பத்திரிகைக்கு எழுத வேண்டும் என்ற ஆர்வம் மேலேங்கியிருக்கும். எதையாவது எழுத வேண்டும், என்ற ஆர்வத்தில் அவ்வப்போது எழுதி அனுப்பவதுண்டு. அவைகளில் பல வராமல் இருக்கும். சில ஆக்கங்கள் களம் காண்பதுண்டு.

பெயருடன் வரும் போது அதனை பார்வையுற்ற கொள்ளை இன்பம் கொள்வதுமுண்டு. அக்காலப்பகுதியில் 'நவமணி' பத்திரிக்கை தொடக்கம் பெற்ற காலம். மலையக பகுதிக்கு முக்கியத்துவம் வழங்கி ஒரு பக்கம் ஒதுக்கியிருந்தார்கள். அப்பகுதிக்கு இப்பகுதியில் காணப்படும் வீதி குடிநீர், போக்குவரத்து போன்ற சமூக பிரச்சினைகளை குறித்த ஆக்கங்கள் எழுதிய போது தொடர்ச்சியாக களம் கிடைத்தது. எனது பெயரிலேயே அதை பிரிசுரிப்பார்கள்.

இவ்வாறு நாவலப்பிட்டி பிரதேசத்தில் பல பிரச்சினைகளை என்னால் வெளியிட முடிந்தது. அந்த சந்தர்ப்பத்தில் தான் என் வாழ்வில் சந்தித்த மிக முக்கியமான நபரான அமரர் ஐ.பொன்னையா நாவலப்பிட்டி வேல்ஸ் ஸ்டுடியோவில் வைத்து அண்ணன்கே.பொன்னுத்துரையைமுதன் முதலில் அறிமுகம் செய்து வைத்தார். இந்த அறிமுகத்தின் போதே என்னை வெகுவாக பாராட்டினார்.

அன்றைய பொழுதுதான் என்னுடைய கலை, இலக்கிய எழுத்துத்துறை வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்திய தருணமாக நினைத்துப் பார்க்கின்றேன். பத்திரிகைக்காக செய்திகளையும் பலரது உரைகளை ஒலிப்பதிவு செய்தும் தருவார். அதன் ஊடாக ஆக்கப்பூர்வமான செய்திகளை என்னால் எழுத முடிந்தது. அவரது இத் துண்டுதல் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளராக உருவாவதற்கு ஏதுவாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னாளில் தினக்குரல் பத்திரிகையில் நாவலப்பிட்டி நிருபராக இணைக்கப்பட்டேன். அக்காலமும் என்னை முக்கிய இடங்களுக்கெல்லாம் அழைத்து செல்வதில் ஆர்வம் காட்டினார். மல்லிகை, ஞானம் போன்ற இதழ்களை அறிமுகப்படுத்தி அதனை வாசிக்க தூண்டினார். அவரது வீட்டு புத்தக அலுமாரியின் பல நூல்களை வாசித்திருக்கின்றேன்.

1997ம் ஆண்டு மலையக தமிழாரய்ச்சி மாநாட்டு முன்னோடி நிகழ்வாக நாவலப்பிட்டியில் ஆய்வரங்கு இடம்பெற்றது. அவ் ஆய்வரங்கின் ஏற்பாட்டுக் குழுவில் என்னையும் இணைத்து செயற்பட வாய்ப்பை ஏற்படுத்தினார்.

சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜயம் நூற்றாண்டு கொண்டாட்டம் கொழும்பு இராமகிருஷ்ண மிசனில் இடம்பெற்றது. இளைஞர் பயிற்சிப்பட்டறை அதில் முக்கிய நிகழ்வாகும். அப் பயிற்சிப்பட்டறையில் மலையக ஆன்மீக கலை இலக்கிய மன்றத்தின் சார்பில் பங்கேற்க செய்தார். அவ் வாய்ப்பு என் வாழ்வில் மிக முக்கியமானதாகவே அமைந்தது.

நாவலப்பிட்டி தமிழ்ச்சங்கம் அமைக்கும் பணியில் ஆலோசனைகளை வழங்கி பலரில் தொடர்புகளையும்

ஏற்படுத்தியமை மறக்க முடியாது. நாவலப்பிட்டி தமிழ்ச்சங்க நிகழ்வுகளில் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார். அவுஸ்திரேலியா எழுத்தாளர் லெ.முருகபூபதி, எழுத்தாளர் வவுனியூர் இரா உதயணன், தமிழகத்தின் பிரபல நாவலாசிரியர் கு.சின்னப்ப பாரதி, காப்பியக்கோ ஜின்னா ஷரிபூத்தீன், அஷ்ரப் சிஹாப்தீன் போன்ற படைப்புலக இமயங்களை பங்கேற்க செய்தார்.

இலங்கையில் 2011ஆம் ஆண்டு உலகத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் கொழும்பில் நடத்திய சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் முக்கிய அங்கமாக தொழிற்பட்டார். இம் மாநாட்டில் என்னையும் ஆய்வுரை நிகழ்த்த தூண்டினார். 'மலையக வீதிப்பாடல்களின் உள்ளடக்கமும் அதன் எழுச்சி தாக்கங்களும்' எனும் தலைப்பில் கட்டுரை வாசித்தேன். ஆய்வரங்கில் பலராலும் விதந்து பாராட்டப்பட்ட விடயமாக மாறியது. ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளில் முதலாவதாக ஒரு தேசிய இதழில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையாகக் கொள்ளப்பட்டது

2017ம் வருடம் தமிழகத்தில் திண்டுக்கல் காந்தி கிராமிய பல்கலைகத்தில் நடைபெற்ற கருந்தரகிலும் கலந்து சிறப்பித்தவர். அதனோடு மதுரையில் அமைந்திருக்கும் உலகத்தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளின் போதும் எம்முடன் இவரும் பங்கேற்றார்.

70ம் அகவையில் உங்களை வாழ்த்தும் வயது பக்குவம் எனக்கில்லை ஆனாலும் தந்தையாக, தமையனாக, தோழனாக உங்கள் நட்பு என்னை வழிப்படுத்தியதில் பேரிடம் பெறுகிறது.

அ.லெட்சுமணன். அமைப்பாளர்,
நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்.

தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணிபுரிந்த மர்ஹூம் எம். கே. எம். அபூபக்கர்

தினகரன் பத்திரிகையில் சுமார் 21 வருடங்கள் உதவி ஆசிரியராக சிறப்பாக பணியாற்றி, தனது எழுத்தின் மூலம் கொடி கட்டிப் பறந்தவர் எம். கே. எம். அபூபக்கர்.

தமிழகத்தின் மதுரையில் பெரும் புலவராக விளங்கிய காதிறு முஹியத்தீன் மரைக்காயரின் சிரேஷ்ட புதல்வராக 16/07/1914 அன்று மதுரை நகரில் பிறந்த அபூபக்கர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை முடித்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பீ. ஏ. பட்டம் பெற்றார்.

இலங்கை வந்த அபூபக்கர் பாகிஸ்தான் தூதரகத்தில் 1947ஆம் ஆண்டில் வெளிநாட்டு தகவல் ஆலோசகராக பணி புரிந்தார்.

எழுத்திலும் பேச்சிலும் அதிக ஈடுபாடு காட்டிய அவர் 1953 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டார். இப் பணியை அவர் மிகவும் நேசித்தார். ஜனரஞ்சக பத்திரிகையில் இணைந்து பணியாற்றியதனால் அவரும் வாசகர் மத்தியில் மிகவும் ஜனரஞ்சகமானார். அவரது ஆக்கங்களுக்கு வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பிருந்தது. "தினகரன் அபூபக்கர்" என்ற அடைமொழியுடனே இவர் அழைக்கப்பட்டார்.

இவரது எழுத்துகள் மிகவும் உயிரோட்டமானவை. அதனால் பல்லாயிரம் வாசகர்களை இவர் ஈர்த்தெடுத்ததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. இவர் மேடைப் பேச்சுக்களிலும் தனி முத்திரை பதித்தார். சுமார் 21 வருடங்கள் தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணியாற்றி 1974 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

பெரும் புலவராக இன்றும் இலக்கிய உலகில் பேசப்படும் காதிறு முஹியத்தீன் மரைக்காயரின் புதல்வராக விளங்கியதால் கவிதைகளிலும் அபூபக்கர் சிறப்புற்று விளங்கினார்.

எப்போதும் மற்றவர்களினது நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த இவர் பல்வேறு சமூக அமைப்புகளுடன் இணைந்து சமூக சேவைகள் செய்யத் தவறவில்லை .

வை. எம். எம். ஏ. பேரவையின் அமைப்பாளராகவும், கொழும்பு தமிழ்ச் சங்கம், அகில இலங்கை முஸ்லிம் லீக், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு போன்ற அமைப்புகளில் உறுப்பினராகவும் இணைந்து அரும் பணியாற்றினார். இலங்கை கலைக் கழகம், சாஹித்திய மண்டலம் ஆகியவற்றிலும் பங்கேற்று பெரும் பணி செய்துள்ளார்.

கொழும்பு சாஹிரா கல்லூரி நல உரிமை அமைப்பின் நிர்வாக உறுப்பினராகவும், கொழும்பு பாத்திமா கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்க உப தலைவராகவும் விளங்கினார்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஆலோசனைக் குழுவிலும், கலைஞர் தேர்வுக் குழுவிலும் பணியாற்றி முஸ்லிம் சேவையின் முன்னேற்றத்திற்கு பங்காற்றியுள்ளார். முஸ்லிம் சேவையின் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ள அவர், பல உரைகளையும் நிகழ்த்தியுள்ளார்.

என். நஜ்முல் ஹுசைன்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 06 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 பெப்ரவரி 06 ஞாயிற்றுக்கிழமை

Makeup Cosmetics Business Queen

Kaushi Raj

கென்னடி கொலை இன்றுவரை அழிக்கப்படாத முடிச்சுகள்

அமெரிக்க வரலாற்றில் அரை நூற்றாண்டு கடந்து இன்று வரை பெரும் மர்மமாக இருப்பது ஜோன் எப். கென்னடியின் கொலை விவகாரம் தான். இத்தனைக்கும் அமெரிக்க ஜனாதிபதி. 1963 நவம்பர் 22 ஆம் திகதி அவர் ஆயிரக்கணக்கானவர்கள் பார்த்திருக்க சுட்டுக் கொல்லப்பட்டார். மூன்று குண்டுகள் பாய்ந்தன. அவரது தலையிலும், கழுத்திலும் பலத்த காயம் ஏற்பட்டு அரை மணி நேரத்தில் உயிரிழந்தார்.

சூடு நடத்திய லீ ஹார்வி ஒஸ்வால்ட் என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் ஒரு முன்னாள் கடற்படை வீரர். இரண்டு நாள் சிறையில் இருந்த ஒஸ்வால்ட் நீதிமன்ற விசாரணைக்காக நவம்பர் 24 ஆம் திகதி அழைத்து வரப்பட்டபோது பெரும் திருப்பம் நிகழ்ந்தது. கூட்டத்தின் நடுவே இருந்த ஜக் ரூபி என்பவர் ஒஸ்வால்டை சுட்டுக் கொன்றுவிட்டார். ரூபி விடுதி ஒன்றின் உரிமையாளர். அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று அப்போது கூறப்பட்டது. ஆனால் இந்தக் கதையின் பல இடங்களில், 'எங்கேயோ இடிக்கிறதே' என்பது போன்ற பல மர்மங்கள் பொதிந்திருந்தன. ரூபி 1967 இல் நுரையீரல் புற்றுநோயால் உயிரிழந்துவிட்டார்.

பொதுவான கூற்றுப்படி பார்க்கப்போனால் கென்னடியை, ஒஸ்வால்ட் கொன்றதாக இருக்கட்டும் பின்னர்

ஒஸ்வால்டை ரூபி கொன்றதாக இருக்கட்டும் எல்லாம் தனிப்பட்ட விவகாரம் என்று வழக்கு முடிக்கப்பட்டது. வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட ஹவாரன் ஆணைக்குழு இதுவரை எந்தத் துல்லியமான முடிவையும் வெளியிடவில்லை. மாபியா கும்பல்களின் தலையீடு, பிடல் காஸ்ட்ரோவின் சதி, கம்யூனிஸ்ட்களின் வஞ்சகம், அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ வின் வெறுப்பு என்பது வரை பல கோணங்களில் சந்தேகங்களையும், விவாதங்களையும் எழுப்பினார்கள். கென்னடியின் கொலையில் இலுமினாட்டிகளின் சதி உள்ளது என்ற பேச்சும் உள்ளது. இதுவரை பல ஆயிரக்கணக்கான ரகசிய ஆவணங்களை அமெரிக்க அரசு வெளியிட்டுள்ளது. ஆனால் எதிலும் சரியான துக்குப் கிடைக்கவில்லை.

கென்னடி இறந்துவிட்டார் என்பதைத் தவிர, அவர் இறப்பு சார்ந்த அனைத்தும் இன்று வரை மர்மமாகவே உள்ளது.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

புதையல் இருக்கா? இல்லையா?

புதையல் ஒன்று பற்றிய கதை உண்மையா, பொய்யா என்று தெரியவில்லை. ஆனால் கிடைத்தால் ஒரே இரவில் உலகப் பணக்காரராகிவிடலாம். 1952 ஆம் ஆண்டு மேற்குக் கரையில் இருக்கு கும்ரான் என்ற தொல்பொருள் தளத்தில் செப்புச் சுருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதில் நம்ப முடியாத அளவு பெரும் எண்ணிக்கையான தங்கம் மற்றும் வெள்ளி புதையல் ஒன்று பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அளவு தங்கம் இருப்பதற்கு சாத்தியம் இல்லை என்று சில தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மறுக்கிறார்கள். வரலாற்று கதைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தக் கூற்றை முழுமையாக மறுக்கவும் முடியவில்லை. இந்த செப்புச் சுருள் 1,900 ஆண்டுகளுக்கு முந்தையது. அப்போது கும்ரான் பகுதி ரோம பேரரசின் கீழ் இருந்தது. ஆனால் ரோமானிய ஆட்சிக்கு எதிராக அங்கே அடிக்கடி கிளர்ச்சிகள் வெடித்தன. சரியாக அந்தக் கிளர்ச்சி வெடித்த காலத்தில் இந்த செப்புச் சுருள் எழுதப் பட்டிருப்பதால், ரோமப் படைகளை கைப்பற்றுவதை தடுக்கும் முயற்சியாக இந்தப் பொக்கிஷங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்களிடையே சந்தேகங்களும் உண்டு.

உண்மையில் இந்தப் புதையல் இருந்திருந்தால் அதனை எங்கு மறைத்து வைத்திருப்பார்கள், அதனை யாராவது கண்டுபிடித்திருப்பார்களா, இன்னும் இருக்கக் கூடுமா என்ற மர்மங்களை இன்றும் கூட விடுவிக்க முடியாதுள்ளது.

கிளியோபாட்ரா கல்லறை எங்கே?

உலகப் பேரழகியாக வர்ணிக்கப்படும் கிளியோபாட்ராவின் கல்லறை எங்குள்ளது என்ற மர்மத்தை இன்றும் கூட விடுவிக்க முடியாமல் இருக்கிறது. இத்தனைக்கும் அவரது கல்லறை பற்றி அப்போதை வரலாற்றாசிரியர்கள் விலாவரியாக விபரித்தும் அது எங்கே என்று தெரியவில்லை என்பது தான் பெரும் கவலை.

கி.மு. 30 இல் உயிரிழந்த கிளியோபாட்ரா மற்றும் அவரது காதலன் மார்க் அன்டனி கல்லறை ஒன்றில் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்டதாக கி.பி. 45 தொடக்கம் 120 வரை வாழ்ந்த புளூட்டர்ச் என்ற வரலாற்றாசிரியர் எழுதுகிறார். எகிப்து பெண் கடவுளான ஐசிஸ் கோவில் ஒன்றுக்கு அருகில் அந்தக் கல்லறை அமைந்திருக்கிறதாம். அது உயரமான மற்றும் அழகான கல்லறையாகவும் தங்கம், வெள்ளி, மரகதம், முத்து, கருங்காலி மற்றும் தந்தம் ஆகிய பொக்கிஷங்களை கொண்டிருப்பதாகவும் அந்த வரலாற்றாசிரியர் தெளிவாகக் கூறி இருக்கிறார்.

என்றாலும் அந்தக் கல்லறை இருக்கும் இடம் மர்மமாகவே உள்ளது. 2010இல், எகிப்தின் முன்னாள் தொல்பொருள் அமைச்சர் சாஹி ஹவாஸ், அலெக்சான்ட்ரியா நகருக்கு அருகில் அகழ்வாராய்ச்சி ஒன்றை நடத்தினார். அங்கே தான் கிளியோபாட்ரா ஆட்சி புரிந்த காலத்தைச் சேர்ந்த கல்லறைகள் இருந்தன. அப்போது பல முக்கிய தொல்பொருள் கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டபோது கிளியோபாட்ராவின் கல்லறை மட்டும் கிடைக்கவில்லை.

இன்றும் கூட கிளியோபாட்ராவின் கல்லறை தப்பி இருந்தாலும், கொள்ளையடிக்கப்பட்டு அடையாளம் காண முடியாத நிலையிலேயே இருக்கும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அதிசய சிறுமி

2009 ஜுன் 30 ஆம் திகதி கெரோஸின் கிரன்டே தீவுக்கு அருகில் யெமனிய விமானம் விழுந்து விபத்துக்குள்ளானபோது அதில் இருந்த 152 பேர் கொல்லப்பட்டார்கள். ஆனால் 12 வயதான பிரான்ஸ் சிறுமி பஹி பக்காரி மாத்திரம் உயிர் தப்பினார். விமானத்தில் இருந்து மாத்திரமல்ல அந்த சிறுமி கடலில் மூழ்காமலும் உயிர் தப்பிக்கொண்டார். விமானத்தின் பாகத்தை பிடித்துக் கொண்டு ஒன்பது மணி நேரம் கடலில் மிதந்த அவர் கடைசியில் காப்பாற்றப்பட்டார்.

சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின்

கலாவிபூஷண விருது பெறுவோர்

BMICH இல்
12.03.2022
விருது வழங்கும்
விழா

Gerald Nadesan

Marlin Marikkar

Subashini

Rajapadcham Srirangapadcham

சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் 2022.02.12 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தும் கலாவிபூஷண விருது வழங்கும் விழாவில் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூகசேவையாளர்கள் பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் ஊடக அனுசரணையில் நடைபெறும் இதில், தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் அதிதியாக கலந்துகொள்வார். சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் தலைவர் துரைராசா சுரேஷ் இதற்கான ஏற்பாடுளை செய்து வருகிறார்.

Director Thurairasa Suresh

Arunthathy Sri Ranganathan

k. Easwaralingam

S. Vijayraj

Mookiah Vasudevan

Abubaitha Mowjooth

Krishanthi Pathmanathan

Maheswary Vijayanathan

Subramaniyam Saravana

Nitharasana Nadarajah

Yogaraja Kajendra

Mohamed Shiraj

Mohamed Jasair

Munusamy Balasubramaniam

S. Lenuja

Ramar Suganya

Renusahana Sathees

K. Kawshalya

J. Induja

Senon Angel Sureskumar

Kumara Velu Pavithra

Srikanth Kavishka

Dilusha Amirthalingam

Benadic Magret

Ganandran Viveka

Rila

S.W. Kanarathnam

R. Shanmugaraja Swamyji

Jeevitha Anantharasa

Gokulanath

Krishnapillai Gunabalan

Kailanathan Thilanathan

Thavarasa

Yogarasha Mohathasan

Balan Suthakaran

மலரால்

முல்லை முஸ்ரிபா

அடிச்சி,ஊதா நிறச் செம்பருத்தி

அடிச்சி என்ற பெயர் உலக நவீன எழுத்தில் ஒர் அடையாளம்.

ஊதா நிறச் செம்பருத்தி என்ற நாவலெழுத்தின் சொந்தக்காரி சி மாமந்தா கோஸி அடிச்சி என்ற நைஜீரிய பெண் எழுத்தாளர். வாழ்க்கை தந்த அனுபவமும்,வாசிப்புத் தந்த உணர்வுக் கோலமும் அடிச்சியின் பேனாவைத் திசை கொள்ளச் செய்தது.அவள் எழுதியவை முக்கியமானவை

ஊதா நிறச் செம்பருத்தி என பிரேம் மொழி பெயர்த்து அணங்கு பதிப்பித்த நாவல் PurpleHibiscus தான் அடிச்சியின் முதல் நாவலெழுத்து.'Half of a Yellow Sun', 'Americanah'என்பனவும் அடிச்சியை மேலெழச் செய்த நாவல்களாகும். தனது 19 ஆவது வயதில் அமெரிக்கக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடு நிறப்பிரிவினையை மையப்படுத்தி அடிச்சி எழுதியதே 'அமெரிக்கானா'.

"உன் கழுத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது" வடகரை ரவிச்சந்திரன் மொழிபெயர்த்து பாரதி புத்தகாலயம் வெளியிட்ட சிறுகதைத்தொகுப்பு. The Thing Around Your Neck .

அடிச்சி We should all be Feminist, Dear Ijeawela or A Feminist Menifesto in fifteenSuggestions ஆகிய கட்டுரைப் பிரதிகளையும் தந்தவர். "நாம் அனைவரும் பெண்ணிலை வாதியாக இருக்க வேண்டும்" என்பது பிரேம் தமிழுக்குத் தந்தது.

அடிச்சியின் எழுத்துக்கள் நைஜீரிய எழுத்துப்பரப்பில் உயிர்ப்புடன் பேசப்படுகின்றன.



நைஜிரியாவின் அனாம்ரா மாநிலத்தில் அப்பா கிராமம்தான் அடிச்சியின் பூர்விகம். இவர் எருகு நகரத்தில் இக்போ குடும்பத்தில் 1977,ல் பிறந்தவர். பத்தாவது வயதிலேயே வாசிப்புத் தொடங்கியவர். சினுவா அச்பேயின் 'Things Fall Apart'நாவலில் வரும் கதாநாயகியாக உலாவினாள். அச்பேயும் புச்சி எமசேடாவும் தான் அடிச்சியின் ஆதர்ஷ எழுத்து வழிகாட்டிகளாயினர்.

பெண்ணிலைச் சிந்தனையும்,மானுட நேசிப்பும் நிரம்பப் பெற்ற அடிச்சி அனுபவங்களில் கட்டமைத்த எழுத்தாளுமை. ஓவியம் வரைவதில் ஆர்வம் காட்டிய இவரது சிறுகால ஓவியங்களில் பனிபடர்ந்திருப்பதைக் கூர்ந்து அவதானிக்கிறார். நைஜிரியாவில் எந்த பருவகாலத்திலும் பனி இல்லை. ஆனால்,நைஜீரியக்காரியின் சித்திரங்களில் எப்படி பனி படிந்தது. இது அடிச்சியின் சிந்தனைக்குச் சாவி கொடுத்தது. பனி படரும் ஐரோப்பிய கல்வி,கலாசார,பண்பாட்டு ஆதிக்கத்தின் வெளிப்பாடே இது. ஐரோப்பிய மனம் எவ்வாறு திளைக்கிறது. ஐரோப்பிய கல்வி சார்ந்த கல்விப் பாடங்களாலும் தொலைக்காட்சியில் கண்ட ஐரோப்பிய தாக்கம் கொண்ட காட்டுன்களாலும் சிறுவயதில் தாக்கமுற்றவள் அடிச்சி. ஆபிரிக்காவின் உட்பகுதிவரை கல்வி மற்றும் ஊடகம் மூலம் ஐரோப்பிய தாக்கம் பரவியிருந்தது.

அடிச்சி என்ற குழந்தை மனநிலையை இது கட்டமைத்தது. அடிச்சியின் ஓவியங்களில் பனிபடர்ந்த சித்திரிப்பு ஒரு குறியீடாகும்.. அடிச்சி வாசிக்கப்பட வேண்டிய நவீன எழுத்தின் உயிர்ப்பு. அவரது 'The Danger of aSingle Story', 'We should all feminist'ஆகிய உரைகள் எட்டு மில்லியன் பார்வையாளர்களை எட்டியதில் வியப்பில்லை.அடிச்சி கறுப்பு தேசத்தின் மஞ்சள் சூரியன்.

வடந்தை

வடந்தை வந்திருக்கிறது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த வெளியீடாக வடந்தை 3 வந்திருக்கிறது.

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களச் செயற்பாட்டின் அடைவுகளின் குறிகாட்டியாக வடந்தை 2021 வந்திருக்கிறது. வடமாகாண பிரதிப் பணிப்பாளர் சுஜீவா சிவதாஸ் வெளியீட்டுரை வரைகிறார். வடக்கு மாகாண செயலாளர் இளங்கோவன் வாழ்த்துரை எழுதுகிறார்.

உள்ளடங்கலாகக் கட்டுரைகள் இடங்கொள்கின்றன. கலை,மரபுரிமை,பண்பாடு,ஆவணவாக்கம்,கிராமியப்பாடல்,நடனம், இசை,மொழிபெயர்ப்பு என விரிந்த பொருளடக்கம் காணப்படுகிறது.

2021ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது,இளங்கலைஞர் விருது,சிறந்த நூலுக்கான விருது பெறுவோர் விபரம் எனப் பதிவுகள் வருகின்றன. வடந்தை வடமாகாணத்துக்குரிய வருடாந்த கலை,இலக்கிய ஆவணம் என்ற வகையில் மேலும் விரிவானதாக இதனை நோக்க வேண்டியுள்ளது.

ஐந்து மாவட்டங்களினது அவற்றின் உள் பிரதேசங்களினது கலை,இலக்கிய,திறனாய்வு,ஆய்வு நோக்கிலான பரந்த உள்ளடக்கம் உட்கொள்ளப்படுவது அவசியமாகும். குறித்த மாவட்டங்களில் பிரதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட நிறுவனம் சார்ந்ததும்,தனியாள் சார்ந்ததுமான கலை,இலக்கிய வெளி அவதானம் பெற வேண்டும். அவ்வாறாகும்போது பொது நிலைப்பட்ட வடந்தை வடக்கு முழுவதுக்குமான வருடம் முழுவதுக்குமான ஆவணமாக உயர்ந்து நிற்கும்.

இன்னொரு பக்கம் பல்லின மத சமூகங்களின் கலை,இலக்கியம்,பண்பாட்டு உள்ளடக்கமும் சேரும்போது தமிழ்மொழி பெற்றுயரும் கனதியை அடையாளப்படுத்தவும் முடியும். வடந்தை 4 வரும்போது இத்தகைய விடுபடலற்ற – சேர்மானங்கள் உடனான உள்ளடக்கத்தைக் காண வேண்டுமென்பது வாசக நிலை அவாவாகும்.

'பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்றுக்கொண்ட பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய ஒரு முழுத் தொகுதி'' டெய்லரிங் இக்கூற்றை மேற்கோட்படுத்தி 'வடந்தை செயற்பாடுகள் யாவும் பண்பாட்டில் அங்கம் வகிக்கும் அல்லது செல்வாக்குச் செலுத்தும் என்றும் அது கட்டற்ற எல்லைகளற்ற தன்மை கொண்டிருக்கும் என்றும் தெளிவாகிறது' என்ற இளங்கோவனின் கூற்று நோக்கத்தக்கது. அவரே கூறுவது போல பண்பாட்டுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் கட்டுக்கடங்காத விடயப்பரப்புகளுடன் தொடர்புற்றிருப்பதுடன் அவை ஏனைய துறைகளுடனும் கொண்டிருக்கக்கூடிய பல்வேறு விதமான உள்ளார்ந்தமான தொடர்புகளைக் கவனத்தில் எடுத்து செயற்படுத்த வேண்டியதொன்றாகக் காணப்படுகிறது. வடந்தை மேலும் செழுமையுற வரட்டும்.

ஔவன் கவிதை

வீடு அல்லது துறவு
ஓவியங்களில் உயிர்க்கிற தூரிகையில்
படிகிறது காலத்தின் சாயல்
நிலவின் மீதும் நீண்டடர்ந்த நிழலின் மீதும்
நிசியின் மீதும் நினைவுகள் தோறும்
பெரும் அமைதியின் கடுஞ்சினம்
நேற்றும் வரைந்திட முடியா
நூற்றோராவது ஓவியத்தில்
தேங்கிக் கிடந்தது சிறுதுளி
ரத்தம் வியர்வை சீழ்பை
மிஞ்சிய மிடர் தாகம்
தாகத்தின் உறை நிலை
உணர்வற்ற ஆதி நிலை
வரையத் தொடங்கிற்றுத் தூரிகை
ஆத்திரம் பொங்கி வழிந்திற்று
ஒவ்வொன்றும் ஒவ்வொரு
நிறமெடுத்து ஓவியத்தில் பரந்திற்று
பிரிக்க முடியவொண்ணா காலத்தின் கலவை
மனசுள் நொருங்கிக் கிடந்த
உணர்வின் துண்டுகளை
பொருத்திய வண்ணம்
வீடு செய்ய அல்லது துறவு செய்ய
முயல்கிறதென் தூரிகை

மெய்நிகர் இலக்கியவெளி

இலக்கியச் செயற்பாடென்பது மானுட வாழ்வியலோடு ஒன்றிய பிரித்து நோக்கவியலாத கால நிர்ப்பந்தங்களுக்குள் உள் நுழைந்து அலைகிற அல்லது எழுகிற அலைஇயக்கச் செயற்பாடுதான்.

இதனை காலவோட்டத்தில் பல இடங்களில் கண்டிருந்தாலும் இரண்டாயிரத்து இருபதிலிருந்து உலகம் புதுவகையில் கண்டது.

கொவிட்19 உலக இயக்கப்பாட்டை ஸ்தம்பிக்கச் செய்தது. எனினும் இலக்கியச் செயற்பாட்டில் அல்லது படைப்பு வெளியில் புதிய பேசு பொருளை நிறுவியது. அபயமளிக்கப்பட்ட நான்கு சுவருக்குள் இருந்து படைப்புவெளி அகலித்தது. கவிதையில்,சிறுகதையில் என்றெல்லாம் கொவிட் உட்பொருள் கொண்டது.மறுபுறம் இலக்கியச் செயற்பாட்டு வெளியாக Zoomஎனப்பட்ட மெய்நிகர் வழி அகலித்தது. நூல் வெளியீடுகள்,கலந்துரையாடல்கள்,திறனாய்வுகள்,நினைவரங்குகள்,போட்டிகள், விருது வழங்கல்கள்,மாநாடுகள் என கடந்த இரண்டு வருடங்கள் இடம் தகர்த்த ஒற்றை வெளியில் சேய்மைகளை அண்மைப்படுத்தி விட்டது.

இந்த வாய்ப்பு இலக்கியச் செயற்பாடுகளை உறைய விடாமல் தொடரறாமல் நிகழ்ந்திடப் பெரிதும் உதவியது என்ற வகையில் மெய்நிகர் இலக்கியச் செயற்பாட்டு வெளி கொவிட் கடந்தும் நிலைபெற்ற ஒன்றாகவே மாறிவிட்டது எனலாம்.

கவிதை; புலர்வின் மீதான காதல்

'புலர்வின் காலையொளிர்வில் மறையுமோ புயலின் பயங்கர முகம்'' எனப் பாடினார் பாரசீகக் கவி நிமா யூஜிஸ்.

கவிதை இருளின் பயங்கர முகத்தின் மீது ஒளிர்வையெழுதும் ஒரு புலர்வு தான். மக்கள் மீதான காதலைப் பெய்யும் ஒரு முடிவற்ற பயணம்தான்.

மக்கள் வாழும் உலகைச் சூழ்ந்து இருள் இருக்கிறது. அது அநாதரவின் இருள்; அபகரிப்பின் இருள்; இருள் பல கட்டுமானங்களாலானது. இந்தக் கட்டுமான இருள் மீது ஒளி பாய்ச்சும் சக்தியாகக் கவிதை எனும் புலர்வின் ஒளி இருக்கிறது. இந்த இருளின் விரட்டியாகக் கவிஞன் இருக்கிறான். கவிமனமென்பது அழகியல் சார்ந்ததோ மொழியின் செழுமை சார்ந்ததோ மட்டுமல்ல. அதனையும் தாண்டிய மனுக்குலத்தைச் சூழும் இருளை விரட்டும் தர்க்க மனமும்தான். அதனால்தான் கவிதை 'துன்புற்ற மக்கள் மீதான முடிவற்ற காதல்'' என்கிறார் பலஸ்தீனக் கவிஞர் தௌஃபீக் சையத்.

எல்லா மொழிகளிலும் கவி சொல்லியாக வருபவர்கள் தனிமனிதர்களாக அல்லாமல் சமூகத்துக்கான கூட்டு மனிதர்களாக நிற்கிறார்கள்.

அவர்களால் முடிந்தது தமது சொற்களினால் இருட்டைத் தொலைக்க வல்ல சிறு ஒளிச்சுடரை ஏற்றி விடுவதுதான். 'உன் கவிதை வீட்டுக்கு ஒரு விளக்கையேற்றாவிட்டால் அதனை விட்டொழிப்பது மேல்'' என்றார் பலஸ்தீனக்கவி மஃமூத் தர்வீஷ்.

'என்னிடமிருப்பதெல்லாம் அசைக்க முடியாத நம்பிக்கைதான்'' என்று பாடிய தௌஃபீக் சையத் கவிதை பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் மொழிபெயர்ப்பில் வெளிவந்த 'பலஸ்தீனக்கவிதைகள்'' திரட்டில் உள்ளது.

என்னிடம் இருப்பதெல்லாம்
என் தோளில் ஒரு போதும்
நான் துப்பாக்கி சுமந்ததில்லை
அதன் விசையை இழுத்தில்லை
என்னிடம் இருப்பதெல்லாம்
ஒரு வீணையின் இசைதான்
என் கனவுகளை வரைவதற்கு
ஒரு தூரிகை தான்
ஒரு மைக்குடுவைதான்
என்னிடம் இருப்பதெல்லாம்
அசைக்க முடியாத நம்பிக்கைதான்
துன்புற்ற என் மக்கள் மீதான
ஒரு முடிவற்ற காதல்தான்.

மருத்துவர் : "ஆபரேஷன் முடிந்து நீங்க நடந்தே வீட்டுக்குப் போகலாம்."
நோயாளி : "ஆட்டோவுக்குக் கூடக் காசு இருக்காதா டாக்டர்?"

ஏன் சார் ஜோக் எழுதறேன்று சொல்றீங்க. ஆனா ஒரு ஜோக்குக்கு கூட சிரிப்பே வரலயே?
பிறர் சிரிக்கும் படியான காரியத்தை செய்யாதன்னு எங்க பாட்டி அடிக்கடி சொல்வாங்க.

காதலன் : கண்ணே உனக்காக இமயமலையையும் தாண்டுவேன்.
காதலி : அதுக்காக ஏன் ஒரு காலை நொண்டறீங்க ?
காதலன் : உங்க வீட்டு கேட்டை தாண்டும் போது தடுக்கி விழுந்துட்டேன்.

ஊழியர் 1:நம்ம மேனேஜர் ஆஸ்பத்திரியில சீரியஸா இருக்காராம்
ஊழியர் 2:அவரு ஆபீஸ்லயே சீரியசா தான்டா இருப்பாரு

ஒருவர் பிச்சைகாரரிடம்
நண்பர் : ஏம்பா, ஐந்நூறு ரூபா நோட்டுக்கு சில்லறை இருக்குமா .. .. ?
பிச்சைக்காரன் : நாங்களும் பேப்பர், டி.வி. நியூஸ்யெல்லாம் பார்க்கறவங்கதான் சார் .. .

அம்மா : எதுக்குடா, குளிக்கும்போது முதல் செம்புத் தண்ணீரை கீழே ஊத்தறே?
மகன் : முதல் செம்பு தண்ணீரை ஊத்தும்போதுதான் ரொம்பக் குளிரும்னு நீங்கதானே மம்மி சொல்வீங்க...
அதான் கீழே ஊத்தறேன்...

கஸ்டமர் : ஏம்ப்பா காபி ஆர்டர் பண்ணினா வெறும் கப்பை மட்டும் கொண்டு வந்து வைக்கற?
வெய்டர் : நீங்கதான சார் "கப் கிளீனா" இருக்கணும்னு சொன்னீங்க.

பாக்கி : நேற்று ஏன் லீவு ?
ரமனன் : ஒரு சேஞ்சுக்கு வீட்டிலேயே தூங்கிட்டேன் சார்

இவர் : டாக்டர் ஏன் கோபமா இருக்காரு..?
அவர் : ஆபரேஷன் தியேட்டர் வாசல்ல யாரோ "ஒன்வே'ன்னு எழுதி வச்சுட்டாங்களாம்...

வெறுமனே நாயகி என்றில்லாமல் நடிப்பிற்கு உகந்த கதாபாத்திரங்களை விரும்புகின்றேன்

Makeup Cosmetics Business Queen Kaushi Raj

சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சி வழியாக குறுகிய காலத்திற்குள் எட்டாத துரத்திற்குச் சென்று பிரபல்யமடைந்தவர்கள் மிகவும் சிலரே! அந்த வரிசையில் சக்தி தொலைக் காட்சி நாடகங்களில் நடித்து பிரபல்யமானர்களில் இவரும் ஒருவர். இவரைப் பற்றி அறிய அணுகிபோது அவர் அளித்த விவரங்கள் இதோ....!

உங்களைப் பற்றி கூறுங்களேன்.....!

நான் கௌசிராஜ். நான் பிறந்தது வளர்ந்தது கொழும்பில் தான். ஆனால் அம்மா, அப்பா வெளிநாட்டில் வசிப்பதால் சாதாரண தரம் படிக்கும் போதே வெளிநாட்டிற்குச் சென்று விட்டேன்.

அங்கே சென்று கல்வியைத் தொடர்ந்தீங்களா?

மற்றைய கல்வி செயற்பாடுகளை அங்கே மேற்கொண்டேன்.

இப்ப என்ன செய்றீங்கள்?

மேக்கப் கொஸ்ட்மேற்றிக்ஸ் கடை ஒன்றை சொந்தமாக ஆரம்பித்து நடத்தி வருகின்றேன்.

தற்போது எங்கே இருக்கிறீங்கள்?

2020 ம் ஆண்டு விடுமுறைக்காக நான், அம்மா, தம்பி மட்டும் இலங்கைக்கு வந்திருந்த நிலையில். கொரோனா பிரச்சினையால் விமான நிலையம் பூட்டப்பட்டதால் என்னால் திரும்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது இங்கே தான் இருக்கிறேன்.

கலைத் துறை பிரவேசம் பற்றி கூறுங்களேன்.....!

சினிமா சார்ந்த நண்பர்கள் சிலர் இங்கே இருந்தார்கள். அதைவிட நான் வெளிநாட்டில் வசிக்கும் போதே சஞ்ஜய் யோ எனும் நண்பர் ஒரு முறை என்னை நடிப்பதற்காக கேட்டிருந்தார். அதுமட்டும் இல்லாமல் எனக்கும் ஏதேனும் ஒரு விடயத்தில் முன்னேறிச்செல்ல வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

சில நண்பர்களின் உதவியோடு படைப்புக்களில் தொடர்ச்சியாக பங்கேற்றேன்.

நீங்கள் பங்கேற்ற விடயங்கள் பற்றி கூற முடியுமா?

அமாயா, சன்டே சீரிஸ், உனக்கே உனக்காய், ஒரு கோப்பை காதல், அகலாத நினைவுகளாய், போன்ற படைப்புக்களை தொடர்ந்து நல்ல நல்ல ட்ரஸிங்கில் போட்டோ ஷீட்ஸ் செய்வதில் ஆர்வம் காட்டினேன்.

இவை மட்டுமல்லாமல் இன்னும் சில படைப்புக்களில் நடித்திருக்கின்றேன், விரைவில் அவையும் வெளியாகும்.

நடிப்பைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

நடிப்பு என்பது எனக்கு ஒரு சாதனைக்குரிய விடயம் தான், குறுகிய காலத்தில் பல படைப்புக்களில் பங்கேற்றது எனக்கு பெரும் மகிழ்ச்சியான விடயம்.

நடிப்பு தவிர நீங்கள் ஈடுபட்டுள்ள துறைகள்?

நடிப்பு மட்டுமல்லாமல் இலங்கையில் கொழும்பிலும், குவைத்திலும் சொந்தமாக மேக்கப் காஸ்ட்மேட்டிக்ஸ் பிஸ்னஸ் செய்து வருகின்றேன்.மற்றும் தற்போழுது இலங்கையில் பெண்களுக்கான பியூட்டி பாலர் ஒன்றும் சொந்தமாக நடாத்துகிறேன்.

இந்தத் துறைக்குள் வர உதவியவர்கள்?

நான் டிக்டோக் செய்வதனால் அதுவும் என்னை ஒரு புறம் இந்த துறைக்குள் வருவதற்கு உதவி செய்தது. அதைவிடவும் எனக்கு மிகப்பெரிய ஆதரவளித்தது அம்மா, அப்பா, தம்பி, உறவினர்கள் மற்றும் எனது நண்பன் ஜெனோசன் ஆகியோர்.

குறிப்பாக சில குறும்படங்கள், காணொளிப்பாடல்களில் கொழும்பு, மட்டக்களப்பு, யாழப்பாணம் போன்ற கலைஞர்களோடு சேர்ந்து பணியாற்றியிருந்தேன்.

ஆனால் மொடலிங் என்பது இல்லாமல் நல்ல கதாபாத்திரங்கள் நிறைந்த நடிப்புத் துறையில் எனக்கு ஈடுபாடு அதிகமாக இருக்கின்றது.

அரசாங்கத்தின் சில ஆவணப்படங்கள், விளம்பரப்படங்களிலும். நடித்திருக்கின்றேன்.அது மட்டும் இல்லாமல் சிங்கள மொழியிலும் சில படைப்புகளில் சமீப காலமாக நடித்து வருகிறேன். இலங்கை தமிழ் சினிமாவில் நல்ல முழுநீளத்திரைப்படங்கள் உருவாகி வருகின்றன. எனவே திரைப்படங்களில் நல்ல பாத்திரங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆவல் தற்போது நீடிக்கின்றது.

வெறுமனே கதாநாயகி என்றில்லாமல் நடிப்பிற்கு உகந்த கதாபாத்திரங்களை விரும்புகின்றேன்.

நான் நடித்த இரு பாடல்கள் எனக்கு மிகப்பெரிய அங்கீகாரத்தை தேடிதந்திருக்கின்றன.

“இறகெனும் நினைவுகள்” மற்றும் “அவளதிகாரம்”.

இந்த இரண்டு பாடல்களும் தென்னிந்திய விகடன் சினிமா மற்றும் பிகைண்ட்வூட்ஸ் மீடியாக்களில் பிரபலமாக வெளியிடப்பட்ட படைப்புக்கள். அது மட்டுமல்லாது பிரபல நடிகர் நடிகைகளும் இதன் விளம்பரங்களுக்குத் தங்கள் ஆதரவை கொடுத்திருந்தனர். அந்த வகையில் சில நல்ல படைப்புக்கள் இலங்கையிலிருந்து மற்றைய சினிமா களங்கள் வரை என்னை வெளிப்படுத்த உதவியிருக்கின்றன.

பீப் ப்ரோஸ் என்னும் யூடியுப் சானலில் சில தொடர் நகைச்சுவை வீடியோக்களில் நடித்திருந்தேன். பலர் என்னை ரசிக்கும்படியான குறும்புத்தனம் கொண்ட கதாபாத்திரங்களாக அவை அமைந்திருந்தன. அதோடு தொடர்ச்சியாக பயணிக்க முடியவில்லை. ஆனால் திவி, திவ்யா என்ற நண்பர்கள் அதில் நடிப்பதற்கு பக்கபலமாக இருந்தனர்.

விளம்பர படப்பிடிப்புக்கள், பிராண்ட் அம்பாஸ்டராக சில வணிக மையங்களுக்கு நடிப்பதால் சற்றே இப்போது சம்பளங்களும் கேட்டு நடிக்க தொடங்கியிருக்கிறேன்.

தொடர் சினிமா பயணம் இருக்குமா என்று தெரியவில்லை ஆனால் இங்கு இருக்கும் வரை நல்ல படைப்புகளில் பணியாற்றுவேன்.

கே. ஈஸ்வரலிங்கம்

கலைஞர்களின் கையேடு

வலம்புரி கவிதா வட்டத்தின் பௌர்ணமி கவியரங்கம்

வலம்புரி கவிதா வட்டம் பௌர்ணமி தோறும் நடத்தும் கவியரங்கம் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டையிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறும்.

கலைஞர் ஸ்ரீசங்கர் நினைவு நிகழ்வு

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக கலைஞர் ஸ்ரீ சங்கர் நினைவு நிகழ்வை நடத்தி வருகின்ற கலைஞர் ஸ்ரீ சங்கர் நற்பணி மன்றம் இம்முறையும் எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டையிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் கலைஞர் ஸ்ரீ சங்கர் நினைவு நிகழ்வை நடத்தவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கலைஞர் சண்முகராஜா மேற்கொண்டு வருகிறார். கலைஞர் முனிவர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்.

அன்புடன் வாழ்ந்திட வழி தேடிடு

அன்புடன் அணைக்க
ஆராதித்து வாழ்த்த
இன்பம் ஊட்டி
உறவை வாழ்த்து.

அறிந்து மனிதர்
அறியாத மனிதர்
யாரெல்லாம் உறவு?
கேள்வி வேண்டும்.

விடைகள் தேட
பண்புகள் வேண்டும்.
அதன் வழி நீ
உணர்தல் போதும்.

நெறியாளர் நல்லியல்பு
நாணம் காட்டும்.
நல்ல சமூகம் தந்து
அழகான வாழ்வாக்கும்.

எண்ணம் எல்லாம்
நன்றே ஆக்கும்
மனிதர் காண
முயற்சி வேண்டும்.

அன்புடன் பழகிட
அணைத்திடும் உறவு
தானாக வந்து சேரும்.
மனிதராக நாமிருந்தால்.

முரண் வாழ்க்கை
தானே சேரும்.
விலக்கி விலகி போதல்
உனது நற்பண்பாகும்.

கடினம் கடந்து போக
நிதானம் வந்து கூடும்.
வாழ்வு வாழ்வதற்காக
வழிகள் கண்டுபோகும்.

..... அன்புடன் நதுநுசி.

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

ஆர். மதனகோபால், தியத்தலாவ.

கேள்வி: இப்போதெல்லாம் வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்து வருகிறாராமே தளபதி விஜய் ?

பதில்: உண்மைதான்.'மாஸ்டர்'படத்தில் மது அருந்தும் பேராசிரியராக நடித்திருந்தார் என்பதும், 'பீஸ்ட்' படத்தில் அவர் கடத்தல்காரராக நடித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேபோல், தெலுங்கு பட இயக்குனர் வம்சி இயக்கத்தில் தயாராகும் 'தளபதி 66' படத்தில் நடிக்கவும் ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்தப் படத்தில் விஜய்' ஏரோட்டோமேனியா' என்ற மனநோய் பாதித்த வேடத்தில் நடிக்கவிருப்பதாக படக் குழுவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

எம்.மலர் ராணி, கொழும்பு 13.

கேள்வி: முன்பு அறிவித்த திகதியில் சூர்யாவின் 'எதற்கும் துணிந்தவன்' படம் வராதாமே..?

பதில்: ஆமாம்.. தற்போது கொரோன பரவல் காரணமாகவும், படமாளிகைகளில் 50 சதவீத இருக்கைகளுக்கு மட்டுமே அனுமதி அளித்திருப்பதாலும் சூரியாவின் நடிப்பில் தயாரான 'எதற்கும் துணிந்தவன்' ஏற்கனவே குறிப்பிட்ட திகதியில் வெளியாகாது என்று அறிவித்திருக்கிறார்கள். இம்மாத இறுதியிலோ அல்லது வேறு திகதியிலோ வெளிவரக்கூடுமென்று தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. சூரியாவின் படங்களான 'ஜெய் பீம்' 'சூரரைப் போற்று' ஆகியவை டிஜிட்டல் தளத்தில் வெளியாகி வெற்றி பெற்றதைப் போல், 'எதற்கும் துணிந்தவன்' படமும் சன் நெக்ஸ்ட் டிஜிட்டல் தளத்தில் வெளியாகக் கூடுமென்ற தகவலும் உலா வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.மாகிரட். எலபடகம.

கேள்வி: நடிகர் ஜீவா வுடன் 'சீறு' படத்தில் நாயகியாக நடித்த ரியா சுமன்.. இப்போது வேறு ஏதாவது படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறாரா.. அல்லது கடையை மூடி விட்டு போய் விட்டாரா?

பதில்: இல்லை...இல்லை...அவர் இன்னும் கடையை திறந்துதான் வைத்திருக்கிறார். தற்போது சந்தானம் நாயகனாக நடிக்கும் 'ஏஜென்ட் கண்ணாயிரம்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்து வருகிறார். இப்படத்தை தவிர்த்து வெங்கட் பிரபு இயக்கத்தில் தயாராகி வரும் 'மன்மத லீலை' படத்திலும் நடிகர் அசோக் செல்வனுக்கு ஜோடியாக ரியா சுமன் நடித்து வருகிறார்.

எஸ்.எம்.வசீர். கல்முனை.

கேள்வி: திருமணமாகி நான்கு ஆண்டுகள் இல்லற வாழ்க்கை நடத்திய சமந்தாவின் தாம்பத்திய வாழ்க்கை முற்றுப் பெற்றதற்கு என்ன காரணம் ?

பதில்: சமந்தா சொல்வதைத் கொஞ்சம் கேளுங்களேன்.

"பிரசவம் என்பது இந்த உலகில் மிகவும் வேதனையான அனுபவங்களில் ஒன்று. பெண்கள் தங்களது குழந்தைகளை பெற்றெடுக்கும் போது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வேதனையான வலியுடன் கூடிய இந்த பிரசவத்திற்கு மாற்று வலி இல்லை" என்று பிரசவம் குறித்து தனது கருத்தை தெரிவித்திருக்கிறார் நடிகை சமந்தா. திருமணமாகி நான்கு ஆண்டுகள் இல்லற வாழ்க்கை நடத்திய சமந்தா, குழந்தை பிறப்பு குறித்து இது போன்ற கருத்தைத் தெரிவித்திருப்பதால், அவர் கணவரை விட்டுப் பிரிவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்குமோ! என இணையவாதிகள் விமர்சித்திருக்கிறார்கள்.

சமந்தா தற்போது 'யசோதா' என்ற படத்தில் தாதியர் வேடத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது!

என்.மாதவன், முகத்துவாரம்.

கே : அந்தக் காலத்து நடிகைகளுக்கும், இந்தக் காலத்து நடிகைகளுக்கும் என்ன வித்தியாசம் ?

பதில்: அந்தக் காலத்து நடிகைகள் நடித்துக் காட்டினார்கள்; இந்தக் காலத்து நடிகைகள் காட்டி நடிக்கிறார்கள்!

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

துல்கர் சல்மான் - காஜல் அகர்வாலின் தோழி பாடல்

பிரபல நடன இயக்குனர் பிருந்தா இயக்கத்தில் உருவாகி வரும் 'ஹே சினாமிகா' படத்தில் இடம் பெறும் தோழி என்ற பாடலின் லிரிக்கல் வீடியோ வெளியாகியுள்ளது.

எண்ணற்ற திரைப்பட பாடல்களுக்கு திறம்பட நடனம் அமைத்து திரையுலகில் தனக்கென தனி இடம் பிடித்துள்ள பிருந்தா 'மாஸ்டர்', 'ஹே சினாமிகா' படத்தின் மூலம் முதல்முறையாக இயக்குனராகியுள்ளார்.

ஜியோ ஸ்டுடியோஸ் தயாரிக்கும் இப்படத்தில், துல்கார் சல்மான், அதிதி ராவ் மற்றும் காஜல் அகர்வால் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். இதில் துல்கர் சல்மான் மற்றும் காஜல் அகர்வால் பங்கு பெறும் நட்பைக் கொண்டாடும் 'தோழி' பாடல் மிகவும் அழகாக உருவாகியுள்ளது.

மதன் கார்க்கியின் வரிகளில், கோவிந்த் வசந்தாவின் இசையமைப்பில், பிரதீப் குமாரின் குரலுடன் உருவாகியுள்ள இந்த பாடலின் லிரிக்கல் வீடியோ தற்போது வெளியாகியுள்ளது. இது ரசிகர்களிடையே சமூக வலைத்தளத்தில் கவனம் பெற்று வருகிறது. ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் குளோபல் ஒன் ஸ்டுடியோஸ் தயாரித்து வழங்கும் 'ஹே சினாமிகா' திரைப்படம் பெப்ரவரி 25ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

அஜித் படத்தில் இணையும் பிரபல நடிகர்

வலிமை படத்தை தொடர்ந்து, அஜித் நடிப்பில் உருவாகஇருக்கும் புதிய படத்தில் பிரபல நடிகர் இணைய இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அஜித் நடிப்பில் எச்.வினோத் இயக்கத்தில் வெளிவர காத்திருக்கும் திரைப்படம் 'வலிமை'. போனி கபூர் தயாரித்துள்ள இப்படத்தில் ஹுமா குரேஷி, கார்த்திகேயா மற்றும் பலர் நடித்துள்ளனர். இப்படம் கொரோனா பரவலால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் புதிய படம் மூலம் மீண்டும் இணைந்திருக்கிறார்கள். இந்த படத்தின் ஆரம்பகட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்படத்தில் நடிகை தபு நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியானது.

இந்நிலையில், முக்கிய கதாபாத்திரத்தில் பிரகாஷ் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஏற்கனவே அஜித் நடித்த ஆசை மற்றும் பரமசிவன் படங்களில் பிரகாஷ்ராஜ் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜீன்ஸ் T-Shirt ல் கலக்கும் குஷ்பு

நடிகை குஷ்பு தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ள புகைப்படங்கள் இணையத்தில் வேகமாக வைரலாகி வருகிறது.

நடிகை குஷ்பு 90களில் தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர். இவர் பெயரில் கோவில் கட்டும் அளவிற்கு ஏராளமான ரசிகர்கள் பட்டாளத்தை கொண்டவர். வெள்ளித்திரை மற்றும் சின்னத்திரையில் கொடிகட்டி பறந்ததை போல தற்போது அரசியலிலும் படு பிசியாக செயல்பட்டு வருகிறார் குஷ்பு.

இவர் கடந்த சில மாதங்களாகவே தனது உடல் எடையை குறைக்க தீவிரமான பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தார். இவரது முயற்சிக்கு பலனாக படு மாடலான லுக்கில் இன்றைய கதாநாயகிகளுக்கு சவால் விடும் அளவிற்கு இளமையான தோற்றத்திற்கு சமீபத்தில் மாறினார்.

அதன்பின் தனது சமூக வலைத்தள பக்கத்தில் அடிக்கடி புகைப்படங்களை பதிவிட்டு வருகிறார். தற்போது ஜீன்ஸ், டி.ஷர்ட் அணிந்து இருக்கும் புகைப்படங்களை பதிவு செய்திருக்கிறார். இந்த புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

விஜய் ஆண்டனிக்கு ஜோடியாக 3 கதாநாயகிகள்

தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமாகி, தற்போது நடிகராக வலம் வந்து கொண்டிருக்கும் விஜய் ஆண்டனியின் அடுத்த படத்தில் 3 கதாநாயகிகள் நடிக்கிறார்கள்.

தமிழ்படம்' மூலம் பிரபலமானவர், டைரக்டர் அமுதன். இவரது இயக்கத்தில், ஒரு புதிய படம் தயாராகிறது. இந்தப் படத்துக்கு, 'ரத்தம்' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இதில், விஜய் ஆண்டனி கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடிகளாக மகிமா நம்பியார், நந்திதா ஸ்வேதா, ரம்யா நம்பீசன் ஆகிய மூன்று பேரும் நடிக்கிறார்கள்.

அரசியல் திகில் படமாக உருவாகி வரும் இதன் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழுவினர் சமீபத்தில் வெளியிட்டனர். இன்பினிடி பிலிம் வென்சர்ஸ் தயாரித்து வரும் இதன் படப்பிடிப்பு 40 சதவீதம் முடிவடைந்துள்ளது. இதே பட நிறுவனத்துடன் இணைந்து, 'கொலை', 'மழை பிடிக்காத மனிதன்' ஆகிய படங்களிலும் விஜய் ஆண்டனி பணிபுரிகிறார்.

ராஷ்மிகாவின் செயலால் வருத்தமடைந்த ரசிகர்கள்

தமிழ், தெலுங்கு மொழி படங்களில் நடித்து பிரபல நடிகையாக வலம் வரும் ராஷ்மிகாவின் செயலால் ரசிகர்கள் வருத்தம் அடைந்திருக்கிறார்கள்.

தமிழில் சுல்தான் படத்தில் கார்த்தி ஜோடியாக நடித்து பிரபலமானவர் ராஷ்மிகா மந்தனா. தெலுங்கு, கன்னட மொழிகளிலும் அதிக படங்களில் நடித்துள்ளார். சமீபத்தில் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியான புஷ்பா படத்தில் நடித்ததன் மூலம் இந்தியா முழுவதும் கவனம் பெற்றார்.

அதேநேரம் ராஷ்மிகாவுக்கு அழகு இருக்கிறது. ஆனால் நல்ல மனது இல்லை என்று ரசிகர்கள் எரிந்து விழும் அளவுக்கு சர்ச்சையிலும் சிக்கியுள்ளார். இதற்கு காரணம் உள்ளது.

சமீபத்தில் ராஷ்மிகா மும்பையில் உள்ள ஒரு ஓட்டலில் இருந்து வெளியே வந்தார். அப்போது ஒரு சிறுமி அவரிடம் எதாவது கொடுங்கள் என்று கேட்கிறாள். அந்த சிறுமியை ராஷ்மிகாவின் பாதுகாவலர்கள் தள்ளிவிட்டனர். ஆனாலும் அந்த குழந்தை ராஷ்மிகாவை நோக்கி கையை நீட்டி பசிக்கிறது சாப்பிட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் ராஷ்மிகா அந்த குழந்தைக்கு எதுவும் கொடுக்காமல் சிரித்துக்கொண்டே சென்று காரில் உட்கார்ந்து விட்டார். இந்த வீடியோ வலைத்தளத்தில் வைரலாகி பலரும் ராஷ்மிகாவின் செயலை சாடி வருகின்றனர். மேலும் பல ரசிகர்கள் அந்த குழந்தைக்கு எதாவது கொடுத்திருக்கிலாம் என்றும் பதிவு செய்து வருத்தமடைந்திருக்கிறார்கள்

இனிய நண்பர் கவிஞர் சொர்ணபாரதியின் "இனிய நந்தவனம்" வெள்ளி விழா மலர் பற்றி ஆய்வு மடல்

எல்லைகள் கடந்த இலக்கிய வனத்தில்.

கடந்த சனவரி 10ஆம் திகதி திருச்சியில் நடைபெற்ற இனிய நந்தவனம் இதழின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். இந்த தீநுண்மிக் காலத்தில் பல நாடுகளில் இருந்தும் பங்கேற்பாளர்கள் வந்து சிறப்பித்த அருமையான நிகழ்வு அது. 25வது ஆண்டு விழாவினையொட்டி ஒரு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. அதை வாங்கி வந்தேன்.

என் வாசிப்பில் அந்த மலர் முழுவதும்

அன்பு நண்பன் நந்தவனம் சந்திரசேகரனின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் ஒவ்வொரு பக்கத்திலும் தெரிகிறது.

புரவலர் ஹாசிம் உமர், எழுத்தாளர் வவுனியூர் உதயணன் படங்களுடன் அழகிய வண்ண முகப்பு அட்டை நம்மை புத்தகத்துக்குள் ஆர்வத்தோடு அழைக்கிறது.

தொடர்ந்து வி.ஜி.சந்தோஷம், ஐயா பழ.நெடுமாறன், முன்னாள் அமைச்சர் ந. நல்லுசாமி முதல் பல அறிஞர்களின் வாழ்த்துக்கள். தமிழருவி வானொலி யேர்மனி, உத்தர்கண்ட் தமிழ்ச் சங்கம், முத்தமிழ் படிப்பகம் மலேசியா, கல்வெட்டு பேசுகிறது எனத் தொடர்ந்து தமிழ் அமைப்புகளின் வாழ்த்துக்கள், படைப்பாளர்களின் வாழ்த்துக்கள் நிரம்பி வழிகின்றன.

வாழ்த்துக்கள் நிறைந்த ஒரு வண்ணமலர் இது.

மிகச்சிறந்த சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல்கள் என ஒவ்வொரு பக்கமும் சிறப்பா உள்ளன. மிக பயனுள்ளதாக எளிதில் புரட்டிச் செல்ல முடியாதபடி நம்மை ஈர்க்கின்ற படைப்புகளாக அனைத்து படைப்புகளும் உள்ளன.

இலங்கைப் புரவலர் புத்தகப் பூங்காவின் அமைப்பாளர் ஹாசிம் உமர், 1100 நூல்களுக்கு மேல் முதல் பிரதி வாங்கிச் சிறப்பு செய்திருப்பவர். 45 நூல்களுக்கு மேல் முதல் நூல் வெளியிட முடியாத படைப்பாளர்களின் நூல்களை தன் சொந்த செலவில் அச்சடித்து வெளியீட்டு விழாவை நடத்தி வருகின்ற தொகையையும் அந்த புத்தகங்களையும் அந்த படைப்பாளர்கள் இடமே வழங்குகின்ற மாபெரும் கொடையாளர்.

வேற்று மொழியைச் சார்ந்தவராக இருந்தாலும் முழுவதும் தமிழ்ப் புரவலராக, தமிழ் ஆர்வலராக, தமிழ்ப் படைப்பாளிகளுக்குத் தஞ்சம் தருபவராக விளங்குகிறார் ஹாசிம் உமர். அவரின் சிறப்பான நேர்காணல். உழைப்பால் உயர்ந்த சக்தி மசாலா உரிமையாளர்கள் நேர்காணல்.

புதுவைப் பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர் என பன்முகத் தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் பேராசிரியர் ராஜ்ஜாவின் நேர்காணல்,

இங்கிலாந்திலிருந்து மாபெரும் தமிழ் இலக்கியப் பணியாற்றிக் கொண்டு, படைப்பாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாக சிறந்த படைப்புக்கான பரிசுகளை ஆண்டுதோறும் வழங்கும் எழுத்தாளர், கவிஞர், நாவலாசிரியர் வவுனியூர் உதயணன் ஆகியோரின் நேர்காணல்கள் நமக்கு உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் மொழி மீதான ஆர்வத்தையும் உருவாக்குகிற காணல்களாக அமைந்துள்ளன.

சன் தவ ராசாவின் சிறுகதையில் இருந்து சுப்ரபாரதி மணியன் வரை 25க்கும் மேற்பட்ட சிறுகதைகள் உள்ளன.

ஈழத்திலிருந்து அயல்நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே இன்று போலியான காரணங்கள் சொல்லி வெளிநாடுகளில் தஞ்சம் கேட்கிற சிலரின் நிலையும் இப்பொழுது அந்நாடுகளில் தவறான ஆவணங்கள் மூலம் உள்ளே நுழைபவர் மீதான நடவடிக்கைகளுமான எதார்த்தங்களை மனம் நோகாமல், மனதை உறுத்தும் அளவிற்கு சொல்லும் சிறுகதை. தொடர்ந்து பல மிகச் சிறந்த சிறுகதைகள் உள்ளன.

இரண்டு அல்லது மூன்று சிறுகதைகள் மட்டுமே கொஞ்சம் நீளமாகவும் வாசிப்பதற்கான ஆர்வத்தைக் குறைப்பதுமாக உள்ளன.

கவிதைகள், புதுக்கவிதைகள், நவீன கவிதைகள், மரபுக் கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் என பல வடிவங்களில் கவிதைகள். சொர்ண பாரதி உள்ளிட்ட ஒரு சிலர் நவீன கவிதைகளை எழுதியுள்ளனர். மிகச்சிறந்த ஆழமான கவிதைகள். யாப்பில் எழுதப்பட்ட ஓரிரு மரபுக் கவிதைகளைத் தவிர மற்ற கவிதைகள் அனைத்தும் பாராட்டுக்குரியவை.

அதுபோலவே கட்டுரைகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. யோ. புரட்சியின் புலமைப்பித்தன் பாடல்கள் பற்றிய கட்டுரை, பாடும்மீன் ஸ்ரீ கந்தராசாவின் கண்ணதாசன் கவிதைகள் குறித்த கட்டுரையில், கண்ணதாசன் திருக்குறள் காமத்துப்பாலை எவ்வாறு காதல் பாடல்களாக மாற்றியிருக்கிறார் என்பதை விளக்குகிறார். ஸ்ரீலட்சுமியின் சமரித கவிதைகள் என்ற புதிய சொல்லாடலில் அவலச் சுவை நிறைந்த கவிதைகளை புராணங்களில் இருந்தும் பல்வேறு இலக்கியங்களிலிருந்து ஈழ இலக்கியங்களிலிருந்தும் ஆய்வு செய்திருக்கிறார்.

கவிஞர் தென்றல் சங்க இலக்கியங்களிலிருந்து நவீன காலம் வரையான பாடல்களை ஆராய்ந்து அதில் உள்ள இலக்கியச் சுவையை தந்திருக்கிறார் இதுபோல் பல மிகச்சிறந்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

210 பக்கங்களில் ஒரு பக்கம் கூட வீணாக்காமல் அனைத்துப் பக்கங்களும் படைப்புகளால் நிறைந்துள்ளன. அதே நேரத்தில் ஆர்வம் குன்றாத வகையிலே அத்தனை படைப்புகளும் நம்மை கவர்கிற வகையில் சிறந்த படைப்புகளாகத் தேர்வு செய்து வெளியிட்டிருக்கிறார்.

200 ரூபாய் விலையில் பெரும் இதழ்கள் தரும் பெரியவிளம்பரங்களாலும் பிரபலங்களாலும் நிரப்பப்படுகின்றன மலர்கள் போலன்றி, தமிழக, இந்திய, வெளிநாடுகளில் இருந்தும் படைப்பாளர்கள் பங்கு கொள்ளத்தக்க வகையில் ஒரு சர்வதேச அளவிலான ஒரு சிறப்பு மலராக இந்த மலர் வந்துள்ளது. எழுத்துருக்கள் மிகச்சிறிய அளவில் உள்ளன. கொஞ்சம் பெரிய எழுத்தாகப் போட்டிருந்தால் படிப்பதற்கு எளிமையாக வசதியாக இருந்திருக்கும் என்று ஒரே ஒரு விடயத்தைத் தவிர, 2022ஆம் ஆண்டில் ஒரு இலக்கிய பெட்டகமாக இனிய நந்தவனத்தின் 25வது ஆண்டு மலர் விளங்குகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அன்புடன்
சொர்ணபாரதி

> **“ஈழத்திலிருந்து அயல்நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே இன்று போலியான காரணங்கள் சொல்லி வெளிநாடுகளில் தஞ்சம் கேட்கிற சிலரின் நிலையும் இப்பொழுது அந்நாடுகளில் தவறான ஆவணங்கள் மூலம் உள்ளே நுழைபவர் மீதான நடவடிக்கைகளுமான எதார்த்தங்களை மனம் நோகாமல், மனதை உறுத்தும் அளவிற்கு சொல்லும் சிறுகதை. தொடர்ந்து பல மிகச் சிறந்த சிறுகதைகள் உள்ளன.”**

சசிகுமார் – கொட்டாஞ்சேனை

சாரீக் அமீன் – மடவள பசார்

சஷிகலா – மட்டக்குளிய

மூதூர் – இர்ஷாத்

வாபிக் , யூஸுப் – வெலிகம

ரஞ்சனி – மோதரை

சாஜித் ரிஸ்கான் – சம்மாந்துறை



ஷெரீன் – பேலியாகொடை

சதீஷ் குமார் – மட்டக்குளிய

கீழேயுள்ள உருவங்களின் சரியான எண்ணிக்கையை வட்டமிடுங்கள்



தொடர்புபடுத்துங்கள்



வழிகாட்டுங்கள்

5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



உங்களுக்கு தெரியுமா

மனிதர்களின் ரத்தம் சிவப்பு நிறத்தில் இருப்பது உங்களுக்கு தெரியுமல்லவா? ஆனால் நண்டுகளின் இரத்தம் நிறமற்று காணப்படும். நண்டுகள் ஒக்சிஜனை வெளிப்படுத்தும் பொழுது அது நீல நிறமாக மாறும்.

நிறம் தீட்டுங்கள்

1970 களில் பிளாஸ்ரிக் பாவனை பெரிதாக இருக்கவில்லை

20வருடங்களுக்கு மேலாக பழைய பொருட்களை வாங்கி விற்கும் என்டனி ராஜ்

எமது நாட்டில் பலர் பல்வேறு வகையான வணிக முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மீள் சுழற்சி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதும் அவ்வாறான தொழில் முயற்சிகளில் ஒன்றாகும். அவ்வாறான பொருட்களை விற்பனை செய்து வருகின்ற வியாபாரிகளும் எம் மத்தியில் இல்லாமலும் இல்லை.

கொழும்பு சிலாபம் பிரதான வீதியில் நீர்கொழும்பு, கட்டுவ சென். சாலிஸ் கத்தோலிக்க தேவாலயத்திற்கு முன்னால் பழைய பேப்பர்கள், பழைய இரும்புக் கம்பிகள், வெற்றுப் பிளாஸ்டிக் போத்தல்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள் உட்பட பழைய தகரங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து மொத்த விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரி, நான்கு பிள்ளைகளின் தந்தையான 66 வயதுடைய என்டனீ ராஜ் என்பவரை "நான் ரொம்ப பிஸி " பகுதிக்காகச் சந்தித்தேன் .

கேள்வி : நீங்கள் ஏன் இந்த வியாபாரத்தை தேர்ந்து எடுத்துக் கொண்டீர்கள்?

பதில் : நான் கொழும்பு, கொம்பனித் தெரு பிரதேசத்தில் பிறந்தேன். அங்கே எனது அப்பா, அம்மா மற்றும் சகோதரர்களுடனேயே வசித்து வந்தே. பழைய பேப்பர்கள் மற்றும் பழைய புத்தகங்கள் வாங்கி சேகரிப்பு செய்து மொத்த விலைக்கு விற்பனை செய்து வந்த கடையொன்று அப்போது அங்கே இருந்தது. நான் பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்ததும் அந்த கடைக்குச் செல்வேன். அங்கே நான் பழைய பேப்பர்களை மடித்துக் கொடுப்பேன். நான் சிறுவனாக இருப்பதால் கடையின் உரிமையாளர் அந்த வேலைக்கு தினமொன்றுக்கு 40/= ரூபாய் அல்லது 50/= ரூபாய் தருவார். அது எனக்கு அப்போது பெரிய காசு. அந்த ஆவல் எனது மனதில் பதிந்து விட்டது. அதனாலேயே இந்த வியாபாரத்தை நான் ஆரம்பித்தேன் .

கேள்வி : பழைய பேப்பர்களை மடித்துக் கொடுத்து பெற்றுக் கொண்ட அந்த பணத்தை நீங்கள் அப்போது எதற்கு செலவு செய்தீர்கள்?

பதில் : எமது குடும்பம் கஷ்ட நிலையில் இருந்தது. அப்பா மாத்திரமே தொழில் செய்தார். அப்பாவின் வருமானம் வீட்டு செலவுக்கு போதாது. அதனால் நான் அந்த பணத்தை எமது குடும்ப செலவுகளுக்கு அம்மாவிடம் கொடுப்பேன். தேவையான போது பாடசாலைக்கு தேவையான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மற்றும் ஏனைய தேவையான பொருட்களை வாங்குவதற்கும் அந்த பணத்தை பயன்படுத்துவேன். இதனாலேயே நான் பழைய பேப்பர்களை விற்பனை செய்யும் கடைக்கு பகுதி நேர வேலையாளாகச் சேர்ந்தேன். அங்கு கிடைக்கும் பணத்தைக் கொண்டே எனது பாடசாலைக் கல்விக்குத் தேவையான வற்றை நான் வாங்கினேன்.

கேள்வி : கொழும்பில் எந்தப் பாடசாலையில் நீங்கள் கல்வி கற்றீர்கள்?

பதில் : கொழும்பு, பம்பலப்பிட்டிய சென். மேரீஸ் கல்லூரியில் 10 ம் வகுப்பு வரையில் கல்வி கற்றேன்.

கேள்வி : எப்போது முழு நேர வியாபாரியாக மாறினீர்கள் ?

பதில் : பாடசாலைக் கல்வியை 10 வகுப்போடு முடித்துக் கொண்டதும் இந்த தொழிலில் முழு மூச்சாக ஈடுபட ஆரம்பித்தேன். அது இன்று எனக்கு கை கொடுக்கிறது.

கேள்வி : கொழும்பிலேயே பிறந்து வளர்ந்த நீங்கள் கொழும்பிலேயே இவ்வாறான தொழிலை தொடர்ந்து செய்து இருக்கலாமே?

பதில் : நான் நீர்கொழும்பு, குடாப்பாடு பிரதேசத்திலேயே திருமணம் செய்தேன். அதனாலேயே நீர்கொழும்பு, கட்டுவ பிரதேசத்தில் தொழிலை மீண்டும் ஆரம்பித்தேன்.

கேள்வி : கொழும்பில் நீங்கள் வேலை பார்த்து வந்த கடையில் பழைய இரும்புகள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவை அப்போது சேமிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்தனவா?

பதில் : இல்லை. 1968 மற்றும் 1970 வருடங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் அப்போது பெரியளவில் பாவனையில் இல்லை. இதனால் அங்கு பழைய தகரங்கள், இரும்புக் கம்பிகள் மற்றும் பழைய பேப்பர்கள் மாத்திரமே கூடுதலாக இருந்தன. பிளாஸ்டிக் பொருட்கள் அவ்வளவாக இருக்கவில்லை.

கேள்வி : நீங்கள் இந்த இடத்தில் எவ்வளவு காலமாக வியாபாரம் செய்து வருகின்றீர்கள்?

பதில் : நான் 20 வருடங்களாக இந்த இடத்தில் வியாபாரம் செய்து வருகின்றேன். இந்த வியாபாரத்துக்கு இது பொருத்தமான இடமாகும். போக்குவரத்து வசதிகள் இலகுவாகவே உள்ளன.

கேள்வி : ஒரு வாரத்தில் உங்களுடைய கடையில் எவ்வளவு மீள் சுழற்சிப் பொருட்கள் சேர்கின்றன?

பதில் : 500 கிலோ கிராம் பழைய இரும்புக் கம்பிகள், 5 டொன் எடையுள்ள பழைய பேப்பர்கள், பாவிக்கப்பட்ட பழைய போத்தல்கள், பழைய தகரங்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவைகளும் வந்து சேருகின்றன.

கேள்வி : ஆரம்ப காலத்தில் இந்த தொழிலுக்கு எவ்வளவு முதலீடு செய்தீர்கள்?

பதில் : முதலீடு செய்வதற்கு அப்போது என்னிடம் பணம் இருக்கவில்லை. என்னுடைய மனைவியின் வீட்டுக்கு அருகில் குடாப்பாடு பிரதேசத்தில் சில்லறை கடையொன்றினை நான் ஆரம்பித்து நடாத்திக் கொண்டு வந்தேன். அந்த கடையிலிருந்து இரண்டாயிரம் ரூபாவை எடுத்தே இந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன்.

கேள்வி : தமது வீடுகளில் உள்ள பாவனைக்கு உதவாத பல்வேறு வகையான பொருட்கள் தற்போது உங்களுக்கு கிடைத்து வருகின்றன. அவற்றை நீங்கள் விலைக்கு வாங்கி வருகிறீர்கள். அவ்வாறான பொருட்களை நீங்கள் யாருக்கு விற்பனை செய்வீர்கள்?

பதில் : இவ்வாறான பொருட்களை விலைக்கு வாங்குவதற்காக கொழும்பு நகரில் சில வர்த்தகர்கள் இருக்கின்றனர். அவர்கள் எனது கடைக்கு வந்து பொருட்களை விலைக்கு வாங்குவர்.

கேள்வி : இந்த வியாபாரம் உங்களுக்கு மனத் திருப்தியை தருகின்றதா ?

பதில் : நான் இந்தத் தொழிலை மிகவும் ஆசையோடும் ஆர்வத்தோடும் செய்து வருகின்றேன். எனது குடும்பச் செலவுகள் அனைத்தையும் இந்த தொழில் மூலமே செய்து வருகின்றேன். வேறு தொழில் எதுவும் செய்வதில்லை.

கேள்வி : கொரோனா தொற்று மிகவும் தீவிரமாக பரவிக் கொண்டிருந்த காலத்தில் உங்களுடைய வியாபாரம் எப்படி இருந்தது ?

பதில் : நீர்கொழும்பு, மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பிரிவின் ஊழியர்களே இந்த பிரதேசத்தில் சேருகின்ற பாவனைக்கு உதவாத பல்வேறு வகையான பொருட்களை சேகரித்து வருகின்றனர். கொரோனா தொற்று பரவிக் கொண்டிருந்த காலத்தில் எனக்கு தேவையான பல பொருட்களை மாநகர சபையின் அனுமதியின் கீழ் அவர்களிடம் வாங்கினேன். இதனால் எனது தொழில் பாதிக்கப்படவில்லை.

கேள்வி : இந்த தொழில் உங்களுக்கு திருப்தியாக உள்ளதா?

பதில் : இந்த தொழில் எனக்கு மிகவும் திருப்தியாக உள்ளது. இந்த தொழில் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஓர் லொறியை விலைக்கு வாங்கினேன்.

அதேபோன்று மோட்டார் சைக்கிள் ஒன்றையும் வாங்கினேன். எனது வாழ்க்கைச் செலவுகள் அனைத்தையும் இதன் மூலமே பூர்த்தி செய்து வருகின்றேன்.

கேள்வி : ஒவ்வொரு நாளும் மிகவும் சிரமத்துடனேயே இந்த தொழிலை நீங்கள் செய்ய வேண்டும். பொருட்களை வெவ்வேறாக பிரித்து ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும். அதேபோன்று அவற்றின் எடைகளை குறித்து வைக்க வேண்டும். உங்களுக்கு இது மிகவும் கஷ்டமான வேலையாக தோன்றவில்லையா?

பதில் : ஒவ்வொரு நாளும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். இதனையே எனது மனதில் வைத்துள்ளேன். தொழிலை மிகவும் ஆர்வத்துடன் செய்து வருகின்றேன்.

இதனால் எனக்கு எவ்வித கஷ்டங்களும் இல்லை.

கேள்வி : காலையில் எத்தனை மணியிலிருந்து உங்களது வியாபாரம் ஆரம்பமாகும்?

பதில் : காலை 9 மணிக்கு தொழிலை ஆரம்பித்தால் மாலை 5 மணி வரை வேலை தான். உதவிக்கு ஒருவரை வைத்துள்ளேன். ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் தான் லீவு எடுப்பேன்.

கேள்வி : இந்த இடத்தில் எவ்வளவு காலமாக தொழில் செய்து வருகிறீர்கள்?

பதில் : 20 வருடங்களாக இந்த இடத்தில் வியாபாரம் செய்து வருகின்றேன். மக்களுடன் மக்களாக பழகினால் எந்த தொழிலையும் மனத் திருப்தியாக செய்யலாம். இந்தத் தொழில் மூலம் பலர் தமது வீடுகளில் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றனர். நானும் அவ்வாறே இருக்கின்றேன். இந்த தொழில் எனக்கு மிகவும் திருப்தியாக உள்ளது.

மொஹமட் ருஸ்மான்
நீர்கொழும்பு தினகரன் நிருபர்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் இங்கு "முத்தமிழ் காவலர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

புதிய அலை கலை வட்டத்தின் 42ஆவது ஆண்டு விழாவில் "கலாமித்ரா" பட்டத்துடன் விருது பெற்றவர்களில் சிலர்

"ராஜ ராஜ சோழன்" படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் நடித்த இலங்கை கலைஞர் ஸ்ரீசங்கர்

42 ஆண்டு நினைவஞ்சலி தினம் 20.01.2022

இலங்கை தமிழ்த் திரைப்படத்துறைக்கும், நாடகத்துறைக்கும் பாரிய பங்களிப்புகளை செய்தவர் மறைந்த கலைஞர் ஸ்ரீசங்கர். ஸ்ரீசங்கர் வெளிநாட்டுக்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் ஒரு பிரபலமான நிறுவனமொன்றில் தேயிலை பரிசோதகராக பணியாற்றி வந்தார்.

அப்போதே ஆயிரம் ரூபாய் சம்பளத்தை பெற்றவர். இவர் தனக்கு கிடைத்த சிறந்த தொழிலையையும் தன்னிடம் இருந்த நிதியையும் கலைத்துறைக்காக இழந்தவர். இவ்வாறு தமிழ் நாடகத்துறைக்கு பல்வேறு அர்ப்பணிப்புகளைச் செய்த இவர்,இலங்கை தயாரிப்பான குத்துவிளக்கு, மஞ்சள் குங்குமம் உட்பட தமிழ்நாட்டில் தயாரான சிவாஜிகணேசனின் 'ராஜ ராஜ சோழனில்' ஒரு காட்சியில்,புலவராகவும்,"பைலட் பிரேம்நாத்"படத்தில் தோட்டக் கணக்குப் பிள்ளையாகவும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் நடித்தார்.இவரது நினைவு நாள் நிகழ்வை தொடர்ந்து பல ஆண்டுகளாக இடைவிடாது தொடர்ந்து நடத்தி வருபவர், இவர் நடித்த நாடகங்களில் இவருடன் இணைந்து நடித்த இவரது நண்பர் வீ. ஷண்முகராஜா. ஷண்முகராஜா இவருக்கு உருவச்சிலையும் நிறுவியிருக்கிறார்.

ஸ்ரீசங்கர் என்ற இந்த கலைஞரின் இயற்பெயர் வைத்தியலிங்கம். இவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர். இவரது நாடகங்களான கொள்ளைக்காரன்', 'ஒரு மனிதன் இரு உலகம்' போன்ற நாடகங்கள் பருத்தித்துறையிலும் யாழ்ப்பாணத்திலும் பலமுறை மேடையேற்றப்பட்டவையாகும். இவர், இலங்கையில் எப்படியும் ஒரு தமிழ்ப்படத்தைத் தயாரிக்கவேண்டும் என்று ஆவலுடன் துடித்துக்கொண்டு இருந்தார்.



கிங்ஸ்லி எஸ்.செல்லையாவும், ஸ்ரீசங்கரும் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். இவர்களுடன் ஏ. சுந்தரஐயா, பதுர்தீன், பரஞ்சோதி ஆகியோரும் ஒன்று சேர்ந்து சிறந்த முறையில் தமிழ் படமொன்றை உருவாக்கத் திட்டமிட்டார்கள். அதற்காக 'கீதாலயம் மூவீஸ்' என்ற பட நிறுவனத்தை ஆரம்பித்தார்கள்.

அந்த காலத்தில் நாடகத் துறையிலும் தமிழ் சினிமாத் துறையிலும் பணம் படைத்தவர்களாக இருந்தவர்கள் இருவர்கள். இவர்களில் ஒருவர் ஸ்ரீசங்கர். மற்றவர் உதயகுமார். உதயகுமார் வெளிநாட்டில் இருந்து வரும் கப்பல்களில் இருந்து பண்டங்களை இறக்குமதி செய்வதை தொழிலாகக் கொண்டவர். இந்த இருவரும் கலைத்தாகம் நிரம்பிய நல்ல கலைஞர்கள். "மஞ்சள் குங்குமம்" ஸ்ரீசங்கரின் கடும் முயற்சியால் 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட திரைப்படமாகும். இத்திரைப்படத் தயாரிப்புக்கு ஸ்ரீசங்கருக்கு ஆரம்பம் முதல் இறுதிவரை பெருந்துணையாக நின்றவர் கிங்ஸ்லி எஸ். செல்லையா என்ற புகைப்படக் கலைஞராவார்.

கிங்ஸ்லி எஸ். செல்லையா கொழும்பு கிங்ஸ்லி தியேட்டரில் ஒப்பரேட்டராக பணிபுரிந்தவர். அகில இலங்கை ரீதியாக நாடக மேடைகளில் பெரும் வெற்றி பெற்ற "மஞ்சள் குங்குமம்" நாடகத்தை திரைப்படமாக்க முடிவு செய்யப்பட்டது.

மஞ்சள் குங்குமம்" திரைப்படத்தை இயக்கும் பொறுப்பு கிங்ஸ்லி எஸ். செல்லையாவின் நண்பரான நடிகர் எம். வி. பாலனிடம் ஒப்படைக்கப்பட்டது. நடிகர் எம். வி. பாலன் சிங்கள சினிமாவில் தனித்துவமான சிறந்த ஹாஸ்ய நடிகர். டாக்சி டிரைவர், நிர்மலா ஆகிய தமிழ் திரைப்படங்களில் நடித்தவர்.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட 'இயக்குனர்' பதவியின் பெறுமதியையும் தனது அதிர்ஷ்டத்தையும் உணராமல் அதனை ஹாஸ்யமாகவும் விளையாட்டாகவும் குரங்குக் கை பூமாலையாக அவர் எடுத்துக் கொண்டது துரதிர்ஷ்டவசமானது. அடிக்கடி கதையை மாற்றியமைத்தார். படத்தின் ஹாஸ்ய கதாபாத்திரத்தை தானே ஏற்று நடித்த இயக்குனர் எம். வீ. பாலன் படத்தின் உச்சக் கட்டத்தில் தனது கதாபாத்திரத்தை மாற்றியமைக்கவும் செய்தார். தானே படத்தில் 'ஹீரோ' ஆகியதாலும் படத்தின் தயாரிப்பு செலவு அதிகரித்தது. நடிகர் ஸ்ரீசங்கர் படத்தை முடிக்க முடியாமல் திணறிய போது, கிங்ஸ்லி எஸ். செல்லையாவின் நண்பரான கடுகண்ணாவையில் வசித்த எம். பதுர்தீன், கொழும்பு அம்பாள் கபே உரிமையாளர்

ஜீ. நாராயணசாமி, சுந்தரம் ஐயர் போன்றோர் கிங்ஸ்லி எஸ். செல்லையாவின் கடும் முயற்சியினால், இணைத் தயாரிப்பாளர்களானார்கள். நீண்ட நாள் தயாரிப்புக்குப் பின்னர் அளவுக்கதிகமான செலவுகளுடன் காதுக்கினிய எட்டு பாடல்களைக் கொண்ட நல்லதொரு திரைப்படமாக ஆனால் குற்றுயிராகத் திரைக்கு வந்தது இந்தத் திரைப்படம்.

இக்காலக் கட்டத்தில் ஸ்ரீசங்கர் இந்தியாவில் தயாரான "ராஜ ராஜ சோழன்" திரைப்படத்தில் சிவாஜி கணேசனோடு ஈழத்துப் புலவராக நடித்தார்.ஸ்ரீசங்கர் நம்மை விட்டுப் பிரிந்து பல வருடங்களாகி விட்டன. கலைஞர் ஸ்ரீசங்கரின் நினைவு தின நிகழ்வுகளை தவறாது நடத்துபவர் ஸ்ரீசங்கர் நற்பணி மன்றத்தின் தலைவர் வீ.சண்முகராஜா எனபது குறிப்பிடத்தக்கது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பாராட்டிய நம் நாட்டுக் கலைஞரான ஸ்ரீசங்கரை இந்நாளில் நாமும் நினைவு கொண்டு அஞ்சலி செலுத்துவோம்.

ஆக்கம்:எஸ். கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

கலாவதி சின்னசாமி

ஈழத்து தமிழ் பாடகிகளில் மிக முக்கியமான ஒரு பாடகி கலாவதி என்றால் அது மிகையில்லை. எல்லோருக்கும் தெரிந்த பெயர் கலாவதி. தனது ஐந்து வயதிலேயே பாடத் தொடங்கியவர். பள்ளியில் படிக்கும்போதே கலைவிழா, இசைவிழா, சரஸ்வதி பூசை,போன்ற நிகழ்வுகளில் பாடி பரிசு பெற்றவர்.

நடனம், நாடகம் போன்ற கலைகளிலும் நாட்டம் உள்ளவர். பள்ளியில் படிக்கும்போது திருமதி நாகபூசணி தணிகாசலத்திடம் கர்நாடக சங்கீதம் கற்றுக் கொண்டார்.

அவரை தொடர்ந்து சுயம்புலிங்க பாகவதர் ஆர். சோமநாதன், பஜனேஸ்வரி சண்முகரெத்தினம் ஆகியோரிடம் பண்ணிசையும், சாஸ்திரிய சங்கீதமும் கற்றுகொண்டார்.

கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வில்லுப்பாட்டு,மேடைநிகழ்ச்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்.

1966 ம் ஆண்டு இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்பட்ட பண்ணிசைப்போட்டியில் கலந்து வெற்றிபெற்று தங்கப்பதக்கம் பெற்றார்.

1962 ல் இலங்கை வானொலியில் சிறுவர்மலர், மற்றும் கிராம சஞ்சிகை நிகழ்சிகளில் பாடியுள்ளார்.

1972 ம் ஆண்டு அரங்கேற்ற நிகழ்ச்சி மூலம் தரப்படுத்தப்பட்ட பாடகியாக தெரிவு செய்யப்பட்டார்.

பல மெல்லிசை பாடல்களை பாடிவந்த கலாவதி 1979 ம் ஆண்டு நடந்த குரல் தேர்வில் சுப்பர் தர கலைஞராக தெரிவாகினர். 1974 ல் புதிய காற்று திரைப்படத்தின் மூலம் சினிமாவில் பாடத்தொடங்கியவர் இலங்கையில் தயாரித்த 27 படங்களில் பாடியுள்ளார்.

இவர் சிங்களப் பாடல்கள் ஐம்பதுக்கு மேல்பட்ட சிங்களப் படங்களில் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது...

மேலும் மற்றுமொரு ஈழத்து திரைப்படமான இளைய நிலா எனும் திரைப்படத்தில் சன் சுப்பிரமணியத்தின் (Denmark Sun) இசையமைப்பில் ஒரு பாடல் இவர் பாடியிருந்த போதிலும் அப்பாடல் திரைப்படத்தில் இடம்பெறவில்லை. மேலும் அத்திரைப்படம் 1893ம் ஆண்டு ஏற்ப்பட்ட இனக்கலவரத்தினை தொடர்ந்து நாட்டில் ஏற்ப்பட்ட அசாதரணமான சூழ்நிலையினால் திரைக்கு வராமலே போனது..

புதிய அலை கலை வட்டத்தின் 42ஆவது ஆண்டு விழாவில் கலாமித்ரா பட்டத்துடன் விருது பெற்றோர்கள்

இப்பத்திரிகை அஸோஸியேட்ட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.